# இலங்கையின்


# தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்



**சந்தான்பிள்ளை சகாயசீலன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்

# தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்



**சந்தான்பிள்ளை சகாயசீலன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல்: | இலங்கையின் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும் |
| ஆசிரியர்: | சந்தான்பிள்ளை சகாயசீலன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் |
| முதற் பதிப்பு: | ஏப்ரல் 2022 |
| பதிப்புரிமை: | ஆசிரியருக்கு |
| வெளியீடு: | தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு |
| அனுசரணை: | செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை |
| பக்கங்கள்: | 166 |
| விலை: | ரூ. 500 |
| அச்சுப்பதிப்பு: | நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட்,<br>இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. 021 221 9893 |
| ISBN: | 978-624-97668-5-3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை - பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் 05

Decleration 08

நன்றியுரை 09

முகவுரை 10

அத்தியாயம் ஒன்று 13

1.0 தமிழ்த் தேசியவாதத்திற்கான அறிமுகம்
1.1 காலனித்துவ ஆட்சிக்கெதிரான இலங்கைத் தேசியவாதம்

அத்தியாயம் இரண்டு 27

2.0 தமிழ் அரசியல் இயக்கங்களின் உருவாக்கத்திற்கான பின்னணி
2.1 அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ்
2.2 சமஷ்டிக்கட்சி
2.3 தமிழ் காங்கிரசிற்கும்-சமஷ்டிக்கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள்

அத்தியாயம் மூன்று 49

3.0 தேசியவாதமும் சமஷ்டிக்கட்சியும்
3.1 தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள்
3.2 தேசிய நிலையை அடைவதற்கான செயற்பாடுகள்

அத்தியாயம் நான்கு 75

4.0 தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகள்: *1956 - 1970*

அத்தியாயம் ஐந்து 91

5.0 தனியரசு பற்றிய எண்ணக்கருவின் தோற்றம்

அத்தியாயம் ஆறு 103

6.0 தமிழத்தேசியவாதமும் தீவிரவாத இயக்கங்களும்

அத்தியாயம் ஏழு 121

முடிவுரை

பிற்சேர்க்கை 1 125

தீர்க்கதரிசன மிகு தலைமைப்பேருரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிற்சேர்க்கை 2** 136

*1951ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டுத் தீர்மானம்*

**APPENDIX – III** 141

The Official Language Act

**பிற்சேர்க்கை 4** 142

தமிழரசுக்கட்சியின் நான்காவது மாநாட்டுத் தீர்மானம்

**பிற்சேர்க்கை 5** 144

பண்டா - செல்வா ஒப்பந்தம்

**APPENDIX – VI** 147

The Tamil Language (Special Provisions) Act

**பிற்சேர்க்கை 7** 150

தமிழரசுக்கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகள்

**பிற்சேர்க்கை 8** 152

டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம்

**APPENDIX – IX** 154

Tamil Language (Special Provisions) Regulations

**நூல் அட்டவணை** 155

*1)* தமிழ் நூல்கள்
*2)* சஞ்சிகைகள்
*3)* பத்திரிகைகள்

**BIBLIOGRAPHY** 159

1) Government Publications
2) Books, Monographs and Pamphlets
3) Journals and Articles



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

'ஈழக் காந்தி' என்றும் பெரியவர் என்றும் தமிழரசுத் தந்தையென்றும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1977ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை நம்மைவிட்டுப் பிரிந்தார். தலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை காரணமாக ஒரு மாதகாலம் சுயநினைவு இழந்தவராக இருந்த தந்தை செல்வா 79வது வயதில் தமது சீவிய ஓட்டத்தை முடித்துக் கொண்டார். பல வைத்தியர்களும் உறவினர்களும் அவர் குணமடைவார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் நீண்டகால பார்க்கின்சம் நோயினால் பலவீனமடைந்திருந்த உடலினால் அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தெல்லிப்பளை தேவாலயத்திலிருந்து யாழ் முற்றவெளிக்கு உடல் கொண்டுவரப்பட்டு இறுதி அஞ்சலி நடத்தப்பட்டது. இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்கள் என்றுமே காணாத மக்கள் கூட்டத்தினால் முற்றவெளி நிரம்பி வழிந்தது.

இலங்கையில் வாழ்ந்த பெரும் அரசியல்வாதிகளும் உலகத்தின் பெருந்தலைவர் களும் தந்தை செல்வாவின் மறைவைக்குறித்து அனுதாபச் செய்திகளை அனுப் பினர் கலைஞர் மு.கருணாநிதி

'அல்லற்பட்டு ஆற்றாது அழுத
கண்ணீரோடு வாழ்வை நகர்த்திக்
கொண்டிருந்த இலங்கைத் தமிழர்
கட்கு இவரன்றோ போர்வாளாய்
கேடயமாய்த் திகழ்ந்தார்".
என்று தம் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினார்.

இடதுசாரிக்கட்சிகளின் வணங்காமுடியாகத் திகழ்ந்த என்.எம்.பேரேரா எழுதியவை தந்தை செல்வாவை சிங்கள மக்கள் எப்படி மதித்தார்கள் என்பதனைக் காட்டுகின்றது.

'இந்த நாட்டு மக்களுக்கு இன்று
ஒரு துயர நாள். அமரர் செல்வநாயகம்
தனிமனிதனாக மட்டும்
காட்சிதரவில்லை இந்த சகாப்தத்தில்
ஒரு யுகத்தையே
உருவாக்கிய தலைவர் அவர்.
திடமான மனமும் மாசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவற்ற உள்ளமும்
சந்தேகப்படமுடியாத நேர்மையும்
செல்வநாயகத்திடம் நிறைந்திருந்தன."

தந்தை செல்வாவின் மறைவைப்பற்றிச் சிந்திக்கையில் அவருடைய ஆற்றல், நேர்மை அர்ப்பணிப்பு என்பனவே நம்முள்ளத்தைத் தொடுகின்றன.

தந்தை செல்வா **1898**ம் ஆண்டு மார்ச் மாதம் **31**ம் திகதி மலேசியாவிலுள்ள ஈப்போ நகரில் பிறந்தார். அவருக்கு நான்கு வயதாகவிருந்தபொழுது இரு சகோதரர்களோடும் சகோதரியோடும் கல்வி பெறும்பொருட்டு தாயாருடன் தெல்லிப்பளைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். தந்தை செல்வாவின் கல்வி யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு சென் தோமஸ் கல்லூரியில் தொடர்ந்தார். **1918**ம் ஆண்டளவில் வெளிவாரி மாணவனாக இலண் டன் B.Sc பட்டதாரியானார். முதலில் சென் தோமஸ் கல்லூரியிலும் பின்னர் வெஸ்லிக்கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியராகவிருந்த காலகட்டத்திலேதான் சட்டப்படிப்பை மேற்கொண்டு உயர் நீதிமன்ற அப்புக்காத்து (Advocate of the suprem court) என்ற படிப்பை படித்துமுடித்தார்.

**1947**ம் ஆண்டு சோல்பரி அரசியல் திட்டத்தின்படி பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பொழுது காங்கேசன்துறை தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

**1948**ல் இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்ட வாக்கெடுப்பின் போது தமிழ்க் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுப்பட்டது. தந்தை செல்வாவும் அவருடைய ஆதரவாளர்களும் **1949**ம் ஆண்டு டிசம்பர் மாதம் **18**ம் திகதி மருதானை அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் கூடி தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தனர். தந்தை செல்வா ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் **1952**ல் நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் தந்தை செல்வா தோல்வியடைந்தார்.

**1956**ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் தமிழரசுக்கட்சி **10** தொகுதிகளிலும் காங்கிரஸ் **01** தொகுதியிலும் வெற்றிபெற்றன. தந்தை செல்வா அந்த வெற்றியைத் தொடர்ந்து **1977** ஆண்டு தமது வாழ்வை முடிக்கும் வரை இலங்கை வாழ் தமிழ் மக்களின் முடிசூடா மன்னராகவே கருதப்பட்டு வந்தார்.

தந்தை செல்வாவிடம் நேர்மை, தியாகம் என்பன குடிகொண்டிருந்தமையை அவரின் எதிரிகள் கூட ஏற்றுக்கொள்வர். ஆனால் அவருடைய மதிநுட்பத்தையும் தலைமைத்துவச் சிறப்பினையும் பலர் சுட்டிக்காட்டுவதில்லை. **1949**ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சி **1956**ல் ஆல்போற் பருத்து அறுகுபோற் படர்ந்ததென்றால் தூய்மை, நேர்மை மட்டும் போதாது. தந்தை செல்வா தமது கட்சிக்கு இளம் வழக்கறிஞர்களையும், சட்டக்கல்லூரி மாணவர்களையுமே தேர்ந்தெடுத்தார். இந்த வாலிபத் தலைவர்களை தந்தை வளர்த்தார். வாலிபத்தலைவர்கள் தமிழரசை வளர்த்தனர். திரு. அ.அமிர்தலிங்கம், திரு.செ.இராசதுரை, திரு.வி.என் நவரத்தினம், திரு.கே துரைரத்தினம், திரு.எஸ்.இராசலிங்கம் ஆகியோர் முக்கியமானவர்கள் தமிழரசுக்கட்சியில் போட்டியிட விரும்பிய பல கோடீஸ்வரர்களைவிட செல்வத்தாலும் வயதாலும் குறைந்தவர்கள் ஆனால் மதிநுட்பம் மிக்க தந்தை அவர்களையே தமது தளபதியாக நியமித்தார்.

தந்தை செல்வாவிடமிருந்து தூய்மை கடவுள் பக்தி அவரை வணக்கத்திற்குரிய தலைவராக்கியது. ஏனைய நாடுகளில் அரசியல் தலைவர்கள் பலவிதமான இன்ப நாட்டத்தில் ஈடுபடுவர். ஆனால் தந்தை செல்வா பலருக்கு முன்மாதிரியான தூய்மையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்தவர்.

தந்தை செல்வா மறைந்து நாற்பத்தைந்து வருடங்கள் கழிந்துவிட்டன இப்பொழுது தந்தை செல்வா சாதித்ததென்ன? என்று பலர் கேட்கின்றனர்.

முதலாவதாக அரசியலில் நேர்மை தியாகம் என்பவற்றை கடைப்பிடித்தும் மக்களின் ஆதரவைப் பெறலாம் என்பது, தமிழ் மக்கள் அவரின் நேர்மையை கண்டு அவரை பூரணமாக நம்பினர்.

'உள்ளத்துற் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

இரண்டாவதாக தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தியது அவரின் சாதனை.

தந்தை செல்வா அரசியலில் பிரவேசிக்கு முன்னர் தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் மதவாதம் பிரதேசவாதம், சாதியம் என்பன மேலோங்கிநின்றன. ஆனால் தந்தை செல்வா தலைமையேற்றப்பின் இந்த உணர்வுகள் சூரியனைக்கண்ட பனிப்போல் மறைந்தன.

தந்தை செல்வாவின் வாழ்வையும் பணியையும் இளைய தலைமுறையினர் மறந்துவிடக்கூடாது என்பதற்காக **1982**ம் ஆண்டு தந்தை செல்வா அறங்காவற்குழு இலங்கை பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Thanthai Chelva Memorial Trust incorporation .
ACT NO47 of 1982.

இந்த ஆணைக்குழு தந்தை செல்வாவின் சாதனைகளை ஞாபக மூட்டிக் கொண்டேயிருக்கிறது.

அப்பணியின் ஒரு அம்சமாக திரு. ச.சகாயசீலன் தமது M.Phil பட்டத்திற்கு சமர்பித்த ஆய்வுரையை பிரசுரம் செய்வதில் பெருமையடைகின்றோம்.

**பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
தலைவர்,
தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DECLARATION

I hereby certify that this thesis does not incorporate any material submitted for any degree or diploma in any University and, to the best of my knowledge and belief, it does not contain any other person's work except Where due reference and acknowledgement are made in the text.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

'இலங்கையின் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்' என்ற ஆய்வை எழுதி முடிப்பதற்கு பல வழிகளிலும் அருந்துணை புரிந்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என் முதற்பணியாகும். இவ்வாய்வுக்கு பொருத்தமான தலைப்பை தேர்ந்தெடுப்பதிலும், கடந்த மூன்றாண்டுகளாக இவ்வாய்வின் வழிகாட்டியாகவும், ஆலோசனை வழங்கியும், திருத்தங்களை மேற்கொண்டும் உற்சாகமளித்த எனது மேற்பார்வையாளர் பேராசிரியர் எஸ். பாலகிருஸ்ணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் எனது ஆய்வுக் கான தலைப்பில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதியளித்தும், உற்சாகப் படுத்தியமைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொருளியல் துறையைச் சேர்ந்தவர்களும், எனது அரசறிவியல் பேராசான்களுமா கிய கலாநிதி எஸ்.கே.எஸ்.நாதன், கலாநிதி வி.மணிவாசகம் அவர்கள் ஆரம்பம் முதல் வேலை நிறைவு செய்யும் வரை, ஊக்கமும் ஆலோசனைகளும். வழங்கி வந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசறிவியல் விரிவுரையாளர் க.ரகுநாதன் காணும் போதெல்லாம் வேலையைத் துரிதப்படுத்த ஊக்கமளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள், ஆரம்பம் முதல் முதுகலைமாணிப்பட்ட ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும்படி அறிவுரை வழங்கியும் பல அரிய நூல்களைத் தந்தும், தட்டச்சு செய்வதற்கு காகிதாதிகள் தந்தும், ஆய்வினைப் பற்றி அடிக்கடி அக்கறையோடு கேட்டும், உற்சாகம் தந்தமைக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

ஆய்வினை மேற்கொண்ட காலங்களில் முழுக்குடும்பப் பொறுப்பையும் ஏற்று, எனது ஆய்வுக்கு ஊக்கமும், உற்சாகமும் தந்த என் மனைவிக்கு நன்றியைத் தெரிவித்துக்கின்றேன். மேலும் பலரும் பல வழிகளிலும் துணைபுரிந்துள்ளனர். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக பொறுமை யோடும், மகிழ்ச்சியோடும் தட்டச்சு செய்து தந்த கமலா இராமச்சந்திரன் அவர்களுக்கும் எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலங்கையின் அரசியல் வரலாற்று வளர்ச்சியில் இனம், மொழி, மதம், கலாசாரம் என்பவற்றைக் கொண்ட சமூக உணர்வுகள் ஏற்பட்டமை மூலம் தேசியவாதம் தோன்றியது. தேசியவாதம் என்ற அக உணர்வானது அரசியல் நடவடிக்கைகளால் விரைவில் இனவாதமாக மாறியது. பெரும்பான்மை இனத்தின் தேசிய உணர்வானது ஆட்சியதிகாரத்துடன் நிறுவன மயப்படுத்தப்பட்டமையால் அது அரச தேசியவாதமாகியது. அதன் பின் சிறுபான்மை இனத்தவர்களின் நலன்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்டமையால் தவிர்க்க முடியாதபடி தமிழ்த் தேசியவாதம் தோன்றி வளரலாயிற்று.

தேசிய இனம் - தேசிய அரசு அல்லது தேசிய இனங்களின் அரசு என்பதைக் கொண்ட ஒரு யுகமே நவீன உலகம். பல்தேசிய இன அரசிலுள்ள தேசிய இனங்கள், தமது தனித்துவ அடையாளங்களை பேணிக்கொள்வது தேசியவாதமாகும். மக்களின் மன எழுச்சியுணர்வாக தேசியவாதம் தன்னை வெளிப்படுத்தி வருகின்றது. மனிதர்களின் சமூகவியல் நடத்தைகளை நிர்ணயிக்கும் முக்கிய அம்சமாகவும் தேசியவாதம் விளங்குகின்றது. இப் பின்புலத்தில் பல்தேசிய இன அரசுக்குள், தேசிய ஒழுங்கமைப்பு மீறப்படும் போது அது தேசிய இனப்பிரச் சினையாகத் தோன்றுகின்றது. நவீன யுகத்தில் இனத்துவ மறுமலர்ச்சி என்று அழைக்கப்படும் ஒரு புதிய பின்புலத்தில் அவை நிலைமாற்றம் கண்டு புத்துயிர் பெற்று வருகின்றது. இவை எல்லா அரசியல் சித்தாந்தங்களுக்கும், அரசுகளின் எல்லைகளுக்கும் அப்பாற்பட்ட வீச்சுக்களைக் கொண்டுள்ளன.

இந்த ஆய்வானது ஏழு அத்தியாயங்களைக் கொண்டதாக அமைகின்றது. முதலாம் அத்தியாயம், தேசியவாதத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றைத் தொட்டுக் காட்டியதோடு இலங்கையில் தோற்றம் பெற்ற தேசியவாதமானது ஆரம்ப காலங்களில் இன, மத, பிராந்திய, மொழி வேறுபாடுகளைக் கடந்து 'இலங்கையர் தேசியவாதமாக" தோற்றம் பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் இருந்து பல அச்சுறுத்தல்கள் இருந்த போதும் இலங்கை சுதந்திரம் பெறும் வரைக்கும் உயர்குழாம் தலைவர்கள் மத்தியில் இலங்கையர் தேசியவாதம் நிலவியது. இதுவே இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இரண்டாம் அத்தியாயம், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் சில தமிழ் அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவை அரசியற் செயற்பாடுகளை பிரதான இலக்காக கொண்டிருக்கவில்லை. மாறாக கலாசார அம்சங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. உயிர்த்துடிப்பானதும், தமிழர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய அமைப்பாக 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' தோற்றம் பெற்றது. இதன் போக்கில் அதிருப் தியடைந்த ஒரு சிலர் இதிலிருந்து விலகி புதிய அமைப்பான இலங்கை தமிழரசுக்கட்சியை உருவாக்கினர். இவை ஏறக்குறைய நூற் றாண்டுகளாக தமக்குள் முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் அத்தியாயம், எல்லா வகையிலும் வேறுபட்ட இனமொன்றிற்கான தனித்துவமான அடையாளங்களை வெளிக்கொணர்வதிலும், அதன் அடிப்படையில் தமிழ்த் தேசியவாதம் தோன்றவும், அதை முன்னெடுத்துச் செல்வதிலும் தமிழரசுக் கட்சியே முதன்மை அமைப்பாகின்றது. இனமொன்றில் இருந்து பிரிக்கமுடியாத மொழி, இனமொன்றிற்குரிய வரலாற்றுத் தொன்மையான ஆள்புலம் என்ற கருக்களைக் கொண்டு 'மொழி-வழித்தேசியவாதம்' தோன்றியது. மேலும் உரிமைகள் இழந்த ஓர் இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவியமை மூலம் இன விகிதாசாரத்தை மாற்றும் முயற்சிகளில் அரசாங்கம் முயன்ற போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் பாதுகாக்கவும் முயன்றது.

நான்காம் அத்தியாயம், ஜனநாயகம் என்ற தத்துவத்தில் பெரும்பான்மை இனமொன்று தமது எல்லாவகையான உரிமைகளைப் பெறுவதோடு, சிறுபான்மையோரின் உரிமைகளை மீறுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதற்குரிய தீர்வாக தேசியமையங்களில் இருந்து அதிகாரங்கள் பிராந்திய மட்டங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டு இன உரிமைகள் வழங்கப்பட வேண்டும். வெவ்வேறு காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இவற்றை பிரதிபலித்தாலும், இனவாத போக்கிலும், இன மேலாதிக்க சிந்தனையிலும் செயற்பட்டமை தீர்வு நடவடிக்கைகளை எட்ட முடியவில்லை என்பது இலங்கையின் அரசியலை அச்சுறுத்தியது.

ஐந்தாம் அத்தியாயம், பிரிவினை பற்றிய எண்ணக்கருவின் தோற்றத்திற்கான பின்புலத்தை ஆராய்கின்றது. இரு நிலைகளில் பிரிவினைக் கோரிக்கை தோன்றியது. பெரும்பான்மை இனத்திடமிருந்து கௌரவம், அந்தஸ்து என்ற உரிய நிலைகள் கிடைக்காத போது சிறுபான்மை இனக் குழுக்கள் தேசிய கொள்கையில் அல்லது தேசிய நிலைகளில் இருந்து வெளியேற முற்படும் போது ஏற்படும் உணர்வானது, தேசியவாதமாக பரிணமிக்கின்றது. இதன் அடுத்த நிலையே பிரிந்து செல்லல் கோரிக்கையாகும். மறுநிலையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் பௌத்த - சிங்கள கருத்துக்கள் உருமாறி **1970**களில் அரசியல் திட்ட அங்கீகாரம் பெற்றமை மூலம் அதன் மேலாதிக்க உணர்வு எல்லா நிலைகளிலும் வெளிப்பட்டது. இது தவிர்க்க முடியாமல் மிதவாதத் தலைவர்கள் பிரிந்து செல்லும் கோரிக்கையை முன்வைக்க காரணங்களாயிற்று.

ஆறாம் அத்தியாயம், இதுவரை காலமும் ஜனநாயக கட்டமைப்பு ஒன்றுக்கு தீர்வுகாண முடியாது என்பதையும், மிதவாதம், ஜனநாயகப் போராட்டங்கள் தேசிய சிறுபான்மை இனப்பிரச்சினை தீர்க்க முடியாது என்பதில் நம்பிக்கை கொண்ட விடுதலை அமைப்புக்கள் தோற்றம் பெறுகின்றன. இவை அரசியல் வன்முறைகள் ஆயுதப்போராட்டம் என்பவற்றின் மூலம், தனியரசு அமைக்கும் இலட்சியத்தைக் கொண்டிருந்தன. தீவிரவாத விடுதலை அமைப்புக்களின் வெவ்வேறு செயற்பாடுகளால், தமிழ்த்தேசியவாத எண்ணக்கருவானது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் 'தனியரசு' என்பதை உள்வாங்கியதாக கொண்டிருக்கின்றன.

ஏழாம் அத்தியாயம், முடிவுரையாக அமைந்துள்ளது. இந்த நூற்றாண்டின் வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற அரசியல் செயற்பாடுகள் காரணமாக தமிழ்த்தேசியவாதம், தீவிரங்கொண்டு புதிய வீரியத்துடன் தன்னை இன்று வெளிப்படுத்தி வருகின்றது. தமிழ்த் தேசியவாதத்தின் வீச்சாக, தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, தனியரசு என்பதைக் கொண்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் **01**

# தேசியவாதத்திற்கான அறிமுகம்

### தேசியவாதத்திற்கான அறிமுகம்:

தேசியவாதம் என்பது ஐரோப்பிய வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் தோற்றம் பெற்ற ஒரு புதிய அரசியல் தத்துவமாகும். 'நவீன தேசியவாதம் முதன்முதலில் 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோற்றம் பெற்றது", மானிய முறையின் வீழ்ச்சியுடன் ஐரோப்பாவில் தேசியவாதம் எழுச்சி அடைந்தது. 1789ஆம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட புரட்சியானது தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு நிச்சயமான பங்களிப்பினைச் செய்துள்ளது. தேசியவாதத்தின் தோற்றுவாய்கள் பற்றி, வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவிய போதும், பொதுவாக தேசியவாதத்தின் பிரதான தோற்றுவாய் மேற்கு ஐரோப்பிய நாடுகள் என்பதனையும், பல வரலாற்றுக் காரணிகளுக்கூடாக புரிந்து கொள்ள முடியும். 16ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றிலிருந்து நவீன தேசியவாதத்தின் அடையாளங்களைக் கண்டுகொள்ள முடியும். 'இக்கால கட்டத்தில் நாடுகாண் பயணங்கள், வர்த்தகத் தொடர்புகள், மதச் சீர்திருத்தங்கள், மறுமலர்ச்சி போன்ற அம்சங்களே தேசியவாதத்தின் தோற்றத்திற்கு பிரதான காரணங்களாயின. அத்தோடு பிற்காலங்களில் ஏற்பட்ட அமெரிக்க சுதந்திரப்போர், பிரான்சியப்புரட்சி, கைத்தொழிற்புரட்சி போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளும் தேசியவாதத்தின் வளர்ச்சியை ஊக்குவித்த காரணிகளாகும்.

தேசியவாதம் என்பதனை கான்ஸ்கொன் அவர்கள் வரையறை செய்யும் போது, 'தேசியவாதம் என்பது ஒரு மனோநிலையும், உளப்பூர்வமான சமூகவியல் நடத்தையுமாகும் என்பர்'. ஒரு மனிதன் உளம்சார்ந்த வாழ்க்கை முறையின் அக உள்ளுணர்வாக தொழிற்பட்டு ஒரு குறிப்பிட்ட குழும மக்களின் உள்ளுணர்வாக மாற்றப்பட வேண்டும். குழு உணர்வு, சமூகவியல் உளவியல் நடத்தைகளைக் கருத்திற் கொள்வதாகவும் உள்ளது. இதனால் தேசியவாதம் என்பது இன்று உலகில் பயன்பாடுடைய எண்ணக்கருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. இவரைப் போலவே லூயிஸ் எஸ்.சிறின்டர் மக்கள் ஏதோ பொதுவான ஒரு வம்சாவழியினைக் கொண்டவர்களாகவும், பொதுவான கலாசாரப் பண்புகளைக் கொண்டவர்களாகவும், வரலாற்றுப் போக்கில் தேசத்திற்கு மேலாக இறைமையினை விரும்புகின்றவர்களாகவும், அல்லது பாரிய அரசியல் அல்லது காலாசார செல்வாக்கிற்கு முகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பவர்களாகவும் உள்ளதே தேசியம் எனக்கூறுகின்றனர். எனவே, தேசியவாதத்தின் ஆரம்பம் என்பது ஒரு மனிதன் தன் தேசத்தின் மீதும், தேசிய இனங்களின் மீதும் கொண்டுள்ள உணர்வுபூர்வமான விசுவாசத்துடனேயே ஆரம்பமாகின்றது எனலாம்.

கான்ஸ்கொன் 'தேசியவாதத்தினை இலகுவாக வரையறை செய்ய முடியாவிட்டாலும், அதனைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து நோக்க முடியும் என்றார். இவர் தேசியவாதத்தினை மேற்கத்தைய தேசியவாதம், ஏனைய நாடுகளின் தேசியவாதம் என்று வகைப்படுத்துகின்றார். மேற்கு நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் தேசியவாதமானது கலாசார செல்வாக்கிற்குட்பட்டதாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்விற்குட்பட்டதாகவும் அமைந்திருந்தது என்றார்." இவ்வாறு 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தோற்றம் பெற்ற தேசியவாதம், 19ஆம் நூற்றாண்டில் பொதுவான ஐரோப்பிய இயக்கமாகவும், 20ஆம் நூற்றாண்டில் உலகளாவிய தேசியவாதமாகவும் வளர்ச்சியடைந்தது எனலாம்.

ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசியவாதம் உலகெங்கிலும் ஒரே காலப்பகுதியில் தோன்றியது என கூறிவிடவும் முடியாது. தேசியவாதத்தின் தன்மை, நோக்கம், வேகம் போன்றவை வேறுபட்டனவாகவே காணப்பட்டன.

பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் முதன் முதலாக தேசிய அரசாக தோற்றம் பெற்றது, அமெரிக்க ஐக்கிய நாடுகளாகும். அதன் பின் ஆசிய, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே தேசியவாதம் தோற்றம் பெற்றது. இந்நாடுகளின் தேசியவாதமானது ஏகாதிபத்திய எதிரப்புணர்வின் அடிப்படையிலேயே தோற்றம்பெற்றன. இந் நாடுகளுக்குள் ஆசிய தேசியவாதமானது தனக்கேயுரிய தனித்துவ அம்சங்களைக் கொண்டிருந்தது. இதை அம்பலவாணர் சிவராசா அவர்கள், 'ஆசிய தேசியவாதத்தில் காணப்பட்ட பொது அம்சம் அது எப்போதும் ஏகாதிபத்தியவாதத்திற்கு எதிராக இருந்தமையேயாகும்" என்பர். அதே போன்று, ஆசியாவில் மேற்கத்தைய ஆட்சியாளர்களின் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பலம்வாய்ந்த சக்தி அந்நாடுகளில் எழுச்சியடைந்த தேசியவாதம் என்பர்.

ஆசியத் தேசியவாதம் பற்றி மிகப் பரந்தளவு ஆய்வினை மேற்கொண்டிருந்த சவான் பின்வருமாறு கூறுகின்றார். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின் சடுதியாக ஏற்பட்ட மாற்றங்களால் புதிய யுகப் புரட்சி ஆசிய நாடுகளில் ஏற்பட்டது. தேசிய உணர்வு என்பது தேசத்தின் நடவடிக்கைகளை நகர்த்திச் செல்லும் கருவியாக ஆசிய நாடுகளில் பயன்பட்டது. ஆசிய நாடுகளுக்கிடையிலான தன்மைகள் பின்வருமாறு நோக்கலாம்:-

1) ஆசிய நாடுகள் வேறுபட்ட இனம், கலாசார, மொழிகளைக் கொண்ட மக்கள் வாழும் நாடுகளாகும்.

2) ஆசிய நாடுகள் வேறுபட்ட தேசங்களாகவும் அல்லது அரசியல் அலகுகளாகவும் காணப்பட்டன.

3) ஆசிய நாடுகள் ஒவ்வொன்றும் தேசியவாதம் பற்றி சொந்த சித்தாந்தங்களைக் கொண்டிருந்தது என்றார்.

உலகில் ஏனைய நாடுகளோடு ஒப்பிடுமிடத்து ஆசிய தேசியவாதம் எவ்வாறு தனக்கேயுரிய சில பொதுவான இயல்புகளைக் கொண்டிருந்ததோ, அவ்வாறே ஆசியாவின் மற்றைய நாடுகளுடன், இலங்கை தனக்கே உரிய பல வெளிப்படையான தனித்துவமான இயல்புகளைக் கொண்டிருந்தது. இவற்றுள் பரந்தளவிளான தேசியத்துவக் கிளர்ச்சிகள் என்ற போக்கில் சீர்திருத்த இயக்கங்கள் வகித்த பிரத்தியேகமான பங்கே மிக முக்கியமானதாக இருந்தது. இதைப் பற்றி எஸ். அரசரட்ணம்அவர்கள்கூறும்போது 'இலங்கை தேசிய காங்கிரஸ் ஒரு போதும் மக்கள் இயக்கமாக மாறவில்லை" எனவே இலங்கைத் தேசியவாதமானது ஒரு போதும் மக்கள் தேசியவாதமாக இருக்கவில்லை. மாறாக அது உயர்ந்தோர் தேசியவாதமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இலங்கையில் இருந்த உயர் குழாமினர் அரசியல் திட்ட சீர்திருத்தத் தையே பிரதான இலக்காக வலியுறுத்தியமை இச் சீர்திருத்தவாதிகளின் பொதுவான நோக்கம் ஆகும். மேலும் இவர்கள் குடியேற்ற நாட்டாட்சி யின் தொடர்புகளை முற்றாக நிராகரித்து, அவர்களுக்கு எதிராக செயற்படும் போக்கை யும், அவர்கள் நிராகரித்திருந்தமை இலங் கையின் அரசியல் திட்டவாதிகளில் அவ தானிக்கக் கூடிய மற்றுமொரு அம்சமாகும்.

'மொழி, சாதி, வகுப்பு, இனம், பிராந்தியம், உறவு ஆகியவற்றுக்குள் பிளவுபட்ட இலங்கை அரசியல், சமூகப் பிரச்சினைகள் உலக அமைப்பைப் பிரதிபலிக்கின்றது. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் புதிய உலகத்தை ஸ்பானியர்களும், போத்துக்கேய ரும் கைப்பற்றியதோடு ஆரம்பித்த ஐரோப்பிய ரது உலக ஆதிக்கம் இலங்கைக்கும் வந் தடைந்தது. தெற்கு ஆசியாவில் இலங்கை தான் கூடிய காலம் குடியேற்ற ஆதிக்கத் திற்கு உட்பட்டிருந்தது. இதனால் தெற்காசி யாவிலேயே ஏனைய மரபு ரீதியான சமூகத்தைவிடக் கூடியளவு கிறிஸ்தவ மயமாக்கப்பட்டது'. இவ்வாறு இலங்கையில் கிறிஸ்தவமயமாக்கப்பட்ட ஒரு பிரிவினர் எல்லா நிலைகளிலும் கூடியளவு செல்வாக் குள்ளவர்களாக விளங்கினர். கிறிஸ்தவ மிசினரிப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்று, அரச உத்தியோகங்களைப் பெற்றுக் கொண்ட ஒரு பிரிவினர் உயர் குழாமினராக தோற்றம்பெற்றனர். இலங்கையின் நவீன தேசியவாதத்தின் தோற்றமானது உயர் குழாமினருக்கு எதிராகவே அமைந்தது. கே.எம்.டி.சில்வா அவர்கள் இதைப்பற்றி கூறும் போது 'கிறிஸ்தவ மிசனரிமாரின் செயற்பாடுகளுக்கு எதிரான மதப்புனருத்தான செயல் முறைகளோடு காணக்கூடியதாக உள்ளது" என்றார்.

தேசியவாதம் என்பது ஒர் அரசியல் தத்துவமாக வடிவம் பெற்றிருந்தாலும்,'அதன் ஆரம்பம் அல்லது அதன் மூலவேர் மிகத் தொலைவில் இருந்தே ஆரம்பிக்கின்றது". உண்மையில் இலங்கையிலும் நவீன தேசியவாதத்தின் தோற்றத்தினை நாம் இருபதாம் நூற்றாண்டில் காண முடிந்தாலும் அதன் ஆரம்பம் மிகத் தொலைவில் இருந்தே வருகின்றது. கே.எம்.டி.சில்வா அவர்கள் இவ்வாறு கூறுகின்றார். 'நவீன தேசியவாதத் தின் எழுச்சிக்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஒரு வகையான பலம்வாய்ந்த தேசிய உணர்வும், தேசிய அடையாளமும் காணப்பட்டது. 11ஆம் நூற்றாண்டு தொடக்கம் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இலங்கையில் நடைபெற்ற பல்வேறு எதிர்ப்பு இயக்கங்களின் நடவடிக்கைகளும் அவற்றின் உறுதிப்பாடும், நவீன தேசியவாதத்தில் இருந்து வேறுபடும் மரபு ரீதியான தேசிய வாதமாகும்". இந்த மரபு வழியான பின்னணி யோடு இணைந்த அமைப்புத்தான் 'கலால்' இயக்கமாகும். இதன் செயற்பாடு கூட கலாசார விழுமியங்களோடு தொடர்புபட்டவையே.

1.1 காலனித்துவ ஆட்சிக்கெதிரான 'இலங்கையர் தேசியவாதம்"

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருப தாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங் களிலும் பிரித்தானியர் கடைப்பிடித்த காலனி யாதிக்க கொள்கையின் விளைவாகவும், கிறிஸ்தவ மிசனரிகளின் நடவடிக்கைகளின் விளைவாகவும், ஆங்கிலக் கல்வி கற்று, அரசாங்க, தனியார் தொழில்களைப் பெற்ற மத்திய வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்றது. இவர்களது வேலைவாய்ப்புக்களின் தன்மைகளிலும், இவர்களது கருத்துக்கள், கண்ணோட்டங்கள் ஆகியவற்றின் தன்மை களிலும், இவர்கள் பிரதேச உணர்வுகளை இழந்து ஒரு 'பொது இலங்கையர் சமு தாயத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினர்'. இலங்கையின் தேசியவாதத்தினை வழிநடத்திச் சென்ற மற்றுமொரு கருவி ஆங்கில மொழியாக அமைந்தது. பிரித்தானி யர் இலங்கையைக் கைப்பற்றிய பின் 1833 ஆம் ஆண்டிலே தான் இலங்கை கோல்புறூக் - கமருன் சீர்திருத்தத்தின்படி ஒன்றிணைக்கப்பட்ட ஒற்றையாட்சி நிர் வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிரித் தானியரே 'இலங்கையை அரசியல், நிர்வாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் ஒற்றையாட்சி அமைப்பிற்குள், அதிகாரத்தை மையப்படுத்தி ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் ஆங்கிலம் அரச கரும மொழியாக மாற்றப்பட்டமையால் மிசனரி பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வி கற்ற ஒரு புதிய வர்க்கம் தோற்றம்பெற்றது. ஜேம்ஸ் ஜுப் இது பற்றி கூறும் போது 'இயல்பாக ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட பறங்கியரும், வட பகுதியில் மிசனரி பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், ஏனைய முக்கிய நகர்ப்புறங்களில் கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்றவர்களும், தமது அரச பதவிகள், பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள் காரணமாக தம்மை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக்கொண்ட ஒரு பிரிவினராகக் காணப்பட்டனர்.

'இலங்கையர் தேசியவாதம் எனும் கருவியை மிக உயர்தரமாகக் கொண்டு அதை பிரித்தானிய எதிர்ப்புக்குரிய கருவியாகப் பயன்படுத்தினர்". இவ்வாறு சுதேசிகளிடையே 'இலங்கையர்" என்ற உணர்வு அந்நியர் ஆட்சிக் காலங்களில் நிலவியது.

இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் என்ற கருத்து கோல்புறூக் காலத்திலிருந்தே பிரித்தானிய அரசியல், யாப்புக் கொள்கையில் இரண்டறக் கலந்திருந்தது. 1833ஆம் ஆண்டு முதலாவது சட்டநிருபன சபையில் ஐரோப்பியர் மூவரும், பறங்கியர் ஒருவரும், தமிழர் ஒருவரும், சிங்களவர் ஒருவருமாக ஆறு பேர் உத்தியோக சார்பற்றவர்களாக இருந்தனர். இதில் தமிழரும், சிங்களவரும் சம பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தனர். 1860களுக்குப் பின் அரசியல் பிரச்சினைகள் பற்றிய பிரசாரம் மெதுவாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னணியாக 1833இன் பின் புதிய நிர்வாகமுறை உருவாக்கப்பட்ட போது அரச சேவைகளின் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்தன. இதே காலப்பகுதியில் புதிய கீழ்நிலை நீதிமன்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் உருவாக்கத்தால் சட்டத் தரணிகள், சட்டவியல் வல்லுனர்கள் தோற்றம்பெற வழிவகுத்தது. அத்தோடு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒருபுறம் மத்தியதர வகுப்பினரின் தோற்றத்திற்கு வழிவகுக்க, மறுபுறம் பெருந்தோட்டத் துறையின் அறிமுகம் இலங்கையில் செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினரை தோற்றுவித்தது. சமூக அந்தஸ்தும் பொருளாதார செல்வாக்கும் கொண்ட ஒரு பகுதியினரின் கோரிக்கைகளை பிரித்தானியர் சந்தேகத்துடனேயே நோக்கினர். பிரித்தானியர் தமது எதிர்கால அரசியல் நன்மையைக்கருதி சிங்களவர் என்ற பிரிவினரை இணைத்து நோக்காது, பெரும்பான்மையினரான கரையோரச் சிங்களவர்களைத் தனிமைப்படுத்துவதற்காகவும், கண்டிச் சிங்களவர்களைத் தனிமைப்படுத்துவதற்காகவும், கண்டிச் சிங்களவரை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவும், 1889ஆம் ஆண்டு கண்டிச் சிங்களவருக்கென ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இப்பொழுது பிரதி நிதித்துவ விகிதாசாரமானது 1:2 என்ற நிலையைப் பெற்றது. இந்நிலையில் இலங்கையில் இருந்த இரு பிரதான இனங்களுக்கும் இடையே ஓர் இணக்கமான நிலையை கண்டுகொள்ள முடியும்.

1908ஆம் ஆண்டின் பின்னரே அரசியலமைப்பில் சீர்திருத்தம் வேண்டுமென்ற கோரிக்கை சுதேசிகளிடம் மீண்டும் வலுப்பெற்றது. இக்காலகட்டத்தில் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் வர்த்தக அடிப்படைகள் நன்கு வேரூன்றியதுடன், ஆங்கிலக் கல்வி கற்ற உயர் குழாத்தினரின் முன்னோடிகள் நகரில் நிரம்பிக் காணப்பட்டனர். அவை மாத்திரமன்றி தேசிய மறுமலர்ச்சி இயக்கம் வளரும் உத்வேகமும் தன்னை தெளிவாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. பிறிதோர் வகையில் கூறுவதாயின் அன்று காணப்பட்ட 'சமூக நிலைமைகள் இனவாதக் கருத்துக்களை எதிர்க்கும் மனோபாவத்திற்குச் சாதகமாக இருந்தது".

'1912ஆம் ஆண்டு 'அன்ரூ - மக்கலம்' சீர்திருத்தம், அதன் பின்னர் உள்ள காலங்களில் நடந்த பல சீர்திருத்தங்களுக்கும், இலங்கை கடைசியாகப் பெற்ற சுயாட்சிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடியாக அமைந்ததுடன் பல முன் னேற்றமான அம்சங்களையும் கொண்டிருந்த தெனலாம். இச்சீர்திருத்தத்தில் சட்ட நிரு பன சபையில் ஆறு பேர் இன ரீதியாக நியமிக்கப்பட்டதோடு, முதன்முறையாக நான்கு பேர் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இதில் ஒருவர் படித்த இலங்கையர்களிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்டார்.

'1912ஆம் ஆண்டு கற்ற இலங்கையருக் கான தேர்தல் தொகுதியில் கரவா சமூகத் தைச் சேர்ந்த கரை நாட்டுச் சிங்களத் தலை வரான மாக்கஸ் பெர்னான்டோவை வீழ்த்தி, இலங்கைத் தமிழரான பொன்னம்பலம் இராமநாதன் கொயிகம சிங்களத் தலைவர் களின் ஆதரவுடன் வெற்றி அடைந்தார். இச்சம்பவம் இலங்கை அரசியலில் இனவாதப் போக்கை உயர்குழாம் தலைவர்கள் விரும் பியிருக்கவில்லை என்பதுடன் அரசியல் திட்ட மாற்றங்களினூடாகவே அரசியல் அதிகாரங்களைக் கைமாற்றிக் கொள்ளவும் விரும்பியிருந்தனர். 1912ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின் படி ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும், ஒரு கரையோரச் சிங்களப் பிரதிநிதித்துவமும் என அதிகரிக்கப்பட்டமையால் இப்பொழுது '2:3' என்ற விகிதாசாரம் மாறியது. இவ் வாண்டு முதன்முறையாக கல்வி கற்ற இலங்கையருக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரான பொன்னம்பலம் இராமநாதன் தெரிவு செய்யப்பட்டதுடன், இரு பிரதான சமூகங்களும் சம அளவில் சட்ட சபையில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டன. இந்நிலையில் இங்கு பிரதிநிதித்துவப் போட் டியோ, அரசியல் முரண்பாடுகளோ தோன்றாத போது 'இலங்கையர் தேசியவாதம்" என்பது மேலான இடத்தைப் பெற்றிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களில் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் பல அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. அவை சட்டசபையை விரிவாக்கம் செய்ய வேண்டும், பொறுப்பு ஆட்சி வழங்க வேண்டும், அரச சேவைகளில் சுதேசிகளுக்கு அதிக இடங்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு வந்தாலும், 1915ஆம் ஆண்டின் பின்னரே இது புத்துணர்வு பெற்ற கோரிக்கைகளாக வலுப்பெற்றன. இவ்வாண்டிலேயே இலங்கைக்குத் தேசிய சுதந்திரத்தைப் பெறுதல் என்பதை வாக்குறுதி யெடுத்த, இளைஞர்களைக் கொண்ட தீவிர தேசியவாத இயக்கமான 'இளம் இலங்கையர் கழகம்" என்ற குழு தோற்றம் பெற்றது. இதற்கு ஏ.இ.குணசிங்காவும், விக்ரர் கொரேயாவும் தலைமை தாங்கினர். இதை போன்று 1917ஆம் ஆண்டு வைகாசி மாதம் 'இலங்கைச் சீர்திருத்த சங்கம்" ஒன்று பொன்னம்பலம் அருணாசலத்தின் தலைமையில் நிறுவப்பட்டது. இதன் பிரதான நோக்கம் சுயாட்சி பெறுவதேயாகும். இதற்காக 1917ஆம் ஆண்டு மார்கழி, 1918ஆம் ஆண்டு மார்கழி ஆகிய காலங்களில் மகாநாடுகளை ஒழுங்கு செய்து, சுயாட்சி பெறுவதற்கான தேசிய உணர்வைத் தூண்டியது.

1917ஆம் ஆண்டு சித்திரை மாதம் இரண்டாம் திகதி கொழும்பு விக்டோரியா மெசோனிக் மண்டபத்தில் ஈ.ஜே.சமரவிக் கிரம தலைமையில் நடைபெற்ற இலங் கைத் தேசிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பொன்னம்பலம் அருணாசலம் 'எங்கள் அரசியல் தேவைகள்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார். 'இதன் மையப்பொருள் சுயாட்சி பெறுவதற்கான தேவை பற்றிய விளக்கமாயிருந்தது".

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் இலங்கையின் இரு பிரதான இனங்களும் ஒத்த முயற்சியினூடாக தேசிய உணர்வை வளர்த்து, அதன் மூலம் அரசியல் திட்ட மாற்றங்களையும், படிப்படியான பொறுப்பாட்சியையும், சட்டசபைப் பிரதிநிதித்து வத்தின் விரிவாக்கம் போன்ற கோரிக்கை களை முன்னெடுத்துச் சென்றன. அதே காலப் பகுதியில் இந்தியாவில் பிரித்தானியர் மற்றுமோர் உத்தியைக் கையாண்டனர். இதுவரை இந்தியாவில் பலவகையான சாதிகளும், வகுப்புகளும், சமயங்களும் இருப்பதால் பாராளுமன்ற ஆட்சி முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமற்றது எனக் கூறிவந்த பிரித்தானியர் 1917ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்தியாவின் மந்திரியான 'எட்வேட் மொண்டேகு" ஒரு முக்கிய பிரகடனத்தை வெளியிட்டார். 'இந்திய அரசியல் நிர்வாகத்தின் எல்லாத்துறைகளிலும் இந்தியர் கூடிய பங்கெடுக்க வேண்டும், பொறுப்புள்ள ஆட்சியை அது படிப்படியாக அடைவதற்குச் சுயாட்சி தாபனங்களை அபிவிருத்தி செய்யவும் வேண்டும். இதுவே மன்னர் பிரானின் அரசாங்கத்தின் கொள்கையாகும். இவ்வாறு இலங்கை அரசியல் திட்டவாதிகளிடையே சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் பலம் வாய்ந்த அமைப்பொன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த உயர் குழாமினர் 'இலங்கைத் தேசிய காங்கிரசை' உருவாக்கினர்.

இலங்கைத் தேசிய காங்கிரசின் தோற்றம் பற்றி ஏ.ஜே.வில்சன் பின்வருமாறு கூறுகிறார். 'பரந்தளவில் வெவ்வேறுபட்ட எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து, பலதரப்பட்ட உயர் குழாத்தினையும், வேறுபட்ட இனக் குழுக்களையும், பல மதத்தவர்களையும் உள்ளடக்கிய அமைப்பாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது".

இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை தோற்றுவித்த போது பொன்னம்பலம் அருணாசலம் போன்றவர்கள் 'இலங்கைத் தேசிய காங்கிரஸ் இத் தீவின் பல்வேறு சமூகங்களை குறிப்பாக இரு பெரும் சமூகங்களான தமிழர், சிங்களவர்களை இணைத்து அவர்களது பொதுவான இலக்கான இலங்கையின் பொறுப்புவாய்ந்த அரசாங்கத்தினைப் பெறுவதற்கான ஒரு உண்மையான தேசிய அமைப்பு" ஆக விளங்குமென்று கருதினர். அது மட்டுமன்றி 'சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான இணக்கத்தின் மற்றுமோர் சின்னமாக 1919ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரசைக் குறிப்பிடலாம்". தேசிய மட்டத்திலான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதிற்கு பிரதான பங்கு வகித்த இந்த அமைப்பின் முதலாவது தலைவராக 'பொன்னம்பலம் அருணாசலம்' (1919 - 1920) தெரிவு செய்யப்பட்டார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் எந்தவித எதிர்ப்பும் இன்றியே இந்தப்பதவி அவரைத் தேடி வந்தமையாகும். இக் காலகட்டத்தில் பிரபல்யம் வாய்ந்த சிங்களத் தலைவர்கள் பலரும் இவரது தலைமையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு இருந்தனர்.

பொன்னம்பலம் அருணாசலத்தை பொறுத்த வரை இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டமை அவருடைய நீண்ட கால ஆசை ஒன்றினைப் பூர்த்தி செய்வதாய் இருந்தது. இதனை அவர் சுதந்திரப் போராட்டத்திற்கான ஒரு அமைப்பாக மாத்திரம் கருதியிருக்கவில்லை அதற்கும் மேலாகத் தேசிய ஒற்றுமை, இன ஒருமைப்பாடு என்பவற்றிற்கான ஒரு சாதகமாகவும் நோக்கினார். இதன் மூலம் பிரதேச ரீதியாகவும், இன, மத, மொழி போன்ற ஏனைய மட்டங்களிலும் எழக்கூடிய பல்வேறு வகைப்பட்ட பிரிவினை உணர்வுகளையும் சமப்படுத்தித் தேசிய உணர்வினை வளர்க்க முடியும் என அவர் நம்பினார்.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்படுவதற்கான முயற்சிகளின் போது, அதில் ஒன்றிணைந்த பல்வேறு அமைப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் மேற்கு மாகாணத்தில் தமிழருக்கெனத் தனித்தொகுதி ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பது ஓர் அம்சமாக இடம்பெற்றிருந்தது. 'இதில் யாழ்ப்பாணச் சங்கத்தினருக்கு, ஜேம்ஸ் பீரிஸ், ஏ.ஜே. சமரவிக்கிரம போன்ற தலைவர்கள் இட ஒதுக்கீட்டிற்கான உறுதிமொழி வழங்கியிருந்தனர். இது 1918இல் இடம்பெற்றது. '1920ஆம் ஆண்டு மேற்கு மாகாணத்தில் கொழும்பு நகர்ப்புறத் தொகுதியில் இலங்கை தேசிய காங்கிரஸ் ஜேம்ஸ் பீரிஸ் போட்டியிட நியமனம் செய்யப் பட்டார்'. இச்சம்பவமானது இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து பொன். அருணாச்சலம் வெளியேற உடனடிக் காரணமாக அமைந்திருந்தது. இதை விட தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிமொழி வழங்கப்பட்ட இரு தலைவர்களும் அதை பகிரங்கமாக மறுத்தமை, பொன்.அருணாச்சலத்தை பொறுத்தவரை ஒரு தோல்வியாகவும், வெறுப்பாகவும் அமைந்தது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களிலும் இரு பெரும்பான்மையினங்களும் இலங்கை தேசியவாதத்தில் நம்பிக்கை கொண்டு தேசிய ஒற்றுமை, தேசிய நலன்களுக்காக பாடுபட்டவர்கள், குறுகிய ஒரு காலகட்டத்தில் இந்த தேசிய ஒற்றுமை சிதைவடைந்தது. இதனால் தேசிய காங்கிரசின் ஆரம்பகாலத் தலைவரான பொன். அருணாச்சலம் காங்கிரசில் இருந்து 1921ஆம் ஆண்டு விலகினார். இதற்கு மேல் மாகாணத்தில் தமிழருக்கான பிரதிநிதித்துவம் பற்றிய சிங்களத் தலைவர்களுடனான முரண்பாடு ஒரு காரணமாக அமைந்தது. இதனால் தேசிய காங்கிரஸ் நாடு தழுவிய தன்மையை இழந்து, கரையோரச் சிங்களவர்களின் ஆதிக்கத்திற்குள் சென்றது. தேசிய காங்கிரசின் ஒரு பகுதி கரையோரச் சிங்களவர்களை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், இது இனங்களுக்கிடையில் இருந்த புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் சிதறடிப்பதாகவும் இருந்தது. காங்கிரசிலிருந்து பொன். அருணாச்சலம் வெளியேறியமையுடன் இலங்கைத் தேசியவாதமென்பது இப்போது இலங்கைத் தேசியவாதத்தில் ஒரு பிரிவினையை ஏற்படுத்தியது. பொன்.அருணாச்சலம் தமிழர்களின் தனித்துவத்தையும், மேம்பாட்டினையும் வெளிப்படுத்த '1921ஆம் ஆண்டு ஆவணி மாதம் 'தமிழ் மகாஜன சபையை' ஸ்தாபித்தார். இதுவரை தேசிய நீரோட்டத்தில் இணைந்திருந்த இனங்கள் இப்போது இன ரீதியாக தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதில் கூடியளவு அக்கறை காட்டியது எனலாம்.

எஸ்.அரசரட்ணம் அவர்கள் இலங்கையின் இரு பிரதான இனங்களின் உயர்வகுப் பினரே பெருமளவு தமக்குள் முரண்பட்டுக் கொண்டனர் என்றும், இவர்களுக்கிடையிலான போட்டியானது இரு இனங்களுக்கு இடையிலான போட்டியாக மாற்றப்பட்டது என்றும், இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கிய உயர் குழாத்தினர் அரசியல் திட்ட சீர்திருத்தத்தில் பிரதிநிதித்துவப் பங்கீட்டு முறையில் இரு இன உயர் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், கசப்புணர்வுகளுமே ஒவ்வொரு இனங்களும் தம்மை இனரீதியாக ஒழுங்கமைத்துக் கொள்ளவும் தமது இன அடையாளங்களை வெளிப்படுத்தவும் முற்பட்டன. இந்த வகையிலேயே 1921 காலப்பகுதியில் தமிழ் தேசிய இனத்தின் தனித்துவ கலாசார அடையாளம் வெளிப்படுத்தப்பட்டது.

போல்.ஆர்.பிராஸ் பல் தேசிய இனங்கள் பற்றிக் கூறும் போது, கைத்தொழில் புரட்சியின் பின் ஏற்பட்ட நவீன மயமாக்கல் நடவடிக்கைகளினால் இனத்துவ சமூகங்களின் தோற்றம் பெற்ற உயர் குழாத்தினர், தமது அரசியல் அதிகாரங்கள், பொருளாதார நன்மைகள், சமூக அந்தஸ்து போன்றவற்றைப் பேணிக்கொள்வதற்கு, பல்தேசிய இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி ஒவ்வொரு இனக்குழுக்களையும் ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர். இவ்வாறான ஒரு நிலை 1920களில் இலங்கையின் பல்தேசிய இனங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டு ஒவ்வொரு இனமும் தமது இன நலன்களையும், இன மேன்மையையும் கருதி தனித்தனியான அமைப்புகளின் கீழ் தம்மை ஒழுங்குபடுத்திக் கொண்டன. 1921இல் பொன்.அருணாச்சலம் பிரிந்து சென்று 'தமிழ் மகாஜன சபையை" அமைக்க, 'இலங்கைத் தேசிய காங்கிரஸ்" கரையோரச் சிங்களவர்களின் அமைப்பாக மாறுகின்றது. இதே போன்று 1920களின் நடுப்பகுதியில் கண்டிச் சிங்களவர்கள் 'கண்டித் தேசிய பேரவை" என்ற அமைப்பினை ஏற்படுத்தினர்.

1921ஆம் ஆண்டு வில்லியம் மனிங் அரசியல் திட்டத்திருத்தத்தில் சட்ட நிரூபன சபையில் இருபத்து மூன்று பேர் இடம் பெற்றனர். இவர்களுள் பிரதேச ரீதியான பதினாறு பேரும், இன அடிப்படையில் ஏழு பேரும் நியமனம் செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இங்கு பெரும்பான்மையினர் பதின்மூன்று பிரதிநிதிகளைக் கொண்டிருக்க, தமிழர்கள் மூன்று பிரதிநிதிகளை மட்டுமே' கொண்டிருந்தனர். இந்த அரசியல் திட்டம் ஆனது தமிழர்களை அதிருப்தி அடையச் செய்தது. இதுவரை காலமும் தாம் பிரதிநிதித்துவத்தில் சம அந்தஸ்துடையோர் பெரும்பான்மையினர் என கருதிய நிலை மாற்றப்பட்டு தமிழர்கள் சிறுபான்மையோர் என்ற மெய்யான தோற்றத்தினை அவர்களுக்கு ஏற்படுத்தியது. இதில் தமக்கு போதியளவு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டி இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை கோரினர். இக்காலப்பகுதியில் எல்லா இனங்களும் தம்மை நிறுவனமயப்படுத்தி தமது கோரிக்கைகளை வெவ்வேறாக குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பி வைத்தன. 'இலங்கைத் தேசிய காங் கிரஸ் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை, சுயாட்சி பெறுவதற்கான சட்டவாட்சிக் கழகம்," போன்ற பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய பிரேரணையைச் சமர்ப்பித்தது. 'இலங்கைத் தமிழ் மகாஜன சபா 1921ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி அம்பலவாணர் கனகசபையின் தலைமையில் கூடிய போது இது முழுமையான பிரதேசவாரி முறையை எதிர்த்தது".

இலங்கையின் தேசாதிபதியாக வில்லியம் மனிங் 1918 - 1925 வரையிலான காலப்பகுதியில் இருந்தார். இவர் 'இலங்கையின் சுயாட்சிக் கோரிக்கை" என்ற சவாலை எதிர் நோக்க வேண்டியிருந்தது. எனினும் இலங்கையில் கடமை புரிந்த பிரித்தானிய தேசாதிபதிகளுக்குள் இவர் மிகுந்த திறமையும், மதிநுட்பமும் வாய்ந்த ஒருவராக விளங்கியமையால் எந்தச் சவால்களையும் தமக்கு சாதகமாக்கிக் கொள்வதில் வெற்றி பெற்றிருந்தார்.

1920களின் முற்பகுதியில் பல்வேறு இனங்களும் தமது இன நலன்களை முதன்மைப்படுத்திப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்ட போது, தேசாதிபதி வில்லியம் மனிங் 'ஒரு குறிப்பிட்ட இனம் தமது விருப்பங்களை பிறிதோர் இனத்தின் மீது அழுத்தம் கொடுக்கும் போக்கை ஏற்றுக்கொள்ளவில்லை'. இதனால் 1923ஆம் ஆண்டு வைகாசி மாதம் தேசாதிபதி வில்லியம் மனிங்' தனது பிரேரணையொன்றில் இன அடிப்படையில் அமைந்த ஆசன ஒதுக்கீடுகளுக்கும், பிரதேசவாரி அடிப்படையில் அமைந்த முறைகளுக்குமான ஒரு திட்டத்தினைத் தயாரித்து குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார்'.

குடியேற்றநாட்டு மந்திரியான டிவோன்சயரின் (Devonshire) ஆலோசனைப்படி 'சட்ட நிரூபன சபையில் எந்தச் சமூகமும் அறுதிப் பெரும்பான்மையை பெற முடியாதவாறு மாற்றி அமைத்தார்'. இச் சீர்திருத்தம் சிறுபான்மையோரை திருப்திப்படுத்தியதாயினும், இதனால் பிரித்தானிய ஆட்சியாளரே அதிக நன்மைகளைப் பெற்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களில் இரு பிரதான சமூகங்களுக்கிடையே இணக்கமான ஒரு நிலை காணப்பட்டது. இது 1920களின் பின் இணக்க நிலையில் மனமுறிவும், கசப்புணர்வும், சந்தேக நோக்கமும் தோன்றவே இலங்கையர் தேசியவாதம் என்பதும், சுயாட்சிக் கோரிக்கை என்பதும் பின்தள்ளப்பட்டன. இலங்கையர் தேசியவாதத்தினையும், சுயாட்சிக் கோரிக்கைகளையும் ஆரம்பத்தில் இருந்தே சந்தேகத்துடன் பிரித்தானியர் நோக்கி வந்தனர். இதனால் அவர்கள் பல காலனித்துவ நாடுகளில் மேற்கொண்ட பிரித்தாளும் கொள்கையையே இங்கும் மேற்கொண்டனர். இதைப் பற்றி கே.எம்.டி.சில்வா அவர்கள் பின்வருமாறு மதிப்பிடுகின்றார்.

'இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராக முளைத்த, சகிக்க முடியாத ஒரு சவால் என இலங்கைத் தேசிய காங்கிரசைக் கருதிய மனிங், பயங்கரமான ஒரு எதிரியை முறியடிக்கும் பாணியில், எந்தத் தயவுமற்ற முறையில் அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்'.

இந்தக் காலகட்டத்தில் சிதைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியம் மிகப் பெறுமதி வாய்ந்ததாகும், ஏனெனில் இதன் பின்னர் இனவாத அரசியல் தன்னை பெருமளவிற்கு இனத்துவத்துடன் நிறுவன மயப்பட்டுவிட்டன. ஒவ்வொரு இனங்களும் தமது தேசிய அடையாளங்களையும், அதன் தனித்துவத்தையும் முதன்மைப்படுத்தி தம்மை வரலாற்று பொற்காலத்திற்கு புனரமைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளே பெருமளவு சுதந்திரத்திற்குப் பின்னும், அதற்கு முன்னும் இலங்கை அரசியல் செல்வாக்குச் செலுத்தியது எனலாம்.

'நவீன மயமாக்கலின் மரபு ரீதியான உயர்வர்க்கம் அந்த வாய்ப்புக்களைப் பெற முடியாமையால், அவை பல்லின சமூக அமைப்பில் இருந்து தமது இனத்தை வேறுபடுத்த முற்படுகின்றது". இந்த வகையில் கண்டிச் சிங்களவர்கள் கலாசார, பிரதேச உணர்வுகளின் அடிப்படையில் தம்மை மரபு ரீதியான ஒரு சமூகமாகக் கருதி 1924ஆம் ஆண்டு 'கண்டித் தேசிய பேரவை" எனும் அமைப்பினை உருவாக்கினர். இவ்வமைப்பின் கீழ் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்ட கண்டியர்கள் தமது பிரதிநிதித்துவத்தை இனவாரியாகவே கோரினர். அதில் திருப்தியடையாத கண்டியர்கள் தமது பிரச்சினைக்கு'ஒரே தீர்வு சமஸ்டிதான்' என்ற கோரிக்கையை முன் வைத்து கண்டியருக்குப் பிரதேசத் தன்னாதிக்கத்தைக் கோரினர்'.

இனத்துவ சிந்தனை வளர்ச்சியடைந்து, இனத்துவ அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட காலகட்டத்தில் அவற்றை நிராகரித்து, இனக் கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து மீண்டும் 'இலங்கையர் தேசியவாதம், நாட்டின் ஐக்கியம்" போன்றவற்றை வலியுறுத்தும் அமைப்பாக 1920களின் மத்தியில் 'யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்" தோற்றம் பெற்றது. (இது பின்னர் தன்னை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என பெயர் மாற்றிக் கொண்டது) இவ் அமைப்பு தன்னை பெருமளவு இந்திய தேசிய காங்கிரசுடன் இணைத்துக் கொண்டது. மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்றோரை முன் உதாரணமாகக் கொண்டு இந்தியப் பாணியை பின்பற்றி இலங்கையின் தேசிய போராட்டத்தை வளர்க்க விரும்பியது. வகுப்பு வாதத்தையும் பெரிதும் எதிர்த்து 'தேசிய ஐக்கியம், ஐக்கிய இலங்கை" போன்ற எண்ணங் களுக்காக பெரிதும் குரல் கொடுத்தது. இது முற்றாக தமிழர்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பல்ல மாறாக பல சிங்கள அங்கத்தவர்களையும் கொண்டு இருந்ததுடன் சில காலங்களில் நடைபெற்ற கூட்டங்களுக்கு அவர்களே தலைமையும் தாங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழர் இனவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தம் நலன்கருதிக் கோரி நிற்கையில் டொனமூர் குழுவினரோ தேசிய ஒருங்கிணைப்பில் அக்கறை கொண்டவர்களாக இப் பிரதிநிதித்துவ முறையை முற்றாக ஒழித்துச் 'சர்வசன வாக்குரிமையையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையும்' சிபாரிசு செய்தனர். இந்நிலையானது 1924இல் இலங்கை சட்டவாக்க சபையிலே தமிழ்த் தலைவர்களாலும், சிங்களத் தலைவர்களில் ஒரு பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'பிரதிநிதித்துவ முறை ஒழுங்கமைப்பான 2:1 நிலையை 5:1 ஆக' மாற்றியது. இலங்கைத் தமிழர்கள் இம்மோசமான திட்டத்தை தீவிரமாக எதிர்த்தனர். என்.பாலகிருஸ்ணன் அவர்கள் 'டொனமூர் அரசியல் திட்டம் அரசியல் அதிகாரம் பற்றிய பொறிமுறையிலும், சட்டவாக்கத்திலும் சிங்களவர் ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்தது. இதுதான் இனக் குரோதத்தின் அடித்தளமாக விளங்கியது" என்பர்.

டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையிலே இலங்கைக்குப் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் உருவாக்கப்படுவதற்கு வாக்குரிமை வழங்கப்படுதல் அவசியமானது என்று கருதப்பட்டது. இதனால் தான் முக்கிய பரிந்துரையாக சர்வசன வாக்குரிமையுடன் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதாக கூறினார். ஆரம்பத்தில் சர்வசன வாக்குரிமையின் அறிமுகத்தை எல்லாத்தரப்பினரும் எதிர்த்தனர் ஆயினும் சிறுபான்மையோரே இதை மிக அபாயகரமானதென்பதை உணர்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் இராமநாதன் சர்வசன வாக்குரிமையை மிக வன்மையாக எதிர்த்த தோடு, 'இது சிங்கள மேலாதிக்கவாதத்திற்கு வழிவகுக்கும்" எனவும் கூறினார். அத்தோடு நின்றுவிடாது இராமநாதன் லண்டன் சென்று குடியேற்றநாட்டுக் காரியாலயத்தில் இம்முறையை நிராகரிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். ஆனால் அதில் ஏதும் பயன் கிடைக்கவில்லை.

1936ஆம் ஆண்டு தேர்தல் மூலம் அமைக் கப்பட்ட தனிச்சிங்கள மந்திரி சபையானது தமிழரை மேலும் சிந்திக்கவைத்தது. இத் தேர்தல் மூலம் சிங்களவர் தாம் நினைத்த மந்திரி சபையை உருவாக்க முடிந்தது. இவ்விடயமானது பிரதிநிதித்துவ முறை பற்றி சிறுபான்மையோர் மேலும் பயமடைய வைத்ததுடன், வகுப்புவாத உணர்வும் பிரதிநிதித்துவ முறையைத் தூண்டியது. இதனையே ஜேன் ரசல் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார். 'இலங்கையில் தேசிய நோக்கோ அல்லது தேசிய பண்போ காணப்படாமல் வகுப்புவாத சிந்தனைகளும், இனரீதி யான உணர்வுகளும் மேலோங்கி முனைப்புடன் காணப்படுகின்றது. இவை சர்வசன வாக் குரிமையில் பின்பு கூர்மையடைந்து காணப் பட்டது' என்றார்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தள வில் அவர்களுடைய பயம் இரு வழிகளில் ஏற்பட்டது. ஒன்று அரசியல் ரீதியாக தாம் படிப்படியாக பிரதிநிதித்துவத்தை இழந்து வருவதுடன் தேசிய அரசியலில் தாம் சிறு பான்மை இனம் என்பதும், மற்றைய நிலை யில் அரச சேவைகளில் தாம் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சமும் மறுபுறம் காணப்பட்டது.

பிரதிநிதித்துவமானது 2:1 என்பது, டொன மூர் திட்டத்தில் 5:1 என்று குறைக்கப்பட்டமை, இலங்கையின் அரசாங்க தொழில் பெறும் நிலைமைகளையும் தாங்கள் தொடர்ந்தும் பாதுகாக்க முடியாதென இலங்கைத் தமிழர் கள் பயந்தனர்.

1954ஆம் ஆண்டு பிரெட்றிக் ரீஸ் அவர் கள் டொனமூர் அரசியல் திட்டம் பற்றி எழுது கின்ற போது ('பாரம்பரிய அமைப்பில் மேல் நாட்டு அபிப்பிராயத்தில் முழு விளை வினையும் உணராமல் டொனமூர் பிரேரணைக் குழுவினர் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு சார்பாக தீர்மானித்த தாக தோன்றியது".) என கூறியுள்ளார். எனவே டொனமூர் சீர்திருத்தங்கள் எல்லா நிலைகளிலும் இன முரண்பாடுகளையும் இன ஐயுறவையுமே தோற்றுவித்தது என லாம்.

போல்.ஆர்.பிராஸ் அவர்கள் 'இனத்துவ தேசியவாதம் என்பது பெரும்பாலும் அபி விருத்தி நிலைகளிலேயே ஏற்படுகின்றது. கல்வி, தொழில்நுட்பம், நிர்வாகம், தொழில் மயமாக்கல் போன்றவற்றோடு, ஜனநாயக கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையில் இந்த வாய்ப்புகள் கிடைக்காத ஒரு பிரிவினர் அவற்றை அனுபவித்து வரும் உயர்வர்க்கத்திற்கு எதிராக திரும்பி விடுவதாகும்' என்பர்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா வின் தலைமையில் உருவாக்கப்பட்ட 'சிங்கள மகா சபா" 'சிங்கள பௌத்த மக்களிடையே மத, கலாசார உணர்வினை வளர்த்தெடுக்கும் ஒரு பலமான சக்தியாக 1930களின் நடுப் பகுதியில் தோற்றம் பெற்றது". எனவே சிங் களத் தேசியவாதத்திற்கான கருநிலை மத புனருத்தாரண நடவடிக்கைகளோடும், கலாசாரத் தொடர்புகளோடும் இணைந் திருந்தாலும் அவை ஆரம்பத்தில் அரசியல் மட்டத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்த வில்லை என்றே கூறலாம். 'பிரித்தானியர் ஆட்சியில் அரசின் உதவியையும், பாதுகாப் பையும் இழந்தமையால் பௌத்தமதம் அடைந்த தாழ்நிலையிலிருந்து அதனைக் காப்பாற்றுவதற்கும் சிங்கள, பௌத்த கலா சாரத்தின் பெறுமானங்களை மறுமலர்ச்சி அடையச் செய்வதற்குமான கிளர்ச்சியாகவே தோற்றம் பெற்றது. இதனால் 'சிங்கள பௌத்த தேசியவாதமானது" ஏனைய இன, மொழி, மத சமூகத்தவரின் நலன்களைப் புறக்கணிக்கும் பண்பு கொண்டதாக தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியது.

1930களில் தமிழர்களிடையே தோன்றிய புதிய தலைமைத்துவமானது ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களால் வழி நடத்தப்பட்டது. இவரின் தலைமையில் கீழ் தமிழர்களை நியாயமானளவு பாதிப்புக்குட்படுத்திய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்பட்டனர். முக்கியமாக சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் 'சமபலப் பிரதிநிதித்துவம் என்ற 50:50 என்ற" கோரிக்கையை வலியுறுத்தினர். இன்னும் சட்டவாக்க சபையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதே சிறுபான்மையோரின் நோக்கமாகக் காணப்பட்டது. புதிய தலைவர் பொன்னம்பலம் அவர்கள் சிறுபான்மையினத் தமிழர்கள் மத்தியில் தேசிய உணர்வினை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். முக்கியமாகத் தமிழர்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் வெளிப்படுத்தப்பட்டது. அதற்குரிய தீர்வாக ஒற்றையாட்சியமைப்பொன்றினுள் தமது பிரச்சனைகளை தீர்க்க முடியுமென இவர் நம்பினார்.

பெரும்பான்மை ஜனநாயக தத்துவத்துடன், சர்வசன வாக்குரிமையுடனும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிங்கள தேசியவாதம் 1930களில் இருந்து அரசியல் நிகழ்ச்சிகளில் செல்வாக்குச் செலுத்தியது. சுதந்திரத்திற்கு முற்பட்ட கால இலங்கைத் தேசியவாதமானது ஆழமாக வேரூன்றி இருக்கவில்லை. அது ஓர் மாறும் கால நிகழ்ச்சியாக சிங்கள, தமிழ்த் தலைவர்களிடையே காணப்பட்டது. குறிப்பாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் சிங்களத் தலைவர்கள் இலங்கையர் தேசியவாதத்தை ஒருமைப்பாடு கருதி வலியுறுத்தி வந்த போதும், ஏனைய 'சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்களம், பௌத்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதத்தையே வலியுறுத்தினர்'.

இலங்கையில் வாழ்ந்த தமிழர் மத்தியில் தமிழ்த் தேசியவாத உணர்வு காலங் கடந்தே தோற்றம் பெற்றது. சிங்கள, பௌத்த மக்களிடையே வளர்ச்சி பெற்றது போன்ற வலிமை மிக்க கலாசார தேசியவாதம் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் வளர்ச்சியடையவில்லை. ஆறுமுக நாவலர் தலைமையில் இந்துமத மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், அதனை சிங்கள, பௌத்த மறுமலர்ச்சியோடு எந்த வகையிலும் ஒப்பிடமுடியாது. மொழி அடிப்படையாகவோ, கலாசார அடிப்படையாகவோ இலங்கைத் தமிழரை ஒன்றிணைத்துச் செல்லும் பலம் மிக்க இயக்கம் இலங்கை சுதந்திரமடையும் காலம் வரை உருவாகவில்லை என்றே கூற வேண்டும்.

எஸ்.அரசரட்ணம் அவர்கள் சோல்பரி ஆணைக்குழுவினரின் முன் சிறுபான்மையோர் தமது இன நலவுரிமைகளைப் பேணிக்கொள்ள பல கோரிக்கைகளை முன் வைத்தாலும், இலங்கை சுதந்திரம் பெறுகின்ற போது 'இலங்கையர் சமூகமாகவே' இணைத்து புதிய அரசியல் திட்டத்தினை ஏற்றுக் கொண்டனர் என்பர்.

சிங்கள, பௌத்த தேசியவாதமானது காலத்திற்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டது எனலாம். இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்த உயர் குழாம் தலைவர்கள் இலங்கைத் தேசியவாதம் என்பதனை வெளிப்படுத்தி இருந்த போதிலும், மறுபுறமாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவால் ஒழுங்கு அமைக்கப்பட்ட சிங்கள மகாசபா பெருமளவிற்கு சிங்கள பௌத்தத்தை வலியுறுத்தி பிரசாரம் செய்தமையால் அது சிங்கள, பௌத்த தேசியவாதம் தோற்றம் பெறவும், அது தன்னை எல்லா நிலைகளிலும் மேம்படுத்திக் கொள்ள முற்பட்ட போது, அது தமிழ்த் தேசியவாதத்துடனும் முரண்பட்டது. டி.எஸ்.சேனநாயக்கா போன்றோர் பெருமளவிற்கு மதசார்பின்மை, மொழி சமத்துவம் என்பதை பொது வாழ்க்கையில் பிரகடனப்படுத்திய 'இலங்கையர் தேசியவாதத்தில்" நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் அவை எல்லாவற்றையும் மேவி சிங்கள, பௌத்த தேசியவாதம் என்பதனை வெளிப்படுத்தியது எனலாம். இலங்கை சுதந்திரம் பெறுகின்ற நிலையில் பல்வேறு இனங்களிடையே ஏற்பட்ட இணக்கமானது சுதந்திரத்தின் போது இலங்கையர் தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் என பூச்சு பூசப்பட்டு வெளிப்பட்ட போதும். சுதந்திரத்தின் பின் இந்நிலை முற்றாக மாறி சிங்கள, பௌத்த தேசியவாதம் என்பது இப்போது எல்லா நிலைகளிலும் வெளிப்படுத்தப்பட்டது. இதில் 'அரச தேசியவாதம்" என்பதே பின்னர் நிறுவனமயப்பட்டு இலங்கை அரசியலை வழிநடத்தும் கருவியாக பிற்காலத்தில் விளங்கலாயிற்று.

## NOTES AND REFERENCES

### Chapter: 1


1. Hans Kohn; The Idea of Nationalism; A Study in its Origins and Background. Collier – Macmillan Canada, 1944, P:16.
2. Chavan.R.S.;Nationalism in Asia. Sterling Publishers Pvt LTD, New Delhi. 1973, P: 9-11
3. Hans Kohn; Op.Cit, PP:13-17.
4. Tbid, PP:10-13
5. Snyder.L.Louis; The New Nationalism Ithaca, Newyork, Cornell University Press. 1968, P:101.
6. Hans Kohn Op.Cit:, PP: 21-24
7. சிவராசா அம்பலவாணர்.இலங்கை அரசியல் சிவா பிரிண்டஸ், கைதடி, 1989. பக்:17
8. Chavan, R.S; Op.Cit:, PP:448-450.
9. Arasaratnam, S. "Nationalism in Sri Lanka and the Tamils ", in N.Roberts (Ed) Collective Identities Nationalism and protest in modern Sri Lanka. Narga Institute, Colombo, 1979, PP: 501-502
10. மேற்கோள்: சிவராசா. அ. மேற்படி, பக்: 18
11. Cited in: Russell. J, Communal Polities Under the Donoughmore Constitution, 1931-1947 Tisava Prakasakayo LTD, Colombo P:xiii
12. De Silva, K.M; 'Nationalism and Its Impact' Ceylon Journal of Historical and Social Studies (New Series) Vol:iii, January – December 1974, P:62
13. Chavan, R.S, Op:Cit, PP:7-10
14. De Silva, K.M, 'Nineteenth Centuary Origins of Nationalism in Ceylon' in K.M.de Silva, (Ed) University of Ceylon History of Ceylon, Vol:3. University of Ceylon Press Board, Colombo, 1973, PP:249-250
15. சிவராசா, அ.மேற்படி, பக்:19
16. Mendis, C.G; Ceylon Today and Yesterday Associated News Papers of Ceylon, Colom-bo, 1963 P:2-3
17. Ealakrishnan.N: 'Some issues of a Divided Polity in Sri Lanka' Presidential Addresses 1992. Jaffna Science Association, 1993, PP:3-6
18. James Jupp: Sri Lanka, Third World Democracy London, 1978, PP:2-3
19. Jennings, I: "Nationalism and Political Development in Ceylon: The Background of Salf-Government, "The Ceylon Historical Journal, Vol:III, 1953, October, P:99.
20. Mendis, C.G. "The Causes of Communal Conflict in Ceylon" University of Ceylon Re-view, Vol: I-V. 1943, April. PP:41-45.
21. சுசில் சிறிவர்த்தனா,'இலங்கையில் நிலவிய இன உணர்வில் பிரித்தானிய அரசியல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்புக்கொள்கை ஏற்படுத்திய தாக்கம், ஓர் குறிப்பு',இலங்கையின் இனத்துவமும் சமூக மாற்றமும். (சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்குக்கு வழங்கப் பட்ட கட்டுரைகள் மொழிபெயர்ப்பு) யாழ்ப்பாணம், 1979, பக்கங்கள்: 278-279.

22. Wilson, A.J, 'The Crewe- Mccallum Reforms, 1912- 1921' CJHSS, Vol:2, No, I, 1959, January PP:86-87.

23. Wilson, A.J., 'Race, Religion, Language and caste in the Sub- Nationalism of Sri Lanka' Op.Cit 1979 P:466

24. Mendis, G.C: Ceylon Under the British, Apothecaries Co.Ltd, Colombo, 1944, PP:108-109

25. சிவராசா, அ.மேற்படி, பக்:21

26. பொன்னம்பலம் அருணாசலம், 1853 - 1924, சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் நூற்றாண்டு விழாச்சபையினால் பிரசுரிக்கப்பட்டது. புரட்டாதி, 1953, பக்:21

27. Bandaranaike, S.W.R.D; (Ed) The Hand- Book of the Ceylon National Congress: 1919- 1928.
Printers; H.W.Cave&Co. Colombo, 1928, PP:70- 97

28. Mendis, G.C, Op.Cit. PP:110- 111.

29. Wilson, A.J. The Break-up of Sri Lanka: The Sinhala – Tamil Conflict. C.Hurst & Co, London. 1988. P:6

30. De Silva, K.M 'The Ceylon National Congress in Dissary 1920- 21 Sir Ponnampalam Aru-nachalam leave the Congress', CJHSS, Vol:ii, No 2 1972, P:75

31. இலங்கைத் தேசிய காங்கிரசில் பெரும்பாலான சிங்கள உயர் குழாம் தலைவர்களும், தமிழ் உயர்குழாம் தலைவர்களும் இணைந்து இவ்வமைப்பை ஏற்படுத்தினர். இதில் மிதவாதத் தலைவர்களும், தீவிரவாதத் தலைவர்களும் இருந்தனர். சுயாட்சி என்ற கோரிக்கையின் அடிப்படையில் இணக்கத்தன்மை ஏற்பட்டதேயன்றி, பிரதிநிதித்துவ முறையில் முரண்பாடுகள் இருந்துள்ளது.

32. Bandaranaiki, S.W.R.D, Op.Cit, P:194

33. De Silva, K.M, 'The Reform and Nationalist movements in the Early Twentieth Centu-rary' Op.Cit, PP:398- 399.

34. Ibid, PP:389- 391

35. நல்ல நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய காங்கிரசில் இருந்து, அருணாசலம் வெளியேறத் தீர்மானித்தமை அரசியல் மட்டத்தில் அவருக்கு ஏற்பட்ட தோல்வியே காரணமாகும். இம் முரண்பாடே தனியான அமைப்பினை ஏற்படுத்த தூண்டியிருக்கலாம். தமிழ் மகாஜன சபா தமிழர்களின் தனித்துவம், கலாசார அடிப்படையில் இயங்கவென அருணாசலத்தால் உருவாக்கப்பட்டது. இந்த நோக்கம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்தது என்பது கேள்விக்குரியதே.

36. Arasaratnam, S, Op.Cit , 1979 PP: 501- 502.

37. Brass, P.R, Ethnicity and Nationalism, Theory and Comparison. Sage Publication, New Delhi, 1991, PP:69- 75.

38. De Silva, K.M, A History of Sri Lanka Oxford University Press, Delhi, PP:395- 396.

39. Wilson A.J, Op.Cit 1959, PP:88- 89.

40. Bandaranaiki S.W.R.D (Ed) Op.Cit 1928. PP:296- 297.

41. Papers Relating to the Constitutional History of Ceylon, 1906- 1024 Government



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Publica-tion Colombo, 1927. PP:106- 108
42. Wilson, A.J. Op.Cit, 1988. P:7.
43. Bandaranaike, S.W.R.D,' (Ed) Op.Cit, 1928. PP:537- 538.
44. Mendis, G.C, Op.Cit. 1944. P:126.
45. De Silva, K.M 'The Reform and Nationalist movements in the Early Twentieth Centuary; in, K.M. De Silva (Ed) Op.Cit, 1973 P:396
46. Brass, P.R, Op.Cit, 1991. PP:69- 75.
47. De Silva , K.M, Op.Cit., 1981 PP:395- 398.
48. Kadirgamer, S 'The Jaffna Youth Congress and Selections from his writings and speech-es' in Handy Perinbanayagam A Memorial Volume. Jaffna, 1980, PP:15- 26.
49. Ceylon Report of the Special Commission on the Constitution. London, 1928, PP:90- 101.
50. Arasaratname. S, Op.Cit, 1979, PP:502- 503.
51. Balakrishnan.N, Op.Cit, 1993, PP:6- 7.
52. Ceylon Report of the Special Commission on the Constitution, London, 1928. PP:42- 43.
53. De Silva. K.M, Managing Ethnic Tensions in Multi- Ethnic Societies, Sri Lanka, 1880- 1985, Lanhams, Newyork. 1986. P:53.
54. Russell.J, Op.Cit, 1982, P:15
55. சிங்களவரின் தேர்தல் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டமையால் அத்தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தமது செல்வாக்கினை அதிகரித்துக் கொள்வதற்காகத் தமது தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை வழங்கினர். இது பின்னைய காலங்களில் மேலும் அதிகரித்துச் சென்றது. இந்நிலை தமிழர்களை வெகுவாக அச்சத்திற்குட்படுத்தியது.
56. Cited in Wilson. A.J; Op.Cit, 1988. P:17.
57. Brass, P.R, Op.Cit, 1991. PP:247- 249.
58. De Silva K.M, Op.Cit, 1986, PP:64- 65.
59. 1880களில் முதலாவது பௌத்த மறுமலர்ச்சிக்கு உண்மையில் தலைமை தாங்கியவர் அநாகரிக தர்மபாலா என்றே கூறலாம். பௌத்த கருநிலை இக்காலப்பகுதியிலேயே தோன்றியதுடன் அது ஏனைய மதங்களோடு ஆரம்பத்தில் முரண்பட்டது. பின் இனக்களுக்கெதிராக செயற்பட்டது. 1930களிலே அரசியல் அதிகாரம் சிங்களவர்களிடம் சென்ற போது இனமும் மதமும் ஒன்று சேர்ந்து முழு வீச்சுடன் இயக்கவே சிங்கள பௌத்த தேசியவாதம் என்னும் பரிமாணத்தைப் பெற்றது.
60. Wilson, A.J. Politics in Sri Lanka, 1947- 1973. The Mac Millan Press Ltd, London. 1994. P:48.
61. Roberts.M, 'Problems of Collective Identity in a Multi- Ethnic Society, Sectional Nation-alism Vs Ceylon Nationalism 1900 - 1940' Op.Cit. 1979. PP:355- 356.
62. Arasaratnam.S, Op.Cit. P:518.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் தந்தை செல்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 02

# தமிழ் அரசியல் இயக்கங்களின் உருவாக்கத்திற்கான பின்னணி

## 2.0 தமிழ் அரசியல் இயக்கங்களின் உருவாக்கத்திற்கான பின்னணி

இது இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் சிங்கள - தமிழ் சமூக வேறுபாடுகளை சீர்செய்யும் முயற்சியாகவே இருந்துள்ளது. ஏனெனில், 'இலங்கைத் தமிழர், சிங்களப் பெரும்பான்மையோருக்கு அரசியல் அதிகாரம் மாற்றப்பட தங்கள் மேலான நிலை போய்விடும் எனப் பயந்தனர்'. 1920ஆம் ஆண்டிற்கும் 1923ஆம் ஆண்டிற்கும் இடையில் இலங்கை யாப்பின் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆளுநர் மனிங் பல்வேறு கருத்துக்களை ஆராய்ந்த போது, பொன்னம்பலம் அருணாசலம் தலைமையில் மேற்கு மாகாணத்தில் தமிழருக்கென ஒரு விசேட தேர்தல் தொகுதி வழங்கப்பட வேண்டுமென வாதிக்கப்பட்டது. தமிழர் கோரிக்கைகளுக்கு மாறாக சிங்கள அமைப்புக்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தின. 1924ஆம் ஆண்டின் யாப்பு சில ஆண்டுகள் அமுலில் இருந்த பின் இலங்கைத் தேசிய காங்கிரஸ் மீண்டும் சீர்திருத்தம் கோரத் தீர்மானித்த போது,'1925ஆம் ஆண்டு சிங்கள- தமிழ் ஒப்பந்தம் என்பதன் மூலம் இலங்கைத் தமிழரின் ஆதரவினைப் பெற இலங்கைத் தேசிய காங்கிரஸ் முயன்றது. இவ்வொப்பந்தத்தின்படி இரு சமூகங்களும் சட்டசபைப் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு இன அடிப்படையில் ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டது'. சிங்களத் தலைவர்களுக்கிடையே பிரதிநிதித்துவ விடயத்தில் இனத்துவத்தைப் பேணுவதில் கருத்து வேறுபாடு இருந்தமையினால் இவ்வொப்பந்தம் கைவிடப்பட்டது.

டொனமூர் யாப்புப் பிரேரணைகள் 1929ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12ஆம் திகதி சட்டசபையில் வாக்களிப்புக்கு விடப்பட்ட போது, 'டொனமூர் யாப்புப் பிரேரணைகளை சட்டசபையில் பத்தொன்பது பேர் ஆதரவாகவும், பதினேழு பேர் யாப்புப் பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தனர்'.

இதனால் இரண்டு மேலதிக வாக்குகளால் டொனமூர் திட்டம் சட்டசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. டொனமூர் திட்டத்திற்கு ஆதரவாக வாக்கு அளித்தவர்களில் ஒருவர் (தமிழர்) தவிர ஏனையோர் அனைவரும் பெரும்பான்மை இனச்சமூகத்தை சேர்ந்தவர்களாகவும், எதிர்த்தவர்களில் பெரும்பான்மையோர் சிறுபான்மையினச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். எனவே டொன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர் அரசியல் திட்டம் ஆரம்பத்திலேயே சிறு பான்மையோரால் நிராகரிக்கப்பட்ட திட்டம் என்பது புலனாயிற்று. டொனமூர் ஆணைக் குழுவின் சிபாரிசுகள் சட்டவாக்க சபையிலே இலங்கைத் தமிழருக்கு இதுவரை இருந்த சிறிய செல்வாக்கையும் இல்லாது செய்தது. கரைநாட்டுச் சிங்கள மக்கள் உடனான பிரதி நிதித்துவ போட்டியானது, ஆணைக்குழுவின் சிபார்சினால் முழுச் சிங்கள மக்களுடனான பிரதிநிதித்துவ போட்டியாக மாற்றம் பெற்று, இலங்கை அரசியலிலே செல்வாக்கற்ற இன மாக இலங்கைத் தமிழர் மாற வழிவகுத்தது.

விதிவிலக்காக ஏ.ஈ.குணசிங்காவை தவிர இலங்கையில் வேறு யாரும் சர்வ சன வாக்குரிமையை கோரவில்லை. சிங் களத் தலைவர்களால் தலைமை தாங்கப் பட்ட இலங்கை தேசிய காங்கிரஸ் கூட 'வரையறைக்குட்பட்ட முறையிலான வாக்குரி மையை' டொனமூர் குழுவினரிடம் கோரினர். சிறுபான்மை இனத்தவர்கள் டொனமூர் அரசி யல் திட்டத்தினை முழுமையாக எதிர்த்தனர். இருந்த போதும் டொனமூர் குழுவினரோ வயது வந்த ஆண், பெண் இருபாலருக்கும் சர்வசன வாக்குரிமையை வழங்கினார். இதனால் சிறுபான்மையின மக்களின் முக்கிய தலைவராக விளங்கிய பொன்னம்பலம் இராமநாதன் அதிக ஆத்திரம் அடைந்ததுடன் 'ஆபத்தான கும்பலுக்கு அரசியல் அதிகாரம் மாற்றப்படுவது மடமைத்தனம்' என்று கூறினார்.

1931இல் இருந்து வயது வந்தவர்களுக் கான சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதன் மூலம் மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டனர். தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. இதன் மூலம் ஜனநாயகம் என்ற தத்துவமானது இலங்கையில் செயற்படத் தொடங்கியது.

ஜனநாயகத் தத்துவமானது எப்போதும் பெரும்பான்மையோருக்கே சாதகமான ஆட்சி முறையாகும். இதனால் டொனமூர் ; சீர்திருத்தத்தில் இருந்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்பினை எப்போதும் பெரும்பான் மையினரே கைப்பற்றிக் கொண்டனர். இத னால் இயல்பாக சிறுபான்மையோர் நலன்கள் புறக்கணிக்கப்படவும், சிறுபான்மையோர் அரசாங்கத்தில் இரண்டாம் நிலை பெறவும் இது வழிவகுத்தது எனலாம்.

'சர்வசன வாக்குரிமையும், பிரதேசவா ரிப் பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தி யமையால் எழுந்த மிகப்பெரிய பிரச்சினை சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவம் பற்றியதாகும். இம்முறையானது எண்ணிக்கை ரீதியில் சிங்கள பெரும்பான்மையினத்தினர் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற வழி வகுத்ததுடன் இவர்களே அரசியலில் கூடிய நன்மை பெறவும் வழிவகுத்தது'. டொனமூர் காலத்தில் இருந்து இலங்கை சுதந்திரம் பெறுகின்ற வரைக்கும் விவாதத்திற்கு உரிய விடயமாக அமைந்தது 'பிரதிநிதித்துவம்' பற்றியதேயாகும். 1936ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் அமைக்கப்பட்ட தனிச் சிங்கள மந்திரி சபையானது, தமிழ்ர்களை மேலும் சிந்திக்க வைத்தது. இத் தேர்தலின் பின் நினைத்தபடி மந்திரி சபையை உருவாக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது. எனவே இவ் விடயமானது 'பிரதிநிதித்துவ முறை பற்றி சிறுபான்மையோரை மேலும் சினமடைய வைத்ததுடன், வகுப்புவாத உணர்வையும் பிரதிநிதித்துவ முறையைத் தூண்டியது'.

யாழ்ப்பாணத்தில் முதலாவது அரசாங்க சபைக்கான தேர்தல் 'இளைஞர் காங்கிரசின்' பகிஸ்கரிப்பால் நடைபெறவில்லை. இளை ஞர் காங்கிரஸ் இந்தியவிடுதலைப் போராட் டத்தால் கவரப்பட்டு சுய ராஜ்ஜியம், சமூக மாற்றம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய கொள்கைகளை கொண்டதாக அமைந்தது. ஆனாலும் காங்கிரஸ் டொனமூரின் சில சீர் திருத்தங்களுக்கு ஆதரவளித்தது. முன்னைய தமிழ் தலைமைத்துவத்திலும், இன உணர் விலும் இளைஞர் காங்கிரஸ் வேறுபட்டு அமைந்தது. பகிஸ்கரிப்பின் பின் 1934ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெரிவாகிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் எழுச்சி யோடு முன்னைய தலைமைத்துவம் செய லிழந்து காணப்பட்டது. 1956ஆம் ஆண்டு மொழிப்பிரச்சனை தோற்றம் பெறும் வரைக் கும் இவரே தமிழர்களின் முக்கிய தலைவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக விளங்கினார். இவரது கோரிக்கையை யும் முன்னைய காலங்களை விட வேறுபட்டி ருந்தன. 'சமபலப் பிரதிநிதித்துவம்' என்ற '50:50' என்பதே இவரது பிரபல்யமான கோரிக்கையாகும். ஐம்பது வீதமான பாராளு மன்ற ஆசனங்கள் பெரும்பான்மையோருக் கும், மிகுதி ஐம்பது வீதமான பாராளுமன்ற ஆசனங்கள் சிறுபான்மையோருக்கும் என்ற கோரிக்கை அரசியல் ரீதியில் சிங்களத் தலை- லவர்களால் நிராகரிக்கப்பட்டது. குடியேற்ற நாட்டுக் காரியதரசியினாலும், பிற்காலத்தில் சோல்பரி ஆணைக்குழுவினராலும் ஏற்க முடியாததொன்று எனக்கூறி நிராகரிக்கப்பட் டது. 50:50 என்ற கோரிக்கையானது சிங்கள - தமிழ் இனங்களின் பிரிவினை யைக் கூர்மையடையச் செய்தது. 'இலங்கைத் தேசிய காங்கிரஸ் 60:40 என்ற பிரதிநிதித் துவ ஒழுங்கு முறைக்கு சம்மதம் தெரிவித் திருந்தது. இவ்வொழுங்கு முறையானது தமிழ்த் தலைமைத்துவத்தைக் கவரக் கூடிய தாக இருக்கவில்லை'.

டொனமூரினால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையும் இரு இனங்களுக் கிடையே பிரதிநிதித்துவப் போட்டியை மேலும் வளர்த்ததோடு, இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், கசப்புணர்வுகளை யுமே ஏற்படுத்தியது. இது மறுபுறமாக ஒவ் வொரு இனத்தவர் இடையே தேசியவாதம் வளர வழிவகுத்தது. கே.எம்.டி.சில்வா அவர்கள் கூறுவது போன்று தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் வழங்கப் பட்ட சர்வசன வாக்குரிமையால் தேசியவாத மானது, பௌத்த கலாசாரத்துடன் மேலெ ழுந்து பௌத்த மறுமலர்ச்சிக்கு காரணமா யிற்று'.

1931ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் ஐந்து பேர் பெரும்பான் மையினத்தைச் சேர்ந்தோராகவும், இரண்டு பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தோரு மாகக் காணப்பட்டனர். அரசியலில் மேலும் சீர் திருத்தம் வேண்டிக் கிளர்ச்சி செய்த போது சிறுபான்மையினத் தலைவர்கள் அதற்கு பூரண ஆதரவளிக்கவில்லை. இதனால் குடியேற்ற நாட்டு மந்திரி அரசியலில் எவ் வித சீர்திருத்தமும் செய்வதற்கு இணங்க வில்லை. இச்சம்பவமானது பெரும்பான்மை யினத் தலைவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. இதனுடைய விளைவு தான் '1936ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இரண்டாவது மந்திரி சபையில் முதலாவது மந்திரி சபையில் காணப்படாத ஒருமைப் பாடு அமைச்சரவையிடம் இப்போது காணப் பட்டது'. இனப்பூசல்கள் உச்ச நிலையடைந் தமையாலும், நாட்டின் நிர்வாகம் பற்றி அறிவதற்காகவும் பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரி 1937ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இலங்கைத் தேசாதிபதி 'அன்ட்ரூ கோல்டிக்கொட்' இற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். நாட்டின் அரசியல் நிலையை பற்றி அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டனர். தேசாதிபதி பல்வேறு சமூகத்தவர்களையும் சந்தித்த போது, சிறுபான்மையோர் சமபலம் பிரதி நிதித்துவத்தை வலியுறுத்தினர்'. இக்கொள் கையை முற்றாக நிராகரித்த தேசாதிபதி, அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு சாதகமாக பத்து அதிகப்படியான ஆசனங்களை வழங்க முன்வந்தார். அத்தோடு ஐரோப்பியருக்கும், பறங்கியருக்கும், பிரதிநிதித்துவம் பெறாத ஏனைய சிறுபான்மையினருக்கும் இட மளிக்க எட்டு ஆசனங்களையும் சிபாரிசு செய்து இருந்தார். ஆனால் இவை நிறை வேற்றப்படவில்லை.

டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து சிங்களத் தேர்தல் தொகுதிகளில் இலங்கைத் தேசிய காங்கிரசே கூடிய செல் வாக்கும், ஆதிக்கமும் உள்ளதாக விளங்கி யது. இவர்களின் பிரதான எழுச்சியானது சிறுபான்மையினத்தின் பொருளாதார நலன்களுக்கு எதிராகத் தோற்றம் பெற்றதுடன், அவர்கள் அனுபவித்துவரும் பொருளாதார நன்மைகளைப் பெரும்பான்மையினம் பெற வேண்டும் என்ற தொனியில் 'பொருளா தாரத் தேசியவாதம் ஒன்றை கட்டி எழுப்ப முற்பட்டனர்'. (இவ் அத்தியாயத்தின் பிற்பகுதி யில் ஆராயப்படுகிறது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமூரினால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடைபெற்ற தேர்தல்களை நோக்கும் போது இலங்கையின் ஒவ்வொரு இனத்தவர்களால் பெற்றுக் கொண்ட ஆசனங்களின் நிலை புலப்படும்.

**அட்டவணை: 1**

**அரசுக்கழகத்திற்கான தேர்தல் முடிவுகள், இன அடிப்படையில்**

| இனங்கள் | 1931 | 1936 | சனத்தொகை (1931 மதிப்பீடு) |
|---|---|---|---|
| *சிங்களவர்கள்* | *38* | *39* | *3, 473. 000* |
| *இலங்கைத் தமிழர்* | *03* | *08* | *598. 000* |
| *இந்தியத் தமிழர்* | *02* | *02* | *818. 000* |
| *முஸ்லீம்கள்* | *01* | *00* | *289. 600* |
| *ஐரோப்பியர்* | *02* | *01* | *9. 200* |
| | *46* | *50* | |

SOURCE: S.U.Kodikara; Indo- Ceylon Relations Since Independence 1965 P:45

அரசுக்கழகத்திற்கு பிரதேச ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட முடியாத சிறுபான்மை யோரின் நலன்களைக் கருத்தில் கொண்டு தேசாதிபதி தனது விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி எட்டு உறுப்பினர்களை நிய மனம் செய்தார். இவர்களுள் நால்வர் ஐரோப் பியர், ஒருவர் பறங்கியர், ஒரு இலங்கைச் சோனகர், ஒரு மலாய்காரர், ஒரு இந்திய வர்த்தக வகுப்பைச் சார்ந்தவர் என்று எட்டுப் பேர் நியமனம் செய்யப்பட்டனர்.

1941ஆம் ஆண்டிலும் 1943ஆம் ஆண்டிலும் இரு பிரகடனங்களை அரசாங்கம் வெளியிட்டது. இவற்றுள் 1943ஆம் ஆண்டு வைகாசி மாதம் பிரித்தானிய அரசாங்கம் ஓர் அறிக்கையினை பிரகடனம் செய்தது. இதன்படி மந்திரிமார் சீர்திருத்தச் சிபாரிசுகளை மேற்கொள்ளலாம் என்றும் இது அரசாங்க சபையின் நாலில் - மூன்று பெரும்பான்மை பெற்றிருக்க வேண்டும் எனக் கூறியது. இதன் அடிப்படையில் 1944ஆம் ஆண்டு மாசியில் மந்திரிமாரால் தயாரிக்கப்பட்ட நகல் திட்டத்தின் பிரதியொன்று குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மறுபுறம் சிறுபான்மையோர் தமது நலவுரி மைகள் கவனிக்கப்படவில்லை எனக் குறை கூறியிருந்தனர். இலங்கைக்கு சோல் பரி விசாரணைக்குழு வந்த போது பல சிறுபான்மையினத்தவர்களும் சாட்சியம் அளித்தனர். முக்கியமாக 1931ஆம் ஆண் டில் இருந்து 1943ஆம் ஆண்டு வரைக்கும் உருவாக்கப்பட்ட சட்டங்கள், செலவு செய்யப் பட்ட நிதி, அபிவிருத்தி திட்டங்கள் போன்ற அனைத்திலும் சிறுபான்மையோர் புறக் கணிக்கப்பட்டமை பற்றி புள்ளி விபர ஆதாரங்களோடு எடுத்துக் காட்டப்பட்டன. இவை சிறுபான்மையோருக்கு பாதகமான வையே என்பதனை சோல்பரி ஆணைக்குழு வினர் ஏற்றுக்கொண்டு, சிறுபான்மையோரின் நலவுரிமைகள் பேண அரசியல் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யலாம் என்று உறுதி அளித்து இருந்தார்கள்.

சோல்பரி விசாரணைக்குழுவினர் சிறு பான்மையோரின் நலவுரிமைகளைப் பாது காப்பதற்காகக் கீழ்க்கண்ட வகையில் பாது காப்புகளை சிபாரிசு செய்தனர்.

1. பாராளுமன்ற அங்கத்துவம் அதிகரிக் கப்பட்டமை.

2. தேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்க தன் னிச்சையான ஆணைக்குழு

3. இரண்டாவது சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அரச சேவை, நிதி சேவை ஆணைக் குழுக்கள்

5. தேசாதிபதியின் விசேட அதிகாரங்கள்

புதிய பாராளுமன்றத்திற்கு 101 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் 95 பேர் தேர்தல் மூலமாகவும் ஏனைய ஆறு பேர் தெரிவு செய்ய முடியாத சிறுபான்மையோருக்கும், பிற்போக்கான பகுதிகளுக்கும் போதியளவு பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக மகா தேசாதிபதியால் நியமனம் செய்யப்பட்டனர். மகா தேசாதிபதி தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமித்தார். இவ்வாணைக்குழு தொகுதிகள் நிர்ணயம் செய்யும் போது பல்லினத் தன்மை, சாதி, இயற்கையமைப்பு போன்ற பல்வேறு இயல்புகளை கருத்தில் கொண்டு தொகுதிகளை நிர்ணயிக்கும். மந்திரிமார் நகல் திட்டத்தின் 13வது விதியின் 2ஆம் 3ஆம் உபவிதிகள் பின் வருமாறு கூறுகின்றன.

'1931ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி ஒவ்வொரு மாகாணத்திலும் வசிக்கும் 75,000 மக்களுக்கு ஒரு தேர்தல் தொகுதியாக, தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படும் அத்தோடு பரப்பு ரீதியாக 1,000 சதுர மைலுக்கு ஒரு தேர்தல் தொகுதி வீதம், தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்படும்'.

பல்லின சமூகத் தன்மையை கருத்தில் கொண்டு பல அங்கத்துவ தேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன.

முதலாவது தேர்தல் நிர்ணய ஆணைக் குழு அரசியல் திட்டத்தின் 76ஆம் சரத்து 2ஆம் உப பிரிவின்படி சனத்தொகை, பரப்பளவு என்ற அடிப்படையில் தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அவை மாகாண அடிப்படையில் பின்வருமாறு 95 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

**அட்டவணை: 2**
**மாகாண ரீதியாக சனப் பிரதிநிதிகள் சபைக்கு ஆசனங்கள் ஒதுக்கீடு 1947 - 1956**

| | |
|---|---|
| மேல் மாகாணம் | - 20 |
| மத்திய மாகாணம் | - 15 |
| தென் மாகாணம் | - 12 |
| வட மாகாணம் | - 07 |
| கிழக்கு மாகாணம் | - 09 |
| வடமேல் மாகாணம் | - 10 |
| வடமத்திய மாகாணம் | - 05 |
| ஊவா மாகாணம் | - 07 |
| சப்பிரகமுவா மாகாணம் | - 10 |

SOURCE: A.J.K.Wilson, Politics in Sri Lanka: 1947- 1973, 1974, P:218

சோல்பரி ஆணைக்குழுவும், மந்திரிமார் நகல் திட்டம் வரைந்தோரும் புதிய அரசியல் திட்ட முறையின் கீழ் இனங்களுக்கிடையே கூடியளவு திருப்தி அளிக்கக் கூடிய வகையிலேயே தொகுதி நிர்ணயம் மேற்கொள்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டதோடு அவர்களின் எதிர்பார்க்கைகள் பின்வருமாறு அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 3

| இனங்கள் | நகல் திட்ட வெளியீடு | தேர்தல் நிர்ணய வெளியீடு | 1947 பொ.தே | 1952 பொ.தே | 1956 பொ.தே |
|---|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 58 | 66 | 68 | 74 | 74 |
| இலங்கைத்தமிழர் | 15 | 12 | 13 | 12 | 12 |
| இந்தியத்தமிழர் | 14 | 10 | 07 | 00 | 00 |
| முஸ்லீம்கள் | 08 | 06 | 06 | 08 | 07 |

SOURCE: A.J.WILSON, 'Minority Safegurards in the Ceylon Constitution The Ceylon Journal of Historical and Social Studies; Vol.1, January 1958; No:1, P:77

பெரும்பான்மையினத்தவர்களுக்கும், சிறுபான்மையினத்தவர்களுக்கும் இடையே பிரதிநிதித்துவ முறையில் ஓர் நெருக்கத் தன்மை இருக்க வேண்டுமென எதிர்பார்க் கப்பட்டது. மந்திரிமார் நகல் திட்டத்தின் வெளியீடானது 58 பேர் பெரும்பான்மையினத் தில் இருந்தும், சிறுபான்மையோரின் 37 பேர் தேர்தல் முறையிலும் 6 பேர் நியமன முறையிலும், மொத்தமாக 43 பேர் என எதிர் பார்க்கப்பட்டது. தேர்தல் நிர்ணய ஆணைக் குழு 66 பேர் பெரும்பான்மையோர், சிறு பான்மையோர் 28 தெரிவு, 6 நியமனம் மொத்தம் 34 என வெளியிட்டு தகவல் குறித்துக் காட்டியது. ஆனால் 1947 தேர்தல் முடிவு 68 பேர் பெரும்பான்மையினத்தில் இருந்தும், சிறுபான்மையோர் 26 தெரிவும் 6 நியமனமும் 32 ஆக இருந்தன. மாறாக பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் திட்ட சட்ட மாற்றங்களால் பிரதிநிதித்துவ முறையில் இரு இனங்களுக்குமிடையே அதிக இடைவெளி ஏற்பட்டது. இது பின்னைய காலங்களிலும் தொடர்ந்தது.

சோல்பரி ஆணைக்குழு முன் சம பிரதி நிதித்துவம் கோரிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி சுதந்திர இலங்கையின் முத லாவது பாராளுமன்றத்தில் முக்கிய தமிழ்க் கட்சியாக விளங்கியது. குறுகிய காலம் எதிர்க் கட்சியாக இருந்த பின் 1948ஆம் ஆண்டு சிங்களவர்களுடன் 'பரஸ்பரம் ஒத்துழைத்தல்' என்ற அடிப்படையில் ஜீ.ஜீ.பொன்னம்பலத் தின் தலைமையில் தமிழ் காங்கிரசின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்கத் தொடங் கினர். இவ்வேளை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மேற்கொண்ட மிகப் பிரதான நடவடிக்கை இதுவரையும் இலங்கையின் குடிகளாக விளங்கிய இந்திய வம்சாவழித் தமிழரது குடியுரிமைகளைப் பறித்தமையேயா கும். 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அடுத்தாண்டு, 1949ஆம் ஆண்டு 3ஆம் இலக்க சட்டம் ஆனது இந்திய - பாகிஸ்தான் மக்கள் இங்கு வாழ்வதற்கு தகுதியற்றவர் களாக்கியது. இந்த இரு சட்டத்தோடும் பாராளு மன்ற தேர்தல் திருத்தச்சட்டம் இலக்கம் 48, இந்தச் சட்டத்தின் படி வாக்களிக்கும் உரிமையும் மறுக்கப்பட்டது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறு பான்மையோர் காப்பீடு என்ற அம்சத்தில் 29ஆம் சரத்து 2ஆம் உப பிரிவின் கீழ் எந்தவொரு இனத்திற்கோ அல்லது மதத் திற்கோ எதிராக சட்டம் உருவாக்குவதைத் தடுக்கும் ஏற்பாடாகக் கருதப்பட்டது. ஆனால் 1947ஆம் ஆண்டு சுதந்திர விவகாரச் சட்டத்தின்படி எந்தவொரு விதியை நீக்கவோ அல்லது திருத்தவோ பாராளுமன்றத்திற்கு உரிமையுண்டு. அவ்வாறான மாற்றத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் - இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை. அதாவது 68 பிரதிநிதிகளின் சம்மதம் கிடைத்தால் எந்தவொரு சட்ட ஏற்பாட்டினையும் மேற் கொள்ள முடியும். எனவே இந்த வகையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மையோரின் காப்பீடுகளையும் மீறி சட்டம் இயற்ற முடிந்தது. எனவே சோல்பரி அரசியல் திட்டமானது சிறுபான்மையோருக்கு உகந்த திட்டமன்று என்பது சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகளுக்குள் வெளிப்பட்டுவிட்ட உண்மையாகும்.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் இந்தியத் தமிழர்கள் நிரந்தரக் குடிகளாக கருதப்பட்டு வாக்குரிமை வழங்கப்பட்டது. '1939இல் 2,25,000 பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர்'. மலைநாட்டுத் தொகுதிகள் பலவற்றை இந்தியத் தமிழர்களே கைப்பற்றிக் கொண்டனர். 1948, 1949 ஆகிய காலங்களில் கொண்டுவரப்பட்ட சட்டமானது பத்து இலட்சம் இந்தியர்களின் வாக்கு உரிமைகளைக் கட்டுப்படுத்தியது. இவர்கள் நாட்டின் சனத் தொகையில் பத்து வீதத்தினராவர். இக்காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் ஆனது தேர்தல் ஒழுங்கு முறைகளில் ஒரு சமனற்ற நிலையை ஏற்படுத்தியதோடு '1947ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இந்தியத் தமிழர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட 7 பிரதிநிதிகளையும் இழந்தது. அத்தோடு 14 தேர்தல் தொகுதிகளில் வெற்றியைத் தீர் மானிக்கும் நிலையையும் இப்போது இழந்து விட்டது'. '1952 முதல் 1956 வரை பாராளுமன் றத்தில் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதி ஒருவர் கூடக் காணப்படாமை ஒரு துரதிஸ்ட வசமானதேயாகும்'.

இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை என்பன பறிக்கப்பட்டமை இரு நிலைகளில் முக்கியம் பெற்றது. முதலாவது இந்தியத் தமிழர்கள் இலங்கையின் பிரதான இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்தமையும், இவர்களைக் கொண்ட இடதுசாரிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்தமை யால் அது எதிர்காலத்தில் முதலாளித்துவச் செயல் முறைகளுக்கும் பாதகமாக அமையும் எனக் கருதியமை. இரண்டாவது நிலையில் இவர்கள் சிறுபான்மையினத்தவர்களுள் முக்கியமாக ஒரு பிரிவினர் என்ற காரணங் களே இவர்களை அரசியல் செல்வாக்கற்ற வர்களாக மாற்றுவதற்குப் பின்னணிக் கார ணங்களாகும்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மை என்ற எண்ணக்கருவோடு நேர்த்தொடர்பு கொண்டுள்ளமையால் அது எப்போதும் பெரும்பான்மையோருக்கே சாதகமான ஆட்சி முறையாக விளங்கமுடியும். இந்த வகையில் சோல்பரியால் அறிமுகப்படுத்தப்பட்ட பாரா ளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையிலும் பெரும்பான்மையோரின் நலவுரிமைகளைப் பேணுகின்ற ஆட்சி முறையாகவே இது விளங்க முடிந்தது. முதலாவது பொதுத்தேர் தலில் இனங்களுக்கிடையே பிரதிநிதித்துவ வேறுபாடு அதிகம் காணப்படவில்லை. 1948, 1949 சட்டங்களால் சனத்தொகையில் 10 சதவீதத்தினர் வாக்குரிமை, குடியுரிமை இழந்தமை மறுபுறம் சிங்களவர்களின் பிரதி நிதித்துவத்தை மேலும் அதிகரிக்கச் செய் தது. இதன்மூலம் பெரும்பான்மையினத்தவர் கள் 80 சதவீதமான ஆசனங்களைக் கைப் பற்றக் கூடிய நிலை தோன்றியது. இதுவே சிறுபான்மையினத்தின் நலன்கள் புறகணித்து சட்டங்கள் உருவாக்குவதை சுலபப்படுத்தியது எனலாம். வி.நித்தியானந்தன் அவர்கள் கூறுவது போன்று 'குடியுரிமைச் சட்டங்கள் சுதந்திர இலங்கையில் இடம்பெறவிருந்த நீண்டகால இனவாதம் செயல் முறையின் முதலாவது கட்டம் என வர்ணிக்க முடிந்தா லும், இவற்றின் உடனடித் தேவை வர்க்க ரீதியானதே என்பது மறுப்பதற்கில்லை. பொருளாதார ரீதியாக ஏற்பட்ட தோல்வியால் இவை இந்தியத் தமிழருக்கும் இலங்கையின் ஏனைய சிறுபான்மையோருக்கும் எதிரான இனவாதமாக வளர்க்கப்பட்டது எனக் கூற லாம்'.

சோல்பரி அரசியல் திட்டத்தில் மற்றுமோர் 'சிறுபான்மையோர் பாதுகாப்பு 29ஆம் சரத்து' என்பதாகும். '29(2) இன் படி' இலங்கைப் பாராளுமன்றம் எந்தவொரு சமயத்தவருக் கெதிராகவோ அல்லது சமூகத்தவருக்கெதிரா கவோ சட்டங்கள் உருவாக்க முடியாது என்ப தோடு அவற்றை மாற்றியமைக்க பாராளு மன்றத்தில் மூன்றில் - இரண்டு பெரும் பான்மை வாக்குகள் தேவை. எனவே இது உண்மையில் பாதுகாப்புக்கான ஒரு தடைக்கல்லாக இருக்கும் என எதிர்பார்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இங்கு மூன்றில் - இரண்டு என்பது மொத்தம் 101 பிரதிநிதிகளில் 68 பேர் சாதக மாக வாக்களிக்க வேண்டும் என்பதாகும். மந்திரிமார் வரைந்த நகல் திட்டத்தில் பெரும் பான்மை இனம் 58 ஆசனங்களையும் சிறுபான்மையோர் 43 ஆசனங்களையும் பெறுவர் என எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறு ஏற்படும் போது, ஏதாவது திருத்தங்கள் கொண்டு வரப்படுவதற்கு சிறுபான்மை யோரின் பத்து பிரதிநிதிகளின் ஆதரவுட னேயே அதை நிறைவேற்ற முடியும். எனவே இது சிறுபான்மையோருக்கான ஒரு பாதுகாப்பாக அமையும் எனக் கருதினர். அத்தோடு செனட் என்னும் இரண்டாவது மன்றம் காணப்படுவதால் இதுவும் சிறுபான் மையோருக்கு எதிரான சட்டங்களைத் தடுக் கலாம் என்றும், இரண்டாவது மன்றத்தின் அதிகாரம் சிறுபான்மையோரின் உரிமை களுக்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் அமைந்துள்ளது எனக்கருதப்பட்டது. இவற்றை எல்லாம் ஆதாரப்படுத்துவதாக அமைவது சோல்பரியின் அறிக்கையின் '297வது' பந்தியாகும். இதன்படி முதலா வது மன்றம் தனது ஆசனங்களை அதிகரிக் கின்ற போது அதனுடன் இணைந்த வகை யில் நிர்ணயக்குழு ஆனது சிறுபான்மை யோருக்கும் வழங்கும், அதனால், சிறுபான் மையோர் நிலையானது மேன்மையானதாக இருக்கும் என்று கூறப்பட்டிருந்தது. இவையெல் லாம் எதிர்பார்த்துக் கூறியபோதும் 1947ஆம் ஆண்டு 'சுதந்திர பாதுகாப்புச் சட்டத்தின்' படி '29ஆம் சரத்து 4ஆம்' உப பிரிவானது மூன்றில் - இரண்டு பெரும்பான்மையோடு சட்ட திருத்தங்களை ஏற்படுத்தலாம் என கூறியதன் மூலம் பெரும்பான்மை இனம் தனது பிரதிநிதித்துவ ஆதிக்கத் தன்மை யால் ஜனநாயகம் என்ற தத்துவத்தின் கீழ் எந்தவொரு சட்டத்தையும் மாற்றியமைக் கும் அதிகாரத்தைப் பெற்றது. 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆணைக்குழுவும், மந்திரிமாரும் எதிர்பார்த் தது போன்று தேர்தல் முடிவுகள் அமைய வில்லை. பெரும்பான்மையினத்தவர்கள் 68 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர். அதன் பின்னர் நடந்த எல்லாப் பொதுத் தேர்தல்களிலும் பெரும்பான்மையினமானது எப்போதும் 80 சதவீதத்திற்கு மேலான ஆசனங்களையே கைப்பற்றி வந்துள்ளது.

எனவே சோல்பரி அரசியல் திட்டமானது இலங்கையை ஒற்றையாட்சியமைப்பின் கீழ் கொண்டு வந்ததுடன் ஒற்றையாட்சி அமைப்புக்குட்பட்ட வகையிலேயே எல்லா செயற்பாடுகளையும் மேற்கொள்ள ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்த. சோல்பரி அரசியல் திட் டத்தில் வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் சுதந்திர இலங்கையில் படிப்படியாக மீறப்பட் டமையால், சிறுபான்மையோர் இவ்வரசி யல் திட்டத்தில் நம்பிக்கையை இழந்தனர். ஒற்றையாட்சி முறையில் சிறுபான்மை யோரின் பிரச்சினைகள் தீர்க்க முடியாது என்பதாலேயே, சமஸ்டியாட்சி முறையொன் றின் கீழ் சிறுபான்மையோர் தமது பிரச் சனைகளை தீர்த்துக்கொள்ள முயன்றார்கள். இந்தப் பின்னணியிலேயே சமஸ்டியாட்சிக் கான கோரிக்கைகள் முன்வைத்து ஒரு பிரிவினர் தோன்றினர்.

சுதந்திரத்தின் பின் அரசியல் கட்ட மைப்புக்குள் 1948ஆம் ஆண்டு முக்கிய தமிழ்க் கட்சியான (அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம் பலம், அவருடன் சிலரும் எதிர்ப்பு மனப்பான் மையை விட்டு 'பொறுப்புடன் ஒத்துழைத்தல்) என்ற அடிப்படையில் முதலாவது அரசாங்கத் தில் அங்கத்துவம் வகித்தனர். ஆனால் காங் கிரசில் ஒரு பகுதியினர் எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்தின் தலைமையில் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எதிர்ப்புக்காட்டினர். ஆயி னும் இக் காலகட்டத்தில் 'தமிழர்கள் மீதான விரோத உணர்வுகள் அமிழ்ந்த நிலையில் காணப்பட்டது'. இது ஒரு தசாப்தத்திற்குள் வெளிவந்தது. அதன் பின்நிலை சொல்லத் தேவை இல்லையென்று பீ.எச்.பாமர் அவர் கள் கூறுகின்றார்.

அரசாங்க கட்டமைப்புக்குள் இணைந்து கொண்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம், டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் கைத் தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடி மந்திரியாக நியமிக்கப்பட்டார். முதலாவது பாராளுமன்றத்தில் 18ஆம் இலக்க மசோதா கொண்டுவரப்பட்ட போது 'மூன்று தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவாக வாக் களித்தனர்'. 1949ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 3ஆம் இலக்க திருத்தச்சட்ட மூலத்திற்கு 'ஆறு தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களித்தனர்'. இதையே ஏ.ஜே.வில்சன் அவர்கள் இவ்வாறு கூறுகின் றார். 'இந்திய தமிழருக்கு எதிரான 1948, 1949ஆம் ஆண்டுச் சட்டங்களை இரு தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் களும், ஒரு தமிழ் காங்கிரஸ் மேற்சபை அங் கத்தவரும் எதிர்த்தமையே இலங்கையின் சமஸ்டிக் கட்சியின் தோற்றத்திற்கான உடனடிக் காரணம்'. என்றார்.

அரசாங்க சேவையின் உயர் பதவிகளில் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் இடம் மொத்த மக்கள் தொகையில் அச் சமூகத்தவ ரின் பங்கிற்கு ஏற்றதான அளவிலும் கூடியதாக இருப்பதாக பெரும்பான்மைச் சமூகத்தின் ஒரு பகுதியினரால் அடிக்கடி குரல் கொடுக்கப்பட் டது. இது பிரித்தானிய குடியேற்றவாதிகளின் பிரித்தாளும் கொள்கையின் விளைவு என்றும், பெரும்பான்மைச் சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட அநீதி என்றும் கருதப்பட்டது. இச் சமத்துவம் அற்ற நிலையை திருப்திப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென சுதந்திரத்திற்குப் பிந்திய காலங்களில் வற்புறுத்தப்படலாயிற்று. 'இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் இலங்கையின் சிறுபான்மை இனங்களான இலங்கைத் தமிழரும், பறங்கியரும் அரசாங்க நிர்வாக சேவையில் 1870 - 1920 வரையிலான காலப்பகுதியில் தமது இன விகிதாசாரத்திலும் கூடிய ஒரு தொகையி லேயே உயர் பதவிகளை வகித்தனர்'. 1921ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தமிழர் நிர்வாகம், கல்விசார் தொழில் என்பவற்றில் 31.9 வீதமான பதவிகளை தனித்து வகித்தனர்.

டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை யும் சிங்கள மக்கள் மத்தியில் வேலைவாய்ப் புக்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியமை யால், சிறுபான்மை இனத்தின் மீது திசை திருப்பப்பட்டு இவர்களுடனான வேலைவாய்ப் பில் போட்டி நிலையை ஏற்படுத்தியது. இதன் பின்பே அரசாங்கங்கள் சிறுபான்மையோ ரின் வேலைவாய்ப்புக்களைக் குறைத்தே வந்துள்ளன. 1870ஆம் ஆண்டு தொடக்கம் 1946ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அரசாங்க உயர் நிர்வாக சேவையில் இன வாரி முறை பற்றி எஸ்.ஜே.தம்பையா ஆராய்ந் துள்ளார். 1930களின் பின் படிப்படியாகச் சிங்களவர்களுக்கு நிர்வாக சேவையிலும், மருத்துவம் போன்ற உயர் தொழில் வாய்ப் புக்களையும் வழங்கியமை, 1946இல் நிர்வாக சேவையில் சிங்களவரது ஆதிக்கம் முழுமை பெற்றது.

நீண்டகாலமாக சிறுபான்மைச் சமூகத் தவர்களில் இலங்கைத் தமிழரும், பறங்கிய ரும் அரச சேவைகளில் உயர் பதவி வகிப் பதற்கு அவர்களின் ஆங்கிலக்கல்வியும், விஞ்ஞானக் கல்வியுமே காரணம் எனலாம். 'வடபகுதியில் 19ஆம் நூற்றாண்டில் றோமன் கத்தோலிக்கத்தவர்களின் பாடசாலைகள், புரட்டஸ்தாந்து மிசனரிமாரின் பாடசாலைகள் என்பன உருவாக்கப்பட்டமையால் இங்கு ஆங்கிலக் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் விருத்தியடைந்தது'. மறுபுறம் பறங்கியரின் தாய்மொழி ஆங்கிலம் என்ற காரணத்தால் இவர்கள் இயல்பாக இத் தொழில்களின் வாய்ப்பினை பெற முடிந்தது. பெரும்பான்மை யோர் என்ற ஜனநாயக தத்துவத்தில் ஆட்சியுரிமை பெரும்பான்மைச் சமூகத்திடம் சென்றமையால் பெரும்பான்மை அரசியல் நிறுவனமயப்படுத்தப்பட்டது. இது ஒற்றை யாட்சி அமைப்பின் கீழ் இறைமையெனும் அதிகாரம் மையப்பட்ட பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்கே எப்போதும் சாதகமாக இருந்து வந்துள்ளது. எனவே இந்த நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சியமைப்பின் கீழ் சிறுபான்மையோர் தமது நலவுரிமை களைப் பாதுகாக்க முடியாது என்ற அனுப வமே சமஸ்டியாட்சி முறை தோன்ற வழி வகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடந்த மூன்று தசாப்தங்களாக கோரிய கோரிக்கைகளை விட இக் கோரிக்கைகள் வேறுபட்டவையாகக் காணப்பட்டன'. இப்போது முதன் முதலாக தமிழர்களின் 'பொருளாதார எதிர்காலம் பற்றி சிந்திக்கும் ஒரு கூட்டத்தினர் தோன்றியதோடு, தமிழ்த் தாயகத்தை பேணி விருத்தி செய்வதிலும் அக்கறை காட்டினர்'. கடந்த காலங்களில் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பல்வேறு அரசியல் திட்ட மாற்றங்களும் எப்போதும் பெரும்பான்மையின எண்ணக் கருவோடு தொடர்புடையதாகவே காணப்பட்டது. 1931 டொனமூர் திட்டம் இந்த வகையில் முன்னோடித் திட்டமாகும். 1947 சோல்பரி அரசியல் திட்டமானது முன்னைய குறைபாடுகளை நீக்கி ஜனநாயக தத்துவத்தில் சிறுபான்மை யோரின் நலவுரிமைகள் பேணப்பட வேண்டும் என முயற்சித்தது.

அதற்கான காப்பீடுகள் அரசியல் திட்டத்தின் மூலம் வழங்கப்பட வேண்டும், சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோர் காப்பீடுகள் சேர்க்கப்பட்டிருந்தன, ஆனால் நடைமுறையில் அவை செயலற்றவையாகவே காணப்பட்டன. 1963ஆம் ஆண்டு பீ.எச். பாமருடைய நூலான 'CEYLON – A DIVIDED NATION' எனும் நூலுக்கு வழங்கிய முகவுரையில் சோல்பரி பிரபு 'இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் இருப்பதான அடிப்படை உரிமையைத்தானும் இலங்கைத் தமிழருக்கு வழங்கத் தனது அரசியலமைப்பு தவறிவிட்டது என்றும், இலங்கையின் இனப்பிரச்சனை பற்றி தன்னிடம் அந்தக் காலத்தில் போதிய அறிவு இருந்திருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்'. எனவே இவருடைய இக்கூற்றை சோல்பரி அரசியல் திட்டம் சிறுபான்மை யோருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்காத திட்டம் என்பதை அவரே கூறிவிட்டார்.

இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட்டமை தான் சமஸ்டிக் கட்சி தோன்ற உடனடிக் காரணம் என கூறப்பட்ட போதும், அதற்கு புறம்பாக வேறு பல காரணங்களும் இருந்துள்ளன.

'இதை உடனடிக்காரணம், அடிப்படைக்காரணம் என இரண்டாக வகைப்படுத்தியுள்ளார்கள்'. சமஸ்டிக்கட்சி ஆரம்பிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் 'ஒற்றையாட்சி முறையின் கீழ் சிறுபான்மையோரின் பிரச்சனைகள் தீர்க்கப்படாவிட்டால் மாற்று வழியொன்றைப் பின்பற்ற வேண்டும்'. எனக் கூறியுள்ளார். இதே போன்று தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதியும், பின்னர் சமஸ்டிக் கட்சியின் தாபகருமான எஸ்.ஜே. வி.செல்வநாயம் பல பொதுக்கூட்டங்களில் 'சமஸ்டி அமைப்பு முறையொன்றால் மட்டுமே சிறுபான்மையோர் பிரச்சினை தீர்க்க முடியும்' எனக் கூறியுள்ளார். இவர் 1948ஆம் ஆண்டு முதலாவது சுதந்திர தினத்தன்று, வீரகேசரி சுதந்திர விழா வெளியீட்டுக்கு எழுதிய கட்டுரையொன்றில் கலாசார உரிமை போன்றவற்றைப் பேண தனியான அமைப்பு அவசியம்' என வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு ஒரு சில தமிழ் தலைவர்களிடையே சமஸ்டியமைப்புக்கான எண்ணக்கரு, கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பே தோன்றியுள்ளது.

மிக முக்கியமான விடயம் என்னவெனில் தமிழ் தலைவர்கள் சமஸ்டிக்கோரிக்கையை முன் வைப்பதற்கு இரு தசாப்தங்களுக்கு முன்பே 1925களில் கண்டியர்கள் தங்கள் தனித்துவத்தைப் பேணிக் கொள்வதற்கான வழிமுறை சமஸ்டி முறை என்பதனை உணர்ந்து, 'கண்டி தேசிய பேரவையானது' டொனமூர் ஆணைக்குழுவுக்கு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியது. ஒரு அரசில் ஒவ்வொரு இனமும் தமது தனித்துவத்தையும், கலாசார அடையாளங்களையும் ஏற்படுத்திக் கொள்ள சமஸ்டி ஆட்சி முறை தான் பொருத்தமுடையது. இக் கோரிக்கையை முன் எடுத்துச் செல்வதில் முக்கியமானவராக இருந்தவர் S.W.R.D.பண்டாரநாயக்கா பிற்காலத்தில் இக்கருத்தை மாற்றிக் கொண்டார்.

காலம் தாழ்த்தியே தமிழ்த் தலைவர்களிடையே சமஸ்டி பற்றிய சிந்தனை தோன்றியது எனலாம். ஒற்றையாட்சி முறையின் கீழ் நீண்டகாலமாக சிறுபான்மையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது என்பதில் நம்பிக்கை கொண்டிருந்த ஒரு சில தலைவர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்தனர். அவர்களுள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சீ.வன்னியசிங்கம், இ.எம்.வி.நாகநாதன் ஆகியோர் ஒருமித்து இராஜினாமாச் செய்து 1948ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆந் திகதி புதிதாக 'இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியை' உருவாக்கினர். இதனுடைய ஆங்கிலப் பெயர் 'The Federal Party' என்பதாகும்.

'The Federal Party' என்பது நேரடியான மொழிபெயர்ப்பு அல்ல, இங்கு 'இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி' என்றே அழைக்கப்படுகின்றது. இந்தக் கட்சியில் 'அரசு' என்ற எண்ணக்கரு இராட்சியம், அரசாங்கம், நிர்வாகம், என்பவற்றைக் குறிக்கின்றது. இக் கட்சியினர் சமஸ்டியாட்சி முறைக்குட்பட்ட தனியான அரசு அல்லது இராட்சியம் என்றே கருதிக் கொண்டனர். இந்த தலைவர்களிடையே சமஸ்டியமைப்புக்கான எண்ணக்கரு கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பே தோன்றியுள்ளது. இந்த எண்ணக் கருவை மேலும் விளக்குவதாயின் சமஸ்டியாட்சிக் கட்டமைப்புக்குள் ஓர் சுதந்திரத் தமிழ் அரசு என்பதாகும்.

சமஸ்டிக் கட்சியினர் தமிழ் மக்களின் தேசிய உணர்வை தூண்டுவதற்காகவே 'தமிழ் அரசு' என்ற பெயரை இக் கட்சிக்கு வைத்ததன் நோக்கமாக இருந்தது. தமிழ் மொழி பேசுகின்ற அனைத்துச் சிறுபான்மையோரையும் ஐக்கியப்படுத்தி, வரலாற்றுப் புவியியல் பாரம்பரிய ஆள்புலத்தினுள் தமிழ் பேசும் மக்கள் தமது நலவுரிமைகளைப் பேணிக் கொள்வதற்குச் சமஸ்டிக்கட்டமைப்புக்குள் சுதந்திரமான ஒரு தமிழ் அரசை நிறுவுவதே இக் கட்சியின் நோக்கமாகும்.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக இலங்கையில் ஒற்றையாட்சி கட்டமைப்பு முறையின் கீழ் பல்லின சமூக அமைப்புக்கள் இயங்கி வந்துள்ளன. 1931ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையும், ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் ஜனநாயக ஆட்சி முறை பெரும்பான்மையினத்திற்கே எப்போதும் அனுகூலமாகக் காணப்பட்டது. சர்வசன வாக்குரிமையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையும் பெரும்பான்மை சமூகத்தினருக்கு அதிக பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பினை அளித்தமையால் பாராளுமன்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி சாதகமான பல சட்டங்கள் உருவாக்கப்படவும், வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் வாய்ப்பாக இருந்தமையால், ஒற்றையாட்சி முறையின் கீழ் சிறுபான்மையினங்கள் தமது உரிமைகளையும் தனித்துவங்களையும் பேண முடியவில்லை. அதற்கான வாய்ப்புக்களும், குறைவாகவே இருந்தமையை வரலாற்றுச் சம்பவங்கள் நிரூபித்தமையால், சமஸ்டியாட்சி முறை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் தோற்றம் பெற்றன.

2.1 அகில இலங்கைத் தமிழ் காங்கிரசிற்கும் - சமஸ்டிக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள்

1944ஆம் ஆண்டு கார்த்திகை 27ம் திகதி தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் கட்சியாக 'அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்' தோற்றுவிக்கப்பட்டது. இக்கட்சியின் தலைவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்கட்சியின் முதலாவது கூட்டத்தில் கட்சியின் நோக்கங்களை தலைவர் வெளியிட்டார். இலங்கைத் தமிழர்களின் அரசியலில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மரணத்திற்குப் பின் தோன்றிய வெற்றிடத்தை நிரப்பக் கூடிய ஒருவராக பொன்னம்பலம் தோன்றினார். 'இவர் புத்திக் கூர்மையும், விநோத ஆற்றலும் கொண்டவர், அரசுக் கழகத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, துணிவுடன் குரல் கொடுத்து வந்தார்'. முக்கியமாக டொனமூர் காலத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைக்கப்பட்டமை மூலம் தமிழ் மக்களின் அரசியற் பலம் அரசுக் காலத்தில் குறைக்கப்பட்டதை உணர்ந்து, சமபலம் பிரதிநிதித்துவ முறையான' 50:50 என்ற கோரிக்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்து வாதாடினார். எனவே 1930 களின் நடுப்பகுதியில் இருந்து மொழிப் பிரச்சினை கூர்மையடையும் வரைக்கும் இவர் தமிழ் மக்களில் பெரும்பான்மையோரின் ஆதரவினைப் பெற்ற கவர்ச்சிகரத் தலைவராக விளங்கினார் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை.

1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் 'சிங்களவரின் மேலாதிக்கம் காரணமாக தமிழர்களின் உரிமைகள், கலாசாரம் இல்லாமல் போய்விடும் அபாய நிலையை அடிப்படை பிரசாரமாகக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டனர். தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற சுலோகம் முன் வைக்கப்பட்டு தேர்தலில் அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றது. வடமாகாணத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறு தொகுதிகளிலும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலும் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஏழு பிரதிநிதிகளைக் கொண்ட தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலனாக கருதப்பட்டது. இத் தேர்தல் முடிவானது ஒன்றை தெளிவாக வெளிப்படுத்தியது. 1947இல் பாராளுமன்றத்தில் வெள்ளை அறிக்கையை ஆதரித்த தமிழ் பிரதிநிதிகளில் ஒருவரைத்தவிர ஏனையோர் தோற்கடிக்கப்பட்டனர். எனவே ஆரம்பத்தில் தமிழ் மக்கள் தம்மை வெகுவாகப் பாதித்து வந்த பல்வேறு பிரச்சினைகளை தமிழ் காங்கிரஸ் தீர்வு காணும் என நம்பினர்.

இவ்வாண்டு பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் காங்கிரசும், அதன் தலைவர் பொன்னம்பலமும் அரசாங்கத்தின் ஒரு பிரதியீடாக அமையுமென்றும், தமிழ் தேசிய நலன்களை பாதுகாக்கும் அமைப்பாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்திலேயே இக்கட்சி பல தோல்விகளை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. முக்கியமாக சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சமபலப் பிரதிநிதித்துவத்தைக் கோரினார். 'சமபலம்' என்பது இலங்கைத்தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், ஐரோப்பிய இனங்கள் சட்ட சபையில் ஐம்பது சதவீத பிரதிநிதித்துவத்தையும், சிங்களப் பெரும்பான்மையினம் ஐம்பது சதவீத பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருப்பதாகும். இந்தக் கோரிக்கைக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர், கொழும்புத் தமிழரைத் தவிர ஏனைய மக்கள் ஆதரிக்கவில்லை. கிழக்கு மாகாண அரசாங்க பிரதிநிதிகள் இதற்குச் சார்பாக இருக்கவில்லை. இந்தியத் தமிழர்கள் இதனை ஆதரிக்கவில்லை. பெரும்பான்மையினத்தின் நல்லெண்ணங்களில் தங்கியிருந்த அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் சமபலப் பிரதிநிதித்துவ முறையை கடுமையாக எதிர்த்தது. எனவே எந்தவொரு சாராரின் ஆதரவும் இல்லாத ஒரு கோரிக்கையை இவர் வலியுறுத்தி வந்ததோடு இறுதியில் அதில் தோல்வியையே கண்டார்.

பொன்னம்பலம் அவர்களின் சமபல பிரதிநிதித்துவ முறை தோல்வி கண்ட போது அவர் மாற்று வழி பற்றி சிந்திக்கத் தவறி விட்டார். அரசுக் கழகத்தில் இருந்த சிலர் 60:40 என்ற வீதத்தை அல்லது 55:45 என்ற வீதத்தை சமரசம் செய்ய முற்பட்ட போது பொன்னம்பலம் தனது திட்டத்தில் இருந்து இறங்கவில்லை. இவர் இத் திட்டத்தை அரசியல் யாப்பு உத்தரவாதத்தோடு பெற்றிருந்தால் சிறுபான்மையோர் சட்டசபையில் கணிசமான அளவு பிரதிநிதிகளைப் பெற்றிருக்க முடியும். இது வரலாற்றில் தவறவிடப்பட்ட மிகப்பெரிய தவறாகும். அல்லது சமஸ்டியமைப்பொன்றைப் பற்றிய கோரிக்கையை முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அவை இரண்டையுமே அவர் மேற்கொள்ளத் தவறிவிட்டார்.

பொன்னம்பலம் அரசாங்கத்தோடு இணைவதற்கு முன்னரே தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள் சமஸ்டியரசின் எண்ணம் உதித்து விட்டது. இந்த எண்ணம் சமபல பிரதிநிதித்துவக் கொள்கை தோல்வியடைந்ததால் தர்க்க ரீதியாகப் பெறப்பட்ட முடிவே சமஸ்டியாகும். இதுவரை சமஸ்டி அரசியலமைப்பொன்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும்படி வற்புறுத்தியிருக்க வேண்டும். ஆனால் செல்வநாயகம் சமஸ்டியை ஒரு தீர்வாகக் கூறிய போதும் அதனுடன் நின்று கொண்டார். தமிழ் காங்கிரஸ் ஆரம்பம் முதல் ஒற்றையாட்சியமைப்பில் சிறுபான்மை யோரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் மூலம் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என நம்பியது. ஆனால் அதில் தோல்வியைக் கண்டது. இவர் விவேகமும், புத்திக்கூர்மையும் உள்ளவர் என்பதால் தனக்கு ஏற்பட்ட தோல்வியை சமாளித்து புதிய உத்தியைக் கையாண்டார். இதன் மூலம் அவர் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதன் மூலம் சிறுபான்மையோர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென நம்பினார்.

தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு பிரிவின ரிடையே சமஸ்டி பற்றிய சிந்தனையும், சமஸ்டிக் கோரிக்கையும் தோற்றம் பெற்று வளர்ந்த போது காங்கிரசின் பொதுச் சபைக் கூட்டத்தில் 'தமிழருக்கு சமஸ்டி அரசாங்கம் கோருவது தமிழர்களின் எதிர்கால நல் வாழ்வை பாதுகாக்கும் பொருட்டாகும்' என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது. பொதுச்சபை இக்கோரிக்கையை நிராகரிக்கின்றது என்ற தீர்மானத்தை, யாழ்ப்பாண மாநகர சபைத்தலைவர் சாம்.ஏ.சபாபதியால் பிரேரிக் கப்பட்டு ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் அது ஆமோதிக்கப்பட்டு, பெரும்பான்மை யோரின் ஆதரவுடன் இத்தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்றபோது இலங்கைத் தமிழ் காங்கிரசில் இருந்து பொன் னம்பலமும், செல்வநாயகமும் பிளவுபடும் அறிகுறி காணப்பட்டது. எதிர்ப்புணர்வை விட்டு அரசாங்கத்தோடு பரஸ்பரம் ஒத் துழைக்க வேண்டும் என்ற பொன்னம்பலத் தின் கருத்துக்கு கட்சிக்குள் ஆதரவு இருந் தமையால் இரு முக்கிய தலைவர்களான செல்வநாயகத்தின் போக்கும், பொன்னம் பலத்தின் போக்கும் வேறுபட்டு அமைந்தன. இவர்களின் வேறுபட்ட போக்கு இரு அபிப் பிராயங்களை வெளிப்படுத்தியது. பதவியில் இருக்கும் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதன் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என பொன்னம்பலமும் அவருடைய ஆதரவாளர்களும் நம்பினர். செல்வநாயகம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு புரட்சிகரமான தீர்வு வேண்டும், சேனநாயக்கா போன்ற தலைவர்களோடும், ஐக்கிய தேசியக் கட்சியும் இதற்கு ஏற்புடையதல்ல எனக் கருதினார். இவர் தமிழர்கள், வேறான பிர தேசத்தைக் கொண்டவர்கள், இவர்களின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும் என்றும் தமிழர்கள் தமது தனித்துவமான கலாசார அடையாளங்களை வெளிப்படுத்த சமஸ்டியமைப்பு வேண்டும் என கருதினார். இதனால் அவர் சிங்கள மேலாண்மை பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியுடனும் நிபந்தனை ஒத்துழைப்பை நாடிய பொன்னம்பலத்துடன் ஏனைய காங்கிரஸ் பிரிவினரிடமிருந்தும் விலகிக் கொண்டார். இவ்வாறு விலகிய ஒருசாரார் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற பரந்த மட்டத்திலான சிறுபான்மையோர் பிரச்சினை களைத் தீர்க்க புதிய அரசியல் அணுகுமுறை யைப் பின்பற்றினர்.

1947ஆம் ஆண்டு ஆனி மாதம் நாவற் குழியில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் கிளை ஒன் றைத் திறந்து வைக்கும் போது ஜீ.ஜீ.பொன் னம்பலம் அவர்கள் 'தமிழர் இலங்கையில் சிறுபான்மையோராக இருக்கின்றமையால் இப்போதிருக்கும் நெருக்கடியான நிலையில் ஒருமித்து நிற்க வேண்டும். தமிழர்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்யும் ஐக்கிய தேசி யக்கட்சியை நம்ப வேண்டாம். நாங்கள் அனுப்பும் பிரதிநிதிகள் தமிழரின் உரிமை களைப் பாதுகாக்க கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று கூறியவர், தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து அரசாங் கத்தோடு இணையத் தீர்மானித்தார். சேன நாயக்கா அரசாங்கத்தில் சேருவதற்கு முன் பொன்னம்பலமும், காங்கிரசும் தமது நடத்தை களை நியாயப்படுத்த பல்வேறு தந்திரங் களை உபயோகித்தனர். முக்கியமாக சேன நாயக்காவின் அரசாங்கம் நீட்டும் நேசக் கரங்களை ஏற்க வேண்டும் அது தான் சிறந்த வழி என்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதைக் கொண்டாடும் ஏற்பாடொன்று 1947 ஐப்பசி மாதம் யாழ் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் 'சமஸ்டியரசியல்' பற்றி பேசும்படியாக பொன்னம்பலம் எனக்குக் கூறினார். அதை ஏற்று நானும் அக்கூட்டத்தில் பேசினேன். ஆனால் இப்போது சமஸ்டி கோருவது தற்கொலைக்கு ஒப்பானது என்கிறார். இதன் மூலம் தனது கட்சித் தாவலை நியாயப்படுத்த முற்பட்டுள்ளார் என எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் 1949 புரட்டாதியில் நவாலியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கூறினார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற முதற்பகுதியில் பல பிரச்சினைகளை காங்கிரஸ் எதிர்நோக்க வேண்டியிருந்தது. முக்கியமாக தேசியக்கொடி பற்றிய பிரச்சினை, இந்தியத் தமிழர்களின் எதிர்காலம், சிங்களமும், தமிழும் இரு உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்க வேண்டும் என்ற பிரச்சினை, அரசாங்க உதவியோடு இடம்பெறும் குடியேற்றங்களை பூர்வீகத் தாயகப் பிரதேசத்தில் மேற்கொள்வதை நிறுத்துதல், போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாமல் இருந்தன. இவ்வாறான நிலையில் பொன்னம்பலம், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க அமைச்சரவையில் கைத்தொழில் அமைச்சரானார். இந்நடவடிக்கையை எதிர்த்தவர்கள் இவ்வரசாங்கத்தில் சேர்ந்தால் தமிழருடைய நலன்களுக்கு இவர் துரோகம் செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்ட போது இவர் தனது நிலையை நியாயப்படுத்துவதற்கு மற்றுமோர் உத்தியைக் கையாண்டார். அரசாங்க 'மந்திரி சபையில் செல்வநாயகம் மேலதிக மந்திரிப்பதவி கேட்டதாகவும், அதை சேனநாயக்கா மறுத்ததாகவும்' கூறினார். செல்வநாயகம் இதை மறுத்தார் தான் ஒரு போதும் மந்திரிப்பதவியில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்றும், பொன்னம்பலம் மந்திரிப்பதவி ஏற்கக் கூறிய போதும் தான் அதை நிராகரித்ததாகவும் கூறினார். செல்வநாயகம் கூறியது உண்மையென ஏ.ஜே.வில்சன் உறுதிப்படுத்துகின்றார். ஏனெனில் அப்போதிருந்த சிறுபான்மையோரை பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்க முடியாதிருந்தது இவ்வரசாங்க அமைச்சரவையில் சேருவதற்கு முன் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே செல்வநாயகம் விரும்பியிருந்தார்.

செல்வநாயகம் மந்திரிப் பதவியில் அக்கறை கொண்டிருக்கவில்லையென்பதை நிரூபிக்கும் மற்றுமோர் சான்றை ஏ.ஜே. வில்சன் அவர்கள் உறுதிப்படுத்துகின்றார். சேனநாயக்கா மந்திரி சபை அமைக்கும் போது இவரை தன்னுடைய மந்திரி சபையில் இணையும் படி கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார், என்றும் செல்வநாயகம் அப்பதவியை நாடவில்லை என்றார். அதே நேரத்தில் உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் பதவியை ஏற்கும்படி வற்புறுத்தப்பட்டது அதையும் இவர் ஏற்கவில்லை.

பொன்னம்பலமும், செல்வநாயகமும் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டிருந்தனர். தமிழர் பிரச்சினைக்கு வெவ்வேறு தீர்வு காண முனைந்தனர். இருவரிடையேயும் ஆரம்பத்தில் முரண்பாடுகள் காணப்பட்ட காரணத்தினால் ஒன்று சேர்வது மிகக் கடினமான விடயமாக இருந்தது. ஆயினும் இவ்விருவரில் யாராவது ஒருவர் தமிழினத்தைக் கொண்டு செல்ல ஆயத்தமானபடியால் அவரைப் பின்பற்றத் தயாராக இருந்தார்கள். 1948ஆம் ஆண்டு பொன்னம்பலம் அரசாங்கத்தில் சேர்ந்தும் அவ்விடயத்தை நிரப்பாதிருந்தார். 'சந்தர்ப்ப சூழ்நிலையால் அந்தப் பொறுப்பு தனது தோள்களின் மீது விழுந்தது, என்று கூறினார். பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு அளித்துவந்த தலைமைக்குத் தன்னைப் போன்ற சாந்தமும் பணிவும் கொண்ட ஆள் ஒருவர் பிரதியீடாக முடியாதென நினைத்த தமிழ் மக்கள் பலர் இருந்தார்கள். ஆனால் இறுதியில் வேறான தன்மையுடைய தலைமையை அளிப்பதில் செல்வநாயகம் வெற்றி கண்டார்.

பொன்னம்பலத்தின் அரசியல் பிரவேசமானது தமிழ் மக்கள் மத்தியில் தேசிய உணர்வை ஏற்படுத்தி, தமிழ்த் தேசியவாதம் தோற்றம் பெற ஒரு முன்னோடியாக இருந்தார். குறிப்பாக குடியேற்ற ஆட்சியின் போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர்களின் தேசிய உணர்வைத் தட்டியெழுப்புவதிலும், தமிழர்களின் நலவுரிமைகளுக்கு அரசியல் உயர்மட்டத்தில் குரல் கொடுத்து போராடியவர் என்ற வகையில் இவர் முதன்மையானவராக விளங்கினார் எனலாம்.

தமிழ்த் தலைவர்களில் பெரும்பான்மையோர் அரசியல் யாப்பு மாற்றங்களின் ஊடாக பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென நம்பினர். ஆனால் இவற்றிலிருந்து வேறுபட்ட சிந்தனை கொண்டவராக செல்வநாயகம் விளங்கினார். இவருடைய கருத்துக்கள், சிந்தனைகள் பல ஆண்டுகளுக்குப் பின்னரே தமிழ் பேசும் மக்களால் அங்கீகரிக்கப்பட்டன. இவருடைய குறிக்கோள் எப்போதும் ஒன்றாகவே இருந்தது. முக்கியமாக எல்லாத் தமிழ் பேசும் மக்களையும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் மக்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோரை ஒற்றுமைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மொழி ரீதியாகத் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற ஒரு பிரிவினரைத் தோற்றுவித்தார்.

அரசாங்கத்தோடு ஒத்துழைத்து மந்திரி சபையில் இடம் பெறுவதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி தமிழ்ப்பகுதிகளில் நன்மை பெறலாம் என காங்கிரசின் ஒரு சாரார் கருதினர். ஆனால் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த காலத்திலேயே இந்தியத் தமிழர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் நாடு அற்றவர்களாக மாறவும், எல்லோரும் ஏற்கக் கூடிய ஒரு பொதுக் கொடியை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக சிங்களவர்களின் கொடியான சிங்கக்கொடியை ஏற்றுக்கொள்ள, தமிழர்களின் தாயகத்திலேயே தமிழர்களை சிறுபான்மையோராக்கும் முயற்சியில் அரசாங்கம் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொண்டபோது அவற்றைத் தடுத்து நிறுத்தவோ அல்லது குடியேற்ற அளவுகளை குறைக்க முடியாத நிலையே காணப்பட்டது.

பொன்னம்பலத்தின் நடவடிக்கைகளைக் கண்டனம் செய்த செல்வநாயகமும் ஏனைய சிலரும் சமஸ்டிக் கட்சி ஒன்றை ஏற்படுத்தி புதிய தேசத்தை ஏற்படுத்துவது கடமை என்றும் தமிழ்த்தாயகத்தின் பெரும்பான்மையை ஏற்படுத்துவதில் சிங்கள அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்களில் தங்கியிராது, தமது சொந்தப்பலத்தில் தங்கியிருக்க வேண்டும் என தனது கடமையை உணர்ந்தனர். 1949ஆம் ஆண்டு கட்சியமைக்கப்பட்ட போது 'சமஸ்டியமைப்பொன்றின் கீழ் சுயாட்சி தமிழ் மாகாணமும், சுயாட்சி சிங்கள மாகாணமும் உருவாக்கப்பட்டு ஒவ்வொரினமும் தமது சொந்தத் தனித்துவத்தைப் பேணிக்கொள்ள சமஸ்டியமைப்பே ஏற்புடையது. 'இதுவே கட்சியின் குறிக்கோள் என அதன் தலைவர் செல்வநாயகம் கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் பிரகடனம் செய்தார். (பிற்சேர்க்கை: 1) கட்சியமைக்கப்பட்ட போது தாங்கள் எதிர்நோக்கப் போகும் கஸ்டங்கள் பற்றி உணர்ந்திருக்கவில்லை. தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதே தேவையானது என கருதினர். அதன் பின் தமது நோக்கத்தையடைய தடைகள் இருக்காதென நம்பினார். 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சமஸ்டிக்கட்சியும், தமிழ் காங்கிரசும் ஒன்றையொன்று மிகக்கடுமையாக எதிர்த்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டன. தமிழ் தொகுதிகளில் இன்றும் சிங்களக் கட்சிகளுடன் ஒத்துழைக்கும் கொள்கைக்கு தொடர்ந்தும் மக்கள் ஆதரவு வழங்கியமையால் தமிழ் காங்கிரஸ் 1952 பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடிந்தது. இக்காலப்பகுதியில் சமஸ்டிக்கட்சியின் கொள்கையானது தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெறவில்லை. 1948ஆம் ஆண்டிற்கும் 1955ஆம் ஆண்டிற்கும் இடையில் இலங்கைத் தமிழ் மக்கள் பொன்னம்பலத்தையும் அவருடைய காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பதா, செல்வநாயகத்தையும் அவருடைய சமஸ்டிக் கட்சியையும் ஆதரிப்பதா, என்பதில் குழம்பியிருந்தனர். தமிழர்களில் சிறந்தவர்கள் என்ற வாதத்திற்கு, இரு பகுதியினரும் பாராளுமன்ற அங்கத்துவம் இன்றியமையாததென கருதினர். இதில் சமஸ்டிக் கட்சியை விட தமிழ் காங்கிரஸ் சற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணியில் இருந்தது அரசாங்கத்தோடு இணைந்திருப்பதன் மூலமே அதிக சலுகைகள் பெற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் பரவச் செய்தது. இந்த முரண்பாடுகளால் தமிழ் காங்கிரஸ், சமஸ்டிக் கட்சியை எதிரியாகக் கருதியது.

1952ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சமஸ்டிக் கட்சி இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றது தமிழ் காங்கிரஸ் நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1952ஆம் ஆண்டிற்கும் 1956ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலகட்டத்தில் தமிழ் அரசியலில் ஓர் வெற்றிடம் ஏற்பட்டது. ஏனெனில் தமிழ் வாக்காளர்கள் தமக்கு எது சரியான வழியைக் காட்டும் தலைமையெனத் தீர்மானிக்க முடியாதிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் 'சிங்களமும், தமிழும் சம அந்தஸ்துள்ள அரசகரும மொழி' என்ற நிலையில் இருந்து 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழி என நிலை மாற்றிய போது தமிழ்ப் பகுதிகளில் அரசியல் கட்சியும் மாறியது. இவ்வாண்டில் இருந்து சமஸ்டிக்கட்சியே தமிழ் பேசும் மக்களின் ஒரே கட்சியாக மாறியது. அது வடக்கு, கிழக்கு பிரதேச மக்கள் அனைவரையும் ஒருங்கே இணைத்த ஒரு பாலமாகவும், தமிழ் பேசும் மக்களின் எல்லாப் பிரச்சினைகளையும் முன்னெடுக்கும் கட்சியாகவும் மாறியது. இதன் தலைவர் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மீட்பராகவும், தந்தையாகவும் கருதப்பட்டார். இவரின் தலைமையின் கீழ் எல்லா தமிழ் பேசும் மக்களையும் ஒற்றுமைப்படுத்திய ஒருவராக செல்வநாயகம் விளங்கினார் எனலாம்.

'சமஸ்டிக் கட்சியினர் தமது கொள்கைகளை எதிர்க்கும் தமிழ் மக்கள் மத்தியில் 'சுதந்திரன்' மிகப்பயனுள்ள பிரசார ஆயுதமாக பயன்பட்டு வந்தது. விசேடமாக பொன்னம்பலத்தையும், தமிழ் காங்கிரஸ் கட்சியையும் விமர்சனம் செய்ததோடு அவர்களின் போக்கை கண்டித்து எதிர் பிரசாரம் செய்தது. இதில் அது வெற்றியும் பெற்றது எனலாம். 1956ஆம் ஆண்டுக்குப் பின் காங்கிரசின் முக்கியத்துவம் குறைவடைய சுதந்திரன் தனது கவனத்தை இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிசக் கட்சி மீது திரும்பியது. அரசாங்கத்தோடு ஒத்துழைத்தவர்களை 'துரோகிகள்' எனக் காட்டுவதே சுதந்திரனின் முக்கிய நோக்கமாகும். சமஸ்டி அமைப்பொன்றின் கீழ் சுயாட்சி தமிழ்ப் பிராந்தியங்களின் பொருளாதார அபிவிருத்தி அடைய முடியாது என சமஸ்டிக் கொள்கையை எதிர்த்தவர்களின் வாதமாக இருந்தது. சுதந்திரன் இக்கொள்கையை நிராகரித்து, தமிழ் சுயாட்சிப் பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமானது என்பதனை வலியுறுத்தப் பல கட்டுரைகளையும், பொருளாதார அபிவிருத்தி திட்டங்களையும் காலத்திற்குக் காலம் வெளியிட்டது.

1952 தேர்தல் காலங்களிலும் அதற்குப் பின்னரும் சமஸ்டியமைப்பு தமிழர்களுக்கு பொருத்தமற்றது. இது தமிழர் நிலையை மிக மோசமாக்கும் என தமிழ் காங்கிரஸ் பிரசாரம் செய்தது. சமஸ்டியமைப்பு இலங்கையில் தமிழருக்கு பிரதிகூலமாக இருக்கும் எனக் கருதினர். சமஸ்டி ஆட்சியில் உருவாக்கப்படும் மாநிலங்களில் கூட பெரும்பான்மை, சிறுபான்மை பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அதிகளவு அபிவிருத்திக்கு போதியளவு மூலவளம் பற்றாக்குறையாக இருப்பதால் சமஸ்டி பொருத்தமற்றது என்றும், தமிழர் ஏழு சிங்கள மாகாணங்களிலும் சம உரிமை உள்ளவர்களாக இருக்காமல் தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் தமது நிலையை இழக்க நேரிடும் எனக் கூறினர். தமிழ் காங்கிரஸ் ஒரு அகில இலங்கை அரசியலில் தான் தமிழர்கள் கூடிய நன்மை பெறுவர் என்ற நம்பிக்கை கொண்டு இருந்தது.

1956 பொது தேர்தலுக்கு சமஸ்டிக் கட்சியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை 1956ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபதாம் திகதி வெளியிட்டனர். இதில் முக்கியமாக 'சமஸ்டியமைப்பு' என்ற எண்ணக்கருவே மையமாக இருந்தது. 'சமஸ்டியரசியலமைப்பொன்றை ஏற்படுத்தி இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சமஸ்டி மாநிலங்களை ஏற்படுத்தி இனங்களின் தனித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை பேண வேண்டும் அதற்கு சமஸ்டியமைப்பே பொருத்தமானது'. சமஸ்டி கட்சியினர் தமது நோக்கத்தை சுவிற்ஸ்லாந்து முறையில் இருப்பது போன்று தீர்க்க முற்பட்டது. இங்கு மாநிலங்களின் சமத்துவதும், மொழிகளின் சமத்துவமும் பேணப்படுவது போன்று இலங்கையிலும் சிங்களம், சிங்கள மாநிலங்களிலும் தமிழ், தமிழ் மாநிலங்களிலும் காணப்பட ஆங்கிலம் மாநிலங்களுக்கிடையிலான இணைப்பு மொழி ஆகவும் வெளியுறவு மொழியாகவும் இருக்கும் என்றனர். இதற்கு இருபதாம் நூற்றாண்டில் பல நாடுகள் மாதிரிகளாகக் காணப்பட்டன, என்று தனது விஞ்ஞாபன வெளியீட்டில் குறிப்பிட்டிருந்தது. இத் தேர்தலில் சமஸ்டிக் கட்சியை தவிர ஏனைய கட்சிகள் இக்கருத்தைக் கடுமையாக எதிர்த்ததோடு சமஸ்டிக்கு எதிரான வாதங்களை முன் வைத்தனர். முக்கியமாக தமிழ் காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவரும் இக் கருத்தை எதிர்த்து பிரசாரம் செய்தனர். சமஸ்டியமைப்பில் ஏற்படும் மாநிலங்களில் கூட பெரும்பான்மையினம், சிறுபான்மையினம் என்ற பிரச்சினைகள் ஏற்படும்,சமஸ்டி முறையில் மொழிப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படமாட்டாது என எதிர்பிரசாரம் செய்தனர். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் காங்கிரஸ் எதிர் பிரசாரம் பயனளிக்கவில்லை என்பதை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தின. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமஸ்டிக் கொள்கைக்கு அமோக ஆதரவு இருப்பதை முடிவுகள் வெளிப்படுத்தின.

இப்பொதுத் தேர்தலுக்குப் பின் சமஸ்டிக் கட்சி பலம் வாய்ந்த கட்சியாகவும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவினை பெற்ற கட்சியாகவும் இருந்த போதும், சமஸ்டியாட்சி ஏற்படவேண்டுமாயின் பாராளுமன்றத்தில் மூன்றில் – இரண்டு பெரும்பான்மைப் பலம் பெற வேண்டும். அவ்வாறாயின் பெரும்பான்மையினத்தில் ஒத்துழைப்பின்றி இதனை நிறைவேற்ற முடியாது எனவே சமஸ்டி ஆட்சி என்பது நடைமுறையில் சாத்தியமானதல்ல என சில தமிழர்களும், தமிழ் தலைவர்களும் நம்பினர். பொன்னம்பலம் பிராந்திய ரீதியாக நாட்டைப் பிரித்து வெவ்வேறு சமூகங்களைப் பிரிக்க தமிழர்கள் கேட்பது மடைமைத்தனம் எனக் கூறினார்.

இந்தக் காலத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் சமஸ்டிக் கட்சியின் பெயரில் இருந்த வேறுபாட்டையும், தெளிவற்ற தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு கட்சி மீது கண்டனத்தை தெரிவித்தார். கட்சியின் பதிவுப் பெயர் 'இலங்கைத் தமிழ் அரசு கட்சி' என்பதாகும். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 'சமஸ்டிக் கட்சி' என்பதாகும். இங்கு 'அரசு' என்பது சமஸ்டி சுயாட்சிப் பகுதியை குறிக்கவில்லை. அது தனியாக இறைமையுள்ள அரசொன்றினைக் குறிக்கின்றது எனக் குற்றம் சாட்டப்பட்டது. இக்கட்சியின் பெயரால் செல்வநாயகம் தமிழர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வதற்காக அமைக்கப்பட்டது. 'தமிழ் அரசு' என்ற சொல் இறைமையுடைய அமைப்பாக காட்டப்பட்டதாகவும் இதன் மூலம் சமஸ்டிக் கட்சி தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்ட முயன்றதாகவும், ஆங்கிலப் பெயரைக் கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண முயன்றதாகவும் குற்றம் சாட்டினர்.

காங்கிரஸ் கட்சியின் குற்றச் சாட்டுக்குப் பதிலளித்த செல்வநாயகம் 'தமிழ் அரசு' என்பது இறைமையுள்ள அல்லது சுயாட்சியுடைய ஒரு மாநில அலகை குறிக்கின்றது. சமஸ்டிக்கட்சி என்பது அதன் பெயர் அல்ல,'ஒரு விளக்கக் குறிப்பின் பெயர்' என்றார். ஆனால் இந்தக் கருத்தில் பொன்னம்பலம் சமஸ்டிக் கட்சியை நோக்கவில்லை.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் காங்கிரசின் செல்வாக்கு வெகுவாகக் குறைவு அடைந்தது. மறுபுறம் சமஸ்டிக்கட்சியானது தமிழ் பேசும் மக்களின் அதிக ஆதரவினைப் பெற்ற கட்சி என்ற நிலையை தொடர்ந்தும் பெற்று வந்ததெனலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூடுதலான பிரதிநிதிகளை சமஸ்டிக் கட்சியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வந்துள்ளது. இவ்வாறான ஒரு நிலையில் இவ்விரு கட்சிகளுக்குமிடையே பாரியளவு முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டே வந்துள்ளன. முக்கியமாக சமஸ்டிக் கட்சியானது பதவியில் இருக்கும் அரசாங்கங்கள் காலத்திற்குக் காலம் உருவாக்கப்படும் சட்டங்களால் சிறுபான்மையோர் பாதிக்கப்படும் போது அதற்கு எதிரான போராட்டங்களை நடத்துவதில் அதிக கவனம் செலுத்தி வந்தமை இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளக் காரணங்களாகும்.

1948ஆம் ஆண்டு காங்கிரசில் இருந்து இரு துருவங்களாகப் பிரிந்து செயற்பட்டுவந்த இரு பிரதான கட்சிகளான தமிழ் காங்கிரஸ் கட்சியும், சமஸ்டிக் கட்சியும் சற்று ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்குப் பின் முதன் முறையாக 1971ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14 ஆம் திகதி திருகோணமலை நகர மண்டபத்தில் கூடி 'தமிழ் கூட்டணியை' (Tamil United Front) உருவாக்கினர். இந்த அமைப்போடு பிரதான தமிழ் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டது எனலாம்.

## NOTES AND REFERENCES

### Chapter: 2


1. Wilson, A.J, 'The Tamil Federal Party in Ceylon Politics.' Journal of Common Wealth Polit-ical Studies Vol:IV, No.2
Leicester University Press, Amsterdam, July, 1996, P:117.
2. Ibid, P:117
3. Desilva, K.M, 'The history and politics of the transfer of power' in K.M.de silva (Ed) Uni-versity of Ceylon history of Ceylon, Vol:3, Colombo, 1973, PP:495 - 96.
4. Russel, J; Communal politics under the donoughmore constitution; 1931 -1947. Tisara prakasakaya Ltd; Colombo, 1982, P:18
5. De Silva, K.M;Managing Ethnic Tensions in Multi – Ethnic Societies: Srl Lanka 1880 – 1985. University press of America, Lanham, 1986, PP:51- 53
6. Manogaran, C;Ethnic Conflict and Reconciliation in Sri Lanka;University of u;awail press, u;onalulu, 1987, PP:35 - 36
7. Kadirkamer.S; The Jaffna youth congress in: u;andy perinpanayagam memorial volume, Jaffna, 1980, PP:18 -20
8. De Silva, K.M. Op.Cit, P:104.
9. De Silva.K.M A u;istory of Sri Lanka, Oxford University press, Delhi, 1981, PP:423 – 428.
10. வில்சன் .ஏ.ஜே குடியியலும் அரசியலும் (முதலாம் பாகம்) ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், 1954, பக்கங்கள்: 216 - 220
11. Wilson.A.J The Break-up of Sri Lanka: The Sinhala – Tamil conflictand Co, London 1988 P:17
12. Manogaran.C;Op;Cit,PP:41 – 42
13. Wilson.A.J, 'Minority Safeguards in the Ceylon constitution', CJu;SS. Vol:1, No:1, Janu-ary 1958, PP:73- 94.
14. Commission on constitutional reform,report of the Commission onon constitutional re-form, London, 1945, P:120
15. Manogaran.C Op:cit, PP:38 – 39.
16. Citizenship act, No:18 of 1946. Ceylon government press.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. Farmer. B.u;, Ceylon: A Divided Nation, Oxford University press, London, 1963, P:59.
18. Wilson.A.J, Politics in Sri Lanka: 1947 – 1973,London 1974, PP:154 – 155.
1. De Silva.K.M A u;istory of Sri Lanka, Oxford University press, Delhi, 1981, PP:423 – 428.
2. வில்சன் .ஏ.ஜே குடியியலும் அரசியலும் (முதலாம் பாகம்) ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், 1954, பக்கங்கள்: 216 - 220
3. Wilson.A.J The Break-up of Sri Lanka: The Sinhala – Tamil conflictand Co, London 1988 P:17
4. Manogaran.C;Op;Cit,PP:41 – 42
5. Wilson.A.J, 'Minority Safeguards in the Ceylon constitution', CJu;SS. Vol:1, No:1, January 1958, PP:73- 94.
6. Commission on constitutional reform,report of the Commission onon constitutional reform, London, 1945, P:120.
7. Manogaran.C Op:cit, PP:38 – 39.
8. Citizenship act, No:18 of 1946. Ceylon government press.
9. Farmer. B.u;, Ceylon: A Divided Nation, Oxford University press, London, 1963, P:59.
10. Wilson.A.J, Politics in Sri Lanka: 1947 – 1973,London 1974, PP:154 – 155.
11. தேவராஜ்.பி "இலங்கையின் இந்தியத்தமிழர், தனித்துவ உறுதிப்பாடும் இனங்களுக்கிடையிலான பரஸ்பர செயற்பாடும்." இலங்கையின் இனத்துவ சமூக மாற்றம். 1979, பக்கங்கள்:237 - 238.
12. நித்தியானந்தன்.வி. இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி. 1948 - 1956, வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள். யாழ்ப்பாணம், 1989, பக்கம்:131.
13. Commission on constitutional reform.Report of the Commission on constitutional reform, 1959, January PP:86-87.1945, P:89
14. Wilson, A.J., Op:cit, P:87.
15. Commission on constitutional reform. Op:cit. P:79.
16. Famer.B.u; Op:cit, PP:60- 61.
17. நித்தியானந்தன்.வி மேற்படி பக்கம்:99
18. Wilson.A.J 'The Tamil Fedral party in Ceylon politics', Journal of common wealth political studies, Vol:IV No.2, July, 1966, P:118.
19. சாள்ஸ் அபயசேகர, "அரசாங்க சேவையின் உயர் பதவிகளில் இனவாரியான பிரதிநிதித்துவம்", மேற்படி, பக்கங்கள்: 260 - 265
20. ஜெபநேசன்.எஸ், இலங்கையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர் சிந்தனை வளர்ச்சி, அமெரிக்க மிசனரிமாரின் உயர் கல்வி முயற்சியின் தாக்கம். (கலாநிதி பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை, வெளியிடப்படாதது) பக்கங்கள்: 90- 100.
21. சாள்ஸ் அபயசேகரா, மேற்படி, பக்கங்கள்: 260 - 265
22. ஜெபநேசன்.எஸ். மேற்படி, பக்கங்கள்: 92 - 100.
23. Wilson.A.J Op:cit, P:119
24. கணேசலிங்கம்.வ, வன்னியசிங்கம் நினைவு மலர் 1967, பக்: 28.
25. Farmer.B.u;, Op:cit, P:IV
26. முத்துத்தம்பி / "தமிழ் அரசுக்கட்சி", உதயதாரகை, 21-11-1969. பக்: 5
27. சுதந்திரன் / 05-06-1947. பக்: 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சுதந்திரன் / 10-08-1947. பக்: 3
29. செல்வநாயகம்.எஸ்.ஜே.வி. 'இலங்கைத் தமிழரின் எதிர்காலம்' வீரகேசரி, 14-02-1948. (சுதந்திர விழா வெளியீடு - 1948) பக்: 7
30. De.Silva.K.M. Op:cit, P:420 - 421
31. Wilson.A.J, Op:cit, P:135
32. Ibid, P:125
33. Ponnambalam.G.G, Presidential Address, The all – Ceylon Tamil congress, Delivered at the first plenary session 27 November 1944.
34. Wilson.A.J, S.J.V.Chelvanayakam and the crisis of Sri Lankan Tamil nationalism, 1947, A Political biography, L.u;urst and Co.Ltd, London, 1994, P:6.
35. Wilson.A.J, The Break-up of Sri Lanka: The Sinhala Tamil Conflict, C.u;urst and Co, Ltd; London, 1988, P:69.
36. அமிர்தலிங்கம்.அ.'இலட்சியப்பாதை', இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெள்ளி விழா மலர், யாழ்ப்பாணம், 1974, பக்:15.
37. Wilson.A.J, Op:Cit, P:12
38. Mohan Muslims of Sri Lanka P:78.
39. Cited in A.J.Wilson, Op:cit, P:13
40. சுதந்திரன் 07-09-1949.
41. Wilson.A.J, Op:cit, P:13.
42. சுதந்திரன் / 22-09-1949.
43. Wilson.A.J, Op:cit, P:23.
44. சுதந்திரன் / 05-06-1947.
45. சுதந்திரன் / 07-09-19949.
46. Wilson.A.J, Op:cit, P:23.
47. Wilson.A.J, Op:cit, 1988, PP:74 – 76.
48. Ibid, PP: 74 -75
49. ஜெயரத்தினம் வில்சன், செல்வநாயகம் நினைவுப் பேருரை - 1981 யாழ்ப்பாணம், 1982, பக்: 9.
50. Wilson.A.J, Op:cit, 1966 PP:117 - 120.
51. Ibid, PP:120 -122.
52. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதன் மூலம் இப்பகுதிகளில் கைத்தொழில் நிலையங்கள் ஏற்படுத்த முடியுமென நம்பினர்.
53. சமஸ்டிக்கட்சி, கோப்பாய், திருகோணமலை ஆகிய இரு தொகுதிகளில் வெற்றி பெற்றது. வடமாகாணத்தில் 22.4 வீத வாக்குகளைப் பெற்றது. 35.2 வீத வாக்குகளை தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெற்று நான்கு தொகுதிகளில் வென்றது.
54. Weerawardana,I.D.S, Ceylon general election 1956. 1960, PP: 179 – 180.
55. 1947ஆம் ஆண்டு செல்வநாயகத்தால் "சுதந்திரன்" என்னும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே நோக்கமாயிற்று. பின் தமது எதிரிகளை விமர்சனம் செய்தும், கண்டித்துக் கருத்துக்களையும் வெளியிடப்பட்டது.
56. Weerawaradana I.D.S. Op:Cit, P:200.
57. தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம், 1956.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. சமஸ்டிக்கட்சி, வடமாகாணத்தில் 93894 வாக்குகளைப் பெற்று, 47.8 பெற்றது. கிழக்கு மாகாணத்தில் 48042 வாக்குகளைப் பெற்று 42.4 மொத்தம் 10 பிரதிநிதிகளைப் பெற்றது. தமிழ் காங்கிரஸ் வடமாகாணத்தில் 8914 வாக்குகளைப் பெற்றது. 4.5 வாக்குகளையே பெற்றது. கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவில்லை.
59. Wilson.A.J, Op:Cit, 1994.
60. 'தமிழ் அரசுக்கட்சி' என்பதனுள் இருபொருள் பொதிந்துள்ளது
61. சமஸ்டியமைப்பு ஒன்றினுள் ஒரு மாநில சபையை பெற்றக்கொள்ளுதல் என்பது தமிழர்களுக்கு தனியான, சுதந்திரமான அரசான "ஈழத்தை" அமைப்பது என்பதாகும்.
62. சமஸ்டிக்கட்சி வெளிப்படையாக கூறியது சமஸ்டியமைப்புக்குட்பட்ட மாநில சுயாட்சி என்பதாகும்.
63. சமஸ்டிக்கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற அமைப்புக்களும் சில தனிப்பட்ட பிரமுகர்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே தமிழர் கூட்டணியாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தந்தை செல்வா, வி.என்.நவரெட்ணம்,
செல்லத்தம்பு, தங்கத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைஞர் கருணாநிதியுடன் ஈழத்தந்தை செல்வா அவர்கள்.



தேர்தலில் வெற்றி பெற்ற திரு.வன்னியசிங்கம், தந்தை செல்
வா, ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோர் மலர் மாலையுடன்
வரவேற்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 03

# தேசியவாதமும் சமஸ்டிக் கட்சியும்

**தேசியவாதமும் சமஸ்டிக் கட்சியும்**

சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட தேசிய அரசியலுக்கான ஏற்பாட்டில் முதல் பிளவாக 1948ஆம் ஆண்டு 18ம் இலக்க பிரசாவுரிமைச் சட்டமும், 1949ஆம் ஆண்டு 3ம் இலக்க இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச்சட்டம் என்பன அமைந்தன. இதன் மூலம் பெரும்பான்மையான இந்தியத் தமிழர்கள் வாக்குரிமை இழந்ததோடு தமது பிரதிநிதித்துவத்தை இழந்தனர். இது மறுபுறம் சிங்களவர்களின் கைகளுக்கு மாறியது. இதன்மூலம் அவர்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரித்தது. இந்திய பிரசாவுரிமைச்சட்டத்தை எதிர்த்த தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் 1949ஆம் ஆண்டு சமஸ்டிக்கட்சியை ஆரம்பித்தனர். இது தமிழ்த் தேசியவாதத்தில் ஏற்படுத்திய பரிணாமத்தோற்றம் எனலாம். சமஸ்டிக்கட்சி இதைத் தொடர்ந்து மூன்று தசாப்தங்களாக தமிழ்த் தேசியவாதத்தை வழி நடத்திச் சென்றது. சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட பல்வேறு வகையான அரசியல் மாற்றங்கள் காரண மாக இலங்கையின் இரு பிரதான இனங்களும் பிளவுபட்டுவிட்டன. இது தொடர்பான முக்கிய விடயம் 'ஆள்புலம்' சார்ந்த ஒன்றேயாகும். இந்த விடயத்தை மையப்படுத்தியே சமஸ்டிக் கட்சி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டன.

1950 தொடங்கி சமஸ்டிக்கட்சியின் முக்கியத்துவம் என்பது இவர்களின் 'சிறுபான்மையோர் உரிமை என்பது தமிழ் தேசியவாதமாகப் பரிணமித்தது'. இவர்களது அரசியலை சமஸ்டியமைப்பினுள் மொழிவாரித் தன்னாட்சி அரசு என்பதை தமிழ்த் தேசியவாதம் பிரதிபலித்தது. சமஸ்டிக்கட்சி வெளியிட்ட தனது அரசியல் விஞ்ஞாபனத்தில் 'சமஸ்டி' எனும் எண்ணக்கரு புதுமையானதொன்றல்ல, ஆனாலும் இவ் அரசியல் திருப்பத்தை சிங்கள அரசியல்வாதிகள் அச்சத்துடனேயே நோக்கினார்கள் என்பதில் சந்தேகமில்லை. சமஸ்டிக்கட்சியின் கோரிக்கையானது எல்லா வகையிலும் வேறுபட்ட இனம் சமஸ்டியமைப்பினுள், தமிழ் மொழிவாரியரசு என்றும், இது வரலாற்று ரீதியில் புவியியல் ரீதியான தொடர்புடைய கலாசார ஒற்றுமையுடைய ஆள்புலம் என்றும், இது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் என்பதன் கருத்து என வாதிட்டனர். சமஸ்டிக் கட்சியின் முதலாவது மாநாடு 14ஆம் திகதி சித்திரை மாதம் 1951ஆம் ஆண்டு திருகோணமலையில் நடைபெற்றது. எஸ்.ஜே. வி.செல்வநாயகம் அவர்கள் தலைமைப் பேருரை ஆற்றினார். இக்கட்சியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள் சுயாட்சி தமிழ் அரசை ஏற்படுத்துவதே ஆகும்' பல்லின மக்கள் வாழும் நாடுகளில் சமஸ்டியாட்சி வெற்றி பெற்றுள்ளன என்பதனை சுட்டிக்காட்டி ஒவ்வொரு இனங்களும் தமது சுயாதீனத்தை பேண சமஸ்டி அரசாங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. நம் நாட்டிலும் தமிழ், முஸ்லீம் மக்கள் சுயாதீனமாய் வாழ வேண்டுமானால் இப்போதிருக்கும் ஒற்றையாட்சி ஒழிய வேண்டும் சமஸ்டி ஏற்பட வேண்டும். சமஸ்டியமைப்பின் கீழ் தமிழ் பேசும் பிரதேசம் மாகாண சுயாட்சி கொண்டதாக அமையும். இம் மாநாடு சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. (பிற்சேர்க்கை 11) 'தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்' என்பதனை நிறைவேற்றியதோடு சிங்களவரின் மொழி, பழக்கவழக்கம் வாழ்விடம் என்பதால் முற்றிலும் வேறுபட்டவர்களாக இருப்பதால் தமிழ் பேசும் இனத்திற்குரிய பிரிக்கமுடியாத 'சுயாதீன உரிமையை' கோருவதோடு மொழிவாரியான அரசுகளின் வேலைகள் நிர்ணயிக்க மொழி என்பன எதிர்காலத்தில் கௌரவமான நிலையை பெறமுடியும். எனவே முதன் முறையாக சமஸ்டிக்கட்சியே' தமிழ் பேசும் இனத்தின் தேசிய அடையாளங்களை வெளிக்கொணர்ந்ததுடன்' பெரும்பான்மையினத்தில் இருந்து முற்றாக வேறுபட்ட கலாசார பிரிவினர் என்ற நிலையை வெளிப்படுத்தி தமிழ்த் தேசியவாதம் வளர வழிவகுத்தது.

இலங்கைத் தமிழர் தமது உரிமைகளை சோல்பரி அரசியல் திட்டத்தில் உத்தரவாதம் வழங்குமென நம்பினர். பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கா சமயசார்பற்ற கோட்பாட்டு நிலையை எடுத்துக் கொண்டாலும், ஐக்கிய இலங்கையில் பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் சட்டபூர்வ நலன்களை இணக்கம் செய்வதும், பின்பற்றுவதும் என்று கூறினாலும், இலங்கைத் தமிழர் தங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஏற்படக்கூடாதென எண்ணினர். ஆனால் டி.எஸ். சேனநாயக்கா முன்வைத்த, 'தேசியம்' என்ற கோட்பாடு அதிக ஆதரவினை குறிப்பாக சிங்கள அறிஞர்கள் மத்தியில் பெறவில்லை. அவர்கள் ஆங்கிலம் நிர்வாக உத்தியோகபூர்வ மொழியாக வைத்திருந்தமையால் பிரதமரின் தேசியக் கோட்பாட்டை விரும்பவில்லை. ஆங்கில அறிவின் திறனால் பொது சேவைகளில் தங்களது இன விகிதாசாரத்திலும் பார்க்கக் கூடிய இடங்களைப் பெற்றிருந்தமை காரணத்தால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உட்பட சில அரசியல்வாதிகள் அரசியல் அதிகாரங்களை பெற்றுக்கொள்வதிலும், பொருளாதார மூலவளங்களை பங்கிடுவதிலும் சிங்களவர்களுக்கு அதி சிறப்பான உரிமைகள் இருக்க வேண்டும் எனக் கூறினார்.

தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 'ஐக்கிய இலங்கை', 'இலங்கையர் தேசியவாதம்' என்ற கருத்துக்களை முன்வைத்தனர். சிங்கள அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் தமது மொழி, கலாசாரம் விரும்பியவர்களை இலங்கைக்கே உரியதென கருதிய போது, தமிழ் மொழி, தமிழ்க் கலாசாரம் தமிழ்த்தாயகம் என்பதைப் பாதுகாக்க முற்பட்ட சமஸ்டிக்கட்சி ஆதரவிழந்தது. 1956 வரைக்கும் இக் கட்சியின் சமஸ்டிக் கொள்கையானது தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கினைப் பெற்றிருக்கவில்லை. உண்மையில் இதனுடைய வெளிப்பாடு தமிழர்கள் இலங்கை முழுவதும் பல்வேறு காரணங்களினாலும் சிதறி வாழ்ந்தனர். முக்கியமாக அரச உத்தியோகத்தர்கள், வர்த்தக நடவடிக்கைகளால் பல்வேறு இடங்களில் வாழ்ந்தோர் மத்தியில் சமஸ்டிக் கொள்கையானது அதிக ஆதரவினைப் பெறவில்லை. ஏனெனில் வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியினுள் தமது நடவடிக்கைகள் முடங்கிவிடுமோ என அஞ்சினர். அதே போன்று பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் கூட 1956 வரைக்கும் இக் கட்சியின் கொள்கைகளால் கவரப்பட்டிருந்தனர் என முழுமையாக கூறி விட முடியாது,

ஓர் இனத்திலிருந்து பிரிக்க முடியாத உரிமையான மொழியில் இருந்தே தமிழ், சிங்கள தேச-ியவாதங்கள் ஊற்றெடுத்தன எனலாம். டொனமூர் சிபார்சுகளுக்கு ஏற்ப சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து சுயமொழி இயக்கங்கள் முளைவிட ஆரம்பித்தன. இதற்கான பிரதான தூண்டுகோலாக விளங்கியது ஆங்கிலமொழி பெற்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவமும், அதனூடாக உயர்குழாத்தினர் ஈட்டிக் கொண்டிருந்த நன்மைகளுமே யாகும். சுயதொழில் பயின்றவர்களுக்கும் ஆங்கிலத்தில் கற்றோருக்கும் கிடைத்த வாய்ப்புக் கள் பற்றி றோபேட் கேர்னி அவர்கள் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்.

'ஆங்கிலத்தில் கல்வி பயின்றோர் செல்வம், மதிப்பு அதிகாரம் என்பவை நிறைந்த பதவி களை வகித்தனர். அதே நேரத்தில் சுயமொழிக் கல்வியானது விவசாயிகள், தொழிலாளர்கள், கிராமிய வர்த்தகர்கள், சேவை ஊழியர் என்போரைக் கொண்ட இலங்கையின் மக்கள் கூட் டத்திற்கு வழங்கப்பட்டது'.

சுயமொழிகளை மேலும் வலியுறுத்துவதாக அமைந்தது. லங்கா சம சமாஜக்கட்சி 1936ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் மாநகர, பொலிஸ் கோடுகளில் வழக்கு விசாரணைகள் சுயமொழிகளிலேயே நடாத்தப்பட வேண்டும் எனவும், இதே போன்று காவல் நிலையங்களில் முறைப்பாடுகள் அவற்றைச் செய்வோர் எம்மொழிகளில் கூறுகின்றனரோ அதே சுயமொழியில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை சட்டசபையில் சமர்ப்பித்திருந்தனர். எனவே இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தமிழும், சிங்களமும் சம அந்தஸ்துள்ள மொழிகள் என்ற போக்கே காணப்பட்டது. சுயமொழிகளின் முதலாவது குறுக்கீடாக 1943ஆம் ஆண்டு ஆனி மாதம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களப் பிரேரணை அமைகின்றது. 1944ஆம் ஆண்டு வைகாசி மாதம் இப் பிரேரணை சட்டசபையின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் ஒரு மொழி அரசகரும மொழியென்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன்மூலம் 1944ஆம் ஆண்டு சட்டசபையிலே சிங்களமும், தமிழும் அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே மொழி இக்காலப்பகுதியில் இரு சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் பாராதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் கருவியாகக் காணப்படவில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

முதலாளித்துவ நலன்களையும், மேல்மட்டத்தவர்களையும் ஆதரித்த ஐக்கிய தேசியக்கட்சி, பின்தங்கிய சிங்கள மக்கள் மிகப் பெரும்பான்மையோரை உள்ளடக்கிய சமுதாயத்துடன் எவ்விதமான தொடர்பையும் மேற்கொண்டிருக்கவில்லை. கிராமப்புற, கீழ்மட்ட சமுதாய பௌத்த சிங்கள மக்களுடனும், சிங்கள பௌத்த மறுமலர்ச்சியுடன் தொடர்புகொண்ட எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இவர்களின் ஆதரவுடன் 1951ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து 'சிறிலங்கா சுதந்திரக் கட்சியை' ஆரம்பித்தார். இக்கட்சியின் முதலாவது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'இந்நாட்டு மக்கள் தமது சொந்த மண்ணிலே அந்நியராகக் கருதப்படும் நிலைமை மாற வேண்டுமாயின் சிங்களமும் தமிழும் உடனடியாக அரசகரும மொழியாக்கப்படுவது மிகவும் அவசியமாகும்'. எனவே தமிழ் மொழியை புறக்கணித்து சிங்கள மேம்பாட்டை ஏற்படுத்த பண்டாரநாயக்கா எந்தவகைகளிலும் ஆரம்பகாலங்களில் முயற்சிக்கவில்லை எனலாம். 1944ஆம் ஆண்டும் சட்டசபை விவாதத்தின் போது 'சிங்களமும், தமிழும் அரசமொழியாக இருப்பதால் தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனை களும் கிடையாது' எனக் கூறினார். எனவே தனியொரு மொழியை அரச மொழியாக்கும் எண்ணம் பண்டாரநாயக்காவிடம் ஆரம்பகாலத்தில் காணப்படவில்லை.

சுதந்திரத்தின் பின் இலங்கை பல்லின சமூக அமைப்பு நாடு என்பது புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மையின மக்களின் நலன்களிலே அக்கறை கொண்டனர். நாட்டின் ஏனைய சிறுபான்மை மக்களுடைய மொழி, மத, இன, கலாசார பண்பாட்டம்சங்கள், கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டன. தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூகநிலை என்பன பல்வேறு அரசாங்க நடவடிக்கைகளின் மூலம் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு, இரு மொழிக்கொள்கை கைவிடப்பட்டு, சிங்களம் அரச மொழியாக வேண்டுமென்ற கொள்கை வலுப்பெற்றது. அத் தோடு பிரித்தானிய ஆட்சியின் போது சிங்கள மக்களுக்கும், பௌத்த மதத்திற்கும் பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதி இழைக்கப்பட்டு விட்டன என்றும், அவற்றிற்குரிய வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது பதவிக்கு வருகின்ற அரசாங்கங்களின் முதற்பணி என்ற கருத்து அரசியல்வாதிகளிடமும், மதகுருமார்களிடமும் காணப்பட்டமையால், இப்போது மதம் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இலங்கையின் வரலாற்றில் சிங்களம், பௌத்தம் என்ற இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகவே எப்போதும் நோக்கப்பட்டு வந்துள்ளன. சிங்கள மொழியின் தனித்துவம் பௌத்தத்தின் ஊடாகவே ஏற்படுகின்றதென்பதும், பௌத்தம் தழைப்பது சிங்கள ஆட்சியாளரின் கீழ்தான் என்பதும் தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளன. மொழியிழந்தால் அதனுடன் இணைந்து மதம், கலாசாரம் என்பனவும் அழிந்துவிடும் என்பதனால் அவற்றைப் பாதுகாத்தற்குரிய பிரதான மார்க்கம் மொழியை உரிய வழிகளில் பேணுவதாகும். இதனாலே சுயமொழி இயக்கம் சிங்கள மொழியின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கியது. இதன் விளைவு 'மொழிவழித் தேசியவாதம்' இலங்கையரசியலில் இடம் பிடித்துக் கொண்டது. பௌத்தமும் நவீன அரசியலில் பிரவேசிப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

1950களில் தொழிலும், கல்வியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து தமிழருக்கு எதிரான பிரச்சினையாக எழுந்தது. 1940களில் சுயமொழிக்கல்வி விரிவடைந்தமையால் சிங்களத்திலும், தமிழிலும் கல்வி கற்கும் மாணவர் தொகை அதிகரித்தது. 1950 வரையில் வேலையற்ற இளைஞர்களின் பிரச்சினை அரசியல் பிரச்சினையாகியது. சிங்களம் மட்டும் அரச மொழியானால் அதிகளவு வேலைவாய்ப்புக்களை பெற்றுத்தரும் என நம்பினர். இக்காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் வேலையின்மைக்கும் எதிரான வெறுப்புணர்வு அரச பதவிகளில் இருந்த சிறுபான்மையோருக்கு எதிராக முக்கியமாக இலங்கைத் தமிழருக்கு எதிரான கோசங்களாக அமைந்தன. சனத்தொகை அடிப்படை விகிதாசாரத்திலும் கூடுதலாக எழுதுவினைஞர்கள், உயர்மட்டத் தொழில்கள், நிர்வாக சேவைகளிலும் இலங்கைத் தமிழர் அதிகளவு காணப்பட்டனர். இதற்கு பிரதான காரணங்களாக மிசனரிமாரின் கல்விச் சேவை, பூகோள ரீதியான தன்மை ஆகியன காரணமாக ஆங்கிலக் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் இவர்களுக்கு கிடைத்தமையோடு வட இலங்கையின் முக்கிய பொருளாதார வளமாகவும் கல்வி கருதப்பட்டது. 1930களின் பின்பு இந்நிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. முக்கியமாக சிங்களவர் எழுதுநர் சேவைகளிலும், நிர்வாக சேவையிலும் சேர்ந்தோர் விகிதம் கூடியது. 1946ஆம் ஆண்டு இலங்கையின் நிர்வாக சேவையில் சேர்ந்தவர்களில் ஏறக்குறைய அரைப்பங்கு தமிழரும், அரைப்பங்கு சிங்களவருமாகும். நீதி சேவைகளின் மூன்றில் இரு பங்கினர் தமிழரும், மூன்றில் ஒரு பகுதியினர் சிங்களவரும் ஆகும். இலங்கையின் உயர்வர்க்கத்தினரிடம் ஏற்பட்ட தொழில் போட்டியானது இனவாதமாக, மொழிப்பிரச்சனையாகவும் மாற்றப்பட்டதோடு அது அரசியல் மயப்பட்டதாகவும் மாறுகின்றது. பௌத்த சமூக அரசியல் எழுச்சி இயக்கத்துடன் இவ்விடயம் கூர்மையடைந்தது. இது பாராளுமன்ற விவாதங்களின் போது பெரிதுபடுத்தப்பட்டது. சுய பாஷை மோகம் என்பது ஆங்கிலம் கற்ற சிங்களவர்கள் மேல் ஏற்பட்டது. ஆங்கிலம் கற்ற தமிழ் அரச ஊழியர்கள் மேல் ஏற்பட்டது. சிங்களம் மட்டும் என்பதால் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் சிங்களவர்களுக்கு ஏற்படும். குடியேற்றவாத ஆட்சிக்காலத்தில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு இது பரிகாரமாக அமையுமென்றும் இதன் மூலம் சிங்களவர்கள் தமக்குரிய உண்மையான நிலையை பெறமுடியுமென நம்பப்பட்டது.

1950களில் முன்னனிப் பிரச்சினையாகிய தமிழர், சிங்களவருடைய மொழி உரிமைப் பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டே எதிர்ப்புக்கள் வளர்ந்தன. 1952ஆம் ஆண்டுத் தேர்தலில் எத்தகைய பெரிய ஆர்ப்பாட்டத்திற்கும் அடிப்படையாக மொழி அமையவில்லை. ஜோன் கொத்தலாவலை பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் இப்பிரச்சினை முக்கியத்துவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. இப்பிரச்சினை வேகமடைய சிங்களம், தமிழ் இரண்டும் அரசகரும மொழிகளாக வேண்டும் என்ற முற்போக்குக் கோரிக்கையில் இருந்து விலகி சிங்களம் மட்டும் என்ற மேலா திக்க நிலைப்பாடு ஏற்பட்டது. சிங்கள ஆதரவினைப் பெறுவதற்கான அரசியல் போட்டியில் இக் கோரிக்கை முக்கிய இடத்தைப் பெற்றது. 1953ஆம் ஆண்டிற்கும் 1956ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் 'சிங்களம் மட்டும்' கோரிக்கை நாடளாவிய பிரச்சினையாகியது. விவாதங்களில் இம்முறை தமிழை விலக்கி சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்குவதற்கு ஆதரவு வேகம் அடைந்தது.

1953ஆம் ஆண்டு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் இறுதியறிக்கை வெளி யிடப்பட்டபோது அதன் தலைவராக கடமையாற்றிய இ.ஏ.எல்.விஜயவர்த்தனா அறிக்கையுடன் இணைக்கப்பட்ட தனியான ஒரு பகுதியில் ஆங்கிலத்தின் இடத்தைச் சுயமொழிகள் எடுத்துக்கொள்ளும் விடயத்தில் இரு மொழிகளுக்குப் பதிலாக 1943 ஆனி 22ஆம் திகதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களால் அரசாங்க சபையில் சமர்ப்பித்த தீர்மானத்திற்கேற்ப ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது சுலபமாக இருக்கும். இத்துடன் தேசிய மொழிகளில் உயர் கல்வி கற்பித்தல் பற்றிய ஆணைக்குழுவின் தலைவராக அவரே கடமையாற்றிய போது 1954ஆம் ஆண்டு வெளியான குழுவின் இடைக்கால அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட இன்னொரு பத்திரத்தில் தமிழ் மாணவர்களுடன் ஒப்பிடும் போது சிங்கள மாணவர்களின் கல்விக்கான சாதனங்களைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி ஒரே அரசகருமத் தேசிய மொழி மாத்திரம் நிலவியிருக்குமாயின் இந்த சிக்கல் எழமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின் முடிவுகள் வெளியாகியதும் தென் இலங்கை யிலே அதிக பரபரப்பை இது ஏற்படுத்தியது. இவ்வாறான ஒரு நிலையிலேயே பிரதமர் ஜோன் கொத்தலாவலை 1954 புரட்டாதி அரச முறைப்பயணமாக யாழ்ப்பாணம் சென்றார். இங்கு நடைபெற்ற பொதுச்கூட்டத்தில் உரையாற்றிய போது சிங்களம் தமிழ் ஆகிய இரு தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கும் வகையில் அரசியல் திட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்போவதாக அறிவித்தார். இது யாரும் எதிர்பாராத வகையில் தென் இலங்கையில் பலத்த கண்டனங்களுக்குள்ளாகியதோடு, சிங்களம் மட்டும் என்பதற்கு சாதகமான உணர் வலைகளே வெளிப்படுத்தப்பட்டது.

தென் இலங்கையில் மொழிப் பிரச்சினையானது முதன்மை பெறத்தொடங்கிய போது சிங்கள மொழி மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட 'பாஷா பெரமுன' சிங்களம் மாத்திரம் அரசகரும மொழியாக்கப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தியது. சம அந்தஸ்துள்ள மொழிகள் எனக் கூறிவந்த பண்டாரநாயக்கா தென் இலங்கையில் சிங்கள பௌத்த உணர்வலைகள் கருமே-கமாக திரண்டு வந்த போது சிங்கள வாக்காளர்களின் நாடியை சரியாக அறிந்தமையால் இந்த அரசியல் நிலையை தமக்கு சாதகமான தந்திரோபாயங்களோடு கையாண்டு பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதரவினைப் பெற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில் அரசியல் கட்சிகள் எல்லாம் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களமும் தமிழும் என்ற நிலையில் இருந்து விலகி அரசியல் இலாபங்களைத் தேடத் தொடங்கினர். 1953ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது இலக்கை மறுபரிசீலனைக்கு உட்படுத்தியது. 1955ஆம் ஆண்டு கட்சி தனது தேசிய மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' என்ற கொள்கையை அங்கீகரித்தது. சிங்களவர்களுடைய மொழிபற்றிய உணர்வுகளுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அரச மொழி 'அந்தஸ்து எனும் விடயம், சிங்கள மக்களின் எண்ணிக்கையிலும் அதன் எதிர்கால நிலையையும் கருத்தில் கொண்டு ஒரு மொழி மட்டும் அரச மொழியாக இருக்க வேண்டும் என விளக்கம் கொடுக்கப்பட்டது. முக்கியமாக பண்டாரநாயக்கா 'சிங்களவர் வாழும் இலங்கைத் தீவின் எழுபது வீத மக்கள் சிங்களவர், எண்பது வீதமான பிரசைகள் சிங்களவர், இலங்கைத் தமிழரின் அளவு, சம அந்தஸ்து மொழிக்குக் கொடுக்க கூடியளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை இல்லை. ஆகவே தமிழர் சிங்களவரின் பெரும்பான்மை நிலையை ஏற்பது தான் நியாயமானது' என்றார்.

சிங்களம் மட்டும் என்ற அரசியல் சூழ்நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சி 1957இல் தேர்தலை எதிர்நோக்கிய போதும் தனது சம அந்தஸ்து என்ற கொள்கையை தொடர்ந்தும் கடைப் பிடித்தது. இக்கட்சி பெரும்பான்மைச் சிங்களவர்களையும் சிறுபான்மைத் தமிழர்களையும் கொண்டிருந்தது. இக்கட்சியின் அமைச்சரவையில் 1947இல் இருந்து இரண்டு தமிழ் அமைச்சர்கள் அமைச்சரவையில் தொடர்ந்தும் இடம்பெற்றனர். இது ஒரு பல்லின மக்களாட்சியை வெளிப்படுத்தியது. இக்கட்சியின் சிங்களப் பிரதிநிதிகள் 'சிங்களம் மட்டும்' எனவும், சிறுபான்மைப் பிரதிநிதிகள் 'சம அந்தஸ்துக் கோரிக்கையையும்' முன் வைத்தனர். ஆனால் கட்சியின் கொள்கை உத்தியோக ரீதியாக சம அந்தஸ்து என்பதாகவே நீடித்து இருந்தது. 1955இல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் எழுந்த தனிச்சிங்களம் என்பதற்கு தலை சாய்ந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட கொள்கை மாற்றத்திற்கு ஆதரவு மக்களிடம் அதிகம் பெறுவதற்காக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு தை மாதம் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு விலகினர். அதை தொடர்ந்து அவ் வாண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற கட்சியின் மகாநாட்டில் சிங்களம் மட்டும் இலங்கையின் அரசகரும மொழி என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1956 மாசியில் பிரதமர் கொத்தலாவலை வெளியிட்ட கருத்தில் இரு மொழிக்கு சம அந்தஸ்து கொடுப்பதென்பது சிங்கள இனத்தினதும், மொழியினதும் அழிவாகவே முடியும். ஆயினும் இவற்றின் மத்தியில் வெகுசனமட்டத்தில் சிங்களம் மட்டும் உணர்வலைகள் ஏற்பட்ட காலத்தில் லங்கா சமாஜக் கட்சியும், கம்யூனிசக் கட்சியும் சம அந்தஸ்துக் கொள்கையில் உறுதியாக இருப்பதாக தீர்மானித்த போது பலர் அக் கட்சியை விட்டு வெளியேறியது மட்டுமன்றி, அங்கத்துவ மட்டத்தில் பல கிளர்ச்சிகளும் நடத்தினர். வெகுசனமட்டங்களில் சிங்களம் மட்டும் மிகத்தீவிரமாக வெளிப்படுத்துவதற்குப் பிரதமர் ஜோன் கொத்தலாவலை மொழிக் கொள்கையைத் தவறான முறையில் கையாண்டமையேயாகும்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் எதிர் விளைவாக தமிழ்த் தேசியவாதம் தோன்றி வளர்ச்சியடைந்தது எனலாம். சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் தேசிய உணர்வு ஏற்பட்டு இன, மத, மொழி, கலாசார அடிப்படையிலான தேசியவாதம் தோன்றியது. தமிழர்கள் மத்தியில் இன கலாசார உணர்வுகள் காணப்பட்ட போதும் அது தமிழ்த் தேசியவாதமாக தோன்றவில்லை. 1950களின் நடுப்பகுதியளவிலேயே மொழிப் பிரச்சினை உச்சநிலை அடைந்த போதே மொழிவாரித் தேசியவாதம் தமிழர்கள் மத்தியில் தோற்றம் பெற்றது. சிங்கள அரசியல் கட்சிகளும், பௌத்த அமைப்புக்களும் சிங்களம் மட்டும் தனியொரு மொழி என்பதனை வலியுறுத்தியதோடு அதற்கு அரசியல் பரிமாணத்தையும் கொடுத்தன. இந்த வகையில் தமிழர்கள் மத்தியில் இன, மொழி, கலாசார, பிரதேச, தனித்துவமான உணர்வுகளை ஊட்டுவதில் சமஸ்டிக்கட்சியே முதன்மை பெற்றது. தென் இலங்கையில் சிங்களம் மட்டும் என்ற உணர்வுகள் உயர் நிலைகள் பெற்ற போதே சமஸ்டிக்கட்சியின் மூன்றாவது தேசிய மாநாடு 1955ஆம் ஆண்டு சித்திரை மாதம் திருகோணமலையில் நடைபெற்றது. இதற்கு தலைமைப் பேருரையாற்றிய கு.வன்னியசிங்கம் அவர்கள் மொழிப் பிரச்சினை பற்றிக் கூறும் போது 'நாட்டு மக்கள் பேசும் மொழிகளே ஆட்சி மொழியாகும் உரிமையுடையன' இதுவே நம் கட்சியின் திடமான கருத்து என்றார்.

ஒற்றையாட்சியின் கீழ் ஒரு அரசகரும மொழி இருக்குமாயின் அந்நாடுகளில், அரசகருமமல்லாத மொழிகள் காலகதியில் அழிந்துவிடும். எனவே 'ஒற்றை ஆட்சியமைப்பின் கீழ் எமது சில அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கமாட்டாது'. ஆகவே தமிழ் பிரதேசங்களில் மாகாண சுயாட்சி ஏற்பட வேண்டும் அல்லது நாம் முற்றாகப்பிரிந்து செல்ல வேண்டும். எங்கள் குறைந்த பட்சக்கோரிக்கை 'சமஸ்டியரசில் மாகாண சுயாட்சி' என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் ஆசியாவிலும், மற்றைய இடங்களிலும் சமகாலத்தில் இன உணர்வுகள் அரசியலில் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இதனால் இன முரண்பாடு பொதுவான ஒன்றாக காணப்படுகின்றது. இந்த உணர்வு, தேசிய உணர்வு, இன ஒற்றுமை ஆகியன மிகவும் நெருங்கிய தொடர்புடையவை இவை ஒன்றில் இருந்து ஒன்று நேரடியாக தோற்றம் பெற வேண்டும் என்பதில்லை. இன உணர்வானது அடிப்படையில் சமுதாய மட்டத்தில், குழு மட்டத்தில் தங்களை வெளிக்காட்ட அல்லது உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. ஒரு இனக்குழுவின் நோக்கில் வரலாற்று ரீதியாக மக்களின் இலட்சியங்கள், குணங்குறிகள், வித்தியாசத்தன்மை அரசியல் ஒன்றில் இருந்து ஒன்று மாறுபட்ட இதே போன்ற குழுக்களிடம் காணப்படுகின்றது. இதில் இருந்து வெளிப்படும் முடிவு என்னவெனில் இன, மொழி, சமய, அரசியல் வழித்தோன்றல்கள் ஆகியவற்றால் கலாசாரத் தொடர்பு காணப்படுவதாகும். இதனால் மற்றைய குழுக்களின் வித்தியாசத்தன்மையை உணரக்கூடியதாக உள்ளது. இன உணர்வு வெளிப்பாட்டை கருத்தில் எடுப்போமானால் இவை பொருளாதார, கலாசார, அரசியல் மாற்றங்களின் போது கூடுதலாக வெளிப்படுத்தப்படுகின்றது.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் உருவாக்கப்பட்டபின் சிங்கள தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம் என்ற தெளிவான இரு வடிவங்கள் இலங்கை அரசியலில் நிரந்தர அம்சமானதோடு இன முரண்பாடுகளையும் போட்டிகளையும் வளர்த்தெடுத்துச் சென்றன. இவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் தலைமையில் உருவாக்கப்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது. அதே போன்று எஸ்.ஜே. வி.செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட சமஸ்டிக்கட்சி சமாதானமான பாராளுமன்ற முறை மூலம் இலங்கை சமஸ்டியமைப்புக்குள் தமிழ் மொழியரசை ஏற்படுத்துவதற்கான ஆணையை தமிழ் மக்கள் வழங்கினர். சிங்களத் தேர்தல் தொகுதிகளில் மக்கள் ஐக்கிய முன்னணியில் வெற்றி பெற்றோரும், தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் சமஸ்டிக் கட்சியில் வெற்றி பெற்றோருக்கும் சிங்கள, தமிழர்களிடையே சிங்களத் தேசியம், தமிழ்த்தேசியம் என்பன பல்லினத் தேசியம் என்ற கோட்பாட்டின் இடத்தினை நிரப்புவதாக இருந்தன. அக்காலம் தொட்டு அச்சமூகங்களில் இருந்த அரசியல்வாதிகளும் இலங்கையரசின் உறுதி, தேசிய ஒற்றுமை ஆகியவற்றிற்கு ஆபத்தினை விளைவிக்கும் இன விடயங்களை தமது கட்சிகளின் நன்மை பெறும் நோக்குடன் பயன்படுத்தினர்.

1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்களப் பகுதிகளில் போட்டியிட்டன. சமஸ்டிக்கட்சியும், தமிழ் காங்கிரசும் தமிழ்ப் பகுதிகளில் போட்டியிட்டன. லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிசக் கட்சியும் நாடு தழுவிய ரீதியில் போட்டியிட்டன. முதன் முறையாக ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள மக்கள் வாழும் மாகாணங்களில் மாத்திரம் தனிச்சிங்களம் என்ற சுலோகத்தை மையமாகக் கொண்டு போட்டியிடத் தீர்மானித்த அதன் தந்திரம் எந்த வகையிலும் வெற்றிகரமானதொன்றாக இருக்கவில்லை. இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொழிக்கொள்கை ஒரு முக்கிய இடத்தை வகித்த போதும் அது மாத்திரம்தான் தேர்தலை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது என்று கூறிவிட முடியாது. அதனோடு பௌத்தமதம், பொருளாதார அம்சங்கள், வெளியுறவுக்கொள்கை, அரசியல் திட்டசீர்திருத்தம் என்பனவும் முக்கியம் பெற்றன.

'சிங்களம் மட்டும்' பௌத்த தீவிரவாதத்துடன் இணைந்து செயற்பட முற்பட்டது. இதில் பல்வேறு அதிருப்தியாளர்களும் ஒன்றாய் இணைந்து கொண்டனர். பாரம்பரிய சிங்கள நாகரீகத்தின் பிரிக்கமுடியாத கரு மூலங்களாக மதம், மொழி என்பன காணப்பட்டமையால் அரசியலில் பௌத்தமத செல்வாக்கு என்பது தவிர்க்க முடியாததாயிற்று. 1956 பொதுத் தேர்தலில் சாதாரண பௌத்த மக்கள் மட்டுமன்றி பௌத்த சங்கத்தின் பெரும்பான்மை அங்கத்தினர் (குருமார்) கூட சமய உணர்வுகளை அரசியல் நன்மை கருதிப்பயன்படுத்தும் ஒரு பாரதூரமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையாகவே அதனை மேற்கொள்ள முற்பட்டனர். அத்தோடு இந்தப் பொதுத் தேர்தலில் பல ஆயிரக்கணக்கான பிக்குகள் பிரசாரம் செய்தனர். பௌத்த மக்கள் பிக்குகளின் வாக்குகள் புனித வாக்குகளாக ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு சிங்கள மொழியும், பௌத்த மதமும் இத் தேர்தலின் பிரதான பிரசார மூலங்களாக அமைந்ததுடன் சிங்கள பௌத்தர்களின் எழுச்சி, இத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றியை நிர்ணயித்தது.

சமஸ்டிக் கட்சியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை 20-03-1956 இல் வெளியிட்டது. இதில் முக்கியமாக 'சமஸ்டியமைப்பே' வலியுறுத்தப்பட்டிருந்தது. சமஸ்டி அரசியலமைப்பொன்றை ஏற்படுத்தி இனங்களின் தனித்துவ நிலையைப் பேணுதல் என்பதோடு குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவது, மொழிக்கான சம அந்தஸ்து, பாரபட்சமற்ற வேலை வாய்ப்புக்கள் என்பனவற்றை பெற்றுக்கொள்வதே கட்சியின் பிரதான குறிக்கோளாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1956ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமஸ்டிக்கட்சி அதிக பெரும்பான்மை ஆதரவோடு பத்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தது. இந்த வெற்றியானது தமிழ்த் தேசியவாதத்தின் பரிணாம வளர்ச்சியில் ஓர் குறிப்பிடத்தக்க நிலையை வெளிப்படுத்தியது எனலாம். இது இலங்கையின் அரசியல் போக்கில் புதியதோர் திருப்புமுனையாக அமைந்தது.

பண்டாரநாயக்கா சிங்கள, பௌத்த உணர்வலைகளைப் பயன்படுத்தி அரசியல் அதி காரத்தை கைப்பற்றிய போது முதலாவதாக உத்தியோக மொழிச்சட்டம் (33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டம்) அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் அறிமுகமானது புதிய மொழி தேசியவாதத்தினை, பன்மைச் சமூகத்தில் ஏற்படுத்தியது. புதிய அரசாங்கத்தின் முதல் மசோதா சிங்களத்தையே தனியொரு அரசகரும மொழியாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. பண்டாரநாயக்கா இம்மசோதாவைச் சமர்ப்பித்து பேசும் போது ஆங்கிலத்தை தொடர்ந்தும் பயன்படுத்தியதால் ஏற்பட்ட தீமைகளை சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் ஜோன் கொத்தலாவலையின் 'சம அந்தஸ்துள்ள மொழிகள்' என்பதன் எதிர் விளைவாக சிங்களம் மட்டும் என்ற நிலை ஏற்பட்டது. இது தென் இலங்கையில் அரசியல் கொந்தளிப்புகளாக மாறியது.

'தென் இலங்கை மக்கள் அரசகரும
மொழிகளின் சம அந்தஸ்து, தமது முகத்தில்
அறைவதாய் உணர்ந்தனர். சிங்கள மொழியின்
தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பாதகம்
ஏற்படும் எனக்கண்டனர். அத்தோடு
சிங்கள மொழியின் அழிவுக்கும் காரணமாகும்
எனவும் எண்ணினர்'

எனவே பெரும்பான்மையான சிங்களவர்கள், சிங்களம் மட்டும் என கோரியமையே சிங்களம் மட்டும் என்ற ஏற்பாடாகும் என்பது பண்டாரநாயக்காவின் வாதமாகும்.

இவ்வாண்டு 'சிங்களம் மட்டும் சட்டம்' தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்கள் ஆகியோரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. இனவாதப் போக்கால் எதிர்காலத்தில் நாடு பல அனர்த்தங்களை சந்திக்கப்போகின்றது என எதிர்வு கூறினர். லெஸ்லி குணவர்த்தனா பாராளுமன்ற விவாதங்களின் போது 'சிறுபான்மையினரின் கருத்துக்களுக்குக் காட்டப்பட்ட கவனக் குறைவே ஒரு மொழி' என்ற மசோதாவாகும், சிறுபான்மையோரை ஒதுக்கி சிங்கள மொழியை ஏற்கும்படி நிர்ப்பந்திப்பது எதிர் காலத்தில் இனங்களிடையே முரண்பாட்டையும், இனக்கலவரத்தையுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் என பாராளுமன்றத்தில் எதிர்வு கூறினார். மேலும் அவர் பின்வருமாறு கூறினார்.

'இலங்கைக்கு மிகப்பெரிய ஆபத்து வர உள்ளது
அம்மக்கள் தமக்கு அநியாயம் நடப்பதாக
உணர்ந்தால் அவர்கள் நாட்டிலிருந்து கூட
பிரிந்து போக தீர்மானிக்கலாம்'

மற்றுமோர் இடதுசாரியான கொல்வின் ஆர்.டி.சில்வா பாராளுமன்ற விவாதத்தின் போது 'மொழிகளின் சம உரிமையை' ஏற்றுக்கொள்ளுதல் எமது நாட்டின் ஒற்றுமைக்கும், தேசிய நலன்களுக்கும் உசிதமானது. இதில் இருந்து தவறுவோமாயின் வரலாற்றில் பெரும் துரோகம் செய்தவர்களாகிவிடுவோம். 'இரத்தம் வடியும் துண்டாக்கப்பட்ட இரு சிறு அரசுகள் ஒரு அரசில் இருந்து தோன்றக்கூடும்' என்றார்.

தமிழ் காங்கிரசின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் இவ்விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய போது
'தப்பாக, தவறாக கொண்டு வந்த இம்மசோதா
நிறைவேற்றினால், அது முடிவாக அமையும்
நாட்டை இரு கூறாக்கும்'

பிரிட்டிஸ் ஆதிக்கம் இந்நாட்டில் இருந்து நீக்கப்பட்ட பின் இந்நாடு பெறப்போகும் சுதந்திரம் எல்லோருக்கும் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியை இதுவரை நடாத்தி வந்தோம். எங்களில் சிலர் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தோம். இப்போது இப்படியான ஒரு நிலையை எங்களைப் பூரணமாக நிர்மூலமாக்கும் ஒரு சூழ்நிலையை தமிழ் பேசும் மக்களுக்கு அதுவும் ஒரு குறுகிய பத்து வருடத்திற்குள் ஏற்படப்போகின்றதென நாங்கள் கனவில் கூட கண்டதில்லை என்றார்.

இவ்வாண்டு தனிச்சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நாளில் இருந்து இறுதியாக இது நிறைவேற்றப்படும் வரை அம்மசோதாவிற்கு எதிரான கண்டனங்களையும் அவை எதிர்காலத்தில் ஏற்படுத்தவிருந்த அனர்த்தங்களையும் இச்சட்ட மசோதாவை எதிர்த்தவர்கள் தெரிவித்தனர். ஆயினும் பல எதிர்ப்புக்கள் மத்தியில் 66 வாக்குகள் சாதகமாக பெற்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிராக 29 வாக்குகள் அளிக்கப்பட்டன. இலங்கையின் ஜனநாயகக் கொள்கை என்பது சிறுபான்மையோரின் உரிமைகளைப்பறிக்கும் கொள்கையாகவே வரலாற்றில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இது ஒரு முற்போக்கு கொள்கை என சிங்களத்தலைவர்கள் கூறி மக்களை நம்ப வைத்தனர். ஆனால் இதற்கு மாறாக அது இன வன்முறைகளாகவும், இன முரண்பாடுகளாகவும் ஒற்றுமைப்பட்ட இலங்கையில் இருந்து பிரிவினைக்கு இச்சட்டம் வழிவகுத்தது எனலாம்.

சிங்களம் மட்டும் சட்டத்தில் இருந்து சமஸ்டிக்கட்சி இலங்கை அரசியலில் பலம்வாய்ந்த சக்தியாக தோன்றி வளரத்தொடங்கியது. இந்நிலையை மேலும் அதிகரிக்கச் செய்ய இக்கட்சியானது இரு தந்திரோபாயங்களை கையாண்டது. ஒன்று 'குடியியல் கீழ்ப்படியாமை' இரண்டு 'ஒத்துழையாமை' போன்ற நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கத்தை நெருக்குதல் கொடுக்க இக்கட்சி முயன்றது. தமிழ் பொதுமக்களிடமிருந்தும், அரச பணியாளர்களிடமிருந்தும் பெற்ற ஆதரவின் மூலம் முக்கியமான சலுகை பெற இக்கட்சி தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியுள்ளது. இதற்கு மாறாக அரசாங்கங்கள் சலுகை வழங்காவிட்டால் அது இன உறவுகளில் முறிவினை ஏற்பட்டு தேசிய பொருளாதார அபிவிருத்தியை பாதித்ததுடன் தேசிய அவசர காலங்களில் அரசாங்கம் இராணுவத்தையும் பயன்படுத்த வேண்டியிருக்கும். 1956


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் நான்கு தடவைகள் சிங்கள அரசியற் கட்சிகள் சமஸ்டிக்கட்சி கொள்கைகளுக்கு மாறாக இருந்தபோதும் அதன் ஆதரவினை நாட வேண்டியிருந்தது. இந்த நான்கு முறைகளும் கட்சி குறைந்தபட்சக் கோரிக்கை என்ற வகையில் பேரம் பேசும் நிலையை பயன்படுத்தியது.

சமஸ்டிக் கட்சியினர் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்ட மசோதாவிற்கு தனது ஒத்துழையாமையை வெளிப்படுத்துவதாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தை நடத்தினர். இதன் எதிரொலியாக சில முக்கிய பகுதிகளில் தொடர்ச்சியான அதிர்ச்சி அலைகள் கிளம்பியது. சத்தியாக்கிரகத்தில் இருந்த கட்சியின் பிரதிநிதிகளும், ஆதரவாளர்களும் சிங்களக் கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து முதலாவது கொடுமையான இன வன்செயலுக்கு வழிவகுத்தது. கொழும்புத் தமிழருக்கு எதிராகவும், கிழக்கு மாகாணத்தில் கல்ஓயா பள்ளத்தாக்குக் குடியேற்றத்திட்டங்களில் வசித்த தமிழருக்கு எதிராகவும் வன்முறைகள் நிகழ்ந்தன. இவ் வன்முறையின் போது 150க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டது. இலங்கையின் இரு தேசிய இனத்தவர்களிடையிலான தொடர்புகளில் 1956 பொதுத்தேர்தல் ஒரு திருப்புமுனையாக இருந்தது. இக்காலம் தொட்டு சமஸ்டிக்கட்சியில் தெரிவு செய்யப்பட்டோர் பாராளுமன்றத்தில் தமிழர் நலவுரிமைகளுக்கு பாடுபட்டதோடு பாராளுமன்றத்தின் மந்திரிப்பதவியோ, ஏனைய பதவிகளோ பெற முடியாமல் ஒதுக்கப்பட்டனர். அத்தோடு அரசாங்க பெரும்பான்மைப் பிரதிநிதிகளுக்கும், தமிழ்ப் பிரதிநிதிகளுக்குமான தொடர்புகள் குறைந்திருந்தன. மறுபுறம் கிராமியச் சிங்களவர்களின் அபிலாசைகளை 'எக்சத பிக்கு பெரமுன' செல்வாக்கு மிக்க சிங்கள தேசியவாதிகளின் விருப்புகளுக்கு சிங்கள அரசாங்கம் செவிசாய்க்க கடமைப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் தமிழருக்கு சலுகை வழங்கக்கூடாது என்ற பலம்வாய்ந்த குழுக்களின் கோரிக்கைகளுக்கு சிங்கள அரசாங்கம் பணிய வேண்டியிருந்தது.

1956ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் வரலாற்று புகழ்மிக்க 'திருமலை யாத்திரையை சமஸ்டிக்கட்சியினர் ஒழுங்கமைத்திருந்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் இருந்து தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க இழந்த மொழி உரிமையை மீண்டும் அகிம்சை வழியில் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட யாத்திரையே இதுவாகும். சமஸ்டிக் கட்சியின் நான்காவது தேசிய மாநாடு 19-08-1956இல் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது. இம் மகாநாட்டில் பேருரையாற்றிய கு.வன்னியசிங்கம் 'தமிழ் இனத்தின் பிரிக்க முடியாத மொழியுரிமை' பற்றிய ஆழமான கருத்தினை வெளியிட்டார். சிங்களம் மட்டும் அரசகரும மொழியாதல் வேண்டும் என்றும் அதே சமயம் தமிழை நியாயமானளவுக்கு உபயோகிக்க அனுமதிப்பது என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்தது. 'தமிழை நியாயமான அளவுக்கு உபயோகிக்க அனுமதித்தல்', 'தமிழுக்கு போதிய அந்தஸ்து அளித்தல்' என்ற சொற்றொடர்களுக்கு விரிவான விளக்கமும் பண்டாரநாயக்காவால் வழங்கப்பட்டது. ஆனால் தேர்தல் முடிந்து வெற்றி பெற்றதும் நியாயமான மொழி உபயோகம் என்பதனை வரையறுப்பது கடினம் என்று கூறி சிங்களம் மட்டும் சட்டத்தை இயற்றியது.

மொழியுரிமையை நாம் அடிப்படையுரிமையாகக் கருதுகிறோம். அடிப்படையுரிமைகளைப் பொறுத்தவரையில் அவற்றை விட்டுக்கொடுப்பதற்கு இடமில்லை. மொழி விடயத்தில் சிறுசலு-கை தரும்படி நாம் கோரவில்லை., எங்கள் அடிப்படையுரிமைகளை ஒப்புக்கொண்டாக வேண்டும் என்று சொல்லுவோம். 'இதனை எதிர்த்து பாராளுமன்றத்ினுள்ளும், வெளியிலும் தொடர்ந்து போராட வேண்டியது அவசியம். சிறுபான்மையோருக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிக்கொணர கீழ்ப்படியாமை, ஒத்துழையாமை என்ற சத்தியாக்கிரக அணுகுமுறைகளையே சமஸ்டிக்கட்சியினர் தமது தந்திரமாகவும் உத்தியாகவும் கையாண்டனர்.

வெவ்வேறு உலக நாடுகளில் மொழிவாரி இனங்கள் தமது உரிமைகளை சமஸ்டியாட்சி அமைபொன்றின் மூலம் தீர்த்துக்கொண்டுள்ளன. அரசியல் திட்டங்களால் அதிகாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தளிக்கப்பட்டு ஒவ்வொரு தேசிய இனங்களும் போதிய பாதுகாப்போடும், உரிமைகளோடும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்விதமே 'சமஸ்டியமைப்பைக் கொண்டு ஐக்கிய இலங்கையின் ஓரங்கமாக விளங்கக்கூடிய மொழிவாரி மாநிலங்களை அமைத்து தமிழரசு நிறுவினால் மட்டுமே தமிழ் பேசும் மக்கள் மொழியுரிமை, நாட்டுரிமை, குடியுரிமை முதலியவற்றை நிரந்தரமாகப் பாதுகாக்க முடியும்' ஏனெனில் ஒரு நாட்டின் பெரும்பான்மையினமானது தனது பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு சட்ட திருத்தங்களைக் கொண்டு வர முடியும். எனவே இவற்றிலிருந்து நிரந்தரமாக பாதுகாப்புக்கு சமஸ்டியாட்சி முறையே உகந்தது என இம் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

சமஸ்டிக்கட்சியின் நான்காவது மாநாட்டிலேயே வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நான்கு நிறைவேற்றப்பட்டன. (பிற்சேர்க்கை ) இம் மாநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றமும், பிரதமமந்திரியும் நிறைவேற்ற தவறும்பட்சத்தில், இவ் இலட்சியத்தை அடைய கட்சி சாத்வீகமுறையில் நேரடி நடவடிக்கைகளில் இறங்குமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இந்த நான்கு தீர்மானங்களுமே 1957 முதல் இலங்கையில் இருந்த அனைத்து அரசாங்கத்துடனும் தமிழர் பிரச்சினை தொடர்பான பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன.

இலங்கைத் தமிழர்களின் மொழி பாராளுமன்றத்தினுள்ளும், வெளியிலும் விலக்கப்பட்ட நிலையில் தாம் ஒரு தேசிய சிறுபான்மை நிலையில் அச்சுறுத்துவதாக உணர்ந்தனர். அவர்கள் தமது மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் தமது தனித்துவம் கலாசாரம் பேணப்பட வேண்டும். தமது பூர்வீகத்தாயகத்தில் நிர்வாகத்தை தமிழ் மொழியில் நடத்த உறுதியளிக்க வேண்டும் என்றும் பூர்வீகத்தாயகத்தை விருத்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இவற்றை அடைவதற்கு சாத்வீக போராட்ட முறைகளைப் பின்பற்றிய போது அவை இனக்கலவரங்களாகவும், வன்செயல்களாகவும் மாறின. ஆயினும் சமஸ்டிக்கட்சி இந்தப் போராட்ட தந்திரோபாயங்களை மிக நீண்டகாலம் வரை கைக்கொண்டு வந்தது.

அரசாங்கத்திலிருந்து பலம்வாய்ந்த தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி தமிழர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்காவிட்டால் தமது ஒத்துழைப்பு கிடையாது, என்று வற்புறுத்தினர். நிர்வாகத் தேவைகளுக்காக தமிழ்மொழியைப் பயன்படுத்தவும், கலாசாரத்தைப் பேணவும் தமிழர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் தமிழ்ப்பகுதிகளை, அப்பகுதி மக்கள் அரசின் தலையீடின்றி அந்தந்தப்பகுதி மக்களின் தேவைகளுக்கேற்ப விருத்தி செய்ய தமிழருக்கு சமஸ்டியாட்சி வழங்கினால் மட்டுமே தமது ஒத்துழைப்பு வழங்கப்படுமென தமிழ்த்தலைவர்கள் கூறினர். சமஸ்டி அமைப்பின் கீழ் வெளிவிவகாரம், தேசிய பாதுகாப்பு என்பன முக்கியமாக மத்திய அரசில் இருக்கும் என்பதால் சிங்களவர் மத்தியில் இருந்த அதி தீவிரவாதிகள் சமஸ்டியின் கீழ் பிராந்திய சுயாட்சி வழங்கப்பட்டால் தமிழர்கள் சிங்களவர்களை அடக்க வெளிநாட்டு உதவியை நாடுவர் என இவர்கள் அச்சம் கொண்டனர். ஆனால் இக்கோரிக்கையிலே நியாயத்தன்மையோ, உறுதித் தன்மையோ இருக்கவில்லை. இவை யாவும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களாகவும், அச்சங்களாகவுமே இருந்தன.

நாலாவது தேசிய மாநாட்டு தீர்மானங்களுக்கு ஏற்ப கட்சியின் அடுத்த நடவடிக்கையால் கட்சித் தொண்டர்களைத் திரட்டி அறவழிப் போராட்டத்திற்கு ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தன. 'அறவழி அழைக்கின்றது இதில் உங்கள் பங்கு என்ன' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்களை அரசுக்கெதிரான போராட்டத்திற்கு தயார்படுத்தியது. இந்த நிலையில் அரசாங்கம் சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்பதனுடைய விரிவாக்கமாக மோட்டார் வண்டிகளில் இதுவரை இருந்து வந்த ஆங்கில எழுத்துக்களிலான இலக்க தகடுகளில் 'சிங்கள ஸ்ரீயை எழுத வேண்டும் என புதிய சட்டத்திருத்தத்தை கொண்டு வந்தது. இதை எதிர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதாக கட்சி தீர்மானித்தது. 1957ஆம் ஆண்டு தை மாதம் 19ஆம் திகதி 'சிங்களச் ஸ்ரீ எதிர்ப்புச்சட்ட மறுப்பியக்கம்' ஆரம்பிக்கப்பட்டு இது தமிழ் மாவட்டங்களான யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இதில் ஆங்கில எழுத்துக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களைப் பொறித்துக் கொண்ட வாகனங்களை செலுத்தி வந்தனர். வேகமாகப் பரவிய இவ்வியக்கத்திற்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது, நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தது.

1956ஆம் ஆண்டு திருகோணமலை மாநாட்டுத் தீர்மானங்களை ஒரு வருடத்தினுள் நடைமுறைப்படுத்தாவிட்டால் குடியியல் ஒத்துழையாமை போராட்டத்தினை ஆரம்பிப்பதாக அக்கட்சி அறிவித்திருந்தது. பண்டாரநாயக்கா தமிழர் தமது நியாயமான உரிமைகளைப் பாது காக்க முற்பட்டனர் என நம்பியமையாலும் இன மோதல்களையும், கலவரங்களையும் தவிர்க்க தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண 1957 ஆடி பேச்சுவார்த்தை நடத்த இணங்கியிருந்தார். 1957 ஆடி 26ஆம் நாள் பிரதமமந்திரி எஸ்.டபில்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கும் சமஸ்டிக்கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. (பிற்சேர்க்கை) இவ்வொப்பந்தத்தில் தமிழ்த் தேசிய இனத்தில் கட்டமைப்பின் மூன்று பிரதான நிலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

(1) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபு வழித்தாயகம் என்ற கோட்பாடு
(2) இலங்கையிலுள்ள தேசிய சிறுபான்மையினத்தின் மொழியாக தமிழ் மொழியின் பிரயோகம்
(3) வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு பிரதேச சுயாட்சி வழங்குதல்.

போன்ற சிறப்புமிக்க அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்மூலம் தமிழர்கள் இலங்கையின் தேசிய சிறுபான்மை இனம் என்பதும், அவர்களுக்காக பூர்வீக வாழ்விடம் ஒன்று காணப்பட்டது என்பதும், ஏனைய இனத்தவர்களில் இருந்து தனித்துவமான அடையாளமாக மொழியும் காணப்படுகின்றது என்ற வெளிப்படையான தெளிவான அம்சங்களை முதன் முறை யாக இந்நாட்டின் பிரதமமந்திரி ஏற்றுக் கொண்டமை தமிழ் பேசும் மக்களின் போராட்டங்கள் கோரிக்கைகள் என்பன நியாயமானதே என்பதை வரலாற்றில் நிரூபிக்க தவறவில்லை. இந்த வரலாற்றுக் கடமையினை சமஸ்டிக்கட்சியின் தலைமையில் தமிழ் பேசும் மக்கள் அனை வரையும் இணைந்த வகையிலேயே சாத்தியமாயிற்று. இது தமிழ்த் தேசியவாதத்தின் ஓர் உன்னதமான நிலையென்பதில் தவறேதும் இல்லை.

தென் இலங்கையின் தீவிரப்போக்கான பிக்குகள், சிங்கள தீவிரவாதிகள் இவ் ஒப்பந்தம் சிங்களவர்களின் நலன்களைப் பாதிக்கும் துரோகச் செயல் எனப் பிரகடனம் செய்ததுடன் இவ் ஒப்பந்தத்திற்கு எதிராக எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்தினர். முக்கியமாக 1956 தேர்தலில் தோல்வியடைந்த ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள வகுப்புவாதத்தை கிளப்புவதற்கு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தியது 'முதல் அடி' என்ற துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரம் சதுர மைல் நிலங்களை சிங்களவருக்கில்லாமல் பண்டாரநாயக்கா தமிழருக்கு விற்றுவிட்டார் என்று கூறி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் கண்டி யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. இது இடையில் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆயினும் தென் இலங்கையில் ஒப்பந்தத்திற்கெதிரான உணர்வலைகள் பரவத் தொடங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க மக்கள் ஐக்கிய முன்னணி தமிழர்களுக்கெதிரான உணர்வுகளை பயன்படுத்தியதால் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சி மக்கள் ஐக்கிய முன்னணிக்கு எதிரான குற்றம் சாட்டியது. முக்கியமாக தமிழ் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுப் பதாக குற்றம் சாட்டியதால் எந்தவிதமான சலுகைகளும் வழங்க முடியாதிருந்தது. 1956 முதல் அதிகாரத்திற்கு வரவிரும்பிய அரசியல்வாதிகள் இன உணர்வுகளைப் பயன்படுத்தி சிங்கள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஆதரவினைப் பெறத்தயங்கவில்லை. இதனால் சமரசம், விட்டுக்கொடுத்தல் போன்ற முறைகள் ஊடாக சிங்கள - தமிழ் கோரிக்கைகளுக்கு எதிரான முரண்பாடு நிலைகளுக் கிடையே இணக்க நிலையை ஏற்படுத்தமுடியாத நிலை இருந்தது. அத்தோடு தீவிரவாதிகள், பலமுள்ளவர்கள், காடையர்களும் இவ்வாறான குழப்பநிலையை மேலும் ஏற்படுத்தினர்.

பௌத்த விழிப்புணர்வோடு சிங்களம் மட்டும் சட்டம் உருவாக்கப்பட்டமை, சிங்கள பௌத்தர்கள் மத்தியில் புதுயுகம் ஒன்றை ஏற்படுத்திவிட்டதாக உணர்ந்த சிங்கள பௌத்தர்கள் தமது கடந்தகால விழுமியங்கள் பேணி அபிவிருத்தி செய்ய வேண்டும் என நம்பினர். இதன் பிரதான எதிரிகளாக தமிழர்கள் கருதப்பட்டனர். ஏனெனில் கடந்த காலங்களில் சிங்கள இராட்சியங்களை அழிப்பதிலும், அரசியல் உரிமைகளை பறிப்பதிலும், பொதுத்துறை தொழில் வாய்ப்புக்களையும், அரச சேவைகளையும் கௌரவமான நிலைகளை சிங்களவர்கள் பெறுவதில் இருந்து அவர்கள் புறக்கணித்தமையால் தமிழர்களுக்கு எந்த விதமான சலுகைகளும் உரிமைகளும் கொடுக்க கூடாதென பௌத்த குருமார் மக்களை எச்சரித்தனர். இந்தப் பின்னணியிலேயே 1957ஆம் ஆண்டு ஒப்பந்தம் நீக்கப்பட வேண்டும் என்று கோசங்கள் எழுப்பப்பட்டதோடு அதற்கு எதிரான உணர்வலைகளை பௌத்தகுருமார் ஏற்படுத்தியதோடு அவர்களே இறுதியாக பண்டாரநாயக்காவின் இல்லத்தின் முன் ஒப்பந்தத்திற்கு எதிரான கோஷங் களை எழுப்பியதோடு இறுதியில் இவ் ஒப்பந்தத்தைக் கைவிடும்படி வற்புறுத்தியமையால் பண்டாரநாயக்கா ஒருதலைப்பட்சமாக 1958ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஒப்பந்தத்தைக் கைவிட்டார்.

ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் பிரதமருக்கு ஆதரவில்லை என்பதை உணர்ந்த செல்வநாயகம் குடியியல் சட்ட மறுப்பியக்கமொன்றை ஆரம்பித்தார். இதன் மூலம் சமஸ்டிக்கட்சியினர் சிங்களம் மட்டும் என்பதற்கான கீழ்ப்படியாமை என்ற பிரசார உத்தியைக்கையாண்டனர். 'சிங்கள ஸ்ரீ' பேரூந்துகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டன. சமஸ்டிக்கட்சி அங்கத்தவர்களும், தொண்டர்களும் முன்னின்று 'சிங்களச் ஸ்ரீ' அழித்து அதற்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களைப் பொறித்தனர். இவ் எதிர்ப்புப் போராட்டம் 1958 மார்ச், ஏப்பிரல் மாதங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியது. இது தென் இலங்கையில் பலாத்கார போராட்டமாக மாறியது. 1958ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ஆம் திகதி நாடெங்கிலும் இனக்கலவரமாக மாறியது. கொழும்பு, மட்டக்களப்பு, பொலன்னறுவை, பதுளை, குருநாகல், பாணந்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் இனக்கலவரம் மிகமோசமாக நிகழ்ந்தது. றோபேட் கேர்னி பின்வருமாறு கூறுகின்றார்.

'வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு பிரயாணிகள்
இரக்கமின்றித் தாக்கப்பட்டனர், புகையிரதம்
நிறுத்தப்பட்டும் பிரயாணிகள் தாக்கப்பட்டனர்,
தீ வைப்புக்கள் நிகழ்ந்தன. அத்துடன் மனிதர்களும்
உயிருடன் தீயில் இடப்பட்டனர். களவுக்கோ
அளவில்லை. குழப்பக்காரரை பொலிசார்
கட்டுப்படுத்த முடியாதிருந்தனர்'

இந்த கலவரத்தின் விளைவாக 12,000 தமிழர்கள் தமது வசிப்பிடங்களை விட்டு அகதிமுகாம் களில் தஞ்சமடைந்தனர். பின்னர் இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நான்கு நாட்களாக வன்முறை நிலவிய பின்னர் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த இனக்கலவரமானது இரண்டு நிலைகளை தெளிவுபடுத்தியது.

1) சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்பதோடு பௌத்த மதத்திற்கு உரிய இடம் அரசில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தமையும், சிங்கள பௌத்த தீவிரவாதமாக அது தன்னை அடையாளம் காட்டியதோடு, இலங்கை அரசியலில் தனக்கே முதன்மை நிலை என்பதனையும் சிங்கள பௌத்தர்களின் ஆதரவின்றி எந்தவொரு அரசாங்கமும் அதிகாரத்தைப் பெறமுடியாது. எனவே சிங்கள பௌத்த தேசியவாதம் இப்போது 'அரச தேசியவாதமாக' மாறுகின்ற நிலைமையையே இக்கலவரம் வெளிப்படுத்தியுள்ளது.

2) 1956 சிங்களம் மட்டும் சட்டத்தின்பின் தமிழ் பேசும் மக்களிடையே தனியாக வேறு பட்ட இனமொன்றுக்குரிய மொழியைக் கொண்டு 'மொழிவழித் தேசியவாதம்' என்பது தோற்றம் பெற்றது. 1958 இனக்கலவரமானது வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு புறம்பாக எந்தவொரு இடத்திலும் தமிழ் பேசும் சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு இல்லை என்பதையே வெளிப்படுத்தியது. இவ்வுணர்வினைப் பெற்ற மக்களிடம் 'தனியாக மரபுவழி ஆள்புலம்' பற்றிய தேவையை ஏற்படுத்தியது. இது மொழிவழித் தேசியவாதம் என்பதில் இருந்து பிராந்தியத் தேசியவாதமாக பரிணமிக்கச் செய்தது. இதனையே சமஸ்டிக்கட்சியினரும் 'மொழிவாரியான மாநில தன்னாட்சி' என்ற கோரிக்கை மூலம் வலியுறுத்தி வந்துள்ளனர்.

3. நாட்டின் மிகப்பெரியதும், அதிக அனர்த்தங்களையும் ஏற்படுத்திய 1958 இனக் கலவரம் முடிந்ததன்பின் சமஸ்டிக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது 1958ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ஆம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடு) சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டமானது வடக்கு, கிழக்கில் தமிழ்மொழி யையே தனது மொழியாக்கியது. இந்த ஏற்பாடானது மொழி பற்றிய விடயத்தில் அக்காலத் தில் முன்னேற்றகரமானது எனக் கருதிய போதும் இச்சட்டத்தின் அமுலாக்கமே பிரச்சினைக் குரியதாயிற்று.

**4-1. தமிழ் பிரதேசங்களில் குடியேற்றத்திட்டங்கள்**

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை இரு தேசங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்ததுடன், மூன்று இராட்சியங்களும் காணப்பட்டன. இலங்கைத்தமிழர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பூர்வீக தாயகமாகக் கொண்டு வேறான தேசத்தவராக வாழ்ந்து வந்தனர். 16ஆம் 17ஆம் நூற் றாண்டுகளில் இலங்கையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கைப்பற்றி இந்தப்பிரிவுகளை மூன்று இராட்சியங்களாக வேறாக நிர்வகித்து வந்தனர். விசேடமாக ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களை வேறான நிர்வாக முறைக்கு உட்படுத்தியுள்ளார்கள். பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றிய போது நாட்டை இனரீதியாக பிரித்து வைத்திருப்பதை விரும்பவில்லை. இதனால் தனித்தனியாக நிர்வாக முறைகளை நீக்கி 1833ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தத்துடன் ஒரே நிர்வாக முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார். இதனால் ஒவ்வொரு இனங்களும் தமது சொந்த பிரதேசங்களில் தனித்துவமாக வாழும் நிலையை இழந்ததோடு பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தக முயற்சிகள், நிர் வாக மையம், வர்த்தகமையம், இவைகள் அனைத்தும் இலங்கையின் ஈரவலயம் என அழைக்கப்படுகின்ற தென்மேற்கு பகுதியில் அமைந்திருந்தது. இலங்கைத் தமிழர்கள் தமது ஆங்கில அறிவினாலும், விஞ்ஞானக் கல்வியாலும் இலங்கையில் பல பாகங்களிலும் உத்தியோகங்களை பெற்றனர். இதனால் தென் இலங்கை நோக்கிய ஒரு இடப்பெயர்வு காணப்பட்டதில் வியப்பில்லை.

1931ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்களைத் தொடர்ந்தே சிறுபான்மையோருக்கு எதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமானதாக கருதப்படுவது 'அரசாங்கத்தில் குடியேற்றக் கொள்கையாகும்' வறண்ட வலயத்தில் அரச காணிகளில் கிராமிய மக்களை வெளியேற்றி அரசாங்க ஆதரவோடு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1930களில் இருந்து அரசாங்க நிலங்கள் ஏழைவிவசாயிகளை விவசாய நன்மைகளுக்காக வறண்ட வலயங்களில் குடியேற்றி வந்தனர். ஈரவலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் சனத்தொகை செறிவைக் குறைப்பது உணவு உற்பத்தியை அதிகரிப்பதும்தான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஈரவலயத்தில் நிலப்பற்றாக்குறை நிலவுவதால் வறண்ட வலயத்திற்கு இடமாற்றம் செய்தல் வறண்ட வலயத்தில் நீர்ப்பற்றாக்குறை தொழில்வாய்ப்புக்கள் என்பன குறைவாகவே இருந்தன. குடியேற்றங்களை மேற்கொண்ட அரசாங்கங்கள் இவற்றை குடியேற்றவாசிகளுக்கு செய்து கொடுத்ததன் மூலமே அவர்களை குடியமர்த்தியது. மாறாக வறண்ட வலயத்தில் காணிகளற்ற, வேலை வாய்ப்புகள் அற்ற தமிழ் மக்களை இந்த அரசாங்கங்கள் கருத்தில் எடுக்காது அவர்களை ஒதுக்கியது.

1935ஆம் ஆண்டு காணி அபிவிருத்திக்கட்டளைச் சட்டம் இடமாற்றப்பட்டது. முதல் அதிகரித்த வேகத்தில் குடியேற்ற யுகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது எனலாம். சமூக பொருளாதார மட்டங்களில் இக்குடியேற்றக் கொள்கைகளுக்கான நியாயங்களும் முன்வைக்கப்பட்டே வந்தன. இவ்வாண்டில் இருந்து பல்வேறு பெயர்களில் வெவ்வேறுபட்ட திட்டங்களை அறிமுகப்படுத்தியது. முக்கியமாக காணியற்றோருக்கு காணி வழங்குதல் இதன் மூலம் காணிப்பகிர்வில் காணப்படும் சமமின்மையைக் குறைத்தல், நெல் மற்றும் உப உணவு உற்பத்தியை பெருக்குதல், கிராமிய மட்டத்தில் நிலவும் வேலையின்மையை நீக்குதல், மக்களின் வருமான மட்டத்தை அதிகரிக்கச் செய்தல், கிராமிய வறுமையை ஒழித்தல், பிரதேச அபிவிருத்தி போன்ற பல்வேறு நிலைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அரசாங்கங்களின் நோக்கங்கள் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் நடைமுறையில் இக்குடியேற்றங்கள் தமது பொருளாதார, சமூக அபிவிருத்திகளை அடைந்தனவா என்பது குடியேற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலங்களில் இருந்து எழுப்பப்பட்டு வரும் பெரும் கேள்வியாகும். பொருளாதார மட்டத்தில் இன்று வரை தோல்வியையே கண்டுள்ளன.

அரசியல் மட்டத்தொனியில் இக்குடியேற்றங்களுக்கு வேறு பல காரணிகள் இருந்துள்ளன. முக்கியமாக இரு காரணிகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

1. 1930 களில் அரசுக்கழகத்தில் மந்திரிகளாக இருந்த இலங்கையர்கள் வறண்ட வலயக் குடியேற்றங்களை அமைப்பதன் மூலம் நீர்ப்பாசனங்களை புணருத்தானம் செய்வதோடு இராஜரட்டையின் சிங்கள நாகரிகத்தின் மேம்பாட்டை மறுபடியும் ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டிருந்தனர்.

2. தென் இலங்கையின் சிங்கள மாவட்டங்களின் இனப்பரம்பலை மாற்றும் நோக்குடன் அரசாங்கத்தால் தமிழ்க்குடியேற்றங்களை ஏற்படுத்தவோ, உதவியோ அளிக்காத போதும் தமிழர்கள் தெற்கில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்க சந்தர்ப்பம் கிடைத்தமையாலும், தெற்கில் குடியேறியிருப்பதாலும், தமிழ் மாவட்டங்களில் சிங்களவர்கள் குடியேறுவதைத் தடுக்க தமிழருக்கு உரிமையில்லையென சிங்களவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இவை அரசியல்வாதிகளாலும், உயர் அரசாங்க அதிகாரிகளாலும் முன் வைக்கப்பட்டு வந்த உண்மைக்குப் புறம்பான நியாயங்கள் ஆகும். ஆனால் உண்மை நிலையில் தமிழர்கள் தமது கல்வியறிவால் தொழில் பெறவும், உடமைகளை வாங்கவுமுள்ள உரிமை நிலைகள் மறைக்கப்பட்டுள்ளன.

1949இல் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டமே முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய குடியேற்றத்திட்டமாகும். இது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் பெயர் மாற்றத்துடன் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு எதிர்ப்புக்கள் மத்தியில் பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்காவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 சிங்களக் குடியேற்றங்களாகவும், 6 தமிழ் குடியேற்றங்களாகவும் இருந்தன. இக் குடியேற்றத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் பாரியளவு மாற்றம் ஏற்பட்டது. 1946இல் குடிசன மதிப்பீட்டின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி மட்டக்களப்பு மாவட்டத்தின் (அம்பாறை உள்ளடக்கியது) சிங்களவர்களின் எண்ணிக்கை 11,850 பேர். இம் மாவட்ட சனத்தொகையில் 5.8 வீதமாகும். 1953 மதிப்பீட்டின்படி சிங்கள வர்கள் 31,174 பேராகும். இது அம்மாவட்டத்தின் சனத்தொகையில் 11.5 வீதமாகும்.

1950களிலும் அதற்குப் பின்னரும் கிழக்கு மாகாணத்திலேயே சிங்களக் குடியேற்றம் மிக துர-தமாக அதிகரித்தது. இந்த வகையில் திருகோணமலை மாவட்டம் கந்தளாய், பதவியா என்பன முக்கியமாக குடியேற்றங்களாகும். இங்கும் வெவ்வேறு பெயர்களில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட குடியேற்றமானது அம்மாவட்டத்தின் சனத்தொகை பரம்பலை அதிகம் பாதித்ததெனலாம்.

இவ்வாறு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத்திட்டங்களை சமஷ்டிக்கட்சி தனது ஆரம்பகாலங்களில் இருந்தே கண்டிப்பது அதற்கு எதிராக பிரசாரம் செய்யும் உத்தியை கையாண்டு வடக்கு, கிழக்குப் பகுதி தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை பிரபல்யப்படுத்தியதோடு அதை பாதுகாக்கவும் முற்பட்டது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கட்சியின் தலைமைப் பேருரையாற்றும் போது,

'அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது
எல்லாவற்றிலும் பார்க்கத் தமிழ் பேசும் மக்களுக்கு
கூடிய ஆபத்தை ஏற்படுத்துவதாய் இருக்கின்றது
தமிழ் பேசும் பிரதேசத்தைக் குறைப்பதற்கே அரசாங்கம்
அநீதியான முறையில் தன் அதிகாரத்தை உபயோகிக்கிறது.
தடுப்பாரின்றி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால்
சில வருடங்களிற்கிடையில் இந்நாட்டிலே தமிழ்
பிரதேசமே இல்லாதொழியும்' என்றார்.

எனவே சமஷ்டிக்கட்சியின் ஆரம்பத்திலேயே குடியேற்றங்களை தடுக்க வேண்டும். தவறினால் தமிழ் பேசும் பிரதேசங்களே இல்லாதொழியும் என்பதால் அவற்றைத் தடுக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

1951ஆம் ஆண்டு மகாநாட்டில் பேருரையாற்றிய செல்வநாயகம் முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் பரம்பரையாக இருந்துவருகின்ற முஸ்லீம்களின் வாழ்விடங்களே அரசாங்கங்களால் திட்டமிட்டுப் பறிக்கப்படுகின்றன. முஸ்லீம் தொகுதிகள் வெகு விரைவில் சிங்களத் தொகுதிகளாக மாறிவிடும். எனவே இந்த நிலையை நீக்க அரசாங்கப் பிரதிநிதிக-ளாக இருக்கும் கிழக்கு மாகாண பிரதிநிதிகளுக்கும், முஸ்லீம்களுக்கும் தெளிவுபடுத்தினார். இவற்றுக்காக குரல் கொடுக்க தவறுவோமாயின் எமது பிரதேசம் பறிபோய்விடும் என்றார். இவ்வாண்டு கட்சியால் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களில் ஒன்று குடியேற்றத்தை கண்டிப்பதும், தடுப்பதுமாகும். தீர்மானம் வருமாறு,

'அரசாங்கத்தின் காணி அபிவிருத்திக் கொள்கையும்,
குடியேற்றத்திட்டக் கொள்கையும், இலங்கையில்
உள்ள தமிழ் பேசும் மக்களின் நிலைபேறான
வாழ்வுக்கே ஓர் அச்சுறுத்தலாகும்'

எனவே பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் திட்டமிட்ட வகையில் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூமியில் குடியேற்றங்களை நிறுவி அவற்றில் சிங்கள மக்களை மட்டும் குடியேற்றிவருகின்ற சம்பவங்களை சமஷ்டிக்கட்சி கண்டிப்பதோடு அவற்றை தடுத்து நிறுத்தும்படி அரசாங்கத்தை கேட்டும் வந்துள்ளது. 1956ஆம் ஆண்டு மாநாட்டில் எடுக்கப்பட்ட நான்கு முக்கிய தீர்மானங்களுள் ஒன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ் பேசும் மக்கள் மரபு வழியாக வாழ்ந்து வரும்
பகுதிகளில், சிங்கள மக்களைக் குடியேற்றுவதை
உடன் நிறுத்த வேண்டும்'

என கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானமே பின்னர் ஏற்பட்ட ஒப்பந் தங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

பூர்வீகத்தமிழ்த் தாயகக்கோட்பாட்டை எல்லா சிங்களத்தலைவர்களும் நிராகரிக்கவில்லை. அவர்கள் இவ்விதமாக தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்பால் நிறைவேற்ற முடியவில்லை. 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படும் பிராந்தியக் கழகங்களுக்கும் நிர்வாக அதிகாரங்களை வழங்க சம்மதித்தமை மூலம், பண்டாநாயக்கா பூர்வீகத் தமிழ்த் தாயக கோட்பாட்டின் அடிப்படையில் பிராந்திய கழகங்களுக்கு குடியேற்றத்திட்டங்களை தெரிவு செய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தம் தனியான பிராந்திய சபைகளால் நிருவகிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ் பயன்படுத்தவிடப்பட்டதன் மூலம் தமிழர்களை ஓர் தனித்துவமான தேசிய இனமாகவும், தமிழ்ப்பகுதிகளை பூர்வீகத் தாயகமாக ஏற்படும் நிலைப்பாட்டை ஏற்றனர். பூர்வீக தாயகக் கோட்பாட்டை 1965 டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றவாசிகளுக்கு நில முன்னுரிமை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் ஏற்பாடுகள் அரசாங்கத்தால் தமிழ் பிரதேசங்களில் குடியேறும் சிங்களவர்களின் தொகையை குறைக்கும் நோக்கம் கொண்டிருந்தது. ஆனால் டட்லி சேனநாயக்காவால் இவ்வொப்பந்தம் சட்டமாக்க முடியாது இருந்தது. 1966ஆம் ஆண்டு தமிழ் மொழி விசேட ஏற்பாட்டுச்சட்டம் உருவாக்கப்பட்ட போது இந்த மொழிச்சட்டத்தில் இருந்த பிரமாணங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களின் தனித்துவப் பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டு எல்லா அரசாங்க பொது விவகாரங்களை நடத்துவதற்கும் எல்லாப் பிரிவுகளையும் பேணுவதற்கும் ஏற்பாடாகியிருந்தது. பண்டா- செல்வா, டட்லி- செல்வா ஒப்பந்தங்கள் சட்டமாகியிருந்தால் தமிழ் மாவட்டங்களில் பெருந் தொகையான சிங்களக் குடியேற்றக் கொள்கைகளைக் குறைத்திருக்க முடியும். ஆனால் தமிழ் மாவட்டங்களில் சிங்கள குடியாள்களை குடியேற்றும் கொள்கை சற்றும் குறையாமல் நடைபெற்றதோடு இம் மாவட்டங்களின் இனப் பரம்பலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டது. விசேடமாக கிழக்கு மாகாணத்தில் 1950களின் ஆரம்பத்திலும், பின்னும் அதிதீவிரமாக குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. குடியேற்ற திட்டங்களை மேற்கொள்ளும் அரசாங் கங்கள் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு சாதகமான வாய்ப்புக்களை அளித்து வருகின்றன. முக்கிய மாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல என பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்களவர்களுக்கான தேர்தல் தொகுதியாகவும் மாற்றிவிடப்பட்டது. தமிழர்களின் பூர்வீக தாயகமாக கருதப்படும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகள் ஏனைய மாகாணங்களின் பகுதிகளோடு இணைத்தல், துண்டாடல் போன்ற தந்திரங்களை பயன்படுத்தி ஒரு இன மேம்பாட்டுக்காக குடியேற்றங்களை சாதகமாக பயன்படுத்துகின்றது என்பதே உண்மை.

### 4.2 தேசிய நிலையை அடைவதற்கான செயற்பாடுகள்

இலங்கையின் அரசியல் தமிழ் இன உணர்வானது, சமுதாய மட்டத்தில் சுதந்திரத்திற்கு முன்பே காணப்பட்டது. இது சுதந்திரத்திற்கு பின் அரசியல் மயப்படுத்தப்பட்டு மிகவும் சிக்கலான கட்டத்தைப் பெற்றது. சுதந்திரத்தின் பின் இந்நிலை மிகவும் முரண்பாட்டை ஏற்படுத்தும் வடிவில் மாற்றமடைந்தது. இது இப்போது ஒரு தேசிய வடிவம் பெற்றுள்ளது. ஒரு தேசிய இனம் தேசிய நிலையை ஈட்டுவதல்ல. நாளடைவில் அந்நிலையை அடைவது அதனது அரசியல் ரீதியான நடவடிக்கைகள் மூலமேயாகும். இவ்வாறான இயக்கத்தின் மூலம் அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையை அடைதல் அல்லது பிரத்தியேக அரசியல் நிலையைப் பெறல். இந்நிலையானது தமிழ்த் தேசியவாதத்திற்கும், அதன் பிரத்தியேகமான அரசியல் அசைவியக்கத்திற்கும் மிகப் பொருத்தப்பாடுடையதேயாகும். சமஸ்டிக்கட்சியின் பிரத்தியேகமான செயற்பாடுகளின் தமிழ்த் தேசியவாதத்தின் கருவாக தனித்துவமான கலாசாரம், வரலாற்றுத் தொன்மை கொண்ட ஆள்புலம், இனத்தில் இருந்து பிரிக்க முடியாத மொழி என்பனவாகவே காணப்பட்டது. இவற்றுக் கான அரசியல் சட்டபூர்வ நிலையை பெறுவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் சமஸ்டிக்கட்சி தீவிரமாக ஈடுபட்டது. கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் 1960கள் வரை பல்வேறு வடிவிலான வெகுசன போராட்டங்களை நடத்தியது. 1960ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற தேர்தலை ஒரு கருத்துக் கணிப்பீடாகவே சமஸ்டிக்கட்சியினர் கருதினர். முக்கியமாக செல்வ நாயகம் தமிழ்பேசும் மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில்

'தமிழ் பேசும் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரையில்
நிலைமை வேறு, எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும்
சரித்திர முக்கியத்துவம் நிறைந்த ஒரு மாபெரும் சர்வசன
வாக்கெடுப்பாக எதிர்வரும் பொதுத்தேர்தலை நாம்
பயன்படுத்த வேண்டும். ஒரே குரலில் தமது சுயநிர்ணய
உரிமைக்கோரிக்கையை வலியுறுத்த சமஸ்டிக்கட்சிக்கே
வாக்களியுங்கள்' என்றார்.

1960 பங்குனி பொதுத்தேர்தலில் சமஸ்டிக்கட்சியானது 15 பிரதிநிதிகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுத்ததன் மூலம் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற அந்தஸ்தைப்பெற்றது. பாராளுமன்றத்தை அமைக்கும் எந்தவொரு கட்சியும் சமஸ்டிக்கட்சியின் ஆதரவினை பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பண்டா- செல்வா ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட மொழியுரிமை என்ற அரசியல் சலுகை பெறுவதில் சமஸ்டிக்கட்சி நம்பிக்கையிழக்கவில்லை. தமிழர்களுக்கு கணிசமான சலுகை வழங்கும் எந்தவொரு கட்சியோடும் அரசியல் உடன்பாட்டை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை அது எதிர்பார்த்திருந்தது. போட்டியிடும் கட்சிகளுக்கு இடையே எண்ணிக்கையில் அதிக வித்தியாசம் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் சமஸ்டிக்கட்சி இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ பெரும்பான்மைப் பலம் இன்மையால் ஆட்சியமைக்க முடியாத நிலையில் அங்கு சில மாதங்கள் அரசாங்கத்தில் ஸ்தம்பிதநிலை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத போதும் ஐம்பது ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிக்கு சமஸ்டிக் கட்சியின் ஆதரவி னைத் கோரியது. இந்நிலையில் சமஸ்டிக்கட்சி 'குறைந்தபட்சக் கோரிக்கைகள்' என்ற ஏற்பாட்டில் நான்கு முக்கியமான அம்சங்களை வலியுறுத்தியிருந்தது. (பிற்சேர்க்கை) சிறுபான்மை அரசாங்கமான டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் படி எல்லா விதமான நெருக்குதல்களும் கொடுக்கப்பட்டன. முக்கியமாக கட்சியின் தலைவ ரான செல்வநாயகத்திடம் அவருடைய மிக நெருங்கிய நண்பர்கள், மதப்பிரமுகர்கள் ஆகி யோர் அழுத்தங்களை கொடுத்தனர். இவ்வாண்டு ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி இரு கட்சித்தலைவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. சமஸ்டிக்கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கையானது பண்டா - செல்வா ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு நிகராக இருப்பதால் ஒப்பந்தத்திற்கு வரமுடியாது என ஐக்கிய தேசியக்கட்சியினர் மறுத்து விட்டனர். சமஸ்டிக்கட்சியின் ஆதரவு இன்மையால் ஐக்கிய தேசியக்கட்சி சிம்மாசனப் பிரசங்கத்தில் தோல்வியடைந்தது. இந்நிலையின் போது எஸ்.ஜே.வி செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்.

'சமீபகால நிலைமை எந்தவொரு கட்சியும்
சிறுபான்மைச் சமூகத்தின் உணர்வுகளை புறக்கணிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய நிலையில் இல்லை என்பதை உணர்த்தியது.
ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்தில் இருக்க
தமிழரின் ஆதரவு தேவை என்பதை கற்பனை செய்யவில்லை'

சமஸ்டிக்கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட குறைந்தபட்ச நான்கம்சக் கோரிக்கையினை சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் தமது காலஞ்சென்ற கட்சித்தலைவர் பண்டாரநாயக்காவின் கொள்கையில் ஓர் அம்சம் தானே இந்த ஒப்பந்தம் என்று கூறி அதை ஏற்க உடன்பட்டார்கள். இந்நிலையில் சமஸ்டிக்கட்சித் தலைவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்கத்தயார் என அறிவித்தனர். மாற்று அரசாங்கம் அமைப்பதற்குப் பதிலாக, ஏப்பிரல் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடாத்த மகாதேசாதிபதி கட்டளையிட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1960 ஆடியில் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 75 ஆசனங்களைப் பெற்று தனித்து ஆட்சிசெய்யும் நிலையை பெற்றது. சமஸ்டிக்கட்சி 16 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் மூன்றாவது நிலையை அடைந்தது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவினைப் பெற்ற ஒரே கட்சி என்ற நிலையை மூன்றாவது தடவையாக உறுதிப்படுத்தியது.

யூலை பொதுத் தேர்தலில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிக பெரும்பான்மையைப் பெற்றது. சமஸ்டிக்கட்சியின் ஆதரவு இன்றி அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு இருந்தமையால் சமஸ்டிக்கட்சியினரின் நம்பிக்கைகள் நிறைவேறவில்லை. சிங்கள மக்களுக்கு அது கட மைப்பட்டால் சமஸ்டிக்கட்சியினது உடன்படிக்கையை அது கைவிட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அதனுடைய மொழிக் கொள்கையை சிங்களம் மட்டும் அரசகரும மொழியை நடைமுறைப்படுத்தியது. 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தைக் கவனியாது புறம் தள்ளியது. பிராந்திய மொழியாகக் கூட அரசாங்கம் அங்கீகரிக்கத் தவறியதோடு தமிழ்ப்பிரதேசத்தில் சிங்களம் நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென பிரகடனப்படுத்தியது. சிங்களத்தை நீதிமன்றங்களின் ஒரேயொரு மொழியாக நீதிமன்றம் சிங்களத்தை மட்டும் உபயோகிக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்விரு சட்டத்தையும் உடனடியாக உருவாக்குவதற்கு அரசாங்கத்தின் மீது எதிர்தரப்பினரின் குற்றச்சாட்டுகளே காரணமெனலாம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமிழர்களுடன் இரகசிய உடன்பாட்டின் மூலம் தியாகம் செய்ய ஆயத்தம் செய்கின்றார்கள் என்ற ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிங்கள பௌத்த தீவிரவாதிகளினதும் கண்டனத்தைச் சமாளிக்கவே சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை திடீரென வற்புறுத்தியதற்கான காரணமாயிற்று.

1960ஆம் ஆண்டில் அரசாங்கத்தினை அமைத்துக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி யானது இரு வகையான பிரச்சினைகளை முக்கியமாக எதிர்நோக்கியது என ஜேம்ஸ் ஜ/ப் (James Jupp) கூறுகின்றார்.

1. கத்தோலிக்க பாடசாலைகளை தேசியமயவாக்கம் செய்தமையால், கத்தோலிக்க மக்களிடமிருந்து தோன்றிய எதிர்ப்பு

2. அரசகரும மொழி சிங்களம் என்பதை சமஸ்டிக்கட்சி எதிர்த்துப்போராட்டம் நடத்தியமை.

மொழியே ஒரு இனத்தின் இன அடையாளமாகவும், இனக்குழுவின் தனித்துவத்தையும் வெளிக்கொணரும் அம்சமாகும். இந்தவகையில் தமிழ் பேசும் மக்களின் மொழிப் பிரச்சினையே எல்லாப் பிரச்சினைகளையும் விட முக்கியத்துவம் வாய்ந்ததும் அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியதுமாகும். இது நிரந்தரமாக சிங்களவர்களில் இருந்து தமிழர்களை பிரித்தது.

சமஸ்டிக் கட்சியினருக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கும் இடையே குறைந்தபட்சக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கை முன்வைக்கப்பட்டு பேச்சுக்கள் நடைபெற்ற போது, சுதந்திரக்கட்சி பிரதிநிதிகள் பிரஜாவுரிமை மாற்றங்களை நிராகரித்ததோடு ஏனைய நிபந்தனைகளில் சிறுமாற்றங்களை ஏற்படுத்த முனைந்தனர். சிக்கலான மொழி விடயத்தில் இரு சாராருக்கும் இடையே உடன்பாடும் ஏற்பட்டிருந்தது. ஆனால் தேர்தலின் பின் சிங்களம் மட்டும் உத்தியோக மொழிச்சட்டம் இயற்றப்பட்டு, மொழி சம்பந்தமான உடன்பாட்டில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக சிங்களம் மட்டும் மிக கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. இந்த மொழி சம்பந்தமான முன்னேற்றங்களை தடுக்க தங்களிடமிருந்து கடைசி ஆயுதமான முழு அளவிலான ஒத்துழையாமை இயக்கத்தை தமிழ்ப்பகுதிகளில் ஆரம்பிக்க தீர்மானித்தார்கள்.

பெரும்பான்மைப் பலத்தால் நசுக்கப்பட்டு உரிமைகளை இழந்த சிறுபான்மையோருக்கு மீண்டும் அவ்வுரிமைகளைப் பெற்று, விடுதலை அடைவதற்கு ஒரேயொரு வழி காந்தியடிகள் காட்டிய சத்தியாக்கிரகப் போராட்டமே என்பதனை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்தமையால் அப்போராட்ட அணுகு முறையையே பின்பற்றினர். 1957 திருமலை மகாநாட்டிலும், 1959 வவுனியா மகாநாட்டிலும், 1961 யாழ்ப்பாண மகாநாட்டிலும் தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு நேரடி நடவடிக்கையில் இறங்குவது தவிர்க்க முடியாதது எனத் தீர்மானிக்கப்பட்டது. 1961 கட்சியின் தேசிய மகாநாட்டில் பேருரையாற்றிய மு.இராசமாணிக்கம்

> 'எமது மாகாணங்களில் சிங்களத்தைத் திணிக்கும்
> ஆட்சியாளரின் அக்கிரமத்தை எதிர்த்து சாத்வீக
> ஒத்துழையாமையையும், சட்ட மறுப்பு இயக்கத்தையும்
> மேற்கொள்ள, எமது கட்சியின் நடவடிக்கைக்
> குழு தீர்மானித்திருக்கின்றது' எனக் கூறினார்.

1961ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் தனிச்சிங்களச் சட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. அதன்பொருட்டு சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். செல்வநாயகத்தின் தலைமையில் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் நின்று அரசாங்க ஊழியர்களுக்கு சிங்கள மொழியில் கருமம் ஆற்ற வேண்டாம் என்ற வேண்டுகோளை துண்டுப்பிரசுரங்கள் ஆக விநியோகிக்கப்பட்டது. கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கையாக 1961ஆம் ஆண்டு மாசி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணக் கச்சேரி வாயிலின் ஊடாக யாரும் கச்சேரிக்குள் செல்லவிடாது தடுத்து தமது சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்தனர். நேரடி போராட்டம் ஆரம்பித்த போது செல்வநாயகம் விடுத்த அறிக்கையில்

> 'எங்கள் நேரடி நடவடிக்கையின் விளைவுகளை எதிர்கொள்ள
> நாங்கள் தயாராக இருக்கின்றோம், விளைவுகள்
> பாரதூரமானவையாக இருக்கலாம். இது தவிர வேறு வழியில்லை.'

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது முக்கியமாக மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, கச்சேரிகளின் வாயில்களின் முன் சத்தியாக்கிரகப் போராட்டங்களை கட்சித் தலைவர்கள் முன்நின்று நடாத்தினர். சத்தியாக்கிரகிகள் முக்கியமாக அலுவலக பாதைகளை தடை செய்வதுடன் தமிழ் பகிரங்க சேவையாளர்களிடம் சேவையாற்ற வேண்டாம் என வேண்டுகோளை விடுவதன் மூலம் தமிழ்ப்பகுதியில் ஒரு ஸ்தம்பித நிலையடையச் செய்தனர். 1960 பங்குனியில் அரசாங்கம் இராணுவத்தையும், கடற்படையையும் தமிழ்ப்பிரதேசங்களுக்கு அனுப்பியது. மறுபுறம் தமிழ்மக்கள் மீது பெரும் பொருளாதார அழுத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் மானியமுறை அரிசி விநியோகத்தை தடுத்தும், சம்பள உயர்வை வழங்காதும், ஓய்வூதியத்தை நிறுத்தியும் இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அரசாங்கம் முயற்சித்தது. ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் முயற்சி தோல்வியடைந்தது.

சத்தியாக்கிரகத்தை முறியடிக்க அரசாங்கம் மற்றுமோர் தந்திரோபாயத்தை கையாண்டது. செல்வநாயகத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்துமாறு நீதி அமைச்சர் சாம்.பி.சி.பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார். 1961 சித்திரை 5ஆம் திகதி நடைபெற்ற போது மொழிவிடயத்தில் ,இரு சாராரிடையேயும் கருத்து ஒருமைப்பாடு ஏற்படாமையால் பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடிவடைந்தது. ஆயினும் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்றது. எதுவித முன்னேற்றமும் இல்லாததால் சமஸ்டிக்கட்சியினர் மற்றுமொரு தந்திரோபாயத்தை பயன்படுத்தினர். சத்தியாக் கிரகப் போராட்டத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர். 1961 சித்திரை 14ஆம் திகதி 'தமிழ் அரசு தபால் சேவை, ஆரம்பிக்கப்பட்டது. இந்நடவடிக்கை 'அரசுக்குள் ஓர் அரசு நிறுவப்படலாயிற்று' சு.நடராசா சமஸ்டிக்கட்சியின் அஞ்சல் அதிபர் நாயகமாக யாழ்ப்பாணக்குடா நாட்டில் ஒரு தபாற் சேவையை நிறுவி நடத்தினார். அத்தோடு காணி விநியோக அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது. தமிழ் பேசும் விண்ணப்பதாரருக்கு காணி விநியோகிக்கப்பட்டது, தமிழ் பேசும் பிரதேசங்களில் சிங்கள அரசாங்கத்தின் ஆணை சிதைந்தது. பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திற்கெதிராக அனைத்திலங்கைத் தமிழ்ச் சத்தியாக்கிரகம் ஒன்று உருவம் எடுக்குமோ என ஒரு கணம் தோன்றியது. பிரதேசங்களில் ஒரு ஸ்தம்பித நிலைக்கு கொண்டு வந்த குடியியல் ஒத்துழையாமை இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இலங்கை முழுவதும் அவசரகால நிலையையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 48 மணி நேர ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தியது. சமஸ்டிக் கட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டும் கட்சி தடைசெய்தும் ஸ்தம்பித நிலையை முடிவுக்கு கொண்டு வந்தது.

1960ஆம் ஆண்டு சித்திரை 17ஆம் திகதி அமுல்படுத்திய அவசரகாலநிலை 743 நாட்களுக்குப் பின் நீக்கியது. இந்த அவசரநிலைக் காலத்தில் தேசத்தின் பொருளாதார நிலை உயர்த்துவதிலும் இலங்கையை சிங்கள மயமாக்குவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியது. சிங்கள மொழியில் தேர்ச்சியில்லாத பகிரங்க சேவையில் இருந்த பல தமிழர்கள் வருடாந்த சம்பள உயர்வு வழங்குவது தடை செய்யப்பட்டது. சேவையில் இருந்து ஓய்வில் அனுப்பப்பட்ட வர்களில் மொழி விவகாரத்திலேயே தமிழர்கள் அதிகம் வஞ்சிக்கப்பட்டனர்.

தமிழர்கள் பலம்வாய்ந்த கருவியான சத்தியாக்கிரகத்தால் உத்தேச மொழிக் கொள்கையில் எந்த தளர்வும் ஏற்படவில்லை. தங்கள் மொழியுரிமைகளை பாதுகாக்கவும், அரசாங்கத்தின் பாரபட்சமான கொள்கைகளுக்கு எதிர்ப்பதிலும் தாம் ஒன்றுபட்டு நிற்பதாக தமிழ் பேசும் மக்கள் தெளிவாக வெளிக்காட்டினர். சிங்களம் மட்டும் அமுல்படுத்தியபோது சமஸ்டிக்கட்சியினர் அரச சேவையில் உள்ளோர் சிங்கள மொழியில் கருமம் ஆற்ற வேண்டாம் எனவும், சிங்கள மொழியை படிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டது. முக்கியமாக சிங்களம் போதனாமொழி என்ற ஏற்பாட்டால் தமிழ் மாணவர்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவதோடு எதிர்காலத்தில் சிங்கள மயமாக்கப்பட்டுவிடும் என சமஸ்டிக்கட்சியினர் அஞ்சினர்.

சமஸ்டிக்கட்சியினர் மறுபடியும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்து, அரசாங்கத்தின் பொதுத்துறைகளுடன் தமிழில் மட்டுமே தொடர்புகளை வைத்திருக்கும் இயக்கத்தினை ஆரம் பித்தது. இதுவே அதன் கடைசி சாத்வீகப் போராட்டமாகும். 1964 ஆவணியில் பண்டாரநாயக்கா அரசாங்கம் 1958 விசேட மொழிச்சட்டம் நடைமுறைப்படுத்த முற்பட்ட போது இந்த இயக்கம் கைவிடப்பட்டது. அதே நேரத்தில் அவ்வப்பிரதேச மொழிகள் மூலம் கருமங்கள் ஆற்றவும், நிர்வாகப்பகிர்வு ஏற்படுத்தவும், மாவட்ட சபைகள் கொண்டு வரவும் அரசாங்கம் எண்ணியது. ஆனால் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கம் 1964 மார்கழி பதவியிழக்க நேரிட்டதால் இவ் ஏற்பாடுகள் சட்டமாக்கப்படாமல் விடப்பட்டது துரதிஸ்டவசமானதேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியோடு இணைந்து சமஸ்டிக்கட்சியினர் முதற் தடவையாக தேசிய அரசாங்கத்தினை அமைத்தனர். இதில் 1958ஆம் ஆண்டு மொழிச்சட் டத்தையும், பண்டா- செல்வா ஒப்பந்த முக்கிய ஏற்பாடுகளை மட்டும் குறைந்த கோரிக்கைகளை உள்ளடக்க வேண்டுமென்ற சமஸ்டிக்கட்சியின் கோரிக்கையை ஏற்பதாக ஐக்கிய தேசியக் கட்சி உடன்பட்டதைத் தொடர்ந்து தனது கட்சி சேனநாயக்கா அரசாங்கமொன்றை பாராளு மன்றத்தில் ஆதரிக்கும் என்று செல்வநாயகம் மகாதேசாதிபதிக்கு அறிவித்தார். இதைத் தொடர்ந்து தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை யில் முதன்முறையாக மு.திருச்செல்வம் மந்திரியாக நியமனம் செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்கட்சிகளின் கண்டனம் இன்றி தமிழர் பிரச்சினையை தீர்க்க விரும்பம்காட் டியது. 1966இல் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தது. இது 1958 தமிழ்மொழி சட்டத்திற்கு அமைய எல்லாப்பிரமாணங்களும் வரையப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியது. 1966 தை மாதம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றது. (பிற்சேர்க்கை) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லா அரசாங்க பொதுக்காரியங்களும், பொதுப்பதிவுகளையும் தமிழில் செய்துகொள்வதற்கு இச்சட்டம் இடமளித்தது.

1968 மாவட்ட சபை நகல் மசோதா 24 மாவட்டங்களிலும் மாவட்ட சபை நிர்வாக சபைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. டட்லி - செல்வா இடையில் பேச்சுவார்த்தை பரஸ்பர உடன்பாட்டுக்கு வரும் இச் சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமென உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனாலும் அது பல குறைபாடுகளை கொண்டிருந்தது. முக்கியமாக குடியேற்றத் திட்டங்கள், நில அபிவிருத்தி என்பவற்றின் மீது மாவட்ட சபைகளுக்கு அதிகாரம் இன்மையாலும், மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவை அரசாங்கம் நிறைவேற்ற காலம் தாழ்த்தியமையாலும் 1968 இல் சமஸ்டிக்கட்சியினர் தேசிய அரசில் இருந்து வாபஸ் பெற்றதோடு டட்லியால் மாவட்ட சபைகள் கைவிடப்பட்டது. தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வந்தால் வடக்கு, கிழக்கு பிராந்திய சுயாட்சி மறுபடியும் பேசித் தீர்க்கலாம் என சமஸ்டிக் கட்சியினர் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் துரதிஸ்டவசமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இடதுசாரிகளும் இணைந்த ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றது.

## NOTES AND REFERENCES

### Chapter: 3


1. Wilson.A.J, Politics in Sri Lanka, 1947- 1973. The Macmillan press Ltd; London, 1974, PP:99- 101.
2. Wilson.A.J. The break- up of Sri Lanka, The Sinhala Tamil Conflict, University of Hawaii press, Honolulu, 1988, PP:48- 52.
3. Balakrishnan.N 'Some issues of a divided polity in Sri Lanka', presidential addresses 1992, Jaffna science association, Jaffna 1993, P:9
4. செல்வநாயகம்.எஸ்.ஜே.வி. 'முதலாவது மகாநாட்டுப் பேருரை' 1951 மேற்படி பக்கங்கள்: 4-5
5. செல்வநாயகம்.எஸ்.ஜே.வி. 'தீர்க்கதரிசன மிகு தலைமைப் பேருரை - 1949' இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெள்ளிவிழா மலர். 1974. பக்: 4.

6. தமிழ் மக்கள் தனியான தேசிய இனமாகும். இவர்கள் தொன்மையான வரலாற்றையும் இலக்கிய பாரம்பரியத்துடனான மொழி, இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் செறிவான நிலப்பரப்பில் நீண்டகாலமாக வாழ்வதாலும், தமிழ் வேறான தேசிய இனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையிலே சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டினால் மொழிவாரி சமஸ்டி அரசு ஏற்படுத்தவும், அவற்றின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் 1951ஆம் ஆண்டு மாநாட்டில் எடுக்கப்பட்டது.

7. De.Silva.K.M A History of SriLanka, Oxford University press, Delhi, 1981, P:496.
8. Keatney, Robert.N Communalism and Language in the politics of Ceylon. Duke University press, Durham, North Carllina, 1967, P:49.
9. 1952 பொதுத் தேர்தலில் சமஸ்டிக்கட்சியினர் தமிழ்மொழி, கலாசாரம், தமிழர் தாயகம் என்ற கோட்பாடுகளை முன்வைத்து போட்டியிட்டது. ஆயினும் இக்கருத்துக்கள் மக்களை கவருவதாக இருக்கவில்லை. இவர்கள் இரு ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது.
10. Kearney, R.N.Op:cit.P:57
11. அரசாங்க மொழிப்பிரச்சினை, லங்கா சமசமாஜக்கட்சி வெளியீடு, கொழும்பு, 1937 பக்:2.
12. Hansard, May, 24, 1944, P:748.
13. Ibid, PP:817.
14. Kearney, R.N. Op:cit. P:65.
15. Hansard, May 24, 1944. PP:810- 811.
16. Wriggins, 4, Ceylon, Dilemmar of a New nation. Princetion university press, princetion, 1960, PP:193- 201.
17. De Silva K.M Op:cit P:499.
18. ஆங்கிலக் கல்வியால் தமிழர்கள் அரச சேவைகளில் அதிகளவு வேலைவாய்ப்புக்களைப் பெற்றனர். 1940 சுய பாஷைக் கல்வியானது விரிவுபடுத்தப்பட்டமையால் வேலையற்றோர் தொகை அதிகரித்தது. இது அரசியல் பிரச்சனையாக தோற்றம் பெற அரசியல்வாதிகள் தமிழர்களுக்கெதிரான உணர்வலைகளை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தினர்.
19. Thambiah.J. "Ethnic representation in in Ceylon's Higher administrative service 1870 -1946" University of Ceylon review 2-3, (April – July) PP:130 – 133.
20. Mendis, C.G; Ceylon Today and Yesterday Associated News Papers of Ceylon, Colombo, 1963 P:49
21. ஜெயவர்த்தனா, குமாரி. இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள். குமரன் பதிப்பகம், சென்னை (தமிழாக்கம்) 1987. பக்:96.
22. Final report of the official language commission (sessional paper xxii, 1953) P:26.
23. Interim report of the commission higher education in national languages (sessional paper xxii, 1954) P:6.
24. Prime minister visit to Jaffna, Welcome address and reply. published by: The reception committee, Jaffna. (pamphlet) 1954. PP:1-8
25. தென் இலங்கையின் கிராமப் புறங்களில் சிங்கள பௌத்தம் முதன்மை நிலை அடைந்த போது அரசியல் நன்மைகளுக்காக இரு மொழிக் கொள்கையை கைவிட்டு, சிங்களம் மட்டும் என்ற கொள்கையை பின்பற்றியமையால் 1956 தேர்தலில் பண்டாரநாயக்கா அமோக வெற்றி பெற முடிந்தது.
26. Kearney, R.N. Op:cit. P:73
27. Ibid, PP;72- 74
28. ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சரவையில் சீ.சிற்றம்பலம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சீ.சுந்தரலிங்கம், எஸ்.நடேசன், வீ.நல்லையா, வீ.குமாரசாமி போன்றோர் வெவ்வேறு காலங்களில் அமைச்சர்களாக 1947 முதல் 1956 வரை இருந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. Weerawardana; I.D.S. Ceylon general election : 1956. M.D.Gunasena and Co. Ltd. Co-lombo, 1960, PP:13- 14.
30. Kearney, R.N. Op.Cit P:75
31. Weerawardana, I.D.S. Op:cit. P:100.
32. Ibid PP:11- 14.
33. De.Silva K.M Op:cit P:501
34. வன்னியசிங்கம்.கு, 'மூன்றாவது மாநாட்டுப் பேருரை - 1955' பக்கங்கள்:16- 17
35. மேற்படி பக்கங்கள்: 17- 18.
36. Brass, P.R. Language, religion and Politics in north India. Cambridge University press, London. 1974 PP:35640
37. De Silva, K.M Op:cit P:497
38. Weerawadana, I.D.S Op:cit P:19.
39. Wriggins,H Op:cit PP:356 – 369
40. Jupp.J Sri Lanka Third world democracy London, 1978 PP:768.
41. De.Silva K.M Op:cit PP:501- 502
42. Vittachi.T Emergency' 58 the story of the Ceylon race riots. Andre deutch, London. 1958. P:19.
43. சுதந்திரன் 20-03-1956.
44. 1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சமஸ்டிக்கட்சி 10 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. கிழக்கு மாகாணத்தில் கல்முனை, பொத்துவில், மட்டக்களப்பு, திருகோணமலை, வடமாகாணத்தில் மன்னார், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, கோப்பாய், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமோக வெற்றி பெற்ற கட்சியாக இது விளங்கியது.
45. De Silva,K.M Managing ethnic tensions in multi-ethnic Society: Sri Lanka 1880 -1985. University press of America, Lanham. 1986. PP:51- 53.
46. Cited in Kearney.R.N. Op.cit P:84
47. Hansard vol:24 cc:1106 - 1107
48. Hansard vol:24 cc; 1906- 1907
49. Hansard vol:24 col:939.
50. Hansard vol:24 col: 938
51. Wilson.A.J 'The Tamil federal party in Ceylon politics' Journal of common wealth politics studies. vol:IV No.2, July, 1966, Leiester university press, Amsterdam PP:113- 116.
52. Ibid: PP:113 -116.
53. Ponniah.S. Satyagraha and the freedom movement of the Tamils in Ceylon. Jaffna, 1963, PP:27- 23.
54. ஜெயவர்த்தனா.குமாரி மேற்படி பக்கம்:112
55. Manogaran.C Ethnic conflict and recomcilation in Sri Lanka. University of Hawaii press, Honolulu, 1987. P:52.
56. வன்னியசிங்கம்.கு 'நான்காவது மாநாட்டுப் பேருரை - 1956 மேற்கூறியவை பக் : 24.
57. சமஸ்டிக்கட்சியினர் தமது எதிர்ப்புக்களை ஜனநாயக செயற்பாடுகளுக்குட்பட்ட வகையில் வெளிப்படுத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாராளுமன்றத்தின் விவாதங்களின் போது சிறுபான்மையோரை பாதிக்கும் விடயங்களை தட்டிக் கேட்டது.

2. பாராளுமன்றத்திற்கு புறம்பாக சத்தியாக்கிரகப் போராட்டங்கள், பகிஸ்கரிப்பு, கீழ்ப்படியாமை, பேரணிகள் போன்றவற்றால் வெளிப்படுத்தியது.

58. வில்சன்.ஏ.ஜே. செல்வநாயகம் நினைவுப் பேருரை - 1981 யாழ்ப்பாணம். 1982 பக்கங்கள்: 11- 12

59. பெரும்பாலான சமஸ்டியாட்சி முறையின் கீழ் வெளிவிவகாரம், பாதுகாப்பு, நிதி, பொருளாதாரம், திட்டமிடல் என்பன மத்தியரசின் கீழ் காணப்படும். மாநில அரசுகள் மத்தியரசின் ஊடாகவே வெளிநாடுகளோடு தொடர்புகளை ஏற்படுத்துவதால், சிங்கள தீவிரவாதிகளும், அரசியல்வாதிகளும் சமஸ்டியின் தன்மைகள் பற்றி தவறான கருத்துக்களைப் பரப்பி சமஸ்டியமைப்பு முறையை நிராகரிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

60. சுதந்திரன் 12-05-1957.

61. அமிர்தலிங்கம்.அ. 'தியாக வரலாறு' மேற்படி பக்: 27.

62. First Step (திகதி அச்சகம் என்பன இடப்படாதது) இதில் தமிழ் மக்களிற்கு இந்த நாட்டில் எந்தப் பிராந்தியத்திலும் உரிமையில்லையென்றும் அவர்கள் பௌத்த சிங்கள மக்களின் மண்ணை அக்கிரமித்துக் கொண்டார்கள் என்றும் விளக்கப்பட்டிருந்தது.

63. Kearney.R.N Op:cit PP: 47 – 48 PP:83.

64. Manogaran.C Op:cit, PP:47- 48

65. ஜெயவர்த்தனா.குமாரி மேற்படி பக்:12

66. வில்சன்.ஏ.ஜே. மேற்படி பக்:12

67. Vittachi.T Op:cit P:35

68. ஜெயவர்த்தனா.குமாரி மேற்படி பக்:114

69. Kearney.R.N. Op:cit P:87

70. Arasaratnam.S Ceylon New Jersey, Prentice hall. 1964, P:124.


71. Ibid P:108

72. Manogaran.C. Op:cit P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




S.W.R.D.பண்டார நாயக்கா, வன்னியசிங்கம்,

தந்தை செல்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் சௌமியமூர்த்தி
தொண்டைமானுடன் தந்தை செல்வா





தந்தை செல்வா S.W.R.D.பண்டார நாயக்கா, இராஜதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் **04**

# தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகள்: 1956 - 1970

**4.0 தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகள் 1956 - 1970**

உத்தியோக மொழி பிரகடனம் பற்றிய ஆரம்ப நிலை சுயபாஷைக்கும் ஆங்கிலத்திற்கும் இடையில் தோன்றியதொன்று. சந்தர்ப்பவசமாக அது பின்பு சிங்கள மக்களிடம் என மாற்றப்பட்டது. உத்தியோக மொழி என்பது சிங்களவருக்கும் தமிழருக்கும் அவர்களது சுயபாஷைகளா அல்லது சிங்களம் மட்டுமா என உருப்பெற்றது. இவ்விடயத்தில் இனங்களுக்கிடையில் மொழியானது கூர்மையடைந்தது. ஏனெனில் மொழி இனங்களை வெளிப்படுத்தும் அடையாளமாகவும், அவர்களது கலாசாரத் தொடர்புகளை இணைக்கும் கருவியாகவும் இருந்தமையால் இவ்விடயம் இன முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்குமாக மிக முக்கிய ஓர் பிரச்சனையாக விளங்கியது.

சுயபாஷை என்பது இரு வேறுபட்ட அர்த்தத்தில் அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் சிங்களமும், தமிழும் என பொருள் கொள்ளப்பட்டது. ஆனால் பின் இந்நிலை மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் இது ஒரு பல மொழி நாடாக கருதப்பட்டு, சுயபாஷை என்பது தமிழ், சிங்கள மொழிகள் என்பதை ஏற்றுக்கொண்டனர். எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா கூறும் போது 'அதே பொழுது எமது மனதிலிருந்த கேள்வி ஆங்கிலத்திற்கெதிராக சுயபாஷைகள் என்பது தான். சிங்களம் எதிர் தமிழ் அல்ல. ஆகவே இது எமது பிழையான கருத்து என்றார். மொழிப் பிரயோகத்தில் சமநிலை என்பது சிங்களவர்களிடம் '50:50' என்ற ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் கோரிக்கையின் மறுவடிவமாகவே மொழிக்கொள்கை நோக்கப்பட்டது. இதனால் சிங்களவர்கள் மத்தியில் சுயபாஷையான் சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற கோரிக்கை ஒரு புதிய பரிமாணத்தை பெற்று குறுகிய காலத்தில் அது அரசியல் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டதுடன் இலங்கை பன்மொழி நாடு என்ற நிலை மாற்றப்பட்டது. ஒரு மொழி மட்டும் அரசியல் அங்கீகாரம் பெற்றமை மூலம் இலங்கையின் இரு பிரதான தேசிய இனங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றக் காரணங்களாகும்.

மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முதல் சட்டமாக்கிய விதி சிங்கள மொழி இலங்கையின் 'உத்தியோக மொழி' என்பதாகும். இது பாராளுமன்றத்தில் 1956



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு, ஆனி 14ஆம் திகதி சட்டமாக நிறைவேறியது. இச் சட்டத்தை மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்கள் ஆதரித்தும், லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிசக் கட்சி மற்றும் தமிழ் பிரதிநிதிகள் எதிர்த்தும் வாக் களித்தனர். சிங்களம் மட்டும் சட்டத்திற்கு 66 பேர் சாதகமாகவும், 29 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். எனினும் அதிக பெரும்பான் மையால் அது சட்டமாக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு 33 இலக்க உத்தியோக மொழிச்சட் டத்தின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங் கத்தால் அமுல்படுத்தப்பட்டதுடன் இலங்கை யரின் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் மேல்நாட்டு மயமாக இருந்த ஆங்கில மொழி என்பது முடிவுக்கு கொண்டு வரப்பட் டது. இவ்வாண்டு அரசகரும மொழிச்சட்ட மானது சிங்களத்தை மட்டும் இலங்கையின் தனியொரு மொழியாக்கியது. ஏனெனில் உத்தியோக நோக்கத்திற்கு சிங்களத்தைப் பயன்படுத்துவது சாத்தியமானதென பூரண மாக நம்பியதால் 1960 மார்கழி 31 வரைக்கும் ஆங்கில மொழியை அரச திணைக்களங் களில் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. இச்சட்டத்தில் அமைச்சர்கள் சிங்கள மொழியை மேற்குறிப்பிட்டதற்கு மாற்றாக நடைமுறைப்படுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும் எனக் கூறியது. இக்கட்டளை மாற்றங்களை நிர்வாகக் கட்டளை மூலம் செய்யக்கூடியதாயிற்று. அதற்கு உகந்த பிர மாணங்களை செய்யலாம் என கூறப்பட்டது. மாறாகத் தமிழ் மாவட்டங்களில் உத்தியோக நோக்கங்களுக்காக உபயோகிக்க எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

1956ஆம் ஆண்டு 33 இலக்க அரசகரும மொழிச் சட்டம் பண்டாரநாயக்காவினதும், மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டவை யாக இருந்த போதும், தேசிய சிறுபான்மைத் தமிழருக்கு எந்தவிதமான சலுகைகள் வழங்க முன்வரவில்லை. தமிழருக்கு அரச திணைக் களத்தில் தொடர்பு கொள்ள எந்த விதமான விசேட ஏற்பாடுகளும் கொண்டிருக்கவில்லை. ஆங்கில மொழி தெரியாத பெரும்பான்மை இனத்தின் உத்தியோக கரும அலுவல்களை தமது சொந்த மொழியில் நடத்துவதற்கு சிங் களம் மட்டும் சந்தர்ப்பத்தை வழங்கியது. அதே நேரத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெறாத ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற தமிழரை ஆங்கில மொழி உபயோகிப்பதில் இருந்து தடை செய்யப்பட்டது. ஆங்கில மொழி ஒரு புறம் அந்நிய மொழி என்பதாலும், மறுபுறம் கல்வி, தொழில் வாய்ப்பில் தமிழர்களுக்கு கூடிய நன்மை அளிப்பதாலும் ஆங்கில மொழி உபயோகம் தடை செய்யப்பட்டது. அரசியல் ரீதியில் இலாபகரமாக இருக்க வேண்டும் என்றால் தமிழர்களுக்குரிய நியாயமான கோரிக்கைகளை மறுக்க சிங்களத் தலைவர் கள் தயாராக இருப்பதாக தமிழ்த்தலைவர்கள் முதன் முறையாக உணர்ந்தனர். முதலில் ஐக்கிய தேசியக்கட்சியானது இரு மொழிக் கொள்கையை மாற்றித் தமிழர்களை ஏமாற்றி யது. பின்பு 1956இல் மக்கள் ஐக்கிய முன் னணி உத்தியோக மொழி மசோதாவில் தமிழரின் நியாயமான மொழிப் பிரயோக விதி களை நீக்கியது. இவை அனைத்தும் சிங்கள, அரசாங்கங்களின் மீது அவநம்பிக்கையைத் தோற்றுவித்தது.

இலங்கைத் தமிழர்களின் மொழி பாராளு மன்றத்தினுள்ளதும் அதற்கு புறம்பாகவும் விலக்கப்பட்ட முறையில் தாம் ஒரு தேசிய சிறுபான்மை நிலையில் அச்சுறுத்துவதாக இருந்தது. தமிழர்கள் தமது மொழி பாதுகாக் கப்பட வேண்டும் என்றும், தமது கலாசாரம் பேணப்பட வேண்டும், தமது பூர்வீக தாய கத்தில் நிர்வாகத்தை தமிழ் மொழியில் நடத்த உறுதியளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

1955ஆம் ஆண்டு சமஸ்டிக்கட்சியின் மூன்றாவது தேசிய மாநாடு திருகோண மலையில் நடைபெற்ற போது கட்சியின் தலை வரான கு.வன்னியசிங்கம் 'சிறுபான்மை யோரை வெகுவாக பாதிப்புள்ளாக்கிய பிரச் சினைகளுக்கு தீர்வாக ஒற்றையாட்சி முறை யின் கீழ் சில அடிப்படை பிரச்சினைகளுக்கு எமக்கு நீதி கிடைக்காது. ஆகவே தமிழ் பிர தேசங்களில் 'மாகாண சுயாட்சி' ஏற்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் அல்லது 'நாம் முற்றாகப் பிரிந்து செல்ல வேண்டும்'. எங்கள் குறைந்த பட்ச கோரிக்கை சமஷ்டியரசில் 'மாகாண சுயாட்சி' என்பதே ஆகும். மேலும் தன்னுடைய பேருரையிலே தமிழும் சிங்களமும் சரிசம அந்தஸ்து பெற்றால் இரு மொழிகளையும் எல்லோரும் கற்றல் வேண்டும் என விதி ஏற்பட வேண்டும். சுயபாஷை சட்டத்தின்படி சிங்களவர் சிங்கள மொழியிலும், தமிழர் தமிழ் மொழியிலும் கல்வி கற்பர். ஆங்கிலம் இரண்டாவது கட்டாய மொழியாகின்றது. சிங்களவர் தமிழை விரும்பினால் கற்கலாம். தமிழர் சிங்களத்தை விரும்பினால் கற்க லாம். எனவே சமஷ்டிக் கட்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது சமஷ்டியின் கீழ் 'மொழிவாரி மாகாண அமைப்பாகும்'. பல் தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் ஒவ் வொரு தேசிய இனத்தின் மொழி, கலாசாரம், தனித்துவம், பூர்வீக தாயகம் என்பவற்றை பேணுவதற்கு 'மொழிவாரி மாகாண' அமைப் பையே கோரினர். பல் தேசிய இனங்கள் வாழுகின்ற சுவிட்சலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் இம்முறை வெற்றிகரமாக செயற் படுவதாகவும் எடுத்துக்காட்டினர். காலனித் துவ ஆட்சியின் போது தமிழர்கள் உயர் பதவிகளையும், சலுகைகளையும் கொண்டி ருந்ததால் தமிழருக்கு எந்தவிதமான உரிமை களும், சலுகைகளும் வழங்கக் கூடாதென பௌத்த குருமார்களும் சிங்கள தீவிரவாதி களும் மக்களை எச்சரித்தனர். இந்தப் பின் னணியிலேயே இரு மொழிக் கொள்கைக்கு எதிரான கருத்துக்களும், பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. இரு உத்தியோக மொழி என்பதை நடைமுறைப்படுத்தினால் நாட்டைக் கூறு போடுவதாகும். சிங்களமும், தமிழும் ஒருவரின் மொழியை மற்றொருவர் கற்க வேண்டும். ஆகவே இரு உத்தியோக மொழி என்பது தேவையற்றது, விரும்பத்தகாத ஒன்று. அத்துடன் குடியேற்றவாத அரசினால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையோரின் சரியான அந்தஸ்தை ஏற்படுத்த சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்பதை பிர கடனப்படுத்துவதால் சரி என்ற கருத்து வலி யுறுத்தப்பட்டது. இதே போன்று சிங்களவர் சார்பான மற்றுமோர் வாதமாக 'சிங்களவர் வாழும் இலங்கைத் தீவின் எழுபது வீத மக்கள் சிங்களவர், எண்பது வீதமான பிரஜைகள் சிங்களவர். இலங்கைத் தமிழரின் அளவு சம அந்தஸ்து மொழிக்கு கொடுக்கக் கூடிய அளவு தொகையில்லை. ஆகவே தமி ழர் சிங்களவரின் பெரும்பான்மை நிலையை ஏற்பதுதான் நியாயமானது. என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தால் இலங்கைத் தமிழர் நம்பிக்கையின்மையை வெளிப்படுத் தினர். ஒவ்வொரு தமிழரின் நிலை ஆபத் தானது என்பதை தமிழர்கள் ஏற்றுக் கொண்டனர். இச்சட்டத்தால் தமிழ் மொழி பாதுகாக்கப்படும் என்பதற்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. சமஷ்டியால் 'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கு எதிர்ப்பு காட்டு வதன் மூலம் அம்மொழிச்சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியுமென நம்பியது. இதற்காக பல்வேறு போராட்ட உத்திகளை அது கையாண்டு மொழிக் கொள்கையில் சிங்கள அரசாங்கத்தினதும் மக்களினதும் மாற்றங்கள் நிகழுமென எதிர்பார்த்திருந்தது. ஆனால் மொழி விடயத்தில் சிங்கள மக்களி னது மனப்போக்கின் நெகிழாத்தன்மையை சமஷ்டிக்கட்சியினர் அவதானித்தனர். இந்நாட்டின் சிங்களம் மட்டும் சட்ட ஏற்பாடா னது. இந் நாட்டில், தமிழ் மொழியை அதற் குரிய இடத்தில் இருந்து நீக்குவதும், இந் நாட்டின் அரசியல், பொருளாதார, கலாசார வாழ்க்கையில் வெளியே தமிழர்களை தள்ளு வதாகவும் இருந்தது.

மொழி பற்றிய விடயத்தில் ஜீ.ஜீ.பொன் னம்பலம் வேறுபட்ட கருத்தினைக் கொண் டிருந்தார். 'ஆங்கிலம் தொடர்ந்தும் அரச கரும மொழியாக இருக்க வேண்டும். இது தமிழருக்கு கூடிய நன்மையாக இருப்பதோடு பாதுகாப்பாகவும் இருக்கும்' எனக் கூறினார். அத்தோடு 'தாய் மொழியின் கொள்கையானது நாட்டை பிளவுபடுத்தி விடும் என்றும் பல் கலைக்கழகங்களின் போதனை மொழியாக சர்வதேச மொழியான ஆங்கிலமே இருக்க வேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் வாழ்ந்த தமிழ்த் தலைவர்களும், பெரும்பான்மை தொழில்சார் தகைமை பெற்றோர், அரச ஊழியரும் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்தில் நாடு முழுவதும் பயன்படுத்த வேண்டும் என்பதை விரும்பவில்லை. ஏனெனில் ஒன்பது மாகாணங்களில் இரண்டு மாகாணங்கள் தமிழ் முதன்மை மொழியாக இருப்பதால் சிங்களப் பகுதியில் சிங்களமும், தமிழ் பகுதியில் தமிழும் பயன்படுத்துவதால், தமிழ் மொழி அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பெருமளவு குறையுமென அச்சம் தெரிவித்தனர். அரச கரும மொழிச் சட்டத்தால் இலங்கைத் தமிழர்கள் எல்லா வழிகளிலும் மோசமாக பாதிக்கப்பட்டனர். முக்கியமாக அவர்கள் பெற்றிருந்த அரச பதவிகளில் இருந்தும், பதவி உயர்வுகளினாலும் பாதிப்புக்குள்ளாகினர்.

சமஷ்டிக்கட்சியினர் நான்காவது தேசிய மாநாடு 1956ஆம் ஆண்டு ஆவணி மாதம் திருகோணமலையில் நடைபெற்றது. இம் மாநாட்டின் பேருரையாற்றிய கு.வன்னியசிங்கம் 'மொழி விடயத்தில் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி விட்டார் என்று பிரதமரை குற்றம் சாட்டினர்'. 'சிங்களத்தோடு சமமாக தமிழும் அரசகரும மொழியாகும் உரிமை வழங்காத எந்தச் சட்டத்தையும் தமிழ் பேசும் மக்கள் ஏற்க மாட்டார்கள்'. இப்பிரச்சினைத்தீர்வுக்கு 'சமஷ்டியமைப்பைக் கொண்ட ஐக்கிய இலங்கையின் ஓரங்கமாக விளங்கக்கூடிய மொழிவாரி மாநிலங்களமைத்து தமிழரசு நிறுவினால் மட்டுமே தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழியுரிமையை நாட்டுரிமை, குடியுரிமை முதலியவற்றை நிரந்தரமாக பாதுகாக்க முடியும்', என்றும் மொழி உரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் எங்கள் மொழியை பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் எங்கள் மாணவர்களை பல துறைகளிலும் முன்னேற்றி நம் வளத்தைப் பெருக்குவதற்கு உதவக்கூடிய ஒரேயொரு சாதனம் 'தமிழ் பல்கலைக்கழகம்' ஆகும். கட்சி சார்பற்ற வகையிலே 'பல்கலைக்கழக இயக்கம்' ஆரம்பிக்கப்பட்டு மொழியுரிமை பாதுகாக்க வேண்டும் எனவும் இம் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஆவணி 19ஆம் நாள் திருகோணமலையில் கூடிய சமஷ்டிக்கட்சியின் மாநாட்டில், இந்நாட்டில் 'இணைப்பாட்சி ஒன்றியம்' ஒன்றினை உருவாக்க இலங்கை அரசாங்கம் தவறுமாயின் சமஷ்டிக்கட்சியினர் நேரடி நடவடிக்கையில் இறங்குமென இம் மாநாடு பிரகடனம் செய்கிறது எனக் கூறிடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (பின்னிணைப்பு) 1957ஆம் ஆண்டு ஆவணி 20ஆம் நாளுக்கு முன் இந்நாட்டில் இணைப்பாட்சி ஒன்றியம் ஒன்றை உருவாக்க பிரதமரும் பாராளுமன்றமும் தவறுமிடத்து இவ்விலட்சியத்தை அடையக் கட்சி சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதெனவும் இம்மாநாடு தீர்மானிக்கிறது. ஒரு வருடம் முடிவதற்கு முன்னர் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டீ. பண்டாரநாயக்காவும், சமஷ்டிக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கும் இடையே 1957ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி சரித்திர பிரசித்தி பெற்ற உடன்படிக்கை கைச்சாத்தானது (பின்னிணைப்பு) இவ்வொப்பந்தத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் கட்டமைப்பில் பிரதான நிலையங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 'தமிழ் தேசிய சிறுபான்மையோரின் மொழி','வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழ்' பிராந்திய சபைகள் அமைத்தல் இதன் அதிகாரம், விவசாயம், குடியேற்றம், கல்வி ஆகிய அதிகாரங்களை உள்ளடக்கியதாகும். தமிழ் பகுதிகளில் குடியேற்றத்தை நிறுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதற்கேற்ப சத்தியாக்கிரகத்தை கைவிட சமஸ்டிக்கட்சி ஒப்புக் கொண்டது. 'பண்டாரநாயக்கா ஓர் இறுதித் தீர்வை காணமுடியுமென நம்பினார்', இது சிங்களவரின் நிலையை உறுதிப்படுத்துவதோடு தமிழரின் சந்தேகத்தை நீக்குமென்று நம்பினார்.

1956இல் இருந்து நடைபெற்ற மூன்று மாநாட்டிலும் சமஸ்டிக்கட்சியின் புதிய தலைவர் கு.வன்னியசிங்கம் 'தமிழ் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கை சமஸ்டியே என வற்புறுத்தி வந்துள்ளார். 1957இல் மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் ஐந்தாவது தேசிய மாநாட்டிலும் பிரதேச சபைகள் மூலம் அரசியல் அதிகாரங்களைப் பிரதேசங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் ஓரளவிற்கு மாகாண சுயாட்சிக் கோரிக்கை நிறைவேறும் என்று கூறியிருந்தார். பண்டா - செல்வா உடன்படிக்கையில் மொழிவிடயம், சமஷ்டிக்கொள்கை, குடியுரிமைப் பிரச்சினை போன்றவற்றில் நாங்கள் எவ்விதத்திலும் எங்கள் கொள்கையை சிறிது அளவேனும் விட்டுக் கொடுக்கவில்லை என வன்னியசிங்கம் தெரிவித்தார்.

ஒரு பல்லின சமூக அமைப்புடைய நாட்டில் பெரும்பான்மை இனத்தின் தயவில் எப்போதும் சிறுபான்மையினம் தங்கியிருக்க முடியாது. என்பதனை தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டிக்கட்சி உணர்த்தியது. சிறுபான்மையோர் தமது சொந்தப் பிரதேசத்தில் சுய மரியாதையோடு இருப்பதற்கு 'சமஷ்டியே' பொருத்தமானது என்பதனை எப்போதும் வலியுறுத்தி வந்தனர். சிங்களவர், தமிழர் மேலாண்மையை விரும்பாதது போலவே, தமிழரும் சிங்களவர் மேலாண்மையை விரும்பமாட்டார்கள். சமஷ்டிக் கோரிக்கை சிங்களவர்களுக்கு நியாயமாக இருக்கும். 'ஒரு புதிய சமஷ்டியில் சிங்களவரும் - தமிழரும் சம பங்காளிகளாக இருக்கும் முறையே சமஷ்டி, என்று வன்னியசிங்கம் கூறினார்.

ஒரு மத்தியரசின் கீழ் நாட்டில் சமாதானப்படுத்த இயலாத அலகுகளைப் பகுதிகளாக பிரித்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் இதை ஒரு சமஷ்டி மூலமே செய்யலாம். அரசாங்க அதிகாரப் பிரிவினையை ஏற்படுத்த வேண்டிவரும், சில அதிகாரங்களை மத்தியரசும் - சில அதிகாரங்களை மாநில அலகுகளும் கையாள்வது எனது கட்சி தனியான அரசை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார். 'சமஸ்டி பிரிவினை என அழைக்கப்படுவது தகாத பெயராகும். சமஷ்டி ஓர் ஐக்கியமாகும். சமஷ்டி அமைப்பின் கீழ் நாட்டின் மத்தியரசின் இறைமையை எடுத்துவிடாது சிறிய அலகுகளின் முழுமையைப்பேணிப்பாதுகாக்க உறுதியளிக்கப்படலாம். இலங்கையின் தென்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் ஆரம்ப தமிழ்த் தலைவர்களோடு இணைந்து ஐக்கியப்பட்ட இலங்கையை கட்டியெழுப்ப முயன்றனர். இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்தவர்களின் போக்குக்கு மாறாக சுயாட்சியுடைய மாகாண சபைகளைக் கொண்ட சமஷ்டிக் கோரிக்கை அரசியலில் பலமான ஒரு நிலையை பெற்ற போது கொழும்பிலும், தென் இலங்கையிலும் வெவ்வேறு காரணங்களுக்காக குடியேறியிருந்த சிறுபான்மையோர் தமது எதிர் காலத்தைப் பற்றிய அச்ச உணர்வு உள்ளவர்களாக காணப்பட்டனர். அவர்களின் எண்ணப்படி சமஸ்டி என்பது ஒரு பிரித்து வைக்கும் நிறுவன அமைப்பு என கருதினர். பல ஆண்டுகளின் பின்பே ஒரு சமஸ்டியமைப்பில் விசேடமாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் பின்பே சமஷ்டியின் கீழ் எங்கும் இருக்க முடியும் என அறிந்து கொண்டனர்.

அரசகரும மொழி சட்டம் உருவாக்கப் பட்டதைத் தொடர்ந்து நாட்டின் இரு பிரதான இனங்களிடையே முரண்பாடுகளும் கசப்புணர்வுகளும், வேற்றுமைகளுமே வளர்ந்து சென்றன. தமிழர்களின் ஒரு சாரார் மத்தியில் 'பிரிவினை' பற்றிய சிந்தனை தோன்றியதோடு அது பகிரங்கமாகவும் விடப்பட்டது. மறுபுறம் சிங்களத் தீவிரவாதிகள் தமிழர்களுக்கு எந்த வகையான சலுகைகளும் கொடுக்க தயாராக இல்லை என்பதனை வெளிப்படுத்தினர். இவ்வாறு இரு சாராரிடையேயும் தேசிய ஒருமைப்பாட்டில் இருந்து வெகுதூரம் விலகிச் செல்லும் போக்கையே அவதானிக்க முடிகின்றது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டு இரண்டு தினங்களின் பின்பு நடைபெற்ற ஐந்தாவது சமஷ்டிக்கட்சியின் மாநாட்டில் கு.வன்னியசிங்கம் உடன்படிக்கையின் சாதனை பற்றி எடுத்துக் கூறியுள்ளார். முக்கியமாக சிறுபான்மையோரை வெகுவாக பாதிப்புக்குட்படுத்தி வந்த பிரச்சினைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகாண இவ்வொப்பந்தம் முயன்றுள்ளது என்றார்.

தமிழ் பிரதேசங்களில் அரச ஆதரவோடு நடைபெற்று வந்த எல்லா வகையான குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்துவதன் மூலம் தமிழ் பிரதேசங்கள் பாதுகாக்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழிலேயே எல்லாக் கருமங்களும் நடைபெற அனுமதிக்கப்படுவதால் தனிச்சிங்களச்சட்டம் இங்கு செல்லுபடியற்றதாக முடியும்.

தமிழ்மொழி இந்நாட்டிலுள்ள தேசிய சிறுபான்மையோரின் மொழியென ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வாறான ஏற்பாடுகள் மூலம் 'தமிழரசு' நிறுவுவதற்கு அடிகோலியிருக்கிறோம், என்று கூறினார். இதே போன்று கருத்தைத் தான் செல்வநாயகம் தனது நண்பன் வில்மட்பெரேராவிடம் 'மாகாணக்கழகங்களும்', 'நியாயமான மொழிப் பிரயோக ஏற்பாடுகளுமே' தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்குமென அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஆகவே 1957 பண்டா - செல்வா ஒப்பந்தமே அக்கால தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமைந்திருக்க முடியும். ஆனால் துரதிஸ்டவசமாக ஒப்பந்த ஏற்பாடுகள் சட்ட அந்தஸ்தையோ அமுலாக்கத்தையோ கொண்டிருக்கவில்லை, என்பது துர்ப்பாக்கிய நிலையேயாகும்.

தமிழருக்கு ஒரு சமஸ்டி ஆட்சி வழங்குவது ஒரு சுதந்திர நாட்டுக்கு இட்டுச் செல்லும் என சிங்களவர்கள் அச்சமடைந்தனர். ஆகையால் தேசிய மட்டத்தில் 1956இல் இருந்து ஒற்றையாட்சித் தத்துவத்தை அதிகமாக பாதிக்காமல் எந்த அளவுக்கு சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கலாம் என்பது கேள்வியாய் இருந்தது. அதாவது தமிழ் தீவிரவாதத்திற்கு அதிகம் ஊக்கம் அளிக்காமல் தமிழருக்கு அதிக சலுகை வழங்குவது அதிக பிரச்சினையாக இருந்தது. எல்லா சிங்கள கட்சிகளும் தமிழ் பிராந்திய கொள்கைகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்பதிலேயே முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர். பல சந்தர்ப்பங்களில் அவை குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவும் பயன்படுத்த பின்னிற்கவில்லை.

பண்டா - செல்வா உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட சில வாரங்களின் பின் ஒரு நம்பிக்கையான சுபீட்சம் நிலவியது. ஏனெனில் சமஷ்டிக் கட்சியினர் மட்டக்களப்பில் நடைபெற்ற ஐந்தாவது மாநாட்டில் உடன்படிக்கைக்கு அங்கீகாரம் வழங்கினார்கள். அத்தோடு உடன்படிக்கையில் மொழிப் பிரச்சினை தீர்க்கப்படுமென சிங்களவரும், தமிழரும் நம்பியிருந்தனர். இவ்வாறான நிலையில் ஒப்பந்தத்திற்கு எதிரான குரல்கள் எழத் தொடங்கின. 'எக்சத் பிக்கு பெரமுன' சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகப் பயமுறுத்தியது. ஐக்கிய தேசியக் கட்சி 'ஒப்பந்தம்' நாட்டை இனரீதியாக பிரிப்பதாக பிரசாரம் செய்தது. பண்டாரநாயக்கா நாட்டைப்பிரிக்க உடன்பட்டுவிட்டார் என்றும் சிங்கள அரசகரும மொழி அந்தஸ்தை பலவீனப்படுத்தினார் எனக் குற்றம் சாட்டியது. இந்த எதிர்ப்புக்களின் மத்தியில் பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை தாமதப்படுத்தினார். இவ்வொப்பந்தம் செல்லுபடியாகாது என்று சிங்களத் தீவிரவாதிகளுக்கு உறுதியளிக்கும் முகமாக மோட்டார் வாகனங்களின் இலக்க அனுமதிப் பத்திரங்களில் 'சிங்கள ஸ்ரீ' என்ற எழுத்தை சேர்க்க வேண்டும் என கட்டளையிட்டார். இதற்கு மாறாக சமஸ்டிக் கட்சியினர் பிரதமரால் வெளியிடப்பட்ட எண்ணத்தில், தமிழ்ப்பகுதிகளுக்கு 'சிங்கள ஸ்ரீ' இடப்பட்ட தகடுகளைக் கொண்ட பேருந்துகள் அனுப்புவதை எதிர்த்து, எதிர்ப்பியக்கங்களை ஆரம்பித்தனர். சிங்கள கும்பல்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் எக்சத் பெரமுனாவின் 200 பிக்குகளால் பிரதமரின் இல்லத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டத்தினால் 1958 சித்திரை மாதம் பிரதமர் ஒருதலைப்பட்சமாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கைவிட்டார். ஏறக்குறைய இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் இருந்து சிங்கள அரசியல் வாதிகள் தமிழ்த் தலைவர்களுக்கு வாக்குறுதி வழங்குவதும் தேவையான போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தம் செய்வதும் பின் அதிலிருந்து விலகுவதும், வாக்குறுதிகளை மீறுவதும் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளன. இந்த வகையில் பண்டா - செல்வா ஒப்பந்தமும் ஒன்றாகும்.

பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை அமுல்படுத்த மறுத்தமையால் சமஷ்டிக்கட்சி ஏமாற்றம் அடைந்தது. ஒப்பந்தம் கைவிடப்பட்டதை தொடர்ந்து கட்சி தனது அடுத்த கட்ட நடவடிக்கைக்காக 1958ஆம் ஆண்டு வைகாசி மாதம் வவுனியாவில் கட்சியின் ஆறாவது தேசிய மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டின் இறுதியில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஒப்பந்தம் செய்தல், பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளல் என்பவற்றை நிறுத்திவிட்டு 'விடுதலைப் போராட்டம்' ஆரம்பிக்க வேண்டும். அதாவது சட்ட மறுப்பு போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

பண்டாரநாயக்காவால் உடன்படிக்கை கைவிடப்பட்டமையால் செல்வநாயகம் மிகவும் துன்பமடைந்தார். முதலிலே ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் என்ன செய்வார் எனக் கேட்ட போது தானும் தனது கட்சியும் இவ்விதமாக நேரம் கூடியதற்கு தாம் தயாராக இருப்பதாக கூறினார். கைவிடப்பட்ட செய்தி வெளிவந்ததும் துன்பம் அடைந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்ட போதும் தானும் தனது கட்சியும் ஆயத்த நிலையில் இருப்பதாக மறுபடியும் கூறினார். சிங்கள அரசிற்கெதிரான தமது ஏமாற்றத்தினை சமாதான முறையில் வெளிப்படுத்த ஒத்துழையாமை, குடியியல் கீழ்ப்படியாமை, குடியியல் எதிர்ப்பு போன்ற பாராளுமன்றத்திற்கு வெளியான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிங்கள தீவிரவாதிகளால் இனக்கலவரம் தூண்டப்பட்டு இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தமிழருக்கு விரோதமான சம்பவங்கள் இடம்பெற்றன. 1958இல் இனக்கலவரம் ஒன்றை வெளிப்படுத்தியது, 'தமது பூர்வீக தாயகத்தை விட தமிழருக்கு ஏனைய இடங்கள் பாதுகாப்பாக இருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்தியது. தொடர்ந்தும் இடம்பெற்ற கலகங்கள் தமிழர் தமது பூர்வீக தாயகத்தை சொந்தமாக பெற்றுக்கொள்ளும் தகுதியிலேயே தாம் தப்பிப்பிழைத்து இருந்தனர் என நம்பச் செய்தது.

1958ஆம் ஆண்டு கலகத்தை அடக்க அவசர காலச்சட்டத்தை பயன்படுத்தியது. சமஷ்டிக்கட்சியின் உறுப்பினர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இராணுவமும், பொலிசும் அடக்கு முறையின் மூலம் வன்முறையை கட்டுப்படுத்தியது. இதைத் தொடர்ந்து தமிழ் மொழி (விசேட ஏற்பாடு) மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சமஷ்டிக்கட்சி பிரதிநிதிகள் தடுப்புக் காவலில் இருக்கையில் இவ்வாறான மசோதா சமர்ப்பிக்கப்பட்டதை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டி இம்மசோதாவை எதிர்த்தனர். ஆயினும் இம் மசோதா 1958 புரட்டாதி 4ம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்றது. இச்சட்டம் 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடு) சட்டமென குறிப்பிடப்பட்டது. (பின்னிணைப்பு) 1956, 33ம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தில் சிங்கள மொழி இலங்கையின் ஒரேயொரு அரசகரும மொழியாக்கப்பட்டமையால் மேற்குறிப்பிட்ட கருத்தோடு முரண்படாத வகையில் தமிழ் மொழி பிரயோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது ஏற்புடையதாக உள்ளது எனக் கருதியமையால், 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தமிழ்மொழி விசேட ஏற்பாடு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. பண்டாரநாயக்கா மொழிப் பிரச்சினை தீர்விற்கான தனது ஆக்க வழி முறையை தனது கட்சி அங்கத்தவர்களுக்கு விளக்கினார். 'எழுபது சதவீதமான பெரும்பான்மையோரான சிங்களவரின் உரிமைகளை அங்கீகரிக்கும் வேளையில், சிறுபான்மையோரின் நிர்வாக, கல்வி விடயங்களில் அவர்களின் மொழி உபயோகிக்கும் உரிமை வழங்கும் என்பதே.

தமிழ் மொழி (விசேட ஏற்பாடு) சட்டமானது தமிழ்மொழியை போதனா மொழியாக ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியில் கற்பதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையை இவ் ஏற்பாடு வழங்கியுள்ளது. சமஷ்டிக் கட்சியினர் மொழிக் கொள்கையை ஒரு இனத்தின் பிரிக்க முடியாத தனித்துவமான கலாசார அடையாளமாக கருதினர். இதனால் தான் இக்கட்சியினர் தமது அரசியல் நடவடிக் கைகளில் பெரும்பாலான காலத்தை மொழி கொள்கைப் போராட்டங்களிலேயே செலவிட் டனர். மூன்றாவது கட்சியின் மாநாட்டில் வன்னியசிங்கம் சுயபாஷை திட்டத்தின்படி சிங்களவர் சிங்களத்தையும் தமிழர் தமிழை யும் கற்க வேண்டும் என்ற கருத்தை வெளிப் படுத்தியிருந்தார். பல்கலைக்கழகங்களிலும் தமிழ் போதனா மொழி ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ் மாணவர்கள் பகிரங்க சேவைகளில் சேர போட்டிப்பரீட்சை தமிழில் எழுத முடிந்தது. பகிரங்க சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிங் கள மொழியும் தேர்ச்சி பெற வேண்டும் எனக் கூறப்பட்டது.

தமிழ் மொழிப் பயன்பாட்டுச் சட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் குறிப்பிட்ட நிர்வாக சேவைகளுக்கென தமிழ்மொழி உபயோகம் என்பது இலங்கையின் சிங்கள மொழி ஏற்பாட்டிற்கு முரண்படாத வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதில் தெளி வின்மை காணப்படுகின்றது. இச்சட்டம் நிறை வேற்றப்பட்ட போது தடுப்புக் காவலில் இருந்த சமஷ்டி கட்சியினரும் ஏனைய சமூகத்தவரும் இந்த விசேட ஏற்பாட்டுச் சட்டம் தமிழ் பேசும் மக்களை இந்நாட்டின் இரண்டாந்தர பிரசை களாக கருதும் நிலைக்கு கொண்டு வந்துள் ளது எனக் கருதினர். 1958இல் பிரதமர் தமிழ் மொழி (விசேட ஏற்பாடு) சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய போது இது செல்வநாயகத்தின் ஒப்பந்த உடன்பாட்டின் ஓர் அம்சத்துடன் அமைவதாக கூறினார். அத்துடன் தமிழ்மொழியின் நியாயமான தீர்வில் தனக்கு கிடைத்த ஆணையையும் நிறைவேற்றுவதாகவும் அவர் வற்புறுத்தினார். ஆனால் இச்சட்டம் மேற்கூறியபடி வடக்கு, கிழக்கு மாகாணங் களில் தமிழை நிர்வாக மொழி ஆக்காமை யால் செல்வநாயகம் அக்கூற்றை மறுத்தார். தமிழ் அரச உத்தியோகத்தர்களின் மிகவும் மோசமான அச்சத்தை பண்டாரநாயக்கா நிறைவேற்றி இருந்தார்.

சமஸ்டிக்கட்சியின் கொள்கைகளோடு முரண்பட்ட ஒரு பிரிவினர் முக்கியமாக வவுனியா பிரதிநிதியான சீ.சுந்தரலிங்கம் '1956இன் பின் ஓயாது நிலவி வரும் இன முரண்பாடுகளுக்கு 'பிரிவினையே' தீர்வாக அமையுமென கூறினார். முக்கியமாக மொழிப் பிரச்சினைக்கு தீர்வாக அவர் கருதினார். மேலும் சுந்தரலிங்கம் தமிழ்மொழி சட்டத்தை குறை கூறியதோடு தமிழருக்கு கணிசமான சலுகைகளை பெற்றுக் கொடுக்கும் தகுதி சமஷ்டிக்கட்சிக்கு இருக்குமோ என்பது கேள் விக்குறி என்றார். சமஷ்டி அமைப்பதிலும் பார்க்க தமிழருக்கு தனியான அரசு அமைப் பதிலேயே தமிழர்களின் எதிர்காலம் உள்ளது. என்று கூறினார்.

1959ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ஆம் திகதி பண்டாரநாயக்கா எக்சத் பிக்கு பெரமுன காரியதரிசியான புத்திரகித்த தேரவினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து 1958 தமிழ் மொழி (விசேட ஏற்பாடு) சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. 1960 பங்குனி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்த வொரு கட்சியும் அரசாங்கத்தை அமைக் கும் பெரும்பான்மை இன்மையால் சமஷ் டிக்கட்சியின் ஆதரவினைக் கோரினர். இந்நிலையில் சமஷ்டிக்கட்சித் தலைவர் செல்வநாயகம் 'குறைந்தபட்ச கோரிக்கை' ஒன்றை முன்வைத்தார். முதலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுக்கள் நடைபெற்றன. இக்கோரிக்கைகள் பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு நிகரானது என கூறி இக் கோரிக்கையை ஏற்க மறுத்தது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதாக கூறினார். மாற்று அரசாங்கம் அமைக்கும் முயற்சி தோல்வியடைந்தமையால் மீண்டும் 1960 ஆடியில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் திருமதி பண்டாரநாயக்கா தனித்து அரசை அமைக்கும் ஆதரவு கிடைத்தமையால் சமஷ்டிக்கட்சியுடன் ஏற்படுத்திக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து சிங்கள மக்களுக்கு நாம் கடமைப்பட்டவர்கள் எனக் கூறி அதனுடைய மொழிக் கொள் கையை சிங்களம் மட்டும் அரசகரும மொழியை நடைமுறைப்படுத்தியது. 1958 விசேட ஏற்பாட்டுச் சட்டத்தை கவனியாது விட்டது. பிராந்திய மொழியாகக் கூட அரசாங் கம் அங்கீகரிக்க தவறியதோடு தமிழ்ப் பிர தேசங்களில் சிங்களம் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என பிரகடனப்படுத்தியது. சிங்களத்தை நீதிமன்றங்களில் ஒரேயொரு மொழியாக உபயோகிக்கக்கூடிய சட்டத்தை நிறைவேற்றியது. தமிழர்களுடன் இரகசிய உடன்பாட்டின் மூலம் தியாகம் செய்ய ஆயத்தம் செய்கின்றார்கள் என்ற ஐக்கிய தேசியகட்சியினதும் சிங்கள பௌத்த தீவிர வாதிகளினதும் கண்டனத்தை சமாளிக்கவே சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை திடீரென ஏற்படுத்துவதற்கு காரணமாயிற்று என்று கூறப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றியானது ஆரம்பத்தில் உற்சாகப்படுத்திய போதும் நிர்வாகத்தில் சிங்கள மொழியை மட்டும் மாற்றப்போவதாக புதிய அரசாங்கம் தீர்மானித்தது சமஷ்டிக்கட்சியினருக்கு உற்சாகம் இல்லாமல் போனதோடு தாம் ஏமாற்றப்பட்டதாகவும் கருதினர். சிங்களம் மட்டும் உத்தியோக மொழிச் சட்டத்தால் சிறுபான்மையோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டே வருகின்றனர் என்பதை உணர்ந்து கொண்ட சமஷ்டிக்கட்சியினர் மொழி உடன்பாட்டில் எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்பட வில்லை. அது மேலும் தீவிரமடைந்து செல்வ தோடு தமிழர் மொழி உரிமை பாதிக்கப்படு வதாகவும் பயந்தனர். மொழி தொடர்பாக முன்னேற்றங்களை ஏற்படுத்த தங்களிட மிருந்த கடைசி ஆயுதமான முழு அளவிலான ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்க தீர்மானித்தனர்.

1961இன் முற்பகுதியில் அரச உத்தி யோகத்தர்கள் அரச அலுவல்களை பகிஸ்கரிக்கும்படியும், சிங்கள மொழியில் அலுவல்களில் கடமை செய்ய வேண்டாம் என செல்வநாயகம் கச்சேரிக்கு முன் துண் டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். இதன் பலாபலன்கள் 'மின்சாரம் பாய்ந்தது' போன்ற தாகும்.

கிட்டத்தட்ட எல்லா அலுவலர்களும் இதில் சேர்ந்ததால் எல்லா சேவைகளும் ஸ்தம் பிதம் அடைந்தன. இப் போராட்டத்தில் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களில் இருபாலாரும் முழு ஆர்வத்தோடு கலந்து கொண்டு தமது முழு ஒத்துழைப் பினையும் வழங்கினர். இது யாழ்ப்பாணத் தில் ஆரம்பித்து வடக்கு, கிழக்கு மாகாணங் களின் முக்கிய நகரங்களில் இப் போராட் டம் பரவியது. இப்போராட்டத்தின் மூலம் வன்முறை மனோபாவமுடைய ஆக்கிரமிப் பாளரை எதிர்ப்பதற்கு 'குடியியல் ஒத்தழை யாமை' ஒரு வழி என செல்வநாயகம் நம் பினார். இந்த தந்திரோபாயங்களை பின் பற்றி ஆட்சியாளர்களின் போக்குகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதே இந்த உத்தி களின் தந்திரமாக அமைந்தது எனலாம். இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக 1958ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாட்டின்) கீழ் எல்லா அரச திணைக்களங்களோடும் தமிழ் மக்களை தமிழிலேயே தொடர்பு கொள்ள வேண்டும் என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட போது பல அரச திணைக்களங்கள் மொழி பெயர்ப்பில் அதிகளவு சிரமங்களை எதிர் நோக்கினர். ஆயினும் தொடர்ச்சியாக இந்த இயக்கம் அழுத்தங்களை மேற்கொள்ள தவறியமையால் இறுதியில் இது தோல்வியில் முடிந்தது.

1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெற்றாலும் அது பூரண அதிக பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக அது சமஷ்டிக்கட்சியோடு ஓர் இணக்க நிலை ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. இந் நிலையை உணர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குடியேற்றம், பூர்வீக தாயகம் சம்பந்தமாக செல்வநாயகத்துடனும், திருச்செல்வத்துடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்களை ஆரம்பித்து ஓர் இணக்க நிலையை ஏற்படுத்தியதோடு 1965ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி டட்லி சேனநாயக்காவுக்கும் - செல்வநாயகத்திற்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (பின்னிணைப்பு) இவ் ஒப்பந்தம் மேற்கொள் வதில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதிகளவு பங்கு பற்றினார். இவ் ஒப்பந்தம் 1957 பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் ஒரு சிறு திருத்தமாவே அமைந்தது எனலாம். சிங்கள மாகாணங்களிலிருந்த தமிழ் மக்கள் டட்லி சேனநாயக்கா மட்டுமே இனங்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர் என்று கருதியதோடு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீது அவ நம்பிக்கையும் வெறுப்பையும் காட்டினர். வடக்கு, கிழக்கு மாகாண தமிழர்களுக்கும், தங்களுக்கும் செல்வநாயகம் மத்தியஸ்தராக இருக்க கூடும் என்றும் இந்த கடமையை புத்திசாலித்தனமாக கொண்டு நடத்துவார் என்றும் நம்பினார்.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின் ஏற் பட்ட ஒப்பந்தத்தின் மூன்றாவது ஒப்பந்தமே டட்லி - செல்வா ஒப்பந்தமாகும். டட்லி சேனநாயக்கா கௌரவமும், நேர்மையும் உடையவர் என பெயர் பெற்றவராக இருந் தமையால் செல்வநாயகம் கூடிய நம்பிக்கை உள்ளவராக இருந்தார். ஆயினும் செல்வநாய கம் இவ்வொப்பந்தம் நிறைவேற்றப்படுவதை தான் எவ்வாறு நிச்சயப்படுத்த முடியும் எனக் கேட்ட போது டட்லி தனது முப்பது வருட அரசியலில் தான் கொடுத்த வாக்குறுதிகளை மீறவில்லை என்பதாலும் உறுதியாயிற்று. டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நான்கு முக்கியமான அம்சங்களும் நாட்டின் சிறுபான்மையோர் பிரச்சினைகளை நியாயமானளவு தீர்வு காண முயன்றுள்ளது வெளிப்படையே. முக்கியமாக தமிழர்களின் பூர்வீகமாக கருதப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றை தமிழிலே பதிவதற்கும் தமிழ் மொழி விசேட விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழே நீதிமன்ற மொழியாகவும் இருக்கும் என்பது ஒப்பந்தத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சமாகும். இதற்கேற்ப 1966ஆம் ஆண்டு தை மாதம் பாராளுமன்றத்தில் தமிழ் மொழி விசேட ஏற்பாட்டு பிரமாணங்கள் நிறை வேற்றப்பட்டது. இது 1966ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள் பிரமாணங்கள் என அழைக்கப்பட்டது. தமிழ் மொழி (விசேட ஏற்பாடு) பிரமாணங்களின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லா அரசாங்க பொது அலுவல்களுக்கும் பொதுப் பதிவுகளை திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் பேணிக்கொள்ள தமிழ் மொழியை உபயோ கிக்கலாம். இச் சட்டத்தின் அடுத்த ஏற்பாடு உத்தியோக ரீதியாக தமிழ் மொழி மூலம் கருமங்களை ஆற்றவும், தொடர்புகொள்ள வும் வழி வகுத்தது எனலாம். அத்தோடு எல்லா வகையான அரசாங்க பிரசுரங்கள் தமிழ் மொழியிலும் பிரசுரிக்கப்பட வேண்டும் எனவும் இவ் ஏற்பாடு எடுத்துக் கூறியது.

டட்லி - செல்வா உடன்படிக்கை ஏற்பாட் டின் பின் 1966ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாவது தேசிய மாநாட்டில் இ.மூ.வி நாகநாதன் தமிழ் மொழி (விசேட பிரமாண) ஏற்பாட்டினைப் பற்றி கூறும் போது 'சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தின் காலடியில் நசுக் கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் தன்மானத்தை பெருமளவில் இச் சட்டம் மீட்டுக் கொடுத்தது என்பது உண்மையே ஆயினும் இது அர சாங்கம் பொது விவகார நிர்வாகத்தைத் துரி தப்படுத்தவும் திறமையாக்கவும் முடியும் என்ற வகையில் தமிழ் பேசும் மக்களது நல வுரிமைகளை மாத்திரம் பேணுவது ஒன்றல்ல. நாட்டு மக்கள் அனைவரதும் நலனுக்குமே உகந்ததொன்றாகும்.' எனக் கூறியதோடு அரசாங்கத்திற்கும் பிரதம மந்திரிக்கும் இச்சட்டத்தை விரைபுபடுத்தும்படியும் அதற்கு தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பு உண்டு என்பதை இவர் இம் மாநாட்டில் வலியுறுத்தி னார். அத்தோடு நடைமுறைப்படுத்தும் போது சிங்கள தீவிரவாதிகளின் எதிர்ப்பால் சட்டம் கைவிடப்படுமே என்ற பயம் கலந்த நியாயமான அச்சம் காணப்பட்டது.

தமிழருடைய நியாயமான குறைபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நிவர்த்தி வேறுபாடுகளை நிவர்த்தி செய்யும் முதற்படியாக இருக்கும் என்ற நம்பிக்கையிலேயே சமஷ்டிக்கட்சியினரும் தமிழ் மக்களும் இவ்வேறுபாடுகளை ஏற்றுக் கொண்டனர். இதற்கு மாறாக கூட்டாக இருந்த கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் எக்சத் பெரமுனாவும், ஐக்கிய தேசியக்கட்சி தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கி விட்டதென்றும், அதனால் நாட்டின் செல்வத்தை சுரண்ட அனுமதித்துவிட்டன என்றும் குற்றம் சாட்டினர். தமிழர்களின் பொதுசேவைக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டால் தமிழர்கள் நாளடைவில் நாட்டை பொறுப்பேற்பர் என்றும் கூறினர். எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் வேலைநிறுத்தங்களை தூண்டியதால் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான குழப்பங்கள் ஏற்பட்டன. ஆயினும் தமிழர்கள் அமைதியாக இருந்து தமிழ் மொழிச் சட்டத்திற்கு ஆதரவாக இருந்தனர்.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மொழியை நடைமுறைப்படுத்துவதிலுள்ள கஸ்டத்தால் தமிழர்களை சாந்தப்படுத்துவதற்கான தமிழ் பிராந்திய மொழியாக காலம் தாழ்த்தியாக்கப் பட்டது. தமிழ் மொழி (விசேட பிரமாணங்கள்) சட்டமாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் வரவேற்பின் பேரில் 700 சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர். அரச திணைக்களங்களிலும், பொது இடங்களிலும் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பெயர்ப்பலகைகள் வைக்கப்பட்டிருந்தன.

டட்லி - செல்வா உடன்படிக்கையில் இரு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இரு தலைவர்களும் உடன்பட்டுக் கொண்டனர். தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்ட சபைகளை நிறுவி அதிகாரத்தைப் பரவலாக்குவது தமது கொள்கை என கூறி வந்தனர். சமஷ்டிக்கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு கல்முனையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட தீர்மானமாவது மாவட்ட சபைகள் நிறுவப்படும் என்ற தேசிய அரசின் அறிவிப்பை வரவேற்பதோடு அவற்றை நிறுவுவதற்கான சட்டங்களை அரசு கூடிய விரைவில் இயற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தயக்க நிலையோடும் கால தாமதத்தோடும் 1968ஆம் ஆண்டு மாவட்ட சபை நகல் மசோதா 24 மாவட்டங்களிலும் மாவட்ட சபை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. உடன்பாட்டு ஏற்பாடுகளுக்கு அமைய இச்சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமென கூறப்பட்டிருந்தது. இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளும் வேலைகளுக்கும் நிதி மந்திரியின் அங்கீகாரத்துடன் உள்ளடங்குவதாக இவ்வதிகாரங்களும் கடமைகளும் இருந்தன. இவ்வதிகாரம் வரையப்பட்டு இருந்ததுடன் அவை மத்தியரசின் வழிகாட்டலுடன் இருந்த போதும் மத்தியரசாங்கம் தமிழ் பகுதிகளுக்கு தேவையான பணத்தை ஒதுக்கினால் தமிழ் பகுதிகளில் கவனியாது விடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும். மாவட்ட சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டிருக்கத் தேவையில்லை. அரசாங்க அதிபர் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் தெரிவு செய்த பாராளுமன்ற உறுப்பினர், நியமன அங்கத்தவர், மாநகர சபை உறுப்பினர்கள், உள்ளூர் சபைகளின் தலைவர்களையும் கொண்டதாக இருக்கும். முன்பு கச்சேரிகளால் செய்யப்பட்ட கடமைகளை விஸ்தரிப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

மாவட்ட சபைகள் மாவட்ட நிலையில் மக்களுக்குப் பொறுப்பான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. டட்லி- செல்வா உடன்படிக்கையில் உடன்பட்டது போன்று மாவட்ட சபைகளுக்கு குடியேற்றத்திட்டங்களில் குடியேற்றவாசிகளை தெரிவு செய்வதற்கு அதிகாரம் இல்லாதிருந்ததுடன் நில அபிவிருத்தி, குடியேற்றம் ஆகியவற்றின் மீது அவற்றிற்கு அதிகாரம் இருக்கவில்லை. இந்த மசோதா சட்டமாயிருந்தும் கூட தமிழர்கள் வசித்த பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றும் நோக்கம் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968இல் சமஷ்டிக்கட்சியினர் தேசிய அரசிலிருந்து வாபஸ் பெற்றதோடு டட்லியால் மாவட்ட சபைகள் கைவிடப்பட்டன.

1966இல் தமிழ் மொழி பிரமாணங்களை அமுல் செய்த போதும் தமிழர்கள் கணிசமான பயனைப் பெறவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் உத்தேசிக்கப்பட்டது போன்று தமிழருக்கு பிராந்திய சுயாட்சி வழங்குமென தமிழர்கள் நம்பினர். பொதுவாக தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை பொருளாதாரத் திலும் பார்க்க அரசியல் தன்மை வாய்ந்ததாக இருந்தது.

ஒரு நாட்டின் தேசிய பிரதேச முரண் பாடுகள் கூர்மையடையும் போது அல்லது சிறுபான்மை இனங்களிடையே தேசிய தனித்துவத்தை வலியுறுத்தும் போது அதிகார கைமாற்றம் பற்றிய பிரச்சினை எழுகின்றது. அதிகாரப் பகிர்வு அல்லது அதிகார கைமாற்றம் என்பது மைய அரசில் இருப்பதனைப் பகிர்ந்து அளிப்பதாகும். இம் முறைகளைப் பின்பற்றியே பல உலக நாடுகள் தமது சிறுபான்மையோர் பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்த்துள்ளன. இலங்கையில் 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம், இவை இரண்டும் நிர்வாக பரவலாக்கல் முயற்சியாகவே அமைந்துள்ளன. நிர்வாக பரவலாக்கம் என்பது ஒரு அரசு தனது தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு உள்ளூர் மட்டங்களில் சில அமைப்புகளை ஏற்படுத்தி நிர்வாக கடமைகளை வழங்குவது ஆகும். இவ்விரு ஒப்பந்தங்களும் நாட்டில் ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு ஓரளவு கையளிப்பதன் மூலம் சிறுபான்மையோர் பிரச்சினைகளை தீர்க்க முயன்று வந்துள்ளது. இம்முயற்சிகள் ஒப்பந்தங்களாகவோ அல்லது நகல் மசோதாக்களாகவோ கொண்டுவரப்பட்ட போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங் கத்திற்கு எதிரான சக்திகளின் எதிர்ப்பு காரணமாக கைவிடப்படுவது சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்துள்ளன. ஆனால் இது மறுபுறம் சிறுபான்மையோரின் பிரச்சினை கள் கூர்மையடையவே வழிவகுத்தது என லாம். இரண்டாவது நிலையில் ஒற்றையாட்சி அமைப்பொன்றின் கீழ் முதிர்ச்சியடைந்த இன முரண்பாடுகளுக்கு தீர்வுகாண முடியாத ஒரு நிலை தோன்றியது. ஒற்றையாட்சி முறை அதிகாரப் பகிர்விற்கு உசிதமானதல்ல. எனவே இலங்கை ஒரு பல்லின அமைப்பு டைய பல் தேசிய இனங்கள் வாழும் நாடு என் பதை அங்கீகரித்து ஒற்றையாட்சி முறைக்கு அப்பால் சென்று தீர்வு காண முற்பட்டிருக்கு மாயின் ஆரம்பத்திலேயே இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTES AND REFERENCES

**Chapter: 4**

Kearney, Robert.N, Communalism and Language in the politics of Ceylon, Duke University press, Durham, North Carolina. 1967, P:54

Bandaranaike, S.W.R.D; Towards a New Era, Department of information,, Colombo, 1961, P:388.

Kearney, R.N, Op.cit. P:56

The Official Language Act, No 33 of 1956. Government press, Colombo. PP: 39- 40

Manogaran, C; Ethnic Conflict and Reconciliation in Sri Lanka; University of u;awaii press, u;onolulu, 1987, P:47.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் தேசிய சிறுபான்மையினம் என்ற வகையில் அவர்களின் 1) தனித்துவ காலாசாரம் 2) மொழியுரிமை 3) வாழ்விடத்தில் நிர்வாக மொழி 4) ஆள்புலம் என்பவற்றைப் பேணவும், பாதுகாக்கவும் தேசிய சிறுபான்மையோருக்கு உரிமைகள் மறுக்கப்பட்டமையே பிற்காலத்தில் ஏற்பட்ட பல அனர்த்தங்களுக்கும் காரணமாகும்.

வன்னியசிங்கம்.கு.'மூன்றாவது தேசிய மாநாட்டுப் பேருரை - 1955, இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெள்ளி விழா மலர் . 1974, பக்கங்கள்: 18- 19.

வன்னியசிங்கம்.கு.மேற்படி, பக்:17.

Manogaran, C. Op.Cit, PP:47- 48.

Kearney, R.N; Op.Cit; P:60.

Ibid, P:64.

Wilson, Jeyaratnam.A S.J.V.Chelvanayakam and the crisis of Sri Lankan Tamil Nationalism, 1947- 1977.A Political Biography C.u;urst and Co. Ltd , London, 1994, P:52.

Kearney, R.N. Op.cit, P:100.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து வாக்களித்ததோடு, இன முரண்பாடுகளையும் ஆபத்துக்களையும் இச்சட்டம் ஏற்படுத்தும் என பாராளுமன்றத்தில் கூறினார். இவர் ஒற்றையாட்சியமைப்பை வலியுறுத்தியமையால் ஆங்கில மொழியே தொடர்ந்தும் எல்லா நிலைகளிலும் இருக்க வேண்டும் என்றார். இம்மொழி ஏற்பாடு தமிழர்கள் அரச பதவிகளிலும் ஏனைய நிலைகளிலும் இலங்கை முழுவதும் மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பது இவரது வாதமாகும்.

Weerawardana, I.D.S; Ceylon General Election 1956; M.D.Gunasena and Co. Ltd; Colombo, 1960, PP:5-8

வன்னியசிங்கம்.கு 'நான்காவது தேசிய மாநாட்டுப் பேருரை - 1956'மேற்படி பக்கங்கள்: 23- 24.

மேற்படி பக்: 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ஆம் திகதி 'தமிழ் பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. இதன் முதல் தலைவராக சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கங்கள் 1) தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குதல் 2) தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் பாதுகாத்தல் 3) தமிழ் பேசும் மக்களின் பொருளாதார, சமூக நலவுரிமைகளை மேம்படுத்தல். இந்த நோக்கங்களை நிறைவேற்ற அரசியல் சார்பற்ற வகையில் ஓர் இயக்கமாக செயற்படும் என தீர்மானிக்கப்பட்டது.

Kearney, R.N Op.Cit, P:85

வன்னியசிங்கம்.கு 'ஐந்தாவது மாநாட்டுப் பேருரை - 1957'மேற்படி, பக்:35

மேற்படி, பக்:36.

மேற்படி, பக்:37

Wilson. A.J. Op.Cit, P:79.

சீ.சுந்தரலிங்கம் முதன் முறையாக பகிரங்கமாகவே 'பிரிவினைக் கோரிக்கையை 'முன்வைத்து அதற்காக போராடும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார்.
அதற்கு இரு வழிமுறைகளையும் கூறினார்.
இலங்கையின் ஒற்றையாட்சியில் இருந்து 'ஈழம்' என்ற தனிநாட்டைப் பிரித்தல்.
இதைப் பெறுவதற்கு 'ஆயுதம் போராட்டத்தை' மேற்கொள்ளுதல் ஆயினும் இவை அக்காலத்தில் நடைமுறைக்கு சாத்தியமாகவில்லை அல்லது முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

வன்னியசிங்கம்.கு, மேற்படி, பக்கங்கள்: 37- 38.

Wilson, A.J. Op.Cit, P:87.8

Wilson.A.J, 'The Tamil Federal party in Ceylon politics' Journal of common wealth political study. Vol:IV, No. 2, Leicester University press, Amsterdam. July, 1966, P:101.

Wilson.A.J. Op.Cit, P:87.

'ஆறாவது தேசிய மாநாட்டுத் தீர்மானம் - 1958' பக்:21
ஒப்பந்தங்களினாலோ, அல்லது பாராளுமன்ற நிகழ்ச்சிகளினாலோ எதனையும் சாதித்து விடமுடியாது. விடுதலை பெற வேண்டுமாயின் அகிம்சை வழிப்போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

Wilson.A.J. Op.Cit, P:88.

Vittachi, Tarzie. Emergency ' 58; Andre Deutsch, London, 1958, P: 105.

Kearney.R.N. Op.Cit, P:55.

Manogaran.C, Op.Cit, P:87.

Wilson.A.J. Op.Cit, P:89.

சுந்தரலிங்கம், செ 'ஈழம்: ஈழத்தின் ஒற்றுமை முன்னணி பூர்வீக ஈழம், (துண்டுப் பிரசுரம்) கீரிமலை, யாழ்ப்பாணம். 1959.

1960 பங்குனி மாதம் 30 ஆம் திகதி செல்வநாயகம், ஐக்கிய தேசியக் கட்சித்தலைவருக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தலைவருக்கும் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய 'குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சக் கோரிக்கையை முன் வைத்தார்.'
பிரதேச சுயாட்சி 2) சம அந்தஸ்து தமிழ் மொழிக்கு கொடுத்தல்
இந்திய வம்சாவழித் தமிழருக்கு குடியுரிமை 4) பாரம்பரிய பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுத்துதல்.

Manogaran.C, Op.Cit, P:96.

Kearney.R.N, Op.Cit, P:108.

Wilson.A.J, Op.Cit, P:95.

Ibid, PP:104 -105.

Tamil Lanuage (Special provisions) Regulations, 1966. P:14.

'பத்தாவது தேசிய மாநாட்டுத் தீர்மானம் - 1968 P:14.
தீர்மானம் 1: சமஸ்டியே இந்நாட்டிற்கு வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் தீர்மானம்.

தீர்மானம் 2: தமிழ்மொழி விசேட ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கில் உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தீர்மானம் 3: தமிழ் பேசும் மக்களுக்கென கிழக்கு மாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைத்தல்

தீர்மானம் 4: மாவட்ட சபை சட்டங்களை உடனே கொண்டு வருதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரும்புமனிதன் இ.எம்.வி.நாகநாதன், தந்தை செல்வா,
S.W.R.D.பண்டாரநாயக்கா.



வன்னிய சிங்கம், தந்தை செல்வா, S.W.R.D.பண்டார நாயக்கா,

இராஜதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் **05**

# தனியரசு பற்றிய எண்ணக்கருவின் தோற்றம்

**'தனியரசு' பற்றிய எண்ணக்கருவின் தோற்றம்**

**1950**களின் நடுப்பகுதியளவில் ஏற்பட்ட அரசகரும மொழி பற்றிய விடயமானது இரு பிரதான இனங்களுக்கிடையே ஓர் தாக்கமான பிளவை ஏற்படுத்தியது. இம் மொழிச்சட்டத்திலிருந்து இரு பிரதான இனங்களுக்குமிடையே முரண்பாடுகளும், சந்தேகங்களும் வலுப்பெற்ற போது பிரிவினை பற்றிய கருத்துக்கள் தோற்றம் பெற காரணமாயிற்று. மொழி விடயம் கூர்மையடைந்த காலத்திலிருந்து பிரிவினை பற்றிய கருத்துக்கள் ஒரு சில தமிழ் பிரமுகர்களால் முன் வைக்கப்பட்ட போது அது அரசியலிலோ அல்லது தமிழ் பேசும் மக்கள் மத்தியிலோ அதிகளவு செல்வாக்கினைப் பெறவில்லையென்றே கூற முடியும். 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் திட்டம் உருவாக்கப்பட்ட பின்பே முக்கிய தமிழ்த் தலைவர்களால் பிரிவினைக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான அழுத்தங்களும் பல்வேறு நிலைகளிலிருந்து ஏற்பட்டது. பிரிவினைக் கோரிக்கை 1970களின் பின் பரிணாம வளர்ச்சி நிலையை அடைந்ததோடு தேசிய அரசியலும் அக்கொள்கை கூடியளவு தாக்கத்தினை ஏற்படுத்தியதோடு பிற்காலத்தில் தேசியமட்டப் பிரச்சினையாகவும் மாறியது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக மொழிக்கொள்கையில் தமிழ் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வந்தனர். மொழிக்கொள்கையில் ஏற்பட்ட ஏமாற்றமும் தோல்வியுமே தமிழ்த் தலைவர்களை பிரிவினை நோக்கிய கோரிக்கைகளை முன் எடுத்துச் செல்ல பிரதான கருவியாக விளங்கியது. 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பின் சமஸ்டிக் கட்சி, இலங்கையில் ஒரு சமஸ்டி ஐக்கியத்திற்குள் மொழிவாரியான சுயாட்சி அரசுகளை ஏற்படுத்துவதே தனது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. பதவியிலிருக்கும் அரசாங்கங்களிடமிருந்து மொழி உரிமை, சமூக அந்தஸ்து என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியுமென நம்பினர். ஆனால் இவற்றில் எதுவிதமான பயன்களும் ஏற்படவில்லை.

1964ஆம் ஆண்டு சமஸ்டிக்கட்சியின் செயலாளர் விடுத்த அறிக்கையில்

'தென் இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஏற்பட்டுவரும் நிகழ்வுகள் எங்களைத் தவிர்க்க முடியாது ஒருமுடிவுக்கு இட்டுச் செல்கிறது. அதாவது ஒற்று மையாக, ஒற்றையாட்சியில் இருக்கும் நம்பிக்கை கொஞ்சம், கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது, சிறிதாக அற்றுப்போகின்றது என்ற முடிவிற்கு எங்களை இட்டுச் செல்கின்றது. இதே மனப்போக்கில் சிங்களத் தலைவர்கள் சென்றால், நான் செல்வேன் நீங்கள் சமஸ்டி முறை நல்லதென அறிவுறுத்தல் செய்யும் போது, நாங்கள் அதிலும் பார்க்க நாட்டின் பிரிவினையைத் தான் தேர்ந்தெடுப்போம்' என்றார்.

1970களின் பின் இருபிரதான தேசிய இனங்களுக்கிடையே உடன்பாடோ அல்லது இணக்க நிலையோ ஏற்படமுடியாத போது, புதிய நிலைமாறு வடிவத்தை தமிழ் தேசிய வாதம் பெற்றுக் கொண்டது. மொழிவழித் தேசியவாதம், மொழி மதம், இனம், கலா சாரம் ஆகியவற்றுள் ஒன்று அல்லது பல சேர்ந்த நிலையில் ஏற்படுகின்றன. தமிழ் தேசிய வாதத்திற்கு கருவாக இருப்பது, தனித்துவமான கலாசாரம் வரலாற்றுத் தொன்மை கொண்ட ஆள்புலம். இவற்றுள் மிக முக்கியமாக 'வரையறை செய்யப்பட்ட ஆள்புலம் தமிழர்களின் வாழ்விடம்' என்ற கருத்தானது முக்கிய வடிவம் ஒன்றைப் பெற்று அரசியற் பிரச்சினைகளை கூர்மையடையச் செய்தது.

1972ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் திட்டம் பிரகடனப்படுத்தியதுடன், 'ஈழம்' என்று பிரிவினைக் கோரிக்கை மேலும் உந்தப்பட்டது. இந்தக் குடியரசு அரசியல் திட்டம் சிங்கள பௌத்த தேசியவாதிகளின் அபிலாசைகளைக்கொண்டதாக உள்ளடக்கியி ருந்தது. இதன் உற்பத்தி 1950களில் ஏற்படுத் திய சிங்களம் மட்டும் கொள்கையின் தாக் கங்களின் விளைவுகளுமாகும். இதில் தமிழ் பேசும் சிறுபான்மையோருக்கு, எந்த வொரு சலுகையும் காட்டப்படவில்லை. யாப்பு சிங்களத்தை உத்தியோக மொழியாக உறுதிப் படுத்தியதுடன், பௌத்தத்தை அரச மதமாக பிரகடனப்படுத்தியது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாலில் - மூன்று பெரும்பான் மையை கொண்டிருந்த போதும் அது எல்லா மக்களின் தேசிய ஏகோபித்த கருத்தாகக் கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கம் ஏகோபித்த கருத்தினை கொண்டிருப்பதாகக் கூறியது. தமிழ் அரசியற் கட்சிகள் அனைத்தும் இணைந்து 1971ஆம் ஆண்டு மாசி மாதம் 7ஆம் திகதி வல்வெட்டித்துறையில் அனைத் துக் கட்சி மகாநாட்டைக் கூட்டியது. இம்மகா நாட்டுத் தீர்மானத்திற்கமைய நிர்ணய சபைக்கு தமிழ் இனத்தின் சார்பில் ஆகக் குறைந்தபட்சக் கோரிக்கைகள் ஒன்பது முன் வைக்கப்பட்டிருந்தன.

அரசியல் யாப்பு நிர்ணய சபையானது முப்பத்தியெட்டு அடிப்படைத் தீர்மானங்களை முன்வைத்து ஒவ்வொன்றாகப் பரிசீலித்தது. முக்கியமாக சில அடிப்படைத் தீர்மானங்கள் மீது தமிழ்ச் சிறுபான்மைக் கட்சிகள் திருத் தங்கள் முன் மொழிந்தன. அவற்றின் ஒன்று கூட நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. முக்கியமாக, 1971 பங்குனி 15ஆம் திகதி புதிய அரசியல் அமைப்புப் பற்றிய இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் முன் மொழியப்பட்டது.

'சிறிலங்கா குடியரசு ஒற்றையாட்சி அர சொன்றாதல் வேண்டும்'

இதனைச் சமஸ்டிக்கட்சிப் பிரதிநிதிகள் தீர்மானத்திற்கான திருத்தமொன்றை முன் மொழிந்தார்கள். 'ஒற்றையாட்சியென்ற சொல்லை நீக்கி அதனிடத்தில் 'சமஸ்டி' என்ற சொல் இடப்பட வேண்டும்.' என்று கோரி னர். ஆனால் இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படவில்லை. நிர்ணயசபையில் வாக்கெடுப் பிற்கு விடப்பட்டு இத்தீர்மானம் நிறைவேற் றியது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் எந்த வொரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ முதன்மை கொடுக்கப்படவில்லை. அரசியல் திட்டத்தின் 29(2) சரத்துப்படி காப்பீடு வழங் கப்பட்டது. இலங்கை மதசார்பற்ற நாடாக விளங்கியிருந்தது. ஆனால் நிர்ணய சபை யானது, 'இலங்கைக் குடியரசிலே பெரும் பான்மை மக்களின் மதமாகிய பௌத்தம் அதற்குரிய இடம் வழங்குதல் வேண்டும். 5(4)ஆம் அடிப்படைத் தீர்மானத்தால் வழங் கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக் கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில் பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தை பாதுகாத்தலும், பேணிவளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.

இத்தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. 'இலங்கை மதசார்பற்ற நாடாக' இருக்க வேண்டுமென சிறுபான்மையோர் கோரினர். முக்கியமாக நான்கு சிறுபான்மை தமிழ்க்கட்சிகளும் நிறைவேற்றிய வல்வெட்டித்துறைத் தீர்மானங்களுக்கு அமைய 'இலங்கைக் குடியரசு சமயச்சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும்' பௌத்தம், இந்து கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டும் என்பதாகும். இத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டு, அரசாங்க தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு பெரும்பான்மையோரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

1971 ஆனி 24ஆம் நாள் பதினோராவது அடிப்படைத் தீர்மானம் அரசியலமைப்பு நிர்ணய சபையில் முன்மொழியப்பட்டது.

'எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியில் சட்டமாக்கப் பட வேண்டும். அவ்வாறு சட்டமாக்கப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழி பெயர்ப்பு இருத்தல் வேண்டும்'

இதில் திருத்தம் ஒன்று முன்மொழியப்பட்டு சிங்களமும் தமிழும்
(i) சட்டங்கள் ஆக்கப்பட வேண்டிய மொழிகளாதல் வேண்டும்.
(ii) இலங்கையின் அரச கரும மொழிகளாதல் வேண்டும்.
(iii) நீதிமன்றங்களின் மொழிகளாதல் வேண்டும். அத்துடன்
(iv) எல்லாச் சட்டங்களும் பிரசுரிக்கப்படவேண்டிய மொழிகளாதல் வேண்டும்.

இத்தீர்மானத்தையும், திருத்தத்தையும் நான்கு நாட்கள் வரை விவாதித்தனர். இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது திருத்தத்திற்குப் பதின்மூன்று பேர் சார்பாகவும் எண்பத்தியெட்டுப் பேர் திருத்தத்திற்கு எதிராகவும் வாக்களித்தனர். மொழி பற்றிய அடிப்படைத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சமஸ்டிக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே. வி.செல்வநாயகம் மொழி பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் உரையாற்றும் போது.

'In the circumstances....................... no useful purpose will be served by our continuing in the deliberations of this Assembly. By taking this step we mean no offence to anybody. We only to safeguard the dignity of our people. We do not wish to stage a demonstration by walking out. But when we leave the Assembly after the adjournment today. We will not come back to the Assembly'.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் மொழிக் கொள்கையில் பிரதான பின்னடைவு ஏற்பட்டது. டட்லி சேனநாயக்காவின் தேசிய அரசாங்கத்தில் மொழிக் கொள்கைக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டது. 1966ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட பிரமாணங்கள்) ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத் தேவைகளுக்கும் கல்விப் போதனாமொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் இந்நிலை முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் நிராகரிக்கப்பட்டது. புதிய குடியரசு அரசியல் திட்டம் கொண்டு வரப்பட்டமை மூலம் தேசிய மொழி அல்லது வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக மொழி சம்பந்தமான அம்சங்கள் எதனையும் குறிப்பிடாது சிங்களத்தை மீண்டும் தனி அரச கரும மொழியாக உறுதிப்படுத்திக் கொண்டது. இந்த யாப்பு சிறுபான்மையோருக்கு உத்தரவாதம் அளிக்கும் தன்மைகளை கொண்டிருக்கவில்லை என்பதோடு சிறுபான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையோரின் எதிர்ப்புக்கும் உள்ளானது.

முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில், பௌத்த மதமும் சிங்கள மொழியும் இணைந்த போது அதன் தாக்கத்தினைக் கண்டு சிறு பான்மையோர் அச்சம் அடைந்தனர். முக்கிய மாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதி கரிக்கப்பட்டு வந்த சிங்கள மொழிப் பாடசாலை கள், சிங்கள மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் நியமனங்கள் என்பவற்றை அரசாங்க உதவி யோடு துரிதமாக்கியது. இந்த நடவடிக்கை யானது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியதோடு தமது மொழியின் தனித்துவம் கலாசாரம் என்பவற் றைப் பாதுகாக்க முடியுமோ எனப் பயந்தனர். தென் இலங்கையில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவேயிருந்தது. முக்கியமாக சிங்கள மொழியின் தாக்கத்திற்குச் சிறுபான் மையோர் உட்பட்டனர்.

சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான் மையோருக்கிருந்த ஒரு சில பாதுகாப்புக் களையும் குடியரசு அரசியல் திட்டம் இல்லா மற் செய்ததுடன் சிறுபான்மையோரை பாதிக் கும் வகையில் அமைந்த அதன் பல சரத்துக் கள் மனித உரிமை மீறல்களாகவும் வர்ணிக் கப்படுகின்றது. இலங்கையின் முக்கிய சிறு பான்மையோரான தமிழ் பேசும் மக்கள் தமக் கென தனிநாடு ஒன்று கோரி நிற்பது நோக்கி உந்திச் சென்ற தலையாய காரணிகளுள் ஒன்றாக 1972 ஆம் ஆண்டு அரசியல் திட் டம் கருதப்பட்டது. அரசியல் திட்டத்தில் தமக் குரிய அந்தஸ்து வழங்கப்படாமையை சிறு பான்மைத் தமிழினம் உணர்ந்து கொண்டது.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியானது தமிழ்பேசும் மக்களின் அரசியலில் மிக முக்கிய காலகட்டமாகும்.

1. இவ்வாண்டு சமஸ்டிக்கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து 'தமிழ் ஐக்கிய முன்னணியை' (Tamil United Frount) உருவாக்கியது. முக்கியமாக தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தையும், அரசி யல் உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான அமைப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது.

2. இவ்வாண்டே தமிழ் ஐக்கிய முன்ன ணியால் தமிழ் இளைஞர்களை உள்ளடக்கிய 'தமிழ் இளைஞர் பேரவை' என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது.

3. இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி சமஸ்டிக்கட்சியின் தலைவர் செல்வநாயகம் பாராளுமன்றத்திலிருந்து தனது பதவியை இராஜிநாமாச் செய்து வெளியேறினார்.

இம் மூன்று நிகழ்ச்சியும் சமகாலத்தில் நடைபெற்றமை மூலம் தமிழர் அரசியலில் தன்மையில் புதிய அணுகுமுறையொன்றின் அவசியத்தை வலியுறுத்தி நின்றது.

1972 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 ம் திகதி செல்வநாயகம் பேரவை முதல்வரின் அனுமதியுடன் உரையாற்றினார். அவர் தமிழிலேயே உரையாற்றினார்.

'இந்த நாட்டில் சென்ற இருபத்தினான்கு ஆண்டுகளாக நடந்தவற்றை மனதிற் கொண்டு, தமிழ் மக்கள் இந்நாட்டில் ஓர் அடிமை இனமாக அழிவதா? அல்லது சுதந்திர மக்களாக வாழ்வதா? என்ற தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதே எனது கொள்கையாக இருக்கும்.

விடுதலை பெற்ற மக்களாக வாழவேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை நான் கேட்பேன். இந்தக் கொள்கையில் அரசாங்கம் என்னோடு போட்டி இடட்டும். நான் தோல்வியடைந்தால் என் கொள்கையை விட்டு விடுகிறேன். அரசாங்கம் தோல்வியடைந்தால் தனது கொள்கையையோ, அரசியல் திட்டத்தையோ தமிழ் மக்கள் ஆதரிப்பதாக கூறுவதை நிறுத்திவிட வேண்டும். என்று கூறித் தனது இராஜினாமாவைக் கொடுத்து வெளியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சிறுபான்மையோருக்கு எதிரான பிரசாரமானது 1970களில் தீவிரப்படுத்தப்பட்ட போது, சிங்கள பௌத்த கருத்தியல் அரசியல் யாப்பு மூலம் சட்ட அங்கீகாரம் பெற்றது. யாப்பின் 6ஆம் 7ஆம் சரத்துக்கள் பௌத்தம், சிங்களம் ஆகிய இரண்டு அம்சங்களுக்கும் யாப்பில் உறுதியை வழங்கியது. இந்த யாப்பானது 'சோசலிச ஜனநாயகம்' என்பதற்கு அழுத்தம் கொடுப்பதாகக் கூறியது. ஆனால் அதனுள் மறைந்திருந்தது சிங்கள பௌத்தத் திற்குரிய அம்சங்களே. சிறுபான்மையோருக்கு இவ்வரசியல் திட்டம் சோசலிசமாகவே, ஜனநாயகமாகவே அமையவில்லை. அது பெரும்பான்மையோரின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஒரு திட்டமாகவே அமைந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு வகையான அனர்த்தங்களுக்கும் இவ் யாப்பே காரணமாக அமைந்தன எனலாம்.

பல்கலைக்கழக உயர்கல்விக்கான அனுமதி கல்விப் பொதுதராதர உயர்தர வகுப்புக்களின் முடிவில் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். பல்கலைக்கழக அனுமதியில் மானிடவியல், சமூக விஞ்ஞானம் போன்றவற்றில் ஏற்கனவே சிங்களவர்கள் மேலாண்மை பெற்றிருந்தனர். சமூக மதிப்பும் உயர் தொழிலுமாகக் கருதப்பட்ட வைத்தியம், பொறியியல் ஆகியவற்றின் மீது சிங்களத் தீவிரவாதிகளின் கவனம் திசை திருப்பப்பட்டது. கொழும்பு, யாழ்ப்பாணப் பாடசாலைகளே திறமை அடிப்படையில் முன்னணியில் நின்றன. எனவே இன விகிதாசாரத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி கொண்டுவரப்பட வேண்டுமெனக் கோரினர். இக்கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கியது.

இனவாதக் கருத்துப்பரப்பும் இன்னொரு பகுதியினர் மாணவர்கள் இளைஞர்கள் பட்டதாரிகளின் பெற்றோர்கள் ஆவர். சிங்கள இளைஞர்களுக்கு உயர்கல்வி கௌரவமான தொழில்களை மறுக்கும் சதித்திட்டம் தமிழரால் தீட்டப்பட்டுள்ளது என இப்பிரிவினர் நம்பினர். எதிர்காலத் தொழில்களை நிர்ணயிக்கும் பல்கலைக்கழகப் போட்டிப்பரீட்சையில் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் ஆசிரியர்கள் உயர்ந்த புள்ளிகளை வழங்குகின்றார்கள் என்பது சிங்கள மாணவர்களினதும் ஆசிரியர் பெற்றோர்களினதும் இதயத்தில் வெடித்து எழும் பிரச்சனையாகின்றது, என்ற இனவாதக் கருத்துக்கள் தமிழர்களுக்கு எதிராகப் பரப்பப்பட்டது.

சிங்களத் தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழி மூலம் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்ட காலம் முதல் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் தமது கல்வியை மேற்கொண்டமையால் பல்கலைக் கழக அனுமதிக்கு அதிக அளவு போட்டி ஏற்பட்டது. மாணவர்கள் நன்றாக சித்தியடைந்தாலும் பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாத நிலை காணப்பட்டது. இதற்குப் போதியளவு வசதியின்மை காரணத்தால் வெவ்வேறு துறைகளுக்கும் அனுமதிக்கப்படும் பல் கலைக்கழகத்தில் மாணவர் தொகை வரையறுக்கப்பட்டே காணப்பட்டது. இந்த யதார்த்த நிலை புறக்கணிக்கப்பட்டு உண்மைக்குப் புறம்பாக தமிழ் மாணவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

1970ஆம் ஆண்டு மக்கள் முன்னணி பதவிக்கு வந்த போது பல்கலைக்கழக அனுமதி வெறுமனே திறமையடிப்படையில் மேற்கொள்ளப்பட்டால் அது தமிழ் மாணவர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதுடன், அநேக திறமையுடைய சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாத வராவர். 1970ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் சேர்க்கப்பட்ட 160 மாணவர்களில் 100 பேர் வரையில் தமிழ்ப்போதனாமொழி மாணவர்களே என்று வதந்தி நிலவியது. இது வளாகத்திலும், அரசாங்க மட்டத்திலும் இன உணர்வுகளைத் தூண்டியது. விகிதாசாரப்படி குறைந்த புள்ளிகள் (தகுதி காணும் புள்ளிகள்) சிங்கள போதனாமொழி மாணவர்களுக்குத் தீர்மானிக்கப்பட்டது. விசேடமாக தமிழ் மாணவர்கள் விஞ்ஞானத்துறைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மாணவர்களோடு ஒப்பிடும் போது அசாதாரணமுறையில் மிகத்திறமையாகச் செய்வதால் இவ்விரு சாராரின் பெறுபேறு களையும் இணையான முறையில் ஒப்பிட முடியாது என்பதனை ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்தது. கூடுதலான சிங் கள மாணவர்களை விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்ய, தேவையான நிபந்தனை களைக் குறைத்தனர். விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற குறைந்த பட்ச நிபந்தனைகளை சிங்கள மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

பல்கலைக்கழகத் தரப்படுத்தலானது தமிழ் இளைஞர்கள் மத்தியில் அதிகளவு உணர் வலைகளையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தி யது. மொழிவாரியான தரப்படுத்தல் ஆனது தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதும் மாண வர்களை அதிகளவு பாதிப்புக்கு உள்ளாக்கி யது. இந்நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்கும் வாய்ப்பு குறைக்கப்பட்டதோடு, அரசாங்கப்பதவிகளி லும் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்கும் மற்றும் ஓர் நடவடிக்கையாக இது அமைந்தது. உயர்கல்வி பெறுவதற்கு ஏற்பட்ட உடனடி அச்சுறுத்தலே தமிழ் இளைஞர்கள் உடனடியாகவும், உணர்ச்சி வசப்பட்டும் பிரிவினைக் கோரிக்கை முன் வைப்பதற்கும் காரணமாக இருந்தது எனக் கூறலாம். யாழ்ப்பாணத்தில் கல்வி மிக முக்கிய கருவியாகியது. உயர்கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் இது கருவியாக அமைந்தது. அரசாங்கங்களால் மேற்கொள் ளப்பட்ட கல்வியில் தரப்படுத்தல் வேலைவாய்ப் புக்களில் இனப்பாகுபாடு என்பன அரசாங் கத்திற்கெதிரான தமிழர்களின் உணர்வுகளை ஆழமாக்கத்தூண்டியது.

தமிழ் ஐக்கிய முன்னணி இளைஞர் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் உட்பட எதிர்ப்புணர்வுள்ள இளைஞர்கள் மிகவேக மாக அதிகரித்து வந்தமையும் தமிழர் பிரச்சினைகளுக்கு தீவிரமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தங்களும் தமிழ் ஐக்கிய முன் னணியை பிரிவினை நோக்கிச் செல்வதற்கு முக்கிய பலம்வாய்ந்த காரணியாக அமைந் தது. தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு துரிதமான நடவடிக்கை எடுக்கும் உணர்ச்சி கொண்ட சொற்பொழிவுகளை உள்ளடக்கிய கோரிக்கைகள் வளர்ச்சியடைந்தன. தமிழ் இளைஞர்கள் மீது செல்வாக்கு வைத்திருந்த தமிழ் ஐக்கிய முன்னணி அங்கத்தவர்கள் சிலர் 'தனியான தமிழ் அரசு' என்ற பலமான தீர்வை நோக்கி விரைந்து செல்லத் தூண்டினர். அத்தோடு பழமையான கொள்கைகளையும் பிற்போக்குத் தீர்வுத்திட்டங்களையும் கொண்ட தலைவர்களின் திட்டங்கள் தகுந்த விளைவுகளைத் தரவில்லை என்ற கருத்தும் இளைஞர்கள் மத்தியில் மேலும் எதிர்ப்பு மனப்பான்மையை தோற்றுவித்தது எனக் கூற முடியும்.

இளைஞர்கள் மத்தியில் தோன்றிய எதிர்ப்புணர்வையும் தீவிரவாதத்தையும் தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்தியது. இது மேலும் ஒருபடி உயர்ந்தது. தமிழ் மக்களின் அரசியல் எதிரியாக இளைஞர்களால் கருதப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தோடு தொடர்புடைய தமிழ்ப்பிரமுகர்களை தேசத்துரோகிகளாக இனங் காணப்பட்டதோடு அவர்களைக் கொலை செய்யும் அளவிற்கு இளைஞர்கள் ஜனநாயக முறைகளுக்கெதிராக வன்செயல் களில் ஈடுபடத் தொடங்கினர்.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற் றது. இதன் இறுதி நாள் நிகழ்ச்சியாக பொதுப்பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. இதில் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கையின் போது ஒன்பது பொது மக்கள் இறந்தனர். இதற்குப் பொறுப்பாகவிருந்த பொலீஸ் அத்தியட்சகரை சிவகுமார் என்ற இளைஞன் கொலை செய்ய முயற்சித்தபோது பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்ட போது அவர் தற்கொலை செய்து கொண்டார். இவ் வாறு 1970களின் ஆரம்பத்தில் பல அரசியற் பிரமுகர்களின் கொலைகளும், வன்செயல் களும் இடம்பெற்றன. இது மறுபுறம் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களை எதுவித விசாரணைகளும் இன்றி தடுப்புக்காவலில் வைக்க வழிவகுத்தது.

1970களின் ஆரம்பத்தில் பல காரணங் களினால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் எதிர்ப்பு மனப்பான்மையும் மூர்க்கத்தனமான போக்குமேற்படக் காரணங்களாயின. படித்த இளைஞர்கள் மத்தியில் அதிகளவு வேலைப் பிரச்சினை ஏற்பட்டமையால் அவர்களுக்கு ஏற்பட்ட விரக்தி அத்தோடு அரசாங்கத்தால் பாரபட்சமாக மொழி ரீதியான தரப்படுத்தல், இதனால் உயர்கல்வி பெறும் நிலை மறுக்கப்பட்டமை, சிங்கள அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டமை போன்ற பல்வேறு காரணிகளும் ஒன்றிணைந்து தமிழ் இளைஞர்களைத் தீவிர பிரிவினைக்கு வழி வகுத்ததெனலாம்.

இதே காலப்பகுதியில் பல தமிழ் தலை வர்களும் 'பிரிவினைக்கோரிக்கை' பற்றிய எச்சரிக்கைகளைப் பாராளுமன்ற விவாதங் களின் போதும் வெளிப்படுத்தியுள்ளனர். முக் கியமாகக் கடந்த காலங்களில் ஏற்பட்ட தோல்விகளும், பெரும்பான்மை இனத்தி லிருந்த நம்பிக்கையின்மையும் பிரிவினைக் கோரிக்கைகளை ஏற்க வேண்டிய நிலைக் குத் தள்ளியது எனலாம். முக்கியமாக செல்வ நாயகம் ஐக்கிய முன்னணி அரசாங்கத் தோடு சவால் ஒன்றையிட்டுப் பாராளுமன்ற பதவியை இராஜினாமாச் செய்தார். 1975ஆம் ஆண்டு மாசி மாதம் காங்கேசன்துறையில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் வெற்றி பெற்ற செல்வநாயகம்

> 'I Consider the verdict of the elections as a Mandate that the Eelam Tamil nation should exercise the sovereignty already rested in the tamil people and become free'

என்று கூறினார்.

இலங்கையின் சுதந்திரமாகக் கருதப்பட்ட 1976ஆம் ஆண்டு மாசி 4ம் திகதி தமிழ் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கையொப்பமிட்டு ஒரு தீர்மானத்தைச் சபைக்குச் சமர்ப்பித்தனர்.

> 'இலங்கையில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும்
> சுயநிர்ணய உரிமையுள்ள இரு தனித்தேசிய இனங்களாக
> இருப்பதினாலும் ..........................................
> அந்நிய ஆட்சியினால் பலவந்தமாய் ஒன்றாய்
> பிணைக்கப்பட்ட சிங்கள தேசிய இனமும், தமிழ் தேசிய
> இனமும் இன்னமும் அப்படியே பிணைக்கப்பட்டிருப்
> பதினாலும் ..........................................
> சுதந்திர இலங்கையின் அரசாங்கங்கள் எல்லாம்
> சிங்கள தேசிய இனத்தின் ஆக்கிரமிப்பு இன உணர்ச்சிக்கு
> ஆதரவளித்து வளர்த்து தமிழ் மக்களை நிரந்தரமாக
> ஆளப்படும் இனமாக ஆக்கும் இன்றைய அரசியல் அமைப்பை
> அவர்கள் விருப்பத்திற்கு மாறாக தமிழ் தேசிய இனத்தின்
> மீது திணித்திருப்பதாலும் ....................................
> காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவை 'சுதந்திர
> மதசார்பற்ற சோசலிசத் தமிழ் ஈழ அரசை மீள்வித்தும்
> புனரமைப்புச் செய்ய இடப்பட்ட கட்டளையாக இப்பேரவை
> தீர்மானிக்கிறது'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்ட போது விவாதத்திற்கு வராமல் அரசாங்கம் தட்டிக்கழித்தே வந்தது. இறுதி வரை பாராளுமன்ற விவாதத்தில் எடுக்க முடியவில்லை.

தமிழ் ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராகவும் சிந்தனைச் சிற்பியாகவும் கருதப்பட்ட கதிரவேற்பிள்ளை, இளைஞர் அமைப்புக்களோடும் நெருங்கிய தொடர்புடையவராகக் காணப்பட்டவர். இவர் தனது பாராளுமன்ற பிரச்சினைகளைத் தீர்க்க பிரிவினையை கோரினார். இவரினால் எழுதப்பட்ட 'Co-Existence; not confronation' என்ற வெளியீடானது 'ஈழம்' பற்றிய ஒரு அறிக்கையாக வெளியிடப்பட்டது. இவர் 1975ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் வரவு செலவு திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது

'எங்கள் இளைஞர்கள் கல்வித்துறையிலே தாங்கள் கொண்ட ஏமாற்றத்தையும் தாக்கத்தையும் ஒதுக்கலையும் கண்டு தங்களுடைய எதிர்காலம் ஒரு சுதந்திர தமிழ் ஈழத்திலேயே' தான் இருக்கிறது எனத் தீரமானித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் தமிழ்த் தலைவர்களும் தீர்மானித்துக் கொண்டார்கள். ஆகவே இன்றைக்கு இலங்கையிலே தமிழ் மக்கள் சுதந்திர ஈழத்தை நிறுவ வேண்டும். தங்களுடைய மொழி உரிமையை பாதுகாக்க வேண்டும் என்று உறுதியாக, மாற்ற முடியாத இறுதி முடிவொன்றிற்கு வந்தமைக்குக் கல்வியமைச்சு ஒரு முக்கிய காரணம் என்பதை எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

1976ஆம் ஆண்டு தேசிய அரசுப்பேரவையிற் பேசும் போது 'எங்களுடைய பழைய சிந்தனைகள் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சி அமைப்புக்களைக் கைவிட்டு, நாம் சுதந்திர மக்களாக வாழ வேண்டும். இத்தீவிலே நாம் சுதந்திரமாக வாழ்ந்தோம். சிங்கள மக்கள் சுதந்திரமாக வாழ்ந்த காலத்தில் எல்லாம் நாமும் சுதந்திரமாக வாழ்ந்தோம். எனவே இந்த அடிப்படையில் நாம் நம்மை மீண்டும் சுதந்திர மக்களாக ஆக்கி, இரண்டு இனங்களும் தங்களுடைய அரசுகளைத் தனித்தனியே நிறுவி நட்புடைய நாடுகளாக வாழ வேண்டும் என்று நாம் கேட்கிறோம்' என்றார்.

ஆகவே தமிழ் தலைவர்கள் வெளிப்படை யாகவே பிரிவினைக் கொள்கையையும் தனிநாடு அமைக்கப்பட வேண்டிய நியாயங் களையும் எடுத்துக் காட்டுவதன் மூலம் 'ஈழம்' என்ற வரையறுக்கப்பட்ட ஆற்புலத்தினை பெற்றுக் கொள்வதன் மூலமே தமிழ் பேசும் மக்களின் பிரிவினைகளுக்குத் தீர்வு ஏற்படும் என்பதனை வலியுறுத்தினர்.

இந்தச் சூழ்நிலையிற்தான் 1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி வட்டுக் கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்னும் இடத்தில் மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டில் தமிழ் ஐக்கிய முன்னணி என்ற கட்சி தனது பெயரை 'தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி' (Tamil United Liberation Front) என மாற்றிக் கொண்டது. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முதல் மகாநாடாகவும் இது அமைந்தது. இலங்கையின் தனி அரச கரும மொழியாக சிங்களம் மட்டும் அமுல்படுத்தப்பட்டு இருபது வருடங்களின் பின் இம் மகாநாட்டில் முதல் முறையாக பிரிவினைக்கான தனிநாட்டுக் கோரிக்கை அறிவிக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணியின் முதலாவது மகாநாட்டில் கடந்த முப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளாக இலங்கை அரசியலில் நடந்த நிகழ்ச்சிகள் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு பின் தமிழ் தேசிய இனத்தின், மாற்றி அமைக்க முடியாத 'தமிழ் ஈழ அரசை' புனரமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

(அ) தனது உன்னதமான தாய்மொழியாலும் தமது சிறப்புப்பெற்ற கலாசாரப் பாரம்பரியங்களாலும் ...................... ஒரு பிரத்தியோகமான பிரதேசத்தில் தனி அரசாக சுதந்திர வாழ்வு நடாத்திய வரலாற்றாலும் தமது பிரதேசத்தில் ஒரு தனி இனமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உரிமை உறுதியாலும், இலங்கைத் தமிழ் மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஓர் தனித்தேசிய இனமென்று இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

(ஆ) 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு மூலம் தமிழ் மக்களை புதிய ஏகாதிபத்திய எஜமான்களாக சிங்கள மக்களால் ஆளப்படும் அடிடைத் தேசிய இனமாக மாற்றித் தாம் தவறாக அபகரித்துக் கொண்ட அதிகாரத்தால் தமிழ் தேசிய இனத்தின் மொழி, குடியுரிமை, பொருளாதார வாழ்வு, வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பறித்து தமிழ் மக்கள் ஓர் தனித் தேசிய இனமென்று கூறுவதற்கான தகுதிகள் அத்தனையும் அழிக்கின்றார்கள். என்றும் இம்மகாநாடு இத்தால் உலகிற்கு அறிவிக்கிறது.

'இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர இறைமையுள்ள,மத சார்பற்ற, சோசலிச தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்ற இம்மகாநாடு தீர்மானிக்கிறது'.

இம் மகாநாட்டில் தமிழ் ஈழ அரசை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதோடு ஈழ அரசைப் பெறும் போராட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வரசைப் பெறும் யுத்தமானது 'புனிதப் போராக' இருக்கும் என்றும் இவ்விலட்சியத்தை அடைவதற்கு தயங்காது உழைக்குமாறும் தமிழ் தேசிய இனத்திற்குப் பொதுவாகவும், தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறை கூவல் விடுத்திருந்தது. எனவே தமிழ் ஈழ அரசை மீளப்பெற வேண்டும் என்பது நிறைவான தீர்மானமாயிற்று.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த இந்தியத் தமிழர்களுக்கு இக்கோரிக்கையானது ஏற்புடையதாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்களின் பிரச்சினைகள் வேறுபட்டவை. முக்கியமாக இலங்கையின் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதே நோக்கமாக இருந்தது. இன்னும் சிலர் இந்தியாவே தமது தாயகம் என்பதால் இத்தீர்மானம் அவர்களுக்குக் கவர்ச்சியாக இருக்கவில்லை. இந்தியத் தமிழர்களின் பிரச்சினை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டு இருந்தன. இந்தியத் தமிழர்கள் கல்வி நிலையில் பின் தங்கியவர்களாக இருந்தமையால் கல்வித்துறையோடு தொடர்புடைய பல பிரச்சினைகள் தோற்றம் பெறவில்லை. அத்தோடு அரசாங்க உத்தியோகம் என்பனவும் பிரச்சினையாக இருக்கவில்லை. எனவே தமிழ் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்ட காலத்திலேயே இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தளர்வான அமைப்பாகவே தொழிற்பட்டது. 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டின் போது தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட போது அதில் இணைந்து கொள்ளவில்லை. எனவே வேறுபட்ட பிரச்சினைகளையும் தீர்வுகளையும் கொண்டிருந்த இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியது.

சமஸ்டிக் கட்சியின் ஆரம்பத் தலைவராகவும் தமிழ் மக்களால் அதிகளவு விரும்பப்பட்டவருமான செல்வநாயகம் 1976 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் திகதி தேசிய அரசுப் பேரவையில் பேசும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'We started the federal movement at one time to obtain the lost rights of the Tamil – speaking people and now we have found that through federalism we cannot achieve our objective. In view of this experience we have come to the conclusion that we must separate and if we do not do that the Tamil – speaking people will never be able to get back their lost rights.

Our ancient people were wise. They had their own kingdom. In the history of Ceylon, we had a place. We are not asking for a division of the country by our movement but we are only trying to regain what we have lost.

Our party is today moving with the idea of establishing a separate state. It is not an easy matter to get a separate state. It is a difficult matter. We know that it is difficult. But either we get out of the power of the Sinhalese masses or we perish. That is certain. Therefore, we will try and get this separation. We have abandoned the demand for a federal constitution, our movement will be all non- violent'

தேசிய அரசுப் பேரவையில் இவர் இறுதியாக ஆற்றிய உரையாகவும் இது அமைந்தது. ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக ஐக்கியப்பட்ட இலங்கை சமஸ்டி அமைப்பில் சுயாட்சி அலகுகளைப் பெறுவதே நோக்கமாகக்கொண்டு பாராளுமன்றத்திற் குரல் கொடுத்து வந்தவர்கள் இப்போது அதிலிருந்து வேறுபட்டு தமிழீழ அரசைப் பெறுவதிலேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பதை முன் வைத்தனர்.

1977ஆம் ஆண்டு நடைபெறவிருந்த பொது தேர்தலுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுத் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையை வெளியிட்டது. 'தமிழீழத்தில் நடைபெறும் தேர்தல் விடுதலையா? தொடர்ந்தும் அடிமைத்தனமா? என்பதை நிர்ணயிப்பதற்கே நடைபெறுகின்றது'. இதை தீர்மானிப்பதற்கே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலைப் பயன்படுத்தப்போகின்றது. எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில், இந் நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர இறைமையுள்ள, மதசார்பற்ற, சமதர்ம தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த்தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கின்றது என்று தனது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டிருந்தது.

இந்த விஞ்ஞாபனத்தில் தமிழினத்தின் அரசியல் சமூக பொருளாதார அமைப்புகளுக்கு ஆன உத்தரவாதங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி அளித்தது. முக்கியமாக முஸ்லீம்களின் தனித்துவ அம்சங்களை உத்தரவாதப்படுத்துவதற்காக தமிழீழத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு எந்தப் பிரதேசத்தவரோ மதத்தவரோ ஏனையோர் மீது அதிகாரம் செலுத்த இயலாத வகையில் அவ்வப்பகுதி மக்களின் சுயாட்சிக்கு வழிவகுக்கும். சுவிற்சலாந்து தேசத்தில் உள்ளது போன்று இணைப்பாட்சி முறை கைக்கொள்ளப்படும். குறிப்பாக தமிழீழத்தின் அங்கமான முஸ்லீம் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஓர் சுயாட்சி மாகாணமாக தாம் பெரும்பான்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக வாழும் பிரதேசத்தில் அமைக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தனர்.

இந்தப் பொதுத்தேர்தலில் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஒரு சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற சமதர்ம தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நின்றது. நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவானது வடமாகாணத்தில் தமிழீழ அரசிற்குத் தெளிவான ஆணையை அளித்துள்ளது. இங்கு போட்டியிட்ட பதின்னான்கு தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. 'கூட்டணி வேட்பாளர்கள் வடமாகாணத்தின் பதினான்கு இடங்களையும் வென்று 68.5 சதவீதமான வாக்குகளைக் கைப்பற்றினர். குடாநாட்டில் இலங்கைத் தமிழரில் அரை பங்கிற்கு மேல் இருக்கும் இடத்தில் பதினொரு கூட்டணி வேட்பாளர்கள் 47 மற்றைய வேட்பாளர்களுக்கு எதிராக ஆச்சரியப்படக் கூடிய 78 சதவீதமான வாக்குகளைப் பெற்றனர்.

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் காணப்பட்டது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணி அம்பாறை, சேருவில (புதிய தொகுதி) ஆகிய தொகுதிகளில் போட்டியிடவில்லை. ஏனைய எல்லாத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியது. தமிழர்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளைக் கொண்ட தொகுதிகளில் தமிழ் வேட்பாளர்களையும், முஸ்லீம்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளில் முஸ்லீம் வேட்பாளர்களையும் நிறுத்தியது. இதில் நான்கு தமிழ் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. கூட்டணி சார்பாக போட்டியிட்ட எந்தவொரு முஸ்லீம் வேட்பாளரும் வெற்றி பெற முடியவில்லை. முஸ்லீம் தொகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக போட்டியிட்ட முஸ்லீம் வேட்பாளர்களே வெற்றி பெற்றுள்ளனர். எனவே கிழக்கு மாகாண தேர்தல் முடிவானது வேறுபட்டு அமைந்தது. கூட்டணியின் தமிழீழ ஆணைக்கு தெளிவான முடிவை கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தப்படவில்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் முஸ்லீம் மக்கள் இக்கொள்கையை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டியுள்ளனர் என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

## NOTES AND REFERENCES

### Chapter: 4

1. Kearney.R.N. 'Language and the Rise of Tamil Separatism in Sri Lanka'. Asian Survey, Vol: xviii No.5 May 1978. PP-528- 29.
2. தமிழ்பேசும் மக்கள் தனிநாடு அமைப்பதுதான் ஒரேயொரு வழி என்பதனை வலியுறுத்தி சீ.சுந்தரலிங்கம் 1958 வைகாசி 13ஆம் திகதி பகிரங்கமாக அறிக்கை வெளியட்டார். இதேபோல தமிழ் சுயாட்சிக் கழகத்தலைவர் வ.நவரத்தினம் தமிழ் பேசும் மக்கள் தனி நாடு அமைக்க உழைக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் குரல் எழுப்பினார்.
3. Wilson.A.J. S.J.V.Chelvanayakam and the crisis of Sri Lankan Tamil Nationalism 1947 – 1977. A Political Biography C.Hurst & Co Ltd. London. 1994. P:103
4. Kearney.R.N. op:cit. PP:528- 30.
5. Quoted from Kerney.R.N. Communalism and Language in the Politics of Sri Lanka. 1967. PP:113- 114.
6. சிங்களத் தேசியவாதம் மொழி, மதம் என்பன இணைந்த வகையில் தோற்றம் பெற தமிழ் தேசியவாதம் மொழி, ஆள்புலம் என்பன இணைந்தவகையில் தோற்றம் பெற்றன. மொழியை உரிய முறையில் பாதுகாப்பதற்கு தமிழரின் பாரம்பரிய ஆள்புலத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஆரம்பத்தில் மாநில சுயாட்சி பிற்காலத்தில் "தனி அரசு" கோரிக்கைகளும் தெளிவாக வரையறை செய்யப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களைக் கொண்டது.

7. முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் இரண்டாம் அத்தியாயம் பௌத்தமதம் மற்ற மதம் மூன்றாம் அத்தியாயம் மொழி பற்றியும் கூறுகின்றது.

8. மக்கள் ஐக்கிய முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றினாலும் அது அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐம்பது சதவீதத்தைக் கூட பெறமுடியவில்லை என்பதோடு வடக்குக்கிழக்கு சமஸ்டிக்கட்சியினர் அதிக பெரும்பான்மையைப் பெற்றிருந்தனர். இவர்களின் ஆதரவோ அல்லது சம்மதமோ இன்றி அரசியல் யாப்பு வரையப்பட்டது. அரசாங்கம் தனது 117 ஆசனங்களின் பலத்தினால் மட்டுமே யாப்பை உருவாக்கியது. இது எல்லா மக்களின் ஏகோபித்த கருத்து என்பது தவறான கூற்றாகும்.

9. வல்வெட்டித்துறைத் தீர்மானம்: 1971 மாசி - 7
   1. சிங்களமும் தமிழும் இந்நாட்டின் ஆட்சிமொழிகளாக இருத்தல் வேண்டும்.
   2. சிங்களமும், தமிழும் நீதி நிர்வாக மொழி.
   3. சுயமொழிகளில் அரசோடு தொடர்புகொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் **06**

# தமிழ்த் தேசியவாதமும் தீவிரவாத இயக்கங்களும்

### 6.0 தமிழ் தேசியவாதமும் தீவிரவாத இயக்கமும்

தேசிய கட்டமைப்பு ஒன்றுக்குள் தமது தனித்துவமான அடையாளத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழும் போது, அவை உரிய முறையில் அரசாங்கத்தால் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். அது தவறும் இடத்து இனத்துவத்துடன் சம்பந்தப்பட்ட போராட்டங்கள் தோற்றம் பெறுகின்றன. முக்கியமாக கலாசார அடையாளங்கள், புறமொதுக்கப்பட்ட பிராந்தியங்கள் போன்றவற்றுடனான போராட்டங்கள் தோன்றும் போது அவை மக்களின் ஆழமான அடிப்படை உணர்சிகளுடன் சம்பந்தப்பட்டவையாக மாறி விடுகின்றன. சுதந்திர இலங்கையின் கடந்த 40ஆண்டுகளாக தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவோ, பிரச்சினைகளை தீர்க்கவோ அரசு முயலவில்லை. இவ்வாறான நிலையில் 1977 தேர்தலில் "தனியரசு" என்ற கொள்கைக்கு தமிழ் இளைஞர்கள் அதிகளவில் 'பேராதரவு வழங்கினர். தனியரசு என்ற ஈழக்கோரிக்கையை 1970களில் முக்கியம் பெற்ற போது தமிழ் தேசியவாதம் புதிய பரிணாம தோற்றத்தை பெற்றது. இக்காலப்பகுதியில் இருந்து தமிழர் அரசியலை தீவிரவாத இயக்கங்களே வழிநடத்திச் சென்றன. இதனால் தமிழர் அரசியலில் வேறுபட்ட தலைமைத்துவம் ஜனநாயக அம்சங்களுக்கு புறம்பான செயற்பாடுகள், வேறுபட்ட அணுகுமுறை என்பதால் அரசியலில் பூரணமான மாற்றங்கள் ஏற்படலாயிற்று.

இதுவரை காலமும் அரசியல் கொள்கைகளாக இருந்த தேசியம், இதற்கு பின்பு தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி தனியரசு கோரும் அளவிற்கு பெரிய சக்தியாக வளர்ந்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டியது. ஆரம்பத்தில் அரசியல் எதிர்ப்பாகத் தோன்றி பின், தனியரசு கோரும் அளவிற்கு அதன் வீச்சு காணப்பட்டது. அக, புற சூழல்களில் ஏற்பட்ட பல்வேறு வகையான வளர்ச்சிகளும் மாற்றங்களும் தமிழ் அரசியல் மேடையில் பல பரிமாணங்களை ஏற்படுத்தியது. இதில் இளைஞர் சக்தி மேலோங்கியது. இதற்கு அகச்சூழல்களாக, நேரடியான பாதிப்பு பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டமை அமைந்தது. சீ.ஆர்.டி.சில்வா தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஏற்பட்ட பேராபத்தையும் அதன் பின் விளைவுகளையும் குறிப்பிடும் போது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுபான்மை மக்கள் பாரபட்சமாக நடத்தப் படுவதனால் நேரிட்ட பாதிப்பு பாரதூரமானது. பாடசாலைகள் அரசாங்க மயப்படுத்தப்பட்ட மையால் எழுந்த போராட்ட காலத்தைப் போல் அல்லாது சிங்கள-தமிழ் மக்களிடையே இதனால் உருவாகிய பகைமையும் நம் பிக்கையின்மையும் இலகுவில் நீக்கக் கூடியன வல்ல..... ஏற்கனவே உருவாகியிருந்த முரண்பாட்டை தீவிரமாக்கும் நடவடிக்கையே பல்கலைக்கழக அனுமதி பிரச்சினையாகும். இது யாழ்ப்பாண இளைஞர்களை ஒன்றுபடுத் தியது என்பதும், தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களை தனி நாடு கோரத் தூண்டியது என்பது தெளிவு.

தென் இலங்கையில் 1971ஆம் ஆண்டு சித் திரை மாதம் 'ஜனதா விமுக்திப் பெரமுன' அரசுக்கெதிராக புரட்சி ஒன்றை மேற் கொண்டு அது முறியடிக்கப்பட்டது. இந்நிலை வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு இது ஊன்றுகோலாக அமைந்தது. இதன் நேரடி விளைவு பல தீவிரவாதக் குழுக்கள் தோன்ற லாயின. மேலும் சமஸ்டிக்கட்சியினர். 1971 ஆனி அரசியலமைப்பு நிர்ணய சபையில் இருந்து வெளியேறியமை, 1972ஆம் ஆண்டு செல்வநாயகம் தனது பதவியை இராஜினாமா செய்தமை, 1973 கட்சியோடு தொடர்புடைய தமிழ் இளைஞர் பேரவை ஆரம்பிக்கப்பட் டமை போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இணைந்த வகையில் தீவிரவாத இயக்கங்கள் தோன்றக் காரணங்களாயிற்று.

புறச்சூழலில் முக்கியமாக 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து வங்காளம் பிரிந்தமை இளைஞர்கள் மத்தியில் அதிகளவு உணர்வினைத் தோற்றுவித்தது.

T.D.S.A. திஸ்ஸநாயக்கா இளைஞர்களின் சூழல் பற்றி கூறும் போது,

'யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தீவிர வாத இளைஞர்கள் அரசாங்கத்திற்கு தொடர்ச்சியான போராட்டங்கள் உள்ள சூழ லில் உருவாக்கப்பட்டவர்கள். 1956 பாடசாலை பகிஸ்கரிப்பின் மறியல் போராட்டம், கறுப்புக் கொடி தூக்குதல், சத்தியாக்கிரக நடைமுறை கள் இவ் இளைஞர்களுக்கு வாழ்க்கை முறையாக இருந்தது.

1972ஆம் ஆண்டு அரசியல் திட்டம் சிறு பான்மையோரை உரிமைகளற்ற இனமாக்கி யது. இந்த யாப்பை வரைவதில் முக்கிய பங் காளியாக விளங்கிய இடதுசாரித் தலைவர்கள் யாழ்ப்பாணம் வந்த போது மாணவர்கள் தமது எதிர்ப்போராட்டங்களை மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் புரட்சிகர இராணுவ மாணவர் பிரிவுகள் தோற்றம் பெறக் காரணங்களாயிற்று. தீவிரவாத இளைஞர்கள் என அரசாங்கம் கருதியோரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. இந்த அரசாங்கத்தின் அணுகுமுறையில் அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தமையால் அது மேலும் கடினப் போக்குடையதாகவே வெளிப்படுத்தப்பட்டது. இது மறுபுறம் தீவிரவாதிகளின் எண்ணிக் கையை அதிகரிக்கச் செய்ததோடு வன் முறைகள் அரசியலில் இடம்பெற வழிவகுத்தது எனலாம்.

இது வரை காலமும் அரசியல் போராட்டத் தில் இடம்பெறாத வன்முறை என்பது தலை தூக்கியது. 1975ஆம் ஆண்டளவில் அரசியல் போராட்டத்தில் இருந்து அகிம்சை முடிவிற்கு வந்ததெனக் கூறமுடியும். இதன் பின் சன நாயக விரோத செயல்களான கொடூரக் கொலைகள், வங்கிக் கொள்ளைகள் என்பன இடம் பெறத்தொடங்கி இளைஞர்கள் பழைய தலைமைத்துவத்தின் போராட்ட வடிவமான ஆத்மீக அறநெறி நடைமுறைக்கு ஒவ்வாது என்பதால் வெற்றி பெற முடியாது என புதிய போராட்ட வடிவினைப் பெற்றனர்.

அரச அடக்கு முறைகளுக்கு எதிராக இளைஞர்களிடயே விடுதலையுணர்வும் புரட்சிகர போர்க்குணமும் ஏற்பட்டது. இதன் விளைவு வன்முறை அரசியல் ஆகும். வன் முறை அரசியலில் ஆர்வம் கொண்ட இவ் இளைஞர்கள் அனைவரும் தம்மை "மாண வர் பேரவையினர்" என்று அழைத்துக் கொண்டனர். இதில் பல இளைஞர்கள் உறுப் பினர்களாக இருந்தனர். 1972ம் ஆண்டு இறுதிக்கட்டத்தில் "புதிய தமிழ்ப் புலிகள்" "(New Tamil Tigers)" என்ற பெயரில் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பை பிரபாகரன் உருவாக்கினார். ஆரம்பத்தில் தமிழீழத் தாயகத்தை சுதந்திர தனியரசு ஆக்குவது இதன் குறிக்கோளாகும். நீண்ட கால 'கொரில்லா போர்' முறையின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன் னெடுப்பதே பொருத்தமானது எனத் தீர்மானிக் கப்பட்டது. 1975ம் ஆண்டு வைகாசி மாதம் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' (Liberation Tigers of Tamil Eelam) எனப் பெயர் மாற்றப் பட்டது.

ஆரம்ப காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உயர்மட்ட நிர்வாகக் குழு தலைவ ராக இருந்த உமா மகேஸ்வரன் 1980இல் பிரிந்து "தமிழ் மக்கள் விடுதலைக் கழகம்" (People's Liberation Organisation of Tamil Eelam) என்ற அமைப்பை உருவாக்கினார். குட்டிமணி, தங்கதுரை போன்றோரால் உருவாக்கப்பட்டது. "தமிழீழ விடுதலைக் கழகம்" என்ற அமைப்பாகும். (Tamil Eelam Liberation Organisation) இவர்களுக்கு பின் சிறி சபாரட்ணம் இத்தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

மாக்சிய - லெனிசிய சித்தாந்தங்களின் அடிப்படையில் வர்க்க வேறுபாடற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்கோடு தமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென இரு இடதுசாரி இயக்கங்கள் தோற்றம் பெற் றன. "ஈரோஸ்" என அழைக்கப்படும் "ஈழப் புரட்சி அமைப்பு" (Eelam Revolutionary Organisation of Students) இளையதம்பி இரட்ணசபாபதி என்ற பொருளியலாளரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் மொழிவாரி யாக ஈழம் கோரவில்லை மாறாக சிங்களவர் களின் அடக்கு முறைக்கு எதிராக இயக்கியல் தத்துவத்தின் அடிப்படையில் ஈழம் கோருகின் றனர். மலையகத்தை உள்ளடக்கிய சோசலிச, ஈழத்தைக் கோரினர். ஒரு இனத்தின் சமூக, பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்கு அந்த இனத்தின் சமூக அமைப்பின் அடிப்படை மாற் றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றங்களை ஏற்படுத்துபவர்கள் அந்த இனத்தின் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்ட அடித்தளத்தில் வாழும் மக்கள் தமிழ் பேசும் மலையக தோட் டத் தொழிலாளர்களே. சோசலிச ஈழத்தை கோரும் இவர்கள் ஈழம் பெறும் தந்திரோ பயத்தில் இலங்கையரசின் பொருளாதா நிலைகளைத் தாக்குவதும் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை ஏற்படுத்துவதுமே முக்கிய நோக்கமாக இருந்தது.

மற்றுமோர் இடதுசாரி இயக்கமாக ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (Eelam People's Revolu-tionary Liberation Front) அமைகின்றது. ஈரோஸ் இயக்க மாணவர் அணியில் இருந்து ஈழம் அமைப்பை சோசலிச அடிப்படையில் கோருகின்றனர். சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்டோர், தொழிலாளர் வர்க்கம், மீனவர்கள் போன்றோரின் சமூக நிலைமையை உயர்த்துவதும், முதலாளித் துவ சக்திகளின் ஆதிக்க நிலையை குறைப் பதுமாகும். விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டமே பிரதான போராட்ட வடிவ மாக உள்ளது. இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களையும் மலையகத்திலுள்ள ஒரு பகுதியையும் உள்ளடக்கிய பிரதேசம் ஈழமக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசம். அதுவே "ஈழம்" என்னும் தனி நாடாகும்.

தீவிரவாத இயக்கங்களே இலங்கைத் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை அங்கீ கரித்த புரட்சி இயக்கங்கள். இவர்கள் ஆயத ரீதியாக எதிர்ப்பதன் மூலம் தமது இறுதி இலட்சியமான தமிழ் ஈழத்தை உருவாக் கலாம் என்று நம்புகின்றனர். சகல இயக்கங் களும் சில அடிப்படையில் ஒற்றுமையி னைக் கொண்டுள்ளது. முதலாவது பொது இலட் சியமாக. "ஈழம்" நடைமுறையில் உள்ள அரசை எதிர்ப்பதற்கும் தமது இலட்சியத்தை அடைவதற்கும் ஆயுதப்போராட்டத்தை மேற்கொள்வது என்பனவாகும். இந்த பிர தான இயக்கங்களுக்கு இடையே ஒற்றுமை என்பதை விட வேற்றுமைகளே அதிகரித்துச் சென்றன. ஆரம்ப காலங்களில் உயர்மட்ட தலைவர்களுக்கிடையே ஆளுமை முரண் பாடு, சித்தாந்த ரீதியிலான வேற்றுமைகள், போர்முறைகளிலும் உபாயங்களிலும் முரண் பாடு என்பன காணப்பட்டது. காலப்போக்கில் மேலும் பல முரண்பாடுகள் தோன்றி தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலுக்குள் ஒரு சிக்கல் நிலைமையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

1980களில் தமிழ் தேசியம் வேறான பரிமாணத்தை அடைந்தாலும் அவற்றை முன்னெடுத்துச் செல்லும் பலம்வாய்ந்த அமைப்புகளாக தீவிரவாத இயக்கங்கள் இருக்கும் என நம்பப்பட்டது. ஆனால் அவற்றினுள் ஒற்றுமை ஏற்பட்டு ஒரு அணியில் இணைவதற்கு பதிலாக அவை மேலும் பிளவுண்டு சிறு சிறு குழுக்கள் ஆகவும், தனி நபர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் அமைப்புக்களாகவும் விளங்க முற்பட்டன. எல்லா இயக்கத் தலைவர்களும் இணைப்புப் பற்றி பல சந்தர்ப்பங்களில் கூறிய போதிலும் எந்தவகையான செயற்பாடுகளையும் மேற் கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். ஒரு தடவை மட்டுமே நான்கு பிரதான இயக்கங்களிற்கு இடையே ஒற்றுமை ஏற்பட்டது. ஏனைய பெரும்பாலான காலம் முழுவதும் யுத்த தந்திரோபாய முறைகளிலும் அரசியல் அணுகு முறைகளிலும் வேறுபட்டுக் கொண்டனர். யுத்த தந்திரோபாய முறை களில் விடுதலைப்புலிகள் கையாண்ட "சுடு, ஓடு" (Hit and run) என்பதில் முரண்பாடுகள் ஏற்பட்டன. தலைவர் உமா மகேஸ்வரன் கருத்து.

"Our differences with LTTE on the matter are basic. We are of the opinion that the Hit and run actions of the LTTE are putting back Liberation struggle and playing in to the hands of Jeyawardane ...................... this is a short sighted policy in the long run. I am sure that LTTE too will realise this"

மற்றும் இயக்கத் தலைவர்களும் இந்த இராணுவ தந்திரோபாயத்தில் முரண்பட்ட கருத்துக்களையே வெளியிட்டனர். ஈரோசின் பாலகுமார் "சுடு ஓடு" தந்திரோபாயத்தை விரும்பியிருக்கவில்லை.

"The Hit and run policy effective in the begining of a guerilla war there after it becomes redundant"

ஏனைய தீவிரவாத இயக்கங்களும் தந்திரோபாயங்களை ஏற்கவில்லை.

விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்,

'There is some confusion over the concept of a peoples war. People's war is not popu-lar Insurrection. Guerilla warfare is an aspect of a people's war. Gradually and system-atically. Guerilla warfare would clearly evolve in to popular warfare units of Tamil Guerillas will continue with their protracted warfare until the final war of Liberation.'

இவ்வாறு யுத்த தந்திரோபாயத்தில் வேறு பட்டு நின்ற போதும் இங்கு பிரதான இயக் கங்களின் ஒற்றுமை என்பது வலியுறுத்தப்பட்ட அம்சமாகும். விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்திற்கும் இடையே ஆரம்ப கால முரண்பாடுகள் சீர் செய்ய முடியாதவையாகவே காணப்பட்டன. ஏனைய தீவிரவாத இயக்கங்களுக்கு இடையே இணக்கத்தன்மையும், ஒற்றுமையும் இருப்ப தாக கூறப்பட்டது. இறுதி இலட்சியமான 'சோசலிச தமிழீழத்தை' நோக்கிய குறிக் கோளின் தடைகளாக இயக்க பிளவுகளும், முரண்பாடுகளும், வேற்றுமைகளும் அமைந்தன. சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் நோக்கில் எந்தவொரு தனி இயக்கத்தையும் நேசிக்காமல் எல்லா இயக்கங்களையும் 'எங்கள் பையன் கள்' என்றே கருதிக்கொண்டனர். இந்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களின் நடுப்பகுதிவரை தமிழ் அரசியலின் போக்காக காணப்பட்டது. இக்காலப்பகுதியில் இருந்து தீவிரவாத இயக்கங்களின் செயல் நெறி அணுகுமுறைகள், மக்களிடையே பெற்ற ஆதரவு, அவை அரசியலில் வகித்த பங்கு என்பனவெல்லாம் புதிய வீச்சுடன் செயற்படத் தொடங்கின.

அரசாங்க மட்டத்திலான செயற்பாடுகளை மறுபுறம் நோக்குகின்ற போது 1977 பொதுத் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியானது விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வரு மாறு கூறியிருந்தது.

'கல்வி, குடியேற்றத் திட்டங்கள், தமிழ் மொழி உபயோகம், அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களில் தமிழர்களுக்கு இருந்த குறைபாடுகளை ஆராய சகல கட்சிகளினதும் வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டி அதன் முடிவுகளை அமுல்படுத்துவதாகவும் வாக் குறுதியளித்தது.'

இவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக் கிய தேசியக்கட்சி ஆறில் - ஐந்து பெரும்பான் மையினை பெற்றுக்கொண்டமை மூலம், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மறுக்கப்பட்டு தமிழர்களுக்கெதிராக 1977 வன்செயல் கட்டவிழ்ந்து விடப்பட்டது. இனவாதப் பின்ன ணியில் இயங்கிய பல கட்சிகளும், தனி நபர்களுமே இந்த கலகத்திற்கு காரணமாக இருந்துள்ளனர். திஸ்ஸ பாலசூரிய பின்வரு மாறு கூறுகின்றார்.

> '1977ஆம் ஆண்டு ஆவணி மாதம் பல தமிழர்கள் கொல்லப்பட்டும், அவர்களின் வீடுகள், கடைகள் கொள்ளை அடிக்கப்பட்டும்..... இனக்கலவரம் இடம்பெற்றது.'

1958ஆம் ஆண்டிலிருந்து அரச அதி காரத்திற்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும் இடையே உள்ளார்ந்த உடன்பாடு இருந்து வந்துள்ளது.' என்பதனை ஆதாரப்படுத்துவ தாக வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற இன வன்முறைகளை குறிப்பிட முடியும். இவை இலங்கையில் நீடித்து நிலைத்த அம்சங்களில் ஒன்றாகிவிட்டது எனலாம். இவ் வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது பழைய இடங்களுக்கு திரும் பிச் செல்வது மிக மந்த நிலையிலேயே காணப்பட்டது. ஏனெனில் தென்னிலங்கை யில் தமிழர்களின் உயிர்களுக்கும், சொத் துக்களுக்கும் பாதுகாப்பு இருக்கவில்லை.

பல்லின சமூக அமைப்பை கொண்ட நாட் டில் பெரும்பான்மையினம் சிறுபான்மை இனத்திற்கு மேலதிகமாக ஒன்றைச் செய்யு மென எதிர்பார்க்க முடியாது. இலங்கை யில் இரு நிலைகளில் இவ்வம்சம் வெளிப்பட்டிருந்தது. ஒன்று தமிழர்கள் மீது பரம்பரை பரம்பரையாகக் கொண்டி ருந்த வெறுப்புணர்வும் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் முன்னுரிமை களையும் சலுகைகளையும் பெற்றனர் என்ற அதிருப்தியும் ஒருங்கே இணைந்தமை. இரண்டாவது நிலையில் சனத்தொகையில் கிட்டத்தட்ட நாலில் - மூன்று பங்கினர் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்பதனாலும் சுதந்திரத்தின் பின் சிங்கள மயமாக்கல் செயற்பாடுகளில் அதிகாரத்தில் இருந்தோர் அக்கறை காட்டினர். இன மயமாக்கம், இனவாத அரசியல் இவை இரண்டினையும் பயன்படுத்தி சிங்களத்தலைவர்கள் புகழ்பெற முனைந்தனர்.

1970ஆம் ஆண்டு தேர்தல் காலம் முதலாக பாராளுமன்றத் தேர்தலிலே பெரும்பான்மை வெற்றி பெறுதலோடு ஈடுபடுத்தப்பட்ட அரசியல் வழக்காறுகளே நாகரீகமான சமுதாயத்தை அரசியல் மயமாக்குவதற்கெழுந்த ஆரம்ப காலகட்டம் எனத் தோன்றுகின்றது. இந்த வெற்றி முன்னொரு போதும் நிகழாதது. தேர்தல் முடிவடைந்த பின் ஏற்பட்ட வன் முறைகளுக்கு வித்திட்டதோடு மட்டுமன்றி 'வெற்றி பெற்றவர்களே அனைத்தையும் எடுக்கின்றார்கள்' என்ற கண்ணோட்டத் தையும் தோற்றுவித்து இது அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தத்தை வெளிப்படுத்தும் கருத்தாகவே அமைந்துள்ளது எனலாம். தீவிரவாத தமிழ் இயக்கங்கள் தென்னிலங்கையில் தோற்றம் பெற்ற சிங்கள தீவிரவாத இயக்கத்தில் இருந்து வேறுபட்டு அமைகின்றது. சிங்கள தீவிர வாத இயக்கம் இன்று அரசியல் கட்சிகளாக இணைய மறுத்தது. ஆனால் தமிழ் இளைஞர் இயக்கங்கள் அரசியல் கட்சியின் பின்னணியில்தான் கூடுதலான வளர்ச்சியை பெற்றது. அதிகமான இளைஞர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி இளைஞர் முன்னணி யில் அங்கத்தவர்களாக இருந்துள்ளனர். சடுதியாக இளைஞர்களின் செல்வாக்கு மேலோங்கி தனியான இயக்கங்களை உருவாக்கினர். சிங்கள இளைஞர் இயக்கம் முதலில் அரசோடு பெரிய பலத்துடன் மோதியது. ஆனால் பின் அது தனது பலத்தை இழந்து விட்டது. இதற்கு மாறாக தமிழ் தீவிரவாத இயக்கங்கள் விரைவாகவும், பலத்துடனும் வளர்ந்தது. 1978ஆம் ஆண்டளவில் ஒரு நிரந்தர தேசிய இயக்கமாக தமிழ் அரசிய லில் மேலோங்கியது. இந்த சூழலில் ஒன்று பட்ட அமைப்புக்களில் பிரிவினைகள் பல இயக்கங்களை தோற்றுவித்தாலும் அவர் களின் குறிக்கோள் 'தனியரசு' அது 'சோசலிச தமிழீழம்' என்பதாகவே இருந்தது.

தமிழ்த் தேசியவாதம் முழுவேகமுள்ள விடுதலையமைப்பாக மாறியது உண்மையில் ஆச்சரியமான விடயமாக இருக்கமாட்டாது. ஆனால் என்ன ஆச்சரியம் என்றால் இதன் வேகம் எவ்வளவு விரைவாக ஏற்பட்டது என் பது 1977இன் பின்பு நடைபெற்ற சம்பவங் களின் கால அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஐக்கிய தேசியக்கட்சி பதவியேற்றதில் இருந்து தமிழ் இயக்கங்களின் அரசியல் வன்முறைச்சம்பவங்கள் திடீரென அதிகரித்தது. அரசுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத் தும் சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற் றமையால் 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப் பட்டது. (Prevention of Terrorism Act. No. 48 of 1979) இதே ஆண்டு ஆடி மாதம் 11ஆம் திகதி தமிழ்ப் பகுதிகளுக்கு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இதே ஆண்டு மார்கழி 31ஆம் திகதிக்கு முன் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. ஆட்சியில் இருந்த வர்கள் ஆறு மாதங்களுக்குள் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிடும் என்று கூறி வடமாகாணத் திற்கு இராணுவத்தை அனுப்பினர். இவர் களின் முதல் நாள் நடவடிக்கையில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து கொலைகள், கைது செய்தல் ஆகியன வடபகுதியில் சாதாரண சம்பவமாகின.

1980களை அடுத்து தமிழ் தேசியவாதிகள் அரசுக்கெதிரான வன்முறைகளை முடுக்கி விட்டனர். இது படுகொலைகளாகவும், ஆயுதப்படையினரின் அழிப்புகளாகவும் அரசுடமைக்கு சேதம் ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. இவ்வாறான அரசுக்கு எதிரான வன்முறைகளால் தமிழ் மக்களிடம் இவர் களுக்கு ஆதரவு அதிகரித்தது. அரசின் பார்வையில் இவர்கள் பயங்கரவாதிகளாகக் காண தமிழ் மக்கள் இவர்களை தேசியவாதி கள், சுதந்திர போராட்டவாதிகள், தீவிர வாதிகள் என்று அழைக்கப்பட்டனர். ஏற் கனவே தமிழ் இளைஞர்கள் அரசின் பல் வேறு நடவடிக்கைகளால் விரக்தியும், ஏமாற்றமும் அடைந்த நிலையில் இரா ணுவ கெடுபிடிகளும் தொடர தமிழ் தேசிய வாதம் தீவிர உணர்ச்சியை தூண்ட இயக் கங்களின் வலுவை அதிகரிக்கச் செய்தது. இவையனைத்தும் ஒன்றிணைந்த போது தமது பிரச்சினைகளுக்கு இறுதித்தீர்ப்பு ஒரு 'தனியரசு' என்றும் அதை அடையும் மார்க்கம் ஆயுதப் போராட்டம் என்றும் அவர் கள் நம்பிக்கை கொண்டனர்.

இலங்கைத் தமிழ் அரசியலில் பிரி வினைக் கோரிக்கையும் தனிநாட்டுக் கோரிக் கையும் தமிழ் தேசியவாத இயக்கங்களின் பிரதான நோக்கங்களாக இருந்தபோதிலும் இதில் இருந்த மத்திய வகுப்புக்குழுவினர் பொதுவாக அதற்கு எதிராக இருந்தனர். ஆகவே தான் 1980இல் மாவட்ட அபிவிருத் திச்சபையை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொண்டது. பரவலான எதிர்ப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலே கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக்கொண்டனர். நகர்ப் புறங்களில் வாழ்வோர், வியாபாரிகள் முதலீட்டாளர்கள் கூடிய நன்மைகள் பெற விரும்பியோர் புரட்சிகர தீர்வுகளை விரும்பி யிருக்கவில்லை. பிரிவினைக் கோரிக்கை களை கைவிட வேண்டும் என்ற எண்ணத் தையும் கொண்டிருந்தனர். ஏதாவது ஒரு வன்முறைச்சம்பவம் இயக்கங்களால் மேற் கொள்ளப்பட்டால் இச்சக்திகள் தங்களை அதற்குள் இணைத்துக்கொள்ள விரும்ப வில்லை. இவர்கள் இச்செயல்களைக் கண் டிக்கவும் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக் கவுமே முற்பட்டனர். இதுபற்றி கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு கூறுகின்றார்.

'அரசியலில் செல்வாக்கில் கொள்ளை இலாபம் உழைத்தல் என்ற நிலையில் ஒரு சாரார் செயற்பட்டனர்'.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் கொண்டு வந்த மாவட்ட அபிவிருத்தி சபையானது இருநிலைகளில் முக்கியம் பெற்றதென கூறப்பட்டது. ஒருபுறம் சிறந்த மாவட்ட மட் டத்தில் திட்டமிடல் அபிவிருத்தியை ஏற்படுத் தும் நோக்குடனும் மறுபுறம் மாவட்டமட் டத்தில் நிர்வாகத்தை பரவலாக்குவதற்கான ஒரு நிறுவன உபயமாகவும் கருதப்பட்டது. மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தை பரிசீலனை செய்ய ஒரு ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. இக்குழுவில் இரு பிரபல்யம் வாய்ந்த தமிழ் அரசறிவியல் அறிஞர்கள் நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆணைக்குழுவினர் அறிக்கையின் முதல் அத்தியாயத்தில் 'எமக்கு வந்த கருத்துக்களில் சில, ஒரு தனி நாட்டிற்கான கோரிக்கையாக வெளிப்பட்ட இனப்பிரச்சினைக்கு நேரடித்தீர்வு காண்பதிலே ஈடுபட்டுள்ளோம் என்ற நம்பிக்கையை பிரதிபலிப்பதாய் உள்ளது,... இந்த முயற்சியானது திட்டவட்டமாக அத்தகைய எந்தப்பிரச்சினைகளுடனும் பங்குகொள்ளும் நோக்கம் கொண்டதல்ல என்று ஆரம்பத்திலேயே கூறுவது பொருத்தமுடையதாகும்.

இலங்கையில் உள்ள 24 மாவட்டங்களுக் கும் அவற்றின் இன அமைப்பு வித்தியாசமின்றி பொருந்துவதாக இருப்பதோடு நாட்டின் எந்தப் பகுதியினருக்காவது வேறுபட்ட அரசியல் அல்லது நிர்வாக அமைப்பை அளிக்கும் நோக்கம் கொண்டது அல்ல. எனவே இது தமிழ்ப்பகுதிகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக உருவாக்கப்படவில்லை என்பதுவும், தமிழர் பிரச்சினையை தீர்க்கும் அல்லது தமிழர் பிரச்சினையோடு எந்த வகையிலும் சம்பந்தப் படாத ஒரு திட்டமாகவே மாவட்ட அபிவிருத்திச் சபை அமைந்தது என்பது தெளிவு.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவோடு ஆணைக்குழுவின் நியமனமும், அதனைத் தொடர்ந்து சட்டவாக்கமும் இடம்பெற்றன. அதிகார பரவலாக்கல் தமிழ ரின் அரசியல் மனக்குறைகளை நிவர்த்தி செய்ய உதவக்கூடும் எனவும் தமிழர்கள் ஏற்கக்கூடிய அதிகாரம் இத்திட்டத்தில் உண்டு எனவும் அரசாங்கம் எண்ணிய போதிலும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் கொள் கைப்பிரகடனம் செய்யவில்லை. இவ் அதி காரப் பரவலாக்கம் மாறுபட்ட சுயாட்சியை தமி ழர்களுக்கு வழங்குமென்றும் அது தமிழர் களுக்கும் தமிழ் பிரதேசங்களுக்கும் அனு கூலமாக இருக்குமெனவும் கருதினர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி மாவட்ட அபிவிருத்திச்சபை மசோதாவை ஆதரித் தமையும் அத் திட்ட செயற்பாட்டில் பங்குபற்ற வும் எடுத்த தீர்மானம் இரு நிலைகளில் முக் கியத்துவம் பெற்றிருந்தன. ஒரு நிலையில் அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல் தலைமைப் பீடத்திற்கும் இடையிலான செயற்பாட்டின் ஒழுங்கின் தோற்றத்தை சுட்டிக்காட்டியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதவாத தமிழ் தலைமைப்பீடம் தொடர்ந்தும் அரசின் நல்லெண்ணத்திலும், அரசியல் சலுகைகளை பெறுவதிலும் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருந்தது என்பதனை வெளிப்படுத்தியது. மறுநிலையில் 1977இன் பின் இலங்கை அரசியலில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இன வன்முறைகள் அவசரகால நிலைகள் என்பவற்றால் தொடர்ந் தும் தமிழ் பகுதிகளில் அமைதியின்மையும், வன்செயல்களும் இடம்பெற்றமையால் அவற்றை தடுக்கவேண்டும் என்ற மனோ நிலையில் இச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கி யிருக்கக்கூடும். மாவட்ட அபிவிருத்தி சபை களை ஏற்றுக்கொள்வதென்ற கூட்டணியின் தீர்மானம் கட்சிக்குள் ஒருபுறம் மிதவாதத் தலைமைப்பீடத்திற்கும் மறுபுறம் தீவிரவாதி களுக்கும் இடையே முரண்பாடுகளையும் விரிசல்களையும் ஏற்படுத்தியது. தீவிரவாதி கள் 1977 தேர்தலில் பெற்ற "மக்கள் ஆணை யான தமிழ் ஈழம்" என்ற குறிக்கோளை அடைய வேண்டும், எந்த வகையான விட் டுக்கொடுப்புக்களையும் மேற்கொள்ளக்கூடா தென அழுத்திக்கூறி வந்தனர். தலைமைப் பீடம் உண்மைக்கும் புறம்பான காரணங் களைக் கூறியது பிரதான அரசியல் பாராளு மன்ற நீரோட்டத்தில் இயங்க வேண்டுமென வும் இத்தீர்வுத்திட்டம் தமிழ் பிரதேச அபி விருத்தியையும், தமிழ் பிரதேச பாதுகாப்பை யும் ஏற்படுத்தும் என்ற கருத்தினை அடிக் கடி வலியுறுத்தி வந்தன. மாவட்ட அபி விருத்தி சபைகள் மூலம் பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தி பாதுகாப்பு என்ற இரு நோக்கங்களை நிறைவேற்றலாம் என இவர்கள் அழுத்திக்கூறி வந்தனர்.

இலங்கையில் ஒற்றையாட்சியமைப்பின் கீழ் நீண்டகாலமாக பலவீனமாக உள்ளு ராட்சி அமைப்புக்கள் இயங்கி வந்தன. நிர் வாக பரவலாக்கம் என கூறிய போதும் அவை செயற்பாட்டளவில் மந்த நிலையிலேயே இருந்தன. இவ்வாறான ஒரு நிலையில் தான் அதிகார பரவலாக்கம் என்பது மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்த அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் முயன்றனர். தமிழ் மக்களை பொறுத்தவரை தமிழர் தம் வர லாறு, மொழி, பாரம்பரியம் இனத்துவத்தின் தன்மை, கல்வியியல் பாராபட்சம், வேலை வாய்ப்பின் புறக்கணிப்பு, பாரம்பரிய பகுதி களில் திட்டமிட்ட குடியேற்றம் போன்ற பல் வேறு பிரச்சினைகள் பிரதேசம் அல்லது மாவட்டம் என்ற எல்லைகளைத் தாண்டி தேசிய இனப்பிரச்சினையாக வளர்ச்சியடைந்த போது வெறுமனே மாவட்ட அபிவிருத்தி சபைக்குள் தீர்வுகாண முற்பட்டது உகந்ததல்ல என்பதனை இதன் தோல்வியின் பிற்பட்ட காலங்களில் உணர்த்தியது.

தமிழ்த்தேசியவாதம் தனியான வரையறை செய்யப்பட்ட ஆள்புலத்தை கொண்ட 'தமிழீழ அரசு' என்ற எண்ணக்கருவை இறுதிக் குறிக் கோளாகக் கொண்டு அரசியலின் அதிதீவிர மாக செயற்படத் தொடங்கியது. 1980களை அடுத்து தசாப்தம் முழுவதும் அரச துருப்புக் களுக்கும் தமிழ் தீவிரவாத இயக்கங்களுக்கும் இடையே மோதல்களும் வன்முறைகளும் படிப்படியாக அசுரவேகத்தில் அதிகரித்துச் சென்றன. 1981ஆம் ஆண்டு வைகாசி மாதம் இறுதியில் அரச துருப்புக்கள் அரசாங்கத்தின் ஆதரவோடு யாழ்ப்பாண நகரையும் நூல் நிலையத்தையும் எரித்தனர். இதன் பின் அடுத்தடுத்து யாழ்ப்பாணத்தில் வன்செயல் கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இதற்கு பதில் நடவடிக்கை தீவிரவாத இயக்கங்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர். 1981ஆம் ஆண்டு ஐப்பசி 15ஆம் நாள் விடுதலைப்புலிகள் தமது முதலாவது கொரில்லாத்தாக்குதலை மேற்கொண்டனர். இதையடுத்து மேலும் பல சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறலா யிற்று.

யாழ் குடாநாட்டில் வன்முறை தீவிர மடைந்த ஒரு பின்னணியின் 1983 வைகாசி மாதம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெறும் என அறிவித்தது. விடுதலைப் புலிகள் மக்களையும் அரசியல் கட்சிகளையும் இத்தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர். வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடவிருந்த ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு எச்சரிக்கைகளையும் விடுத்தனர். இதை மீறி தேர்தலில் போட்டியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்ற 3 பேரை புலிகள் ஒரே நாளில் சுட்டுக் கொன்றனர். தேர்தலும் குழப்ப நிலையில் முடிவடைந்தது. இச்சம்பவம் தமிழ்த் தேசியவாதம் எவ்வளவு தூரம் தீவிரம் கொண்டதாக மாறிவிட்டது என்பதை வெளிப்படுத்தி நின்றது. இதில் இரண்டு கருத்து நிலைகள் வெளிப்பட்டன. ஒன்று தமிழ் தீவிரவாதம் ஜனநாயக முறையின் மீது முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதையும் ஜனநாயக வழிமுறைகளில் அமைந்த பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் போன்ற வழிகளின் ஊடாக தீர்வு நடவடிக்கைகள் என்பதனை நிராகரித்து விட்டனர் என்பதனையும் தமது ஒரே மார்க்கம் ஆயுதப்போராட்டமே என்பது மாகும். இரண்டாவது நிலையில் அரசின் ஆணை தமிழ் பிரதேசங்களில் செல்லுபடியற்றது என்பதை சுட்டிக்காட்டியது.

விடுதலைப் புலிகளின் தமிழீழ கோரிக்கையை அடையும் மார்க்கமாக ஆயுதப் போராட்டத்தை முன் எடுத்தனர். ஆயுதப் போராட்டத்தின் ஒரு முக்கிய வழி முறையாக கொரிலா போர்முறையை பின்பற்றினர். 1983 ஆடி மாதம் 23ஆம் திகதி இவ்வியக்கம் இராணுவத் தொடர்வண்டிகள் மீது நடாத்திய தொடர்தாக்குதலில் இராணுவத்தில் 13 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பத்தைக் குறித்து நின்றது. இது உள்நாட்டு அரசியலிலும் பிராந்திய அரசியலிலும் மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருந்தது. இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதன் எதிர்விளைவாக தென் இலங்கையில் வரலாறுகாணாத மிக மோசமான இனக்கலவரம் ஏற்பட்டது. இது சிங்கள இன மேலாதிக்கவாதத்தில் ஒரு நடவடிக்கையாக வர்ணிக்கப்பட்டது. கலவரம் தீவிரம் அடைந்த போது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பிரிவினரிடமிருந்து பாதுகாப்பு பெறக்கூடியதாக இருக்கவில்லை. முன்னைய வன்செயல்கள் போலல்லாது அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியின் நெருங்கிய உறுப்பினர்களும் திட்டமிட்ட வகையில் தமிழர்களது பொருளாதார மூல அமைப்புக்களை அழித்தனர்.

சிறுபான்மையோர் பிரச்சனையென்றும் தேசிய இனப்பிரச்சனையென்றும் உள்நாட்டு மட்டத்தில் இருந்த பிரச்சினை இப்போது சர்வதேசப் பிரச்சினையாக தோற்றம் எடுத்தது. இதற்கு அடிப்படையாக இருந்தது தமிழர்களது உயிருக்கும், சொத்துக்களுக்கும் எந்த வகையான பாதுகாப்பு உத்தரவாதங்களும் இல்லை என்பதால் நம்பிக்கை இழந்த தமிழ் மக்கள், அயல் நாடான இந்தியாவிற்கும், மேலைத்தேச நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். இதுவரையும் இலங்கை அரசாங்கம் முழுமையான உள்நாட்டுப் பிரச்சினையென்று கூறி வந்த போதும் இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இது ஒன்றை வெளிப்படுத்துகின்றது. இலங்கை அரசாங்கம் தமிழர் சக்தியனைத்தையும் விரோதித்துக் கொண்டனர். ஒரு குழுவினர் கூட இவர்களுக்கு ஆதரவாக இருக்க முடியவில்லை.

கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு கூறுகின்றார்.

'The credihility of government with the
Tamils is so low that, without a third part
Standing guarantee there is no possibility
of any face-to-face talks, leave alone
A settlement'

இனக்கலவரம் முடிவடைந்த பின் தமிழ் தீவிரவாத இயக்கங்களின் வளர்ச்சி அசாதாரணமாகவே காணப்பட்டது. இளைஞர், இன உணர்வால் உந்தப்பட்டு தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் தனியரசுப் போராட்டத்தில் இணைந்தனர். மறுபுறம் அரசாங்கம் தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கையை தடைசெய்யும் நோக்குடன் அரசியல் திட்டத்தில் ஆறாவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தது. மித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத கூட்டணித் தலைவர்களுக்கு இச்சட்டமானது பாராளுமன்ற இருக்கைகளை இழப்பதற்கு காரணமாயிற்று. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து இருந்த மிதவாதத் தலைவர்களும் வெளியேற்றப்பட்டனர்.

இந்தியாவின் மத்தியஸ்த முயற்சியோடு இணைப்பு 'சீ' பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. இப்பிரேரணையில் இலங்கையின் இறைமையினையும், ஒருமைப்பாட்டினையும் உள்ளடக்கிய வகையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. செயலிழந்துபோன மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு, செயற்கையான உயிரோட்டத்தை கொடுக்கும் முயற்சியாகவே இது அமைந்தது. முக்கியமாக மாகாணங்களுக்குள் இருக்கும் மாவட்ட சபைகளின் இணைப்பை இப்பிரேரணைகள் ஏற்றுக்கொண்டுள்ளன. தமிழ்த் தேசியவாதம் பெற்றிருந்த எண்ணக்கருக்களில் ஆகக் குறைந்த ஒரு சில அம்சங்களாவது இத்தீர்வுத்திட்டம் முன்வைக்கத் தவறிவிட்டது. தொடர்ந்தும் ஒற்றையாட்சி அமைப்புக்குட்பட்ட வகையில் தீர்வு நடவடிக்கை என்பது ஏற்புடையதாக இருக்கவில்லை. அரசாங்கத்தால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டின் போது ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பதினான்கு அம்சங்களை உள்ளடக்கிய இணைப்பு "பீ" என்ற பிரேரணைகளைக் கொண்டு வந்தார். இதனை மிதவாத தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நீண்ட காலம் பேச்சுவார்த்தைகள் என்பதற்குள் வீண் காலதாமதங்களையே ஏற்படுத்தினர்.

அரசாங்கம் தமிழர்களின் தீவிரவாத இயக்கங்களை பயங்கரவாதமாகவே கருதியது. இதன் விளைவு இரு சாராருக்கும் இடையே ஓய்வில்லாத யுத்தம் இடம்பெற்றது. 'பயங்கரவாதத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி' என அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்தல்களை விடுத்ததோடு இராணுவ மயமாக்கும் செயற்பாட்டிற்கும் அது எப்போதும் முதன்மை கொடுத்துவந்துள்ளது. 'தேசிய பந்தோபஸ்து அமைச்சு' என ஒரு தனியான அமைச்சு ஏற்பட்டு யுத்த நடவடிக்கைகளை துரிதம் ஆக்கியது. வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இராணுவ இணைப்பதிகாரிகளை நியமித்து இவர்களிடம் அரசாங்க அதிகாரிகளினதும், உதவி அரசாங்க அதிபரினதும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன. இதன்மூலம் இராணுவ அதிகாரிகள் நிர்வாக கடமைகளையும் ஆற்றினர். இராணுவ மயமாக்கும் மற்றும் ஓர் முயற்சியாக வெளிநாடுகளின் உதவிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பெறப்பட்டன. இதன் ஓர் அங்கமாகவே, 'இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு' ஏற்படுத்தப்பட்டது. நாட்டை முழுமையாக இராணுவமயமாக்கியமை மூலம் சமரச முயற்சிகளுக்கோ தீர்வு நடவடிக்கைகளுக்கோ இடமிருக்கவில்லை. மிதவாதக் கொள்கையை ஆதரித்த தமிழ் மக்களும் இந்த அரசின் நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்து, ஒரு நிலையில் தமிழ் சமூகமே தீவிரவாத செயற்பாடுகளை ஆதரிக்கும் நிலை தோன்றியது.

தமிழ் தீவிரவாத இயக்கங்களின் பலம் வாய்ந்த அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பின்வருமாறு கூறுகின்றார்.

தேசிய சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில்
தேசிய விடுதலைக்காக நாம் போராடுகின்றோம்,
போராடி வருகின்றோம். சுயநிர்ணய உரிமைக்காக
நாங்கள் போராடுகின்றோம். எங்கள் தாயகத்தில்
இறைமையை மீட்க நாங்கள் போராடுகின்றோம்.
இந்த அர்த்தத்தில் நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல.

சுதந்திரப்போராட்ட வீரர்கள்.

1985ஆம் ஆண்டு இந்தியரசின் மத்தியஸ்த முயற்சியால் முதற்தடவையாக யுத்த நிறுத்தமும், பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இவ்வாண்டு ஆனி மாதம் 18ஆம் திகதி இலங்கை இராணுவத்திற்கும் தீவிர வாத இயக்கங்களுக்கும் இடையே போர் நிறுத்தம் இடம்பெற்றது. இதில் முக்கிய அம் சம் என்னவெனில் ஆனி மாதம் 20ஆம் திகதி நிதியுதவி வழங்கும் நாடு களின் மாநாடு நடைபெறுவதற்கு முன் இம்முயற்சியை மேற்கொண்டமையாகும். இதை அரசாங்கம் ஓர் தந்திரோபாயமாக கையாண்டது. இதே ஆண்டு யூலை மாதம் திம்புவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான போது எல்லாத் தீவிரவாத இயக்கங்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் இணைந்து நான்கம்ச பிரேரணைகளை முன் வைத்த னர்.

ஆ. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனம் என அங்கீகரித்தல்

ஆ. இலங்கையில் தமிழருக்கு பாரம்பரிய தாயகமுண்டு என்பதை அங்கீகரித்தல்

இ. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்

ஈ. இலங்கையை தம் நாடாகக் கொண்ட எல்லாத் தமிழர்களினதும் பிரஜாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்

தமிழர் தேசிய பிரச்சினைக்கு அர்த்த முள்ள தீர்வு காண்பதில் இந்த நான்கு மூலக் கோட்பாடுகளும், இருத்தல் வேண்டும், என்பது ஆழ்தறிந்த முடிவாகும். மேற்குறித்த கோட்பாடுகளுக்கு இணங்க எவ்வித யோசனைகளையும் இலங்கை அரசாங்கம் முன்வைக்குமானால் அதனை பரிசீலனை செய்ய நாம் தாயாராகவே இருக்கிறோம் என தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஐந்து முக்கிய இயக்கங்களும் தமிழர் கூட்டணியும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் பிரச் சினை தேசிய இனப்பிரச்சினை என்பதனை கருத்தில் கொண்டு தேசிய இனம் தமிழ்த் தாயகம், சுய நிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வெவ்வேறு நாடுகளில் இக்கருத்துக்களை உறுதிப்படுத்த வெவ்வேறு வகையான ஆட்சிமுறைகள் காணப்படுகின்றன. எனவே இலங்கை அர சும் இவற்றை உறுதிப்படுத்தக்கூடிய தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என் பதே இவர்களின் வாதமாகும். ஆனால் இதற் குப் புறம்பாக இலங்கை அரசாங்கமோ 'புதிய யோசனைகள்' என்பதற்குள் தொடர்ந்தும் மாவட்ட சபைகள் இணைக்கப்பட்ட மாகாண சபைகள் என்ற தோல்வி அடைந்த முறை களையே மீண்டும் ஒவ்வொரு பேச்சு வார்த்தைகளிலும் முன்வைத்து வந்தது. இந்த யோசனைகள் தமிழர்களின் தேசிய பிரச்சினையை எந்த வகையிலும் தீர்க்க முடியாதவை என்பதை கடந்த வரலாறுகள் நிரூபித்தன.

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுள் பல மானதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் காணப்படுகின்றது. 1970களின் நடுப்பகுதியில் இருந்து வன்முறையை தீவிரமாகப் பின்பற்றி வந்தது. 1980களில் இருந்து அது ஆயுதப் போராட்டத்தை தீவிரமாக்கியதுடன் கொரில்லாப் போர்முறையை பிரதான உத்தி யாக கையாண்டு பல வெற்றிகரமான தாக் குதல்களை மேற்கொண்டது. 1985இன் நடுப்பகுதியில் இருந்து இலங்கையின் இராணுவத் துருப்புக்களை முகாம்களுக்குள் முடக்குவதில் புலிகள் இயக்கம் வெற்றி கண் டது. இதையடுத்து தம்வசமுள்ள பிரதேசங் களில் காரியாலயங்கள், கூட்டுறவு ஸ்தாப னங்கள் போன்றவற்றில் பணிகளை ஒழுங்கு அமைத்தல், வரிகள் அறவிடல் என்பவற்றை, முதலில் குடாநாட்டிலும் பின்னர் படிப்படியாக ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்கும் நடை முறைப்படுத்தினர். புலிகள் தலைவர் பிர பாகரன் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'1985இன் நடுப்பகுதிகளில் யாழ்குடாநாட்டு ராணுவம் வெளியே வரமுடியாதபடி போராளிகள் கட்டுப்படுத்தி இருந்தனர். இதனால் குடாநாட்டில் பெரும்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சிவில் நிர்வாகத்தை கொண்டு வந்தனர்.'

தமிழ் இயக்கங்களிடையே ஒற்றுமை யிருக்கவில்லை. எல்லா இயக்கங்களும் ஒற்றுமை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடு வதாக கூறிவந்த போதும் பொதுப்படையான ஒற்றுமையோ, பொதுப்படையான வேலைத் திட்டங்களோ இடம்பெறவில்லை. இராணு வத்துடனான தாக்குதல்களில் புலிகள் அதி களவு ஈடுபட்டமையால் பலமான இராணுவ அணியொன்றை அமைத்துக் கொண்டதோடு போராட்டத்திற்கான உறுதியான தளம் ஒன்றையும் அமைத்துக் கொண்டது. இதன் மூலம் இதன் வளர்ச்சி வேகமடைந்தது.

1986 வைகாசி மாதம் சில முரண்பாடுகள் காரணமாக விடுதலைப்புலிகள் தமிழீழ விடுதலைக்கழகத்திற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இதே ஆண்டு நவம்பர் மாதம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியோடு மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் விடு தலைக்கழகம் தடை செய்யப்பட்டது. இதன் மூலம் விடுதலைப்புலிகள் மேலாதிக்க நிலையை மேற்கொண்டது. இதையடுத்து கிழக்கு மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்தும் போட்டி இயக்கங்களிடையே ஏற்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இயக்கங் களுக்கிடையிலான மோதல்களை பயன் படுத்தி இலங்கை அரசாங்கம் 1986 வைகாசி மாதம் ஒரு பாரிய தாக்குதலை தீவிரவாதி களுக்கு எதிராக மேற்கொண்டது. தாக்குதலின் பிரதான நோக்கம் படைமுகாம்களை இணைக்கும் நடவடிக்கையாகவே விமானத் தாக்குதல்களும், செல்தாக்குதல்களோடும் முன்னேற முயன்றது. புலிகள் இயக்கம் பலமாக இருந்தமையால் உற்சாகத்துடன் இராணுவத்திற்கெதிராக பதில் தாக்குதலை கொடுத்தது. இதில் இராணுவம் வெற்றி பெற முடியவில்லை.

1986 சித்திரை மாதம் இலங்கை அரசாங் கம் சமர்ப்பித்த மாற்று யோசனைகளில் ஒரு தனியான மாகாண சபை அமைப்பதற்கு இடமளிப்பதாக இருந்தது. முன்னைய யோச னைகளை விட இதற்கு அதிகார பரவலாக்கம் கூடுதலாக இருந்தது. ஆனால் தீவிரவாதிகள் இதன் மூலம் திருப்தியடையவில்லை. அவர் கள் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு பிரத்தியேகமான தமிழ் மொழி அரசொன்று, பிரதேச சபைகளால் நிர்வகிக்க கூடியளவிற்கு உரிமை தரவேண் டும் எனக்கோரி மேற்கூறிய யோசனைகளை நிராகரித்தனர். மிதவாத தமிழர் விடுதலைக் கூட்டணியும் நேரடிப் பேச்சுக்களை தொடங்கு வதற்கு மறுத்தது. ஏனெனில் அரசாங்கப் படைகள் தொடர்ந்தும் பொதுமக்களை கொலை செய்வதால் நேரடிப்பேச்சுக்கு மறுத்துவிட் டது. அ. அமிர்தலிங்கம் 'கணிசமானளவு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங் கப்படவில்லை எனவும் இரு மாகாணங்களை யும் ஒரு மாகாணமாக்கி பெறப்படும் ஒரு தமிழ்மொழிக்கு போதிய அதிகாரங்கள் வழங் கப்படவில்லை எனவும் அவரும் மறுத்து விட்டார். இந்த யோசனைகளை அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்தல் செய்யும் முன்பே, தமிழ்த் தீவிரவாதிகள் குண்டுத்தாக்குதலை கொழும்பிலுள்ள பல இடங்களிலும் மேற் கொண்டமையால் பேச்சுவார்த்தைகள் தடை செய்யப்பட்டன.

தீவிரவாத இயக்கங்களும் இராணுவத் திற்கும் இடையே தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றன. மறுபுறம் பாரீசில் நடைபெற விருந்த நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாடு 1986 ஆனி 19ஆம் திகதி நடைபெற இருந்தமையால் இலங்கை அரசாங்கம் தனக்கு வழங்கப்படும் உதவி உள்நாட்டு யுத்தங்களை காரணம்காட்டி நிறுத்தப்பட்டு விடுமோ என்ற பயத்தால் தாக்குதல்களைக் குறைத்து கொண்டது. 1986 ஆனி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18ஆம் நாள் மந்திரிமார் சிபாரிசு செய்த யோசனையை முன்வைத்து எல்லா கட்சிகளை யும் கொண்ட மாநாட்டை ஆனி 25இல் கூட்டி ஒன்பது மாகாணங்களுக்கு மாகாண சபைகளை அமைத்து அதிகார பரவலாக் கத்தை மேற்கொள்ளும் முயற்சியில் ஆர்வம் காட்டியது. தமிழர் விடுதலை கூட்டணி இதனை ஏற்க மறுத்தது. இதே போன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி இத்திட்டத்தில் தமிழர்களுக்கு கூடுதலான சலுகைகள் வழங்கப்படுவதாக கூறி இம் மாநாட்டை பகிஸ்கரித்தது.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு 1986 கார்த்திகையில் பெங்களூரில் நடைபெற்றது. இம்மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இலங்கைத்தமிழர் பிரச்சினை தீர்வு பற்றி கலந்துரையாடுவதற்கு, தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் அழைக் கப்பட்டிருந்தனர். இப்பேச்சு வார்த்தைகளில் முக்கியமாக வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு பற்றிய கோரிக்கைக்கு மாறாக 'கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங் களாகப் பிரிக்கும்' ஓர் திட்டத்தை இலங்கை யரசு முன் வைத்தது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாதென புலிகள் நிராகரித்து விட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதி நிதிகள் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக '1986 மார்கழி 19 பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன. இதில் அம்பாறை தேர்தல் தொகுதியை தவிர்த்து புதிய கிழக்கு மாகாணம் ஒன்றை ஏற்படுத்துவது என்ற திட்டத்தை முஸ்லீம்கள் எதிர்ப்பாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. பின் அது அவ்வாறே கைவிடப்பட்டது.

1987ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத் துவம் மிக்கதொன்றெனக் கூறலாம். ஏனெனில் இவ்வாண்டு தை முதல் விடுதலைப்புலிகள் 'யாழ்ப்பாணத்தில் தன்னிச்சையாக சுதந்திரம் பிரகடனம் செய்தல்', 'சொந்த நாணயம் புழக்கத்தில் விடுதல்', யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை பொறுப்பேற்றல்' போன்றவற்றை மேற்கொள்ளப்போவதாக ஊகங்கள் வெளிப்பட்டன. ஆனால் இவற் றில் விடுதலைப் புலிகள் தை முதலாம் திகதி யிலிருந்து வாகனங்கள், தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றை பதிவு செய்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தினர். இலங் கையரசாங்கம் எதிர் நடவடிக்கையாக யாழ் குடாநாட்டின் மீது ஏற்படுத்திய பொரு ளாதாரத்தடையை நீக்கும்படியும் பேச்சு வார்த்தையை தொடர வேண்டும் எனவும் இந்தியரசு இலங்கையரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால் இலங்கை இதை புறக் கணிக்கவே இந்தியரசு தனது மத்தியஸ்த முயற்சியை நிறுத்திக் கொண்டது. இந்தியா - இலங்கை உறவில் ஓர் விரிசல் ஏற்பட்டது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் இறுதிப்பகுதி யில் இலங்கை அரசாங்கம் வடமராட்சிப் பகுதியில் தரை, கடல், ஆகாயமார்க்கமாக பெரியளவில் போரை மேற்கொண்டது. இப் போரின் அனர்த்தமானது முன்னொரு போதும் இடம்பெறாததாக அமைந்தது. அநேக மக்கள் உயிரிழந்து, காயப்பட்டு, வீடுகளை இழந்து துன்பமடைய, மறுபுறமாக இளைஞர் கள் 5000க்கு மேற்பட்டோர் கைது செய் யப்பட்டு தென் இலங்கை சிறைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இலங்கை மீதான இந்தியாவின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. முக்கியமாக இந்திய எதிர்க் கட்சி களும் தமிழ் நாட்டு அரசாங்கமும் இந்திய மத்தியரசு மீது அழுத்தங்களை மேற்கொண் டமையால் அதன் அணுகுமுறையின் மாற் றங்கள் ஏற்பட்டன. முதலில் கடினப்போக் குடைய அணுகுமுறையான இலங்கையின் ஆள்புலத்தில் ஆகாய விமானங்கள் உணவுப் பொதிகளை யாழ்குடாநாட்டில் போடப்பட்டவை மூலம் இலங்கையரசை பணிய வைக்கும் முயற்சியாக மேற்கொண்டது. பின் இந்திய இலங்கை அரசுகளுக்கிடையே 1987 ஆடி 29ஆம் திகதி ஒப்பந்தமொன்று கைச் சாத்தானது.

இவ்வொப்பந்தம் தொடர்பாக மிதவாத தமிழர் விடுதலை கூட்டணி இந்தியரசு ஆதரவுடன் ஏற்றுக் கொண்டது. இதே போன்று ஏனைய தீவிரவாத இயக்கங்களும் இந்தியரசின் நல்லெண்ண முயற்சியாலும் வேறு சில காரணங்களாலும் ஏற்றுக்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. ஈரோஸ் அமைப்பின் செயலாளர் பாலகுமாரன் அளித்த பேட்டி ஒன்றில்,

"நாங்கள் இந்த ஒப்பந்தத்தை வரவேற்கவில்லை
அதாவது இது எங்களுக்கு மனநிறைவைத் தருவதாய்
இல்லை. ஆனால் நாங்கள் முழுமூச்சாய் எதிர்க்கவில்லை
இந்த ஒப்பந்தம் வெளிநாட்டுச் சக்திகளால்
உருவாக்கப்பட்ட சதிவேலை"

இயக்கங்களுள் பலம் வாய்ந்ததாக இருந்த விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் இருந்த கடுமையாக இவ் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே வந்தது. ஆயினும் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. புலிகள் இயக்கத்தலைவா் பிரபாகரன்

'இந்தியா - இலங்கை ஒப்பந்தமானது எமது மக்களின்
பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்துமா
என்பது சந்தேகத்திற்குரியது. இதை ஏற்றுக்கொள்ள
முடியாதென தெளிவாக விளக்கினோம்.....
இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும், தொட்டு
நிற்கவில்லை. இது பிரதானமாக இந்திய- இலங்கை உறவு
பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின் கீழ் இலங்கையைக்
கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடக்கப்பட்டிருந்தன.
எமது அரசியலின் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட
ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும்
போது நாம் என்ன செய்வது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது தமிழர் பிரச்சினை தொடர்பாக முக்கிய பல அம்சங்களை கருத்தில் எடுக்கப்பட்டிருந்தன. மொழியுரிமை, தமிழர் தாயகம், தமிழர் தனித் தன்மை, அதிகாரப்பங்கீடு, குடியமர்வு போன்றனவாகும். இவை வெறுமனே சில உள்நோக்கங்களைக் கொண்டு ஏற்படுத் தப்பட்டவை. அவற்றில் ஆழத்தன்மையோ அல்லது நடைமுறையில் இருக்கும் பிரச்சினை களுக்கு தீர்வாகவோ எந்த வகையிலும் அமையவில்லை. தமிழ்த் தேசியவாதம் தொட்டு நிற்பது, தேசிய இனப்பிரச்சினை அவற்றிற்கு தீர்வாக தமிழர் தனித்துவமான தேசிய இனம் அவர்களுக்கு பாரம்பரியமான தாயகம் வடக்கு - கிழக்கு இணைந்த பகுதி வெறும் நிர்வாகப் பரவலாக்கமோ அல்லது அதிகாரப் பரவலாக்கமோ என்ற எல்லைகள் தாண்டி, அர்த்தமுள்ள சுயாட்சியை ஏற்படுத் தக்கூடிய அதிகாரப் பகிர்வு என்பனவற்றை முன்வைப்பதன் மூலமே தீவிரம் பெற்றி ருந்த தமிழ் தேசியவாதத்திற்கு தீர்வாக அமைந்திருக்க முடியும் என்ற கருத்தோட்டத் தையே பின்னைய சம்பவங்கள் எடுத்துக் காட்டின.

இந்நூற்றாண்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏற்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் அரசாங்கத் தலைவர்களுக்கும் - தமிழ் தலைவர்களுக்குமிடையே இடம்பெற்றுள் என. ஆனால் இப்போது இரு நாடுகளுக்கிடை யிலான ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச் சினையை தீர்க்க முற்பட்டமை தேசியவாத தீவிரத்தையும் அதை நசுக்க மூன்றாவது நபரின் உதவியையும் கோரிய ஒரு நிலையை புலப்படுத்தியது. இவ்வொப்பந்தத்தின் முக்கிய நோக்கம் தமிழ் ஈழக் கோரிக்கையை நிரா கரிப்பதாக, தமிழ்த் தீவிரவாதத்தையும் அதன் போராட்ட வழிமுறைகளையும் அடக்க அவர்களின் ஆயுதங்களை ஒப்படைப்பு செய்வதன் மூலம் அதன் நோக்கத்தை அடைய முற்பட்டது. இந்திய அரசாங்கம் ஒப்பந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டிய பின் ஆயுதங்களைக் களைவது நியாயமானதாக இருந்திருக்கும். ஆனால் எதிர்மறையான வழியையே அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றியது. ஆகவே பின்னர் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு காரணமாகியது. இலங்கை அரசாங்கம் ஒப்பந்த விதிமுறைகளை மீறும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இதை வெளிப்படுத்துவதற்கு புலிகள் இயக்கம் சாத்வீக போராட்ட மார்க்கமான உண்ணாவிரதப் போராட்டத்தை இந்திய அரசுக்கெதிராக மேற்கொண்டனர். இதற்கு சாதகமாக இந்தியரசின் பதில் கிடைக்காமையால் புலிகளின் உறுப்பினர் மரணம் அடைந்தார்.

இதைத் தொடர்ந்து மேலும் பல உறுப்பினர்கள் தற்கொலை செய்து கொண்டனர். இந்தச்சம்பவங்கள் யாவும் தவிர்க்கமுடியாதபடி இந்திய அரசோடு விடுதலைப்புலிகள் மோதும் நிலை ஏற்பட்டது. புலிகள் கெரிலாப் போர் முறையை ஓர் முக்கிய போர் வடிவமாக பின்பற்றியமையால் இந்திய இராணுவத்தோடு மோதும் பலம் கிடைத்தது. புலிகளின் முக்கிய உறுப்பினர் யோகரட்ணம் யோகி

'இந்திய அமைதிகாக்கும் படையோடு ஏற்பட்ட யுத்தத்தில்

நாங்கள் 700 வீரர்களையே இழந்தோம். நாம் மரபு

வழி இராணுவமல்ல. கொரில்லா இராணுவம் எனவே

எமது பலம் குறையமாட்டாது.

தமிழ் தேசியவாதம் எவ்வளவு தூரம் தீவிரமடைந்துள்ளது என்பதை இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிரான போராட்டம் வெளிப்படுத்தியது. மறுபுறம் தமிழ் தேசியவாதத்தின் கருவறைகள் எந்த வகையிலும் விட்டுக்கொடுக்க தயார் இல்லை என்பதையும் இது வெளிப்படுத்தியது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் புதிய ஆட்சித்துறைத் தலைவரின் வருகையும் இணக்கத்திற்கான நல்ல சமிஞ்சையாகி அமைந்துள்ளமையால் 1990களில் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி இரு தரப்பினரும் பேச்சுக்களில் கலந்துகொண்டன. பின்னர் ஆறாவது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து முரண்பாடுகள் தோன்றின. ஏனெனில் இச்சட்டத்தினுள் தேசிய ஒருமைப்பாட்டு விசுவாசமாக இருத்தல் என்பதாக இருந்தமையால் அரசு வீண் கால தாமதங்களை ஏற்படுத்த முயன்றது. புலிகள் இச்சட்டம் நீக்குவதன் மூலம் தமது போராட்டத்தின் இறுதி இலட்சியத்தை அடைய சாதகமாக இருக்கும் என நம்பியது. இது தவிர்க்க முடியாதபடி மீண்டும் இலங்கை அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே யுத்தம் இடம்பெற்றது. மிதவாத தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழ் இயக்கங்களும் வளர்ந்து வந்து தமிழ் தேசியவாதத்தின் தீவிரவாதத்தை தொடரமுடியாதவர்களாக அதில் இருந்து ஒதுங்கிய போதிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் தமிழர் ஒரு தேசிய இனம் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, மரபு வழிதாயகம், தனித்துவமான கலாச்சாரம் பாரம்பரியம், சுயாட்சி என்ற தமிழ் தேசியவாதத்தின் புதிய பரிமாணங்களை தொடர்ந்து நம்பிக்கையோடும் முன்னெடுத்துச் சென்றனர். முதிர்ச்சியடைந்து வரும் தேசிய பிரச்சினையானது மேற்கூறப்பட்ட எல்லைக்குள் மட்டுமே தீர்வு நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்பதை தொடர்ந்தும் இவர்கள் வலியுறுத்தி வருவதோடு எதிர்கால பேச்சுவார்த்தைகள் யாவும் இந்த அடிப்படையிலேயே மேற்கொள்ள வேண்டும், என தெரிவித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTES AND REFERENCES

**Chapter: 5**


1. ரிஸால் புயென்டியா,'இனத்துவப் போராட்டமும் அதற்கான தீர்வும்' இந்தோனேசியா, மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் உதாரணங்கள். பொருளியல் நோக்கு, யூன், யூலை, 1992, பக்கங்கள்: 13- 17.
2. Ponnambalam Satchi; Sri Lanka National Conflict and the Tamil Liberation Stuggle. Zed Books Ltd; London. 1983. P:8.
3. De Silva.C.R. 'The Impact of Nationalism on Education; The Schools Take – Over (1961) and the University Admissions Crisis 1970 -1975' in Michael Robert, (ed) Collective Inden-tities, Nationalism and protest in modern Sri Lanka, 1979, PP:474- 480.
4. Dissanayake.T.D.S.A. The Agony of Sri Lanka. Swastika Ltd, Colombo, 1983, P:29.
5. Ponnambalam.S, op:cit. P:180
6. பாலசிங்கம் அன்ரன் இரண்டு தசாப்தங்களும் புலிகளும் வெளியீடு: தமிழீழ விடுதலைப்புலிகள், யாழ்ப்பாணம், 1992, பக்: 6.
7. மேற்படி, பக்: 7.
8. இரத்தினசபாபதி. ,ஈழுவர் இடம் கீர ஈழ ஆய்வு நிறுவனம், மதுரை 1984 பக்கங்கள்: 4- 5
9. மேற்படி, பக்: 15.
10. 1985ஆம் ஆண்டு பூட்டானின் தலை நகரமான திம்புவில் நடைபெறவிருந்த பேச்சு வார்த்தை ஈழபுரட்சியமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, தமிழீழ விடுதலைக்கழகம் ஆகிய நான்கு இயக்கங்களும் ஒன்று சேர்ந்து 'ஈழ தேச விடுதலை முன்னணி' என்ற ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கினர். திம்புப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது பிற்காலத்தில் ஐக்கிய முன்னணி சிதைந்து போயிற்று.
11. Jeyaraj, D.B..S. 'How strong are the boys' FRONT LINE, March 23 – April 5, 1985, P:16.
12. Ibid, P:16.
13. Ibid, P:16
14. ஐக்கிய தேசியக்கட்சி வெளியீடு நீதியும் சுதந்திரமும் நிலவும் ஒரு சமுதாயங்களை சிருஸ்டிப்பதற்கான செயற்திட்டம் கொழும்பு, 1977, பக்:10.
15. Balasuriya, Tissa. Our Crisis of national unity in Race Religions in Sri Lanka.A centers for society and Religion publication, Colombo, 1979. P:115.
16. David Selbourn, Saturday Review – 15-9-1985.
17. சுதந்திர இலங்கை அரசியலில் பிரதான இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் இனக்கலவரங்களாகவே வெளிப்பட்டன. 1956, 1958, 1961, 1971, 1977, 1981, 1982, 1983 இவை பின்னைய காலங்களிலும் நீடித்த நிலைத்த பண்புகளாயின.
18. அரசாங்க வெளியீடு, இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் அறிக்கை. முதலாவது அறிக்கை - 1990, பங்குனி 1990, பக்கங்கள் 1- 3
19. Dissanayake. T.D.S.A, op:cit, PP:30- 33.
20. Ibid, PP:29- 52.
21. Sivathamby.K. 'Evalution of the Tamil question' (Part-1) Lanka Guardian Vol:6, No.20, Feb.15. 1984, PP:12- 13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. A Mirji Publication, EMERGENCY ,79, Kandy, 1980, PP:3-4

23. Amnesty International Report – 1980, P:234
இராணுவம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட முதல் நாள் நடவடிக்கையின் போது இன்பம், செல்வம் (செல்வரட்ணம்) ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

24. Balakrishnan.N. 'District Development Councils and Tamil Politics (Sri Lanka)', The Sri Lanka Journal of South Asian Studies. Vol:2, No:2. December, 1982. PP:54- 56.

25. Sivathamby.K. op:cit P:20.

26. தமிழ் அரசறிவியல் அறிஞர்களான பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும் இக்குழுவின் உறுப்பினர்களாக இடம்பெற்றனர்.

27. Presidential Commission on Development Councils, Sessional paper, 1980. P:1

28. தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக பேராசிரியர் வில்சனும், கலாநிதி நீலன் திருச்செல்வமும் நியமனம் செய்யப்பட்டனர், என்பதோடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை மசோதாவிற்கு ஆதரவாக கூட்டணி பிர-திநிதிகள் வாக்களித்து சட்டம் உருவாக்கப்பட்டது.

29. நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்தவும் மாவட்ட மட்ட மூலவளங்களைப் பயன்படுத்தவும் முடியும் என்ற கருத்தும் குடியேற்றங்கள் ஏற்படுவதை இதன் மூலம் தடுக்க முடியும் என்ற கருத்துக்களுமே வலியுறுத்தப்பட்டு வந்தன.

30. 1981 ஐப்பசி மாதம் 15ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்றைத்தாக்கி இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

31. அமைச்சரவையில் புதிய அமைச்சாக உருவாக்கப்பட்டதே தேசிய பந்தோபஸ்து அமைச்சாகும். இதன்மூலம் அமைச்சராக லலித் அத்துலக்முதலி நியமனம் செய்யப்பட்டார்.

32. எனது மக்களின் விடுதலைக்காக (தலைவர் பிரபாகரனின் கருத்துத்தொகுப்பு) வெளியீடு தமிழீழ விடுதலைப்புலிகள் - 993, பக்.7.

33. எமது மக்களின் விடுதலைக்காக மேற்படி பக்: 88

34. பாலசிங்கம்.அ. மேற்படி பக்கங்கள்:25- 26

35. Tamil Lanuage (Special provisions) Regulations, 1966.P:4.

36. பத்தாவது தேசிய மாநாட்டுத் தீர்மானம் - 1966', பக்: 31.
தீர்மானம் 1: சமஸ்டியே இந்நாட்டிற்கு வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் தீர்மானம்.
தீர்மானம் 2: தமிழ்மொழி விசேட ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கில் உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.
தீர்மானம் 3: தமிழ் பேசும் மக்களுக்கென கிழக்கு மாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைத்தல்.
தீர்மானம் 4: மாவட்ட சபை சட்டங்களை உடனே கொண்டு வருதல்.

37. யூலை 29 உடன்பாடும் எமது நிலைப்பாடும் ஈழப்புரட்சி அமைப்பு (ஆவணக்காப்பக வெளியீடு இலடு 2) பக்கங்கள்: 17- 18.

38. எனது மக்களின் விடுதலைக்காக மேற்படி பக்கங்கள் : 124- 126.

39. Yogi.J. Economic Review – March, 1990 Vol:15. No: 12. PP:1- 5.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை செல்வாவுக்கு " நாவலர் சிலையைப்" பரிசளிக்கும்
மெய்கண்டான் அச்சக அதிபர் உடன் திரு.அமிர்தலிங்கம்.



இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் கண்ணியத்துக்குரிய காயிதே
மில்லத்துடன் கைகுலுக்கி நட்பை வெளிப்படுத்தும் மதம் கடந்த
தமிழர் தலைவர் தந்தை செல்வா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியப்பிரதமர் நேருவை தோழமையுடன் சந்தித்து
உரையாடும் தந்தை செல்வா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 07

# முடிவுரை

கடந்த நூற்றாண்டில் இலங்கையின் அரசாங்க முறை ஒற்றையாட்சி யமைப்புக்குள் கொண்டு வரப்பட்டது. நாட்டின் அரசியல், நிர்வாக விடயங்களுக்காக மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்ட ஆட்சியமைப்பு உருவாக்கப்பட்டது. இது பிரித்தானிய நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்டது என்பதோடு இலங்கையின் ஆரம்பகால சீர்திருத்தங்களாகவும் அமைந்தன.

கிறிஸ்தவ மிஷனரிமாரின் கல்வி நடவடிக்கையால் தோற்றம் பெற்ற உயர் குழாமினர், தமது அரச பதவிகளாலும் கல்வியாலும் சமூகத்தின் உயர் அந்தஸ்தை பெற்றுக் கொண்டனர். இவர்கள் சாதாரண மக்களிலிருந்து தம்மை பெருமளவிற்கு வேறுபடுத்தி கொண்டனர். இந் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களின் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்த உயர் குழாமினர் மத்தியில் இணக்கத் தன்மையும், தேசிய ஒருமைப்பாடும் காணப்பட்டது. குறுகிய காலத்தினுள் கருத்து முரண்பாடுகளும் கொள்கை வேறுபாடுகளும் ஏற்பட்ட போது இவர்கள் பிரிந்து தொடர்ந்தும் தமது உயர் அந்தஸ்தை பேணிக்கொள்ள ஒவ்வொரு இனங்களும் இனவாரியான அமைப்புக்களை ஒழுங்கமைத்துக் கொண்டனர்.

இனத்துவக் கோரிக்கைகளும், இன அமைப்புக்களும் கருக்கொண்ட காலத்தில் டொனமூர் இலங்கைக்கு ஓரளவு உள் விவகாரங்களில் சுயாட்சி வழங்கினர். இவர்களால் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை, பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை என்பன ஜனநாயக தத்துவத்தோடு இணைக்கப்பட்ட போது நாட்டின் பெரும்பான்மை இனத்திற்கு சாதகமாக அமைந்தது. இதன் மூலம் பெரும்பான்மை இனத்தவர்கள் அரசியல் அதிகாரத்தை தமது கைகளில் பெற்றுக் கொண்டனர். இக்காலத்தில் தேசியவாதப் பண்புகளோ அல்லது தேசிய நோக்கோ இன்றி இனவாத சிந்தனை களும், இனவமைப்புகளும் முனைப்புடன் செயற்படலாயிற்று.

வரலாற்று ஐதீகங்களில் காணப்பட்ட 'பொற்கால மீட்சி' என்ற கருத்து நிலை ஏற்பட்ட போது சிங்கள மொழியும் பௌத்த மதமும் ஒன்றாக இணைக்கப்பட்டது. இந்த கருத்துருவ தோற்றத்தோடு சிங்கள - பௌத்த தேசியவாதம் இலங்கையரசியலில் நிலையான இடத்தைப் பெற்றுக் கொண்டது. சிங்கள பௌத்த நோக்கில் இலங் கையில் ஏற்பட்ட பல்வேறு வகையான பிரச்சினைகள் இனவாதமாகத் தோன்றி பல்பரிமானங்களைப் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன உணர்வு, அரசியலில் முக்கிய காரணியாகவுள்ளது. இதனால் இனமுரண்பாடு பொதுவானதாகவுள்ளது. இன உணர்வு சமுதாய மட்டத்தில் வெள்வேறு காரணங்களினால் தோற்றம் பெறுகின்றன. இன உணர்வு மேலெழுந்து இனத்துவ தேசிய வாதமாக பரிணமித்த போது பல்தேசிய இனங்கள் வாழும் நாடு என்பது மறுக்கப்பட்டு, பெரும்பான்மையினத்தவர்களின் அரசியல், பொருளாதார சமூக நல மேம்பாடுகளுக்கான நடவடிக்கைகளில் புதிய வீச்சுடன் செயற்படுகின்றது. மறுபுறம் சிறுபான்மையினங்கள் பெற்றிருந்த அரசியல், அந்தஸ்து, பொருளாதார சந்தர்ப்பங்கள், சமூக, கலாசார பெறுமானங்கள் படிப்படியாக குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

பல்தேசிய இனங்களைக் கொண்ட நாட்டில் சிறுபான்மையோர் தமது தேசிய அந்தஸ்து கிடைக்காத போது தேசிய நிலையை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்வது இயல்பாகும். முக்கிய தமிழ்த் தலைவர்கள் சிறுபான்மையினத்தின் தேசிய நிலையை அடைவதற்கு 'சமபலப் பிரதிநிதித்துவத்தை' கோரினர். இது இரு சந்தர்ப்பங்களிலும் நிராகரிக்கப்பட்டது. ஏற்கனவே சிறுபான்மையோர் மத்தியில் ஏற்பட்ட நியாயமான அச்சவுணர்வை இது மேலும் வலுப்படுத்தியது. இக்கோரிக்கை அடைந்து கொள்ள முடியாத தொன்று என அறிந்தும் மாற்று வழிமுறைகளைப் பற்றி சிந்திக்க அன்றைய தமிழ்த் தலைமை தவறிவிட்டமை வரலாற்றுத்தவறாகி விட்டது.

சோல்பரி அரசியல் திட்டத்தில் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திரம் பெறும் போது உயர்குழாம் தலைவர்கள் ஒன்றாக இணைந்து தேசிய ஒருமைப்பாடு, ஐக்கிய இலங்கை என்பதற்குள் சுதந்திரம் பெற்றனர். சுதந்திரத்தின் பின் முக்கிய தலைவர்கள் சிலர் 'தேசியம்','மதசார்பின்மை','இருமொழி சமத்துவம்' என்ற கொள்கைகளை முன்னெடுத்த போதும் அது ஈற்றில் தோல்வியைக் கண்டது. இக்கால மட்டத்தில் சிங்கள பௌத்த தேசியவாதம் இலங்கையர் தேசியவாதமென முலாம் பூசப்பட்டாலும் அது மிக குறுகிய காலத்திற்குள் புதிய வீரியத்துடன் இனவாதப் பண்புகளைக் கொண்ட சிங்கள பௌத்த தேசியவாதமாக வெளிப்பட்டது.

பன்மைச் சமூக அமைப்புடைய நாட்டிற்கு சோல்பரி அரசியல் திட்ட அம்சங்கள் ஏற்புடையவை அல்ல. யாப்பின் அடிப்படை உரிமைகளுக்கான உறுதிப்படுத்தல் வழங்காத ஓர் நிலையில் இந்த யாப்பின் சிறுபான்மையோர் பாதுகாப்பு ஏற்பாடுகள் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து மீறப்பட்டது என்பதை யாப்பை உருவாக்கியோர் பிற்காலத்தில் உணர்ந்து கொண்டது வெளிப்படையே. முக்கியம் ஆக சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக அடிப்படையுரிமைகளை மீறும் பல இனவாதச் சட்டங்கள் வெள்வேறு காலப்பகுதிகளில் உருவாக்குவதற்கு காரணங்களாக அமைந்தன.

சமுதாயத்தின் இனவெளிப்படையானது அரசியல் வெளிப்பாட்டிலும், முரண்மிக்கதாகவும் போட்டி மிக்கதாகவும் காணப்படுகின்றது. இதற்கு காரணங்கள் பல. அதிகார கட்டமைப்பில் அதிகாரமும், பொறுப்பும் பல்வேறுபட்ட இன சமுதாயத்தால் பகிரப்படாமல் இனவாத உணர்வோடு பெரும்பான்மையினம் செயற்படும் போது தேசிய மட்டத்தில் பல பிரச்சினைகள் கருக்கொள்கின்றன. 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவின் எழுச்சியோடு சிங்கள பௌத்த தேசிய வாதம் 'அரச தேசியவாதமாக' பரிணமித்தது. இக்காலப்பகுதியில் மொழியும், ஆள்புலமும் முக்கிய தேசியமட்ட பிரச்சினைகளாக வெளிப்பட்டன. இதுவே தேசிய ஒருமைப்பாட்டின் பிளவாகவும், பிரிவினைக்கு அடித்தளமாகவும் காணப்பட்டது எனலாம்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன் தமிழ் அரசியலில் இன உணர்வு காணப்பட போதும் அது இன, மத, மொழி, பிரதேச காரணிகளை கொண்டிருக்க இல்லை. இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் தமிழர்கள் விரும்பி இருந்தனர். ஒற்றையாட்சி அமைப்புக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வினையும் முன் வைத்தனர். ஆனால் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரியத்துடன் சிங்கள பௌத்த தேசியவாதம் வெளியிட்ட போது அதற்கு ஈடுகொடுக்கும் எதிர் விளைவாகவே தமிழ்த் தேசியவாதம் தோற்றம் பெற்றது. தமிழ்த் தேசிய வாதத்தின் கருவாக, 'எல்லா வகையிலும் வேறுபட்ட இனம், 'தனித்துவமான கலாசார அம்சங்கள்', 'இனமொன்றிற்கான மொழி', 'தொன்மையான வரலாற்றுப் பாரம்பரிய ஆள்புலம்' என்பது அமைந்தது. தெளிவான வெளிப்புற அடையாளங்களைக் கொண்ட தேசிய சிறுபான்மையினம் தனது தனித்துவத்தைப் பேண ஐக்கியப்பட்ட இலங்கை அரசியலில் சமஸ்டியமைப் பொன்றின் கீழ் சுயாட்சி அரசுகளை ஏற்படுத்தும் குறிக்கோள் ஒன்றின் அடிப்படையில் சமஸ்டிக்கட்சி தோற்றம் பெற்றது. தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுத்துச் சென்ற பிரதான இயக்கமாக சமஸ்டிக்கட்சி விளங்கியது. வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களை அணிதிரட்டுவதிலும், தமிழ் பேசும் மக்களை வெகுவாக பாதிப்புக்கு உட்படுத்திய பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் முயன்றது. இக்கட்சியின் அணுகுமுறைகளான கோரிக்கைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் என்பனவும் இவற்றை அடைய சில தந்திரோபாயங்களை கைக்கொண்டது. அகிம்சை வழியில் அமைந்த சட்ட மறுப்பு இயக்கம், கீழ்படியாமை என்பன அவை ஆகும். தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக சிங்களத் தலைவர்களோடு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டனர். நியாயமான தீர்வுகள் ஏற்பட்ட போதும் தீவிர சிங்கள இனவாதிகளாலும், மதத் தலைவர்களின் அழுத்தங்களாலும் அவை கைவிடப்பட்டன. இச்செயல் முறைகள் இனத்துவப் போராட்டத்தை தீவிரமாக்கவும், பல்வேறு அரசியல் அனர்த்தங்கள் ஏற்படக் காரணங்களாகவும் அமைந்தன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வெவ்வேறு காலங்களில் தமிழ், சிங்களத் தலைவர்கள் ஒப்பந்தங்கள் மூலமாகவும், உடன்பாடுகள் மூலமாகவும் தீர்வுகளை எட்டிய போதும் பின் காலக்கதியில் தீவிர இனவாதத்திற்கு அஞ்சி, உரிமைகளைக் கொடுக்க மறுத்தனர். இதனால் தமிழ் மக்கள், சிங்களத் தலைவர்கள் மேல் நம்பிக்கை இழந்தனர். இது இனவுறவுகளில் விரிசலையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தின.

தேசிய கட்டமைவு ஒன்றுக்குள் தமது தனித்துவமான அடையாளங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்படுகின்ற போது, அதற்கான அங்கீகாரம் கிடைக்காத போது அவை இனத்துவப் போராட்டங்களாக அமைகின்றன. இலங்கையின் முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தில் பல்லின சமூக அமைப்பைக் கொண்ட நாடு என்பது முற்றாக நிராகரிக்கப்பட்டு, ஓர் இனம், ஒரு மொழி, ஒரு மதம் என்பன யாப்பு அங்கீகாரம் பெற்றன. இதன் மூலம் சிங்கள பௌத்த இனவாதம் நிறுவன மயப்படுத்தப்பட்டது எனலாம்.

சிறுபான்மையின மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் உரிமைகளை இழந்து வந்துள்ள ஒரு நிலையில் முதலாம் குடியரசு அரசியல் திட்டம் கொண்டு வரப்பட்ட போது ஒரு வகையான பாதுகாப்பற்ற உணர்வு, சிறுபான்மையினக் குழு தேசிய கொள்கையில் இருந்து நாம் வெகுதூரம் அந்நியப்பட்டுச் சென்றுள்ளோம் என்ற ஆழமான உணர்வு தோன்றியதோடு, இது பெரும்பான்மையினத்திற்கெதிரான நிலைகளை எடுக்கத் தூண்டியது. இதுவே 1970களில் பல்பரிமாணங்களோடு தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்க வழி தோன்றிது.

சமஸ்டிக்கட்சியானது தமிழ்த்தேசியவாத வளர்ச்சியை பரிமாணங்களில் 'மொழி அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள்', 'தமிழ் பேசும் மக்கள் தேசிய சிறுபான்மையினம்', வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடம்','தேசிய சிறுபான்மையினத்திற்குரிய சுய நிர்ணய உரிமை' ஆகிய எண்ணக்கருக்களை தமது அரசியல் செயற்பாடுகளின் மூலம் வெளிப்படுத்தியது. தேசிய இனப்பிரச்சினைக்கு உலக நாடுகள் சமஸ்டி ஆட்சி முறையொன்றின் மூலம் தீர்வுகண்டுள்ளதை வலியுறுத்தி இலங்கையின் தேசிய சிறுபான்மையோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைக்கு சமஸ்டியே தீர்வு என்பதை கோரினர். இதற்கு ஆட்சியாளர்கள் உடன் படாத போது இதற்கு மேலான கோரிக்கை யான 'தனிநாட்டுக் கோரிக்கை' முன்னெடுக்கப் பட்டது. இதற்கான மக்கள் ஆணையாக 1977 தேர்தல் அமைந்தது. இது ஐக்கிய இலங்கை என்ற கொள்கையில் இருந்து மாறுபடும் சிந்தனை மாற்றத்தையும் கொள்கை மாற்றத் தையும் காட்டியது.

அரசாங்கங்களின் பல்வேறுபட்ட அபி விருத்தி நிகழ்வுப் போக்கினால் இனத்துவம் மற்றும் இனத்துவ அடையாளங்கள் என்பன படிப்படியாக கரைந்து செல்ல முடிந்தது. இதை பிறிதோர் வகையில் கூறுவதாயின் மொழியுரிமை, மதவுரிமை, நிலவுரிமை, தொழிலுரிமை, கல்வியுரிமை என்பன பறித்தெடுத்த நிலையில் விழிப்படைந்து கொண்ட சிறுபான்மையினமானது தேசிய கட்டமைப்பு ஒன்றினுள் தேசிய ஒருமைப்பாடு, தேசியம் என்பவற்றில் இருந்து பிரிந்து செல் லும் செயற்பாடுகளிலே கூடியளவு அக்கறை கொண்டிருந்தது. இதுவே 1970களின் பின் இலங்கையின் அரசியலின் போக்காகும்.

அதிகாரப் பதவியில் இருந்த அரசாங்கங் களின் அழுத்தங்களால் விரக்தியும், வெறுப் பும் கொண்டிருந்த இளைஞர்கள் வன் முறை அரசியல் போராட்டங்களை மேற் கொண்டனர். அத்துடன் பாராளுமன்ற அமைப் புக்குட்பட்ட வகையில் அஹிம்சை, அறநெறிப் போராட்ட வடிவத்தைக் கைக்கொண்டு வெற்றி பெறாமையால் பழைய தமிழ்த் தலைமைத்துவம் நிராகரிக்கப்பட்டது. அரசியல் தீவிரவாதத்தையும், வன்முறையையும் கையாண்டு ஆயுதப்போராட்ட வடிவத்தை ஓர் மார்க்கமாக தேர்ந்தெடுத்தனர்.

தமிழீழ தாயகத்தை விட்டு, 'சுதந்திர தமிழ் அரசு' அமைப்பதே இயக்கங்களின் பிரதான குறிக்கோள் ஆகும். இந்த இலட்சியத்தின் அடிப்படையில் பல விடுதலை அமைப்புக்கள் ஒரு காலகட்டத்தில் தோற்றம் பெற்றன. பின் இவ் இயக்கங்களின் முதன்மை அமைப் பாக தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு விளங்கியது. இவர்கள் தமிழ் சிறுபான்மையோருக்கான அடிப்படை உரிமை களுக்கான உத்தரவாதம், தமிழீழ பிரதேசங் களில் பொருளாதார மேம்பாடு, பாரம்பரிய பிரதேசங்களின் இன விகிதாசாரத்தை மாற்றும் நோக்கத்தைக் கொண்ட குடியேற் றங்கள், இராணுவத்தில் இருந்தும் காடையர் களிலிருந்தும் பாதுகாப்பு என்பவற்றுக்கு தயாராக உள்ளனர். தீவிரம் கொண்ட தமிழ்த் தேசிய வாதத்தின் எண்ணக்கருக்களாக 'தமிழ் சமூகம்' இக்கருத்துருவ நிலைகளை அடையும் உபாயங்களாக ஆயுதப்போராட்டம், அரசியல் கலந்துரையாடல் என்பன அமை கின்றன.

மக்களின் ஆழமான அடிப்படையுணர்வு களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக இவை இருப்பதால் அவற்றிற்கு அநேகமாக சமரசம் செய்து கொள்வதற்கு இடமிருப்பதில்லை. வேறு அதிகாரம் பெற்ற மூன்றாம் தரப்பினர் எவராலும் இவற்றை ஒழுங்குபடுத்தவோ, அல்லது கட்டுப்படுத்தவோ முடியாது. சிறு பான்மையினக் குழுக்களின் நியாயமான கோரிக்கைகள் பேரம் பேச முடியாத இனத்துவ நலன்களுடன் சம்பந்தப்பட்டவையாக இருப்பதினால் அவற்றில் சமரசம் செய்து கொள் வது என்பதற்கு அநேகமாக இடம் இருப்ப தில்லை. இந்த யதார்த்த உண்மையை அதிகாரத்திலிருக்கும் வர்க்கத்தினர் அங்கீ கரிக்கத்தவறுதல் அல்லது புரிந்து கொள்ளா திருத்தல் பல் இனங்கள் வாழும் நாடுகளின் இனத்துவப் போராட்டம் தீவிரமடைவதற்கும், பிரிந்து செல்வதற்குமே பங்களிப்புச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கை 01

# தீர்க்கதரிசனமிகு தலைமைப் பேருரை

வரவேற்புக் கழகத் தலைவருக்கும் - இலங்கையின் பற்பல பகுதிகளிலும் இருந்து இங்கு வந்து குழுமியிருக்கும் பிரதிநிதிகளுக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிக்கும் படி என்னைத் தெரிந்தெடுத்து கௌரவித்ததற்காக எனது மனப்பூர்வமான நன்றியறிதலை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்திருக்கின்ற பெரும் பொறுப்பினை நோக்கும் போது, அவற்றை எல்லாம் கொண்டு நடத்துவதற்கு போதுமான வன்மை என்னிடமிருக்குமோ என்று ஐயுறுகின்றேன். எனினும், நீங்கள் எல்லாருக்குமாகச் சேர்த்து எனக்கெனக் குறிக்கும் பணியினை ஏற்று எங்கள் நோக்கத்திற்காக யான் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னைத் தலைவராகத் தெரிவு செய்ததில் நல்ல நியாயம் ஒன்று மாத்திரம் இருக்கின்றது. இது இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அடைந்திருக்கும் பரிதாப நிலைமையினையும், அவர்கள் அதிலிருந்த நீங்கி விடுதலை பெறுவதற்காக ஒரு இயக்கம் அவசியமாகும் என்பதையும் நீங்கள் உணரும் அளவிற்கு யானும் உணர்கின்றேன் என்பதேயாகும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள், விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும் என்னும் தனிநோக்குடன், யாங்கள் எல்லோரும் இங்கு கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையில் யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழரசை நிறுவுவது இன்றி அமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும். பழைய கால சரித்திரத்தை தெளிவாக நன்றாக ஆராய்ந்து பார்த்தால் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டிலே இப்பொழுது எப்படியான நிலைமைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை கூர்ந்து நோக்கினால் இதுதான் ஒரேயோரு வழி- வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது என்பது நன்கு விளங்கும்.

16ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இந்நாட்டு மக்களே தங்களுக்கென அரசாங்கத்தை அமைத்திருந்தனர். ஆயின், யாங்கள் ஒரு விடயத்தை மாத்திரம் ஊன்றிப் பரிசீலனை செய்தல் வேண்டும். அதாவது போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு வசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பல நூற்றாண்டுகளாக சிங்களம் பேசும் இனம், தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். விஜயன் காலத்தில் தொடங்கிப் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் தேசிய இனத்தைப் பற்றி மாத்திரம் பேசப்படுகிறது. இவர்களைச் சில காலங்களில் தமிழ் மன்னர்களும் அரசு புரிந்தார்கள். எனவே தமிழ் மக்கள் அவர்களிடையே எப்போதும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. ஆயினும் அது சிங்கள தேசிய இனமும் சிங்கள அரசாங்கமுமே ஆகும். பூமிசாஸ்திர சம்பந்தமான காரணங்களாலும் வேறு பல நியாயங்களாலும் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த மக்கள் நெடுங்காலமாக தமிழர்களாகவே திகழ்ந்திருத்தல் வேண்டும். அதனால் பெரும்பாலும் தமிழ் மக்களையே கொண்ட வடபகுதிகளை தென்பகுதியிலிருந்த சிங்கள இராச்சியங்கள் ஆட்சி புரிவது வரவரக் கடினமாக இருந்திருத்தல் வேண்டும். இறுதியாக இயற்கையாய் அமைந்த ஓர் பரிகாரம் கண்டு பிடிக்கப்பட்டது. 9ஆம், 10ஆம் நூற்றாண்டளவிலே வடபகுதி தமிழ்ப் பிரதேசங்கள் பிரிந்து தனியரசாகின. இலங்கையின் தென்பகுதி சிலவேளைகளில் 2,3 இராச்சியங்களாகப் பிரிந்து இருந்தாலும் சிங்களப் பிரதேசமாகவே இருப்பது ஆயிற்று.

சில காலங்களில் இந்நிலைமை மாறியிருந்தாலும் ஐரோப்பியர் வரும்வரை இச் சிங்கள-தமிழ் இனப் பாகுபாடு பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்தது. முதலில் தமிழ் இராச்சியத்தை அழித்த ஐரோப்பியர்கள் படிப்படியாக சிங்கள இராச்சியங்களையும் ஒழித்துவிட்டார்கள். இதிலிருந்து யாம் பெறக்கூடிய பெரும் படிப்பினை மக்களின் வாழ்க்கையிலும், அரசியலிலும் மொழி மிக முக்கியமானது என்பதேயாகும். சிங்களத் தேசிய இனமாகவும் இலங்கை பிரிக்கப்பட்டிருந்த போது கூட, சிங்கள சாகியத்தினரிடையே தமிழ் மக்களும், தமிழ் சாகியத்தினரிடையே சிங்கள மக்களும் வாழ்ந்திருத்தல் வேண்டும். மக்கள் இப்படியாக நாடெங்கிலும் பரவிக் கலந்து வாழ்ந்து கொண்டிருந்த போதிலும், அரசியல் விடயங்களுக்காக வடபகுதியில் பெரும்பான்மையினராய் திகழ்ந்த தமிழர் - தென்பகுதியில் பொரும்பான்மையினராய் திகழ்ந்த சிங்களவர் என்று இருபிரிவினராக பகுக்கப்பட்டார்கள். தமது ஆட்சிச் சௌகரியத்தை மட்டுமே கருதிய பிரிட்டிஷர் சிந்தனைக் குறைவான முறையில் நாடு முழுவதையும் ஒரே குடியேற்ற நாட்டு அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து பல நூற்றாண்டுகளாக இரு தேசிய இனங்களாக இருந்த பாகுபாட்டினை ஒழித்து விட்டார்கள். ஆயினும், இவ்விரு தேசிய இனங்களும் இயற்கையாகக் கலந்து ஒன்றாகிவிடவில்லை. ஆயினும் மக்களிற் பெரும் பகுதியினர் வெவ்வேறான இரண்டு மொழிகளையே பேசுபவராய், வெவ்வேறு நிலப்பகுதிகளுள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆயினும், இரு வெவ்வேறு இனங்களிலிருந்தும் ஆங்கிலம் பேசுகின்ற சிறுபான்மை சமூகத்தினர் தோன்றினார்கள். ஆனால் நாட்டு மொழிகள் பொது வாழ்விலே தமக்குரிய ஸ்தானத்தைப் பெற்றவுடன், தொகையிற் குறைந்தவர்களாகிய இவ் ஆங்கிலம் பேசும் சமூகத்தினர் அருகிவருகின்றார்கள். நாளடைவில், குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை மாறி மக்கள் ஆட்சி படிப்படியாக நிலைபெறத் தொடங்கிய காலத்தில், புதிய அரசியற்றிட்டங்களை வகுத்தவர்கள், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஆட்சி முறையினைப் பின்பற்றி ஒற்றை ஆட்சி அமைப்பு அடிப்படையிலே தமது திட்டங்களை வகுத்தனர். இதற்கு பல காரணங்கள் உள்ளன. வெளித்தோற்றத்தளவில் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டின் ஆட்சியின் கீழ் இலங்கை மக்கள் ஒரே தேசிய இனமெனும் படி ஆகிவிட்டார்கள். அன்றியும் நமது அரசியற் சீர்திருத்தவாதிகள் அரசியலமைப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அனுபவமற்றவர்களாயிருந்தார்கள். அல்லாமலும் ஆங்கிலேயரும் , ஸ்கொச்சுக்காரரும் ஒரு அரசின் கீழ் சேர்ந்து கொண்டது போல அதையே முன்மாதிரியாக வைத்து இலங்கையிலும் அரசியலமைக்கலாம் என எல்லோரையும் ஏமாற்றினார்கள். அதிலும்பார்க்க சிறந்ததொரு மாதிரி கிடையாது என்றும் நம்பியிருந்தார்கள். பெரிய பிரித்தானியாவிலே ஸ்கொச்சு மொழியும் உவெல்சு மொழியும் முற்றாக இல்லை என்னும் படி அழித்தொழிந்து பிரித்தானிய மக்கள் எல்லோரும் ஆங்கில மொழியையே பேசுபவர்களாக மாறிவிட்டார்கள் என்பதைச் சிந்தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவராவது எடுத்துக்காட்டினார் அல்லர். ஆனால் இருபது நூற்றாண்டுகள் வரை கூடி வாழ்ந்து இருந்தும் சிங்கள மொழியோ, தமிழ் மொழியோ அழிந்தொழியவில்லை. ஒவ்வொரு சாரிலும் அம்மொழிகள் அழிந்தொழியாதபடி காக்கும் இயற்கை சக்திகளும் நோக்குகளும் அமைந்துள்ளன.

பிரிட்டனிலும் இலங்கையிலும் இருந்து எமது நாட்டின் அரசியலமைப்பினை வகுப்பதில் பங்கு பற்றினோர். பிரிட்டிஷரின் ஒற்றையாட்சி அமைப்பினை மாதிரியாகக் கொண்டு அதையே எமது நாட்டிலும் தழுவிக்கொள்ள முயன்றார்கள். சென்ற முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற அரசியற் சீர்திருத்த இயக்கத்தின் வரலாற்றை நோக்குவோமாயின், நமது சீர்திருத்தவாதிகள் பிரிட்டிஷ் ஆட்சிமுறையை தழுவுவதிற் கவனம் செலுத்தினார்களே அன்றி எமது நாட்டிற்கு எவ்வகையான அரசாங்கம் பொருத்தமானது என்று ஆராய்ந்ததாக தெரியவில்லை. தமது அரசியலமைப்பையே அல்லாமல் வேறு எதையும் இலங்கைக்கு மாதிரியாக கொள்ளலாம் என்று பிரிட்டிஷார் கருதவில்லை. பிரிட்டிஷ் அரசியலமைப்பானது சிங்கள மக்களுக்கு விஷேட திருப்தியளிப்பதாயிற்று. ஏனெனில், சிங்கள மக்கள் பெரும்பான்மையினர். எனவே வெறும் எண்ணிக்கையினாலேயே அவர்கள் பூரணமான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லாமலும், பழைய காலத்தில் இருந்தது போல் ஒரே சிங்கள இராச்சியத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டார்கள். சென்ற பத்து நூற்றாண்டுகளாக ஏற்பட்டிருந்த மாற்றங்களையெல்லாம் ஒரு சிறிதாவது கருத்தில் கொள்ளவில்லை. பல இன மக்கள் கூடிவாழும் நாட்டிலே ஒற்றையாட்சி அமைப்பை நிறுவுவதனால். ஏற்படக்கூடிய அபாயங்களை தமிழ் பேசும் மக்கள் தெளிவாகக் கண்டார்கள். அவர்கள் தங்களை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்தை என்றும் உணர்ந்திருந்தது போற்றத்தக்கதாகும். தலைவர்கள் என்போர் இந்த ஆபத்தை குறைப்பதில் கவனம் செலுத்துவார்களேயன்றி, அதனை நீக்க முயற்சிக்கவில்லை. சிறுபான்மையினருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் பொற்றுக்கொண்டால் போதும் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்கு தோன்றிய ஒரே பரிகாரம் அது தான். அவர்கள் வரும்காலத்தைப் பற்றி போதிய முன்யோசனையுடனும் பரந்த நோக்கத்துடனும் நடந்து கொள்ளாதது வருத்தத்துக்கு உரியதாகும். இங்ஙனம் தவறியதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. தமிழ் பேசும் மக்கள் முஸ்லீம்கள், இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் என மூன்று பிரிவினராய் இருந்தனர். இந்நாட்டிலே முஸ்லீம்களும், இலங்கைத் தமிழர்களும் வாழும் பிரதேசங்கள் பிரிட்டிஷார் ஆட்சியின் கீழ் விருத்தி செய்யப்படாதனவாய், கீழ்நிலை எய்திக் கிடந்தன. இதனால் அப்பிரதேசங்களின் பொருளாதார நிலை சீரழிந்திருந்தது. அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து கொண்டு அரசியல் விடயங்களில் ஈடுபட்டு உழைக்கப்போதுமான அவகாசம் படைத்தோர் அவ்விடங்களிலே தோன்றவில்லை. இந்தியத் தமிழரென பிரிவினர், அரசியல் அமைப்பு ஆலோசனைகளில் பங்குபற்ற இயலாதவராய் இருந்தனர். அவர்கள் எங்கள் நாட்டிற்கு ஏனையோரிலும் பார்க்கப் பிந்திய காலத்தில் வாழ்ந்தவராவர். அவர்கள் தமிழ் பேசும் பிரதேசங்களுக்குப் புறம்பான சிங்கள மொழி பேசப்படும் பிரதேசங்களுக்கு குடியேறியிருந்தார்கள். இலங்கையில் நிரந்தரமாக குடியேறி யிருந்த போதிலும் அவர்கள் தொழிலாளர்களாகிய தங்களது வாழ்க்கையை பாதிக்கக் கூடிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தினார்களே அன்றி, அரசியலமைப்பு சிக்கல்களைப் பற்றி கவலைப்படவில்லை. இந்நிலைமையின் பயனாக அரசியலமைப்பில் ஈடுபட்டோர், பிரிட்டிஷ் ஒற்றையாட்சி அமைப்பினையே அடிப்படையாகக் கொண்டனர். சிறுபான்மையினருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் அளிப்பதாவது, ஜனநாயகத்துக்கு மாறானதென்று சிங்கள மக்கள் எதிர்த்தனர். சிறுபான்மையினருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் அளிப்பதனாலேனும், அதிகாரம் முழுவதும் தம் கையிலேயே வைத்திருக்கக் கூடிய ஒற்றையாட்சி அமைப்பினை நிலைபெறச் செய்யலாம் என்று அவர்களுக்குத் தென்படவில்லை. நீதி செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டிஷ் எஜமானர்கள், தம் கடமையில் முற்றாகத் தவறிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலதிகாரம் சிங்களவர்களின் கையிலேயே இருப்பதை அவர்கள் கண்டார்கள். எனவே தமிழ் பேசும் மக்களுக்கு நீதி வழங்குவதிலும் பார்க்க சிங்கள மக்களை திருப்தி செய்வதே உசிதமென்று கருதினர். அது ஆண்மையற்ற செயல் எனினும், அதையே விரும்பினர். இதன் பயனாக இந்நாட்டின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு பரிகாரமென சிறுபான்மையினருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்காத ஒரு ஒற்றை ஆட்சி அமைப்பு, சோல்பரி -பிரிட்டிஷ் அரசியல் திட்டம் தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்கப்படுவதாயிற்று. வாக்காளர்கள் அளித்த உத்தரவாதத்தை மறந்து எம் பிரதிநிதிகள் சோல்பரித் திட்டத்தை ஏற்றமையினால் இப்பிரச்சனை மேலும் சிக்கலடைந்தது. இதனால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வாழ்வுக்கு அந்தியக் கிரியைகள் செய்யப்பட்டுவிட்டன என்று பலரும் கருதியிருக்கக் கூடும். ஆனால் பொதுமக்கள் சரணடைய மறுத்தனர். 1945ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஏற்ற அப்போதைய அரசாங்க சபைத் தமிழ் அங்கத்தவருள் ஒருவர் தவிர்ந்த பிறரெல்லாம் 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் படுதோல்வி அடைந்தனர். தமிழ்ப் பிரதிநிதிகள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது சரணடைவதா என்ற ஒரு கேள்வியை அடிப்படையாகக் கொண்டே தமிழ்த் தொகுதியில் தேர்தல் நடைபெற்றது. தேர்தலின் தெளிவான முடிவு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் முஸ்லீம் தொகுதிகளில் இதற்கு வேறான கொள்கைகளுடன் தேர்தல் நடைபெற்றது. 1945ஆம் ஆண்டு வரை சிறுபான்மையினருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கொள்கைக்காக தமிழரும், முஸ்லீம்களும் சேர்ந்து உழைத்தனர். சோல்பரித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின், வேறு வழியின்றி முஸ்லீம்களும் தயங்கினர். இப்போது யாங்கள் கைக்கொண்டிருக்கும் கொள்கையைப் போன்ற திட்டங்களையும் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசங்கள், தனிச் சுயாட்சி அரசாக அமைக்க முடியாதனவாய் இருந்தன. வடபகுதியிலும், திருகோணமலையிலும் வாழும் தமிழ் மக்களுக்கு இப் பிரதிகூலம் இல்லாதபடியால் அவர்களுக்கு ஓர் விடுதலை உணர்ச்சி நிலவியது. இவ்விடுதலை உணர்ச்சியே உருவெடுத்தாற் போல் விளங்கிய தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தொகுதி எல்லாவற்றிலும் பூரண வெற்றி பெற்றது. தங்களுடைய அரசியல் எதிர்காலத்தைப் பற்றி தமிழ் மக்களின் கருத்தினை, அத் தேர்தல் தெளிவாகக் காட்டியது. தமிழ்க் காங்கிரசினை எதிர்த்த ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்கள், அதிகாரத்திற்கு வரக்கூடியவர்களான சிங்கள பெரும்பான்மையோருடன் ஒத்துழைப்பதனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கு பொருளபிவிருத்தி ஏற்படும் என்று வாக்களித்தார்கள் ஆனால் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்கள் அரசாங்கத்திடம் இருந்து பொருள்நலம் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளிக்கவில்லை. தமிழரின் உரிமையை பறிக்க நடக்கும் முயற்சிகளை எதிர்ப்போம் என்றே கூறினர். அதிகப்படியாக வாக்குகளால் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் அடுத்த வருடம் 1948ஆம் ஆண்டில் என்றும் எதிர்பார்த்திராத சம்பவம் நடைபெறுவதாயிற்று. தேர்தலிலே தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பையும், தமிழ்க் காங்கிரஸையும் கவனியாது ஐக்கிய தேசியக்கட்சி தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. அதன் பின் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் மனம் தளர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியிடம் சரண் புகுந்தார். தமிழ் மக்களுக்கு அளித்த உத்தரவாதத்தையும் இதனால் மீறினார். ஆனால் அநேக தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் பூரணமாக சரணாகதி அடையவில்லையென்றும், தாம் சேர்ந்திருக்கும் அரசாங்கம் தமிழ் காங்கிரஸ் கொள்கைகளுக்கு மாறான சட்டங்களைக் கொண்டுவரும் பொழுது அவற்றை எதிர்ப்பதற்கான உரிமையை வைத்துக் கொண்டார் என்றும் நம்பி இருந்தனர். 1948ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் அரசாங்கம் இந்தியப் பிரஜா உரிமைச் சட்டமொன்றை பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்தது. இச்சட்டத்தை இலங்கை இந்தியக் காங்கிரசும் புதுடெல்லியில் உள்ள இந்திய அரசாங்கமும் எதிர்த்து வந்தன. இது தமிழ் காங்கிரசின் அமைப்பு விதிகளிலும் அதன் மாநாடுகள் பலவற்றிலும் வற்புறுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான கொள்கைகளுக்கு முரண்பட்டதாய் இருந்தது. அன்றியும் ஐந்து வருடங்கள் இலங்கையில் வசித்த இந்தியர்களுக்கு பிரஜா உர-ிமை பெறுவதற்காகவும் அவர்களுடைய பிறவுரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் உழைப்பதற்காக இலங்கை இந்தியக் காங்கிரசிற்கு தமிழகக் காங்கிரஸ் தலைவர் கைச்சாத்திட்டு தேர்தல் காலத்தில் வாக்கு அளித்திருந்தார். எதைப்பெறுவதற்கு உழைப்பதாக இவர் வாக்களித்திருந்தாரோ அதை பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட இச்சட்டம் மறுத்தது. அவரும் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் சிலரும் இதனை ஆதரித்தனர். இதிலிருந்து தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் பிரதிநிதிகள் சிலரும் உரிமைப் போரைக் கைவிட்டுவிட்டனரென்பது தெட்டத்தெளிவாக விளங்கிவிட்டது. இதன் பயனாக தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் இரு கட்சியினராக பிரிந்தார்கள். முன்பு கூறியபடி ஒரு கட்சியினர் தங்கள் தேர்தல் காலக்கொள்கையினைக் கைவிட்டனர். மற்ற பகுதியினர் உங்கள் முன் நிற்கும் நாங்கள் தேர்தல் காலக் கொள்கையைக் கடைப்பிடித்து உரிமைப் போரை தொடர்ந்து நடத்த தீர்மானித்திருக்கின்றோம்.

இப்போதைய அரசியல் திட்டத்தின் கீழ் சிங்கள மக்கள், தமிழ் பிரதிநிதிகள் எல்லோரையும் உதாசீனம் செய்து அவர்களது உதவி இல்லாமல் அரசாங்கத்தை நடத்தவும், அவர்களது விருப்பத்துக்கும் உணர்ச்சிக்கும் மாறாக சட்டங்களை ஒன்றன் மேல் ஒன்றாக நிறைவேற்றவும் முடியுமென்பது, 1947ஆம் ஆண்டுகளில் தெளிவாகிய பின் தமிழ் பேசும் மக்களுக்கு இரண்டு வழிகள் உள்ளன. 1. நிபந்தனைகளற்ற சரணாகதி, 2. தமிழ் பேசும் மக்களை அரசியல் உர-ிமையற்றவர்களாக செய்யும் இப்போதைய அரசியலமைப்பிலிருந்து மீட்பதற்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பதாகும். பிந்திக் கூறிய வழி கடினமானது ஆகும். ஆனால் வீரர்களுக்குரிய வழி அதுவேயாகும். அதுவுமல்லாமல் தேர்தல் காலத்திலே தமிழ் மக்கள் காட்டிய வழியும் அதுவே. தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கு உள்ளே 'தை-லவணங்கோம்' என்று நின்றார்கள். இவ்வழியையே கைக்கொண்டு அதனையே பின்பற்றும் படி நாடெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்களிடையே பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

1947ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ஆம் திகதியன்று தமிழ்க்காங்கிரஸ் தலைவரே குடியேற்ற நாட்டு மந்திரிக்கு பின்வரும் தந்தியை அனுப்பினார்.

'இல: 181-சென்ற பொதுத் தேர்தலிலே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் அபேட்சகருள் ஒருவரும் தெரிவுசெய்யப்படாதிலிருந்தும் 1945ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஆதரித்த பழைய அரசாங்க சபை அங்கத்தவர்களுள் ஒருவர் தவிர ஏனையோர் தோற்கடிக்கப்பட்டதிலிருந்தும் இலங்கை தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள் என்பது தெளிவு'

இலங்கையில் உள்ள சமூகம் எல்லாவற்றிற்கும் சம உரிமையளிக்கும் சுதந்திரம் அளிக்கும் அரசியற் திட்டம் ஒன்றை அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கோருகின்றது. இலங்கை மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்று வேண்டும். இப்போது இருப்பதை போன்ற சட்டசபை மந்திரி சபை என்பவற்றுடன் கூடிய ஒற்றை ஆட்சி அரசாங்கத்தை தமிழர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தகுந்த மாற்றுமுறை இல்லாதபடியால் நாங்கள் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை கோருகின்றோம்.

1948ஆம் ஆண்டு மார்கழி மாதத்திலே தமது நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்த தலைவர் சரணடைந்ததும். தமிழ் காங்கிரஸிற்குள் பிளவு ஏற்பட்ட போது தமிழ் பேசும் மக்கள் திக்கற்றவர்களாய் தவிக்கலாயினர். அரசியல் வாழ்விலே தமது நிலையையிட்டு திருப்தி கொள்ளாதவர்களாய் இருந்த போதிலும் இந்நிலையை மாற்ற வழி காணதவராய் திகைத்தனர். தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் இப்பிரச்சினைகளை தீர்க்கலாம் என்ற புது எண்ணம் மக்களின் மனதை பெரிதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரவில்லை. இவ்வாறாக இயக்கத்திற்கு நாட்டில் எவ்வளவு ஆதரவு இருக்கும் என அவர்கள் திடமாக அறிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்களிடையே இவ்விதமாக இப்பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம் என்று நம்பிய வீரர்களும் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். இந்த வீரர்கள் இடைவிடாது தமது நம்பிக்கையூட்டும் கொள்கையை பிரச்சாரம் செய்துகொண்டு வந்தபடியால் இன்று தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் சுதந்திரம் தமிழ் அரசு ஒன்றினை நிறுவ வேண்டும் என்ற கொள்கையில் நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது. பெரும்தொகையினராக நீங்கள் இங்கு வந்து இன்று கூடியிருப்பதே போதிய சான்றாகும்.

இப்படியான எண்ணத்தில் நம்பிக்கை மாத்திரம் இருந்தால் போதாது அதை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். எமது கனவை நனவாக்குவதோ எமது இயக்கத்தின் அடுத்த திட்டமாகும். இவ்விடயத்திலே பலரும் சந்தேகம் இருகின்றனர். துரதிஸ்டவசமாக எமது சமீப காலத்தில் அரசியல் வரலாறு இச்சந்தேகத்திற்கு இடமளிப்பதாயிருக்கின்றது. பல முறைகளில் தலைவர் என்போர் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். வீரர்களாக காட்சியளித்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள் ஒரு நாள் நிமிர்ந்து நின்று போராடி மறுநாள் களத்தை விட்டு ஓடினர். 1934ஆம் ஆண்டு தொடக்கமாக சேர் மகாதேவா அவர்கள் தமிழ்ப் படையின் முன்னனியில் நின்றார் அவரது உற்சாகம் படிப்படியாகக் குறைந்து ஈற்றில் அவர் எதிரிகளின் கட்சியில் சேர்ந்தார். இவ்வாறே திருவாளர் நடேசன், தியாகராசா ஆகியோரும் தமிழர்களின் உரிமைக்காக உழைப்பவர்களாக இருந்து 1945ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் பல காலமாக போராடி வந்த உரிமைகளை மறுக்கும் அரசியற் திட்டத்திற்கு சார்பாக வாக்களித்தார்கள். நம் உரிமைகளுக்காக விடாது போராடிவந்த திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் இப்பொழுது போராட்டத்தை கைவிட்டது மாத்திரம் அன்றி இலங்கை தமிழ் மக்களுக்கு எவ்வித குறையும் இல்லை என்று எங்கும் பறைசாற்றி வருகிறார். இப்படியான குட்டிக்காரணங்களின் பலனாக தமிழினத்தின் பண்புக்கே பழுது வந்தடைந்ததுடன் இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களிலும் எதிர்காலத்தில் தோன்றக் கூடிய தலைவர்களிலும் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. இப்போது சுதந்திர தமிழ் அரசு வேண்டும் என்று கோரும் தலைவர்களை தாம் எப்படி நம்புவதென்று மக்கள் கேட்கின்றார்கள். முந்திய தலைவர்கள் செய்ததைப் போல இத்தலைவர்களும் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு என்று வினவுகிறார்கள். இவை சரியான கேள்விகளேயாகும்.

தமிழ்த் தலைவர்களது மனவருத்தத்தைத் தரும் நிலையற்ற போக்குடன் எம் பொதுமக்கள் அரசியல் விடயங்களில் காட்டிய விடாப்பிடியான உறுதியை ஒப்பிட்டுப்பார்த்தால் எவ்வளவு வித்தியாசம் தென்படுகின்றது. மக்களின் மனவுறுதி சாந்தி அளிப்பதாயிருக்கின்றது. இதனை தெளிவாக உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கையின் தமிழ்வாழ் மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் தமிழ் விடுதலைக்காக உழைக்கக்கூடிய வசதி வடமாகாண மக்களுக்கே இருந்தது. அவர்கள் இலகுவாக பிரிக்கப்படக்கூடிய பிரதேசத்தில் பெருந்தொகையினராக வாழ்ந்திருந்தது மாத்திரமின்றி அவர்களிடையே சிங்கள மக்கள் கலந்து வாழ்வதும் குறைவாக இருந்தது. அவர்களே ஆங்கிலக் கல்வியினாலும் அதிக பயன்பெற்றிருந்தனர். ஆகையினால் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக தொண்டு செய்யும் பொறுப்பு பெரும்பாலும் அவர்களையே சார்ந்து இருந்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக நடைபெற்ற அரசியல் கிளர்ச்சிகள் பெரிதும் வடமாகாணத்திலேயே ஆரம்பித்தன. வடமாகாணத்தினருக்கு கூடுதலான வசதி இருந்தமையினால் இக்கடமை அவர்களையே சார்ந்தது. யாம் இனிக்கூறப்போகும் அரசியற் கிளர்ச்சிகள். பெரும்பாலும் அவர்களாலேயே நடத்தப்பட்டன. ஆயினும் தமிழ் பேசும் மக்கள் எல்லோரினதும் சுதந்திர உணர்ச்சிக்கு அவை எடுத்துக்காட்டாகும். சிறுபான்மையினருக்கு பாதுகாப்பேயில்லாது, இந் நாட்டுக்கு ஓரளவு சுயாட்சி வழங்கிய முதல் அரசியல் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமூர் திட்டமே ஆகும். டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலை யாழ்ப்பாண மக்கள் பகிஸ்கரித்து விட்டனர். ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு அரசாங்க சபையில் யாழ்ப்பாண பிரதிநிதிகள் எவரும் இருக்கவில்லை. இப் பகிஸ்காரம் அந்த அரசியல் திட்டத்துக்குள் எதிர்ப்பையே பிரதிபலித்தது. இந்த நாட்டில் அரசியல் வரலாற்றிலே இது ஒப்பற்றதோர் சம்பவம் ஆகும். அந்த அரசாங்க சபைக்கு நடைபெற்ற இரண்டாவது தேர்தலில் அந்த அரசியல் திட்டத்தை மாற்றி சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்ற ஒரே கொள்கையுடைய பிரதிநிதிகளே வடமாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். அடுத்த பொதுத் தேர்தல் இப்போதைய சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ், சென்ற 1947ஆம் ஆண்டில் நடைபெற்றது. இத் திட்டம் சிறுபான்மையினருக்கு சாதகமாக திருத்தியமைக்கப்படமாட்டாது என்றே தோன்றியது. இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என்றே அரசியல் விடயங்களை நுணுகி நோக்குவோர் பலர் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் என்னுடைய பேச்சின் முற்பகுதியில் யான் குறிப்பிட்டதைப் போல, தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போரினைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற தீர்ப்பே தமிழ் தொகுதியில் இருந்து கிடைத்தது. இத் தருணத்திலே திருகோணமலையும் வடமாகாணத்துடன் சேர்ந்து கொண்டது. இதிலிருந்து இவ்விடயத்தை இட்டு தமிழ் மக்களின் அபிப்பிராயம் கோரப்பட்ட நேரத்தில் எல்லாம், உரிமைப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றே அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என்று தெளிவாகின்றது. தமிழ் பொதுமக்கள் என்றுமே தமது இலக்கில் இருந்து பின்வாங்கவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தம் இலக்கில் இருந்து தவறமாட்டார்கள் என்ற பெரிய நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இவ்விடயத்தில் மட்டக்களப்பில் வாழும் தமிழ் பேசும் மக்களின் கருத்தும், திருகோணமலையிலும், வடமாகணத்திலும் உள்ள நம் சகோதரர்களின் கருத்தை ஆதரிப்பதாகவே இருக்கின்றது என்பது பல குறிகளிலிருந்து தெளிவாகின்றது. இங்ஙனமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு எல்லாம் தங்களுடைய இன்றைய அரசியல் நிலைமையைப் பற்றியும் எதிர்கால நிலைமையைப் பற்றியும் ஒரு நிலையான கொள்கை உண்டு என்பது விளங்குகின்றது. அவர்களுக்கு ஒரு நிலையான குறிக்கோள் உண்டு. சுருக்கமாகக் கூறினால் அவர்களுக்கு தாங்கள் ஒரு தமிழ்த் தேசிய இனம் என்ற உணர்ச்சி உண்டு. இம் மக்களின் நலனிற்காக உழைக்க விரும்புவோர் உற்சாகம் ஊட்டக் கூடிய இவ்வுணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது மக்கள் அரசியல் இலட்சியத்தை அடைவதற்கு கட்டுப்பாடான முறையில் வேலை செய்வது அவசியமாகும். ஆனபடியால் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைக் காண்பதற்கு விரும்புபவர்களாய் நமது மக்களின் எதிர்காலத்தில் நம்பிக்கை உள்ளவர்களாய் உள்ள உண்மை ஊழியர்களை ஒன்றுசேர்த்து ஒரு ஸ்தாபனம் நிறுவுதல் வேண்டும்.

இனி தமிழ் பேசும் மக்கள் சென்ற காலங்களில் அரசியல் உலகிலே தங்களை ஆபத்து எதிர்நோக்கி கொண்டிருப்பதாக எண்ணியது சரியோவென்று கவனிப்போம். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இன்றைய அரசில் திட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறிது காலம் தான் ஆகின்றது. இதற்கிடையில் அரசாங்கமே இங்கே எடுத்துச்சொல்ல முடியாத தொகையினமாய் நமக்கு பாதகமான சட்டங்களை ஒன்றன் மேல் ஒன்றாய் நிறைவேற்றியும் பரிபாலனத்துறையில் நம்மை பாதிக்க கூடிய கருமங்களை ஆற்றிக் கொண்டு வருகின்றது. தெளிவாக புலப்படுகின்ற சில உதாரணங்களை மட்டுமே இங்கு எடுத்துக்காட்டினால் போதுமென்று கருதுகின்றேன். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களில் அரை பங்கினர் பிரஜா உரிமையற்றோர் ஆகச்செய்யும் ஒரே நோக்குடன் அரசாங்கம் பிரஜா உரிமைச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றது. அந்நியர்களுக்கு எதிராகவே இச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று வெளிக்குக் கூறிக்கொள்கின்றனர். இது ஒரு போலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமாகும். இலங்கையில் மத்திய பாகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் 7 இலட்சம் தமிழ் தொழிலாளர்களுடைய பிரஜாவுரிமையை பறிப்பதே இச்சட்டங்களின் உண்மை நோக்கமாகும். இவர்களுக்குள்ளே பெரும்பாலானோர் வேறு நாட்டையே அறியமாட்டார்கள். அவர்களெல்லோரும் இந்தியர்கள் அல்லர், இலங்கையர்களே. தமிழ் பேசும் மக்களாக இருப்பதே அவர்களுடைய ஒரே ஒரு குற்றம். அரசியல் அதிகாரம் எண்ணுத்தொகையினையே பொறுத்திருக்கின்றது. இந்த மலைநாட்டுத் தமிழர்களை சேர்த்து எண்ணினாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அரசியலதிகாரம் அற்றவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களுள் மலைநாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களை நீக்கிவிட்டால் எஞ்சியிருக்கும். தமிழ் பேசும் மக்கள் தொகையில் மிகவும் குறைந்து அரசியல் அநாதைக-ளாகி விடுவார்கள். இது போதாதென்று இந்த மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு சட்டம் இயற்றிவிட்டார்கள். இது கொடுமையிற் கொடுமையாகும். அரசாங்கத்தின் நோக்கம் இந்நாட்டில் வசிப்பதற்கு பூரண உரிமை உடைய இம் மக்களை இந்நாட்டை விட்டு துரத்துவது அல்லது அவர்களைப் பலவந்தமாக சிங்களம் பேசும் மக்களாக மாற்றுவதுதான் என்பது எவருக்கும் எளிதில் புலனாகும்.

தேசியக்கொடி விடயத்தில் அரசாங்கம் நடந்துகொண்ட விதம் தமிழ் பேசும் மக்களுடைய உணர்ச்சிகளையும், உரிமைகளையும் உதாசீனம் செய்வதாக இருக்கின்றது. சிங்களக் கொடி சிங்கள மன்னர்களின் கொடியாகும். இன்று அது சிங்களவர்களின் அதிகாரத்தின் சின்னமாக விளங்குகின்றது. அந்தக் கொடியே நடைமுறையின் தேசியக்கொடி என கொள்ளப்படுகின்றது. பல்வேறு இனங்கள் வாழும் நாட்டின் தேசியக்கொடியாக ஒரு இனத்தவரின் கொடியைக் கொண்ட நாடு வேறு எதுவும் உலகிலில்லை. தேசியக்கொடி விடயத்தில் அரசாங்கத்தின் கொள்கை தமிழ் பேசும் மக்களிடம் அவர்கள் நடந்து கொள்ளும் முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அரசாங்கம் இங்கு வசிப்பதை சகித்துக்கொண்டிருக்கின்றது, அவ்வளவுதான்.

அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது இவையெல்லாவற்றிலும் பார்க்க தமிழ் பேசும் மக்களுக்கு கூடிய ஆபத்து விளைவிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இக்கொள்கையின் ஆரம்பத்தை தான் கல்லோயாவிற் காண்கின்றோம். கல்லோயாத் திட்டத்தின் கீழ் நீர் பாய்ச்சப்படும் பிரதேசம் தமிழ் பேசும் பகுதியாகிய கிழக்கு மாகாணமே ஆகும். தமிழ் பேசும் இப்பிரதேசத்தில் அரசாங்கம் சிங்கள மக்களை குடியேற்றத் திட்டமிட்டுள்ள என்பதற்கு சான்றுகள் உள்ளன. இது உண்மையாக இருந்தால் இன்றைய தமிழ் பேசும் பிரதேசத்தைக் குறைப்பதற்கே அரசாங்கம் அநீதியான முறையில் தனது அதிகாரத்தை உபயோ-கிக்கின்றதென்பது தெளிவு. தடுப்பாரின்றி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சில வருடங்களுக்கு இடையில் இந்நாட்டிலேயே தமிழ்ப்பிரதேசமே இல்லாதொழியும்.

நிதி மந்திரிகள் விளக்கியபடி, அரசியல்மொழி விடயத்திலே தமிழ் பேசும் மாகாணங்களைப் பரிபாலன முறையிற் பிரித்துவிடுவதும் மற்றைய ஏழு மாகாணங்களிலும் சிங்களத்தையே அரசாங்க மொழியாகச் செய்வதும் தான் அரசாங்கத்தின் கொள்கையாகும். இவ்வேழு மாகாணங்களிலே, குறைந்தது இரண்டு மாகாணங்களாவது, தமிழர்கள் செறிந்து பெரும்பான்மையோராக வாழும் பிரதேசங்கள் இருக்கின்றன. இவர்களிடம் அரசாங்கம் நீதியாக நடந்துகொள்ள விரும்பினால், அவர்களுடைய பிரதேசத்தில் பரிபாலன விடயங்களில் அவர்களுடைய மொழியையே உபயோகிக்க வேண்டும். ஆனால், இது நடைபெறப்போவதில்லை. இப்படியான செயல்களினால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஆளுவதற்கு இன்றைய அரசாங்கம் தர்ம நீதிப்படி அருகதையற்றதாகிவிட்டது. அவர்கள் அப்படி ஆளுவதற்கு அதிகாரம் வலிமையொன்றே உரிமையளிக்கின்றது. இரண்டேயிரண்டு வருட சுயாட்சியில், தமது சொந்த நாட்டிலேயே இவ்வளவு கீழ்நிலையடைந்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரசாங்கம் தங்களுடையதென்று தமிழ் பேசும் மக்கள் கருதவில்லை. இந்தச் சூழ்நிலையில் யாம் செய்யவேண்டுவதென்ன? நடந்தது நடக்கட்டும் என்று வாழாதிருப்பதா? அவ்விதம் இருத்தல் நமக்கோ - நமது நாட்டுக்கோ நன்றன்று. நாம் ஆண்மையுடன் முயன்று இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழி காணுதல் வேண்டும். அவ்வழிதான் என்ன? கூடுதலான பிரதிநிதித்துவம் கோரினோம். அது கிட்டவில்லை, வேறோர் பரிகாரம் தேடியாக வேண்டும். இதற்காக, பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழுகின்ற பிறநாடுகளைப் பார்ப்போம். இலங்கையில் இருப்பது போலவே அந்நாடுகளிலும் பல்வேறு மொழிகளைப் பேசும் இனம் ஒவ்வொன்றும் தத்தம் உரிமைகளைக் கவனமாகப் பேணி வந்தன. சிறிய மொழிவாரி இனங்கள் பெரிய மொழிவாரி இனங்களால் விழுங்கப்படாமல் தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. இவ்விதம் மொழிவாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் யுத்தத்தில் முடிந்து, பெரிய தேசிய இனங்களும் மோதிக்கொள்ள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது, இதிலும் பார்க்கத் தீவிரங் குறைந்ததான மற்றைய வழி, மொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தையுடைய சமஸ்டி அரசை ஏற்படுத்துவதே. இவ்விரு முறைகளையும் கையாளுவதற்கு, வெள்வேறு மொழிபேசும் இனங்கள் பிரிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழுதல் வேண்டும். சமஸ்டி அரசியலானது, உலகிற் பல பாகங்களிலும் இவ்வித பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்திருக்கிறது. பிரெஞ்சு- ஆங்கில மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட கனடா தேசமும், பலவாய, ஜேர்மன், பிரெஞ்சு - இத்தாலிய சுயாட்சி மாகாணங்களைக் கொண்ட சுவிற்சலாந்து தேசமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ரஷ்யா தேசத்திலும் சுயாட்சி கொண்ட மொழிவாரி மாகாணங்களே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு தனியான பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு மொழி பேசும் மக்களும், ஒரு தனித் தேசிய இனத்தினராகக் கருதப்படுகின்றனர். இந்தியாவிலும், இந்திய தேசியக் காங்கிரசும் இந்திய அரசாங்கமும் மொழிவாரி மாகாணங்களை அமைக்க வேண்டுமென்று கொள்கையை ஏற்றுக்கொண்டு, அப்படியே அமைத்தும் வருகின்றார்கள். தனி ஆந்திர மாகாணமொன்று உருவாகின்றது. கன்னடர் தமக்கொரு மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். இவையெல்லாம் ஒவ்வொரு மொழிவாரி இனமும் தன்னைத் தானே பாதுகாக்க விரும்பும் இயற்கையுணர்ச்சியின் பயனாக ஏற்பட்டவையேயாகும்.

யாம் கோருவது இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஸ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால், இவ்வித சமஸ்டி ஏற்படுவது அவசியமாயிருக்கின்றது. தமிழ் பேசும் பிரதேசங்களை இலகுவாகப் பிரித்துவிடலாம். இடையிடையே இரு மொழிகளைப் பேசும் மக்களும் கலந்து வாழும் பிரதேசங்களும் உண்டு. ஆனால், இதைக் காரணமாகக் கொண்டு ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களை, சுயாட்சி மாகாணங்களாக வகுப்பதற்குத் தடை ஏற்படக்கூடாது. சமஸ்டி அரசியலால் ஒருவரும் நஷ்டம் அடையப் போவதில்லை. நிச்சயமாகச் சிங்கள மக்கள் நஷ்டமடையவேமாட்டார்கள். ஏனென்றால் இது பெரும்பான்மையோருடைய பிரதிநிதித்துவத்தைக் குறைத்து சிறுபான்மையோருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தைப் போன்றதன்று. ஆதலால் சமஸ்டி அரசியல் எல்லோரும் விரும்ப வேண்டிய ஓர் இலட்சியமாகும்.

சுயாட்சித் தமிழரசை நிறுவவேண்டுமென்று யாம் கோருவதற்குப் பல காரணங்கள் உண்டு. முஸ்லீம்கள், தமிழர்களாகிய தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் இப்பொழுதே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் - தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மையைப் பெற்று வருகின்றார்கள். ஒரு மனிதனின் பூரணமான மனோவிருத்திக்கு அவன் 'தானிருக்கும் நாடு தன்னுடையதே' என்றும் கருத வேண்டியது அவசியமாகும். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களிடையே இன்று இவ்வுணர்ச்சி இல்லாதிருக்கின்றது. அவர்கள் தங்கள் பிரதேசங்களைத் தாங்களே ஆளுவதன் மூலம் அவ்வரசாங்கம் தங்களுடையதே என்று கருதுவதற்கு உரிமை இருக்க வேண்டும். இன்று கூட, தமிழ்ப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே இவ்வுணர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு வேற்றுமை இருப்பதைக் காணலாம். சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள், தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் தமிழ்ப் பிரதே-தசங்களில் வசிப்பவர்களிடையே சுதந்திர உணர்ச்சி, இன்னும் நிலவுகிறது. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுதந்திர அரசு வேண்டுமென்ற இந்த இயக்கங்கூட, தமிழ் பேசும் பகுதிகளில் வசிக்கும் மக்களாலும் அப்பகுதிகளுடன் இன்னும் தொடர்புடையவர்களாலுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத் தமிழர்கள் இத்திட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு அங்குள்ள முஸ்லீம் மக்களும் இதை வரவேற்கின்றனர். கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ் அரசின் பகுதியாக்க வேண்டுமென்றால், தமிழ் பேசும் அவ்விரு சாகியத்தாரும் ஒன்று சேர வேண்டும். ஆனால், எங்களுடைய இயக்கம் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ்ப்பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லீம்களுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்றடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். தமிழ் மாகாணங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகள் இந்நாட்டில் மிகவும் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. இலங்கையின் பரப்பில் முப்பது சதவிகிதத்தையும் மொத்தச் சனத்தொகையிற் பத்து விகிதத்தையும் இம் மாகாணங்கள் கொண்டிருக்கின்றன. இவை நன்றாக அபிவிருத்தி செய்யப்படக்கூடியன. போதிய நீர்ப்பாசன வசதிகளுடன் -சமதரையுள்ள இப்பிரதேசங்கள் தமிழ்பேசும் மக்களுடைய அரசாங்கத்தினால் அன்றிச் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படமாட்டா. சிங்கள அரசாங்கத்தினால் இப்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்படுவார்கள் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் என்ன நடைபெற்று வருகிறதென்பதை அங்குள்ள மக்கள் இப்பொழுதே உணர்ந்து விட்டார்கள்.

எங்களுடைய ஒரேயொரு நோக்கம், ஐக்கிய இலங்கைச் சமஸ்டியின் அங்கமாக, ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும். செய்யவேண்டிய வேலை எவ்வளவு கஷ்டமானதென்பதை யாம் உணர்ந்தேயிருக்கின்றோம். ஆயினும் அப்பணியைச் செய்துமுடிக்க எம்மால் இயலும். அதைச் செய்தே தீர வேண்டும். எமக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல விடயங்கள் உள்ளன. யான் முன் குறிப்பிட்டதைப் போல, எமது மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் 'உறுதியான அரசியற் கொள்கையே' எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். யாம் சிறந்த முறையில் - நம்பிக்கைக்கு உரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால் எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்திற்குக் காரணமாயிருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும். ஐரிஷ் தேசியவாதிகளைப் போல, சுதந்திரத்தமிழ் அரசு நி-றுவப்படும் வரை, 'பதவி ஏற்கவேமாட்டோம்' என்று வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழ-ியர்களே எமது கட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும் பேச்சில் ஒரு நோக்கமுமாக யாம் இருத்தல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதிற் குறைந்த எங்களுக்கு, வலிமை பொருந்திய நண்பர்களும் இல்லை. நேர்மையையும் - மன உறுதியையும்- இலட்சியத் தூய்மையையுமே யாங்கள் ஆயுதங்கள் ஆகக் கொள்ள வேண்டும். இந்திய விடுதலை - இப்படியான தார்மீக சக்திகளினாலேயே பெறப்பட்டது. எமது விடுதலை - வெளிச்சக்திகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. யாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டும் ஆனால், நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து, அதைத் தூய்மை பெறச் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள், தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாகக் கரு-துகின்றனர். யாம் ஒருவருக்குக் கொடுமை செய்தால், தர்ம நீதியின் படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வார். தமிழ் மக்கள் அரசியற் சுதந்திரம் பெறவேண்டுமேயானால், தம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு, அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்.

மலைநாட்டில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களுடைய நிலமையானது, இங்கு கூறிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலும் பார்க்க கேவலமானதாய் இருக்கின்றது. அவர்கள், அரசியலில் தீண்டாதவர்களாய் விட்டார்கள். அவர்களுக்குப் பிரஜா உரிமை இல்லாமலிருப்பது மாத்திரமன்றி, தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகள் ஆகவுமிருக்கிறார்கள். ஏனைய தமிழ்பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னலைத் தங்களுக்கு வந்ததாகவே கருதுதல் வேண்டும். அவர்கள் உதவிக்கு எதிர்பார்ப்பது இந்தியாவையல்ல, சுதந்திரம் விரும்பும் இலங்கை வாழ் மக்களிடமிருந்தே அவ்வுதவி வருதல் வேண்டும். இவ்விரண்டு விடயங்களும் - நீங்கள் ஆரம்பிக்க வந்திருக்கும் இக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் இடம்பெறுதல் வேண்டும்.

இறுதியாக, என்னுடைய பேச்சினைப் பொறுமையுடனும், ஆதரவுடனும் கேட்டுக் கொண்டிருந்தமைக்காக, உங்களுக்கு யான் நன்றி கூறுகின்றேன். உங்களுக்குள்ளே எத்தனையோ பேருடைய வீரத்தை யான் நேர்முகமாக அறிவேன். அவ்வீரமானது என்னகத்தும் செறிந்து, எனக்கும் உற்சாகம் அளிக்கின்றது. குற்றங்கள் இருந்தால் மன்னித்து, எங்கள் தொண்டின் ஒரு பகுதியாக என் முயற்சியையும் ஏற்றுக் கொள்ளும் படி, உங்கள் எல்லோரையும் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

வணக்கம்.
ஆதாரம்: இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.
வெள்ளி விழா மலர், 18-12-1974.
பக்கங்கள் 1- 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கை 02

## இலங்கை தமிழரசுக்கட்சி

# முதலாவது தேசிய மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள்

**தீர்மானம் - 1**

தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமெனக் கணிக்கப் பெறுவதற்கு அவர் களுக்குள்ள மறுக்கவொண்ணா உரித்துவத்தை எடுத்துரைப்பதுடன், அரசியல் சுயாதீனம் பெறுவதற்கு அவர்களுக்குள்ள உரிமையையும், சிங்களவர்களுடன் சமஷ்டியமைப்பு முறையில் இணைவதற்கு அவர்களுக்குள்ள விருப்பையும் இம்மாநாடு பிரகடனப்படுத்துகிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வோர் இனத்திற்கும் பிரிக்கவொண்ணாத உரிமை உண்டெனபதாலும், அவ்வுரிமையின்றி அவ்வினத் தின் ஆன்மீக, கலாசார, தார்மீகப் பொலிவு சீரழிந்து விடுமென்பதாலும், இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமொன்று கணிப்பதற்கான ஒவ்வோர் அடிப்படைத் தகுதிகளிலும் (அதாவது , முதலாவதாக குறைந்த பட்சம் சிங்கள மக்களையொத்த அளவுக்காவது புராதனமானதும் புகழ் செறிந்ததுமாக இத்தீவில் தனியொரு வரலாற்றாலும், இரண்டாவதாக ஒப்பற்றவோர் இலக்கியப் பாரம்பரியத்துடனும், இக்காலத் தேவைகள் அனைத்துக்குமே போதுமானதாகத் தமிழ் மொழியை இலங்கச் செய்யும் நவீன வளர்ச்சியுடனும் விளங்குவதான - சிங்களவர்களின் மொழியினின்றும் முற்றாக வேறுபட்ட தனியொரு மொழிவாரி மக்கள் என்ற உண்மையாலும், இறுதியாக இத்தீவின் மூன்றிலொரு பாகத்தை மேவிச் செறிந்துள்ளதான குறிப்பிடத்தக்க நிச்சயமான நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் அவர்கள் என்ற காரணத்தாலும், சிங்களவர்களினின்றும் வேறுபட்ட ஒரு தனியினமாக அவர்கள் விளங்குகின்றார்கள் என்பதாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம்முதலாவது தேசிய மாநாடு இலங்கைத் தமிழ் பேசும் இனத்திற்கென - பிரிக்கமுடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதுடன், அடிப்படையானதும், மறுக்கவொன்னாததுமான சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கிசைய, மொழிவாரி அரசுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்துமாறு கேட்டுக் கொள்கிறது.

'மேலும் பல நாடுகளில் - உதாரணமாக கனடா, இந்தியக் குடியரசு, சுவிற்சர்லாந்து, சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் ஒரு சமஸ்டியமைப்பு அரசினை நிறுவியதன் மூலமே - பல்லினமுடைய பன்மொழி பேசும் அந்நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு சிக்கலான பிரச்சினைகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளன என்பதாலும், அந்நாடுகளில், தேசிய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இச்சமஸ்டியமைப்பு அரசு உண்மையான ஐக்கியத்தையும், சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் உறுதி செய்துள்ளது என்பதாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம் முதலாவது தேசிய மாநாடு, அவ்விரண்டு இனங்களுக்கும் பொதுவான தாயகமாகிய இந்நாட்டில், இவ்விடயங்களுக் கிடையே பல நூற்றாண்டு காலமாக நிலவிய நெருங்கிய உறவின் அறிவுபூர்வமானதும், இயல்பானதுமான முற்றுப்பேறாகவும், சிங்கள மக்களுடன் தேசிய நல்லெண்ணத்தையும், நெருங்கிய ஒத்துழைப்பையும் மேம்படுத்திப் பேணும் நோக்குடனும், இலங்கை சமஷ்டி அமைப்புக்குள் சுயாதீனமான ஒரு தமிழ் அரசினை அமைப்பதே செயற்பாலானது எனவும், தமிழ் பேசும் மக்களுக்கு விதைத்துரைக்கின்றது.'

**தீர்மானம் - 2**

சோல்பரி அரசியலமைப்புத் திட்டம் அறிவுக்கொவ்வாததெனவும், தமிழ் பேசும் மக்களை அடிமை கொள்வதற்கேதுவான தெனவும் இம் மாநாடு கண்டிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'ஒற்றையாட்சி அமைப்பு முறைப் பாராளு மன்ற முறை அரசு - தனியொரு இனத்தைக் கொண்ட நாட்டில் நிறுவப்படும் போது மட்டுமே சனநாயக ரீதியிலும், அறிவு ரீதியிலும் இயங்கவல்லது என்பதால், ஒற்றையாட்சி முறை அரசமைப்பின் கீழ், இருபது இலட்சம் தமிழ் பேசும் மக்களும் - ஐம்பது இலட்சம் சிங்களம் பேசும் மக்களின் நல்லெண்ணத்திலும், சலுகையிலுமே எப்போதும் தங்கி இருப்பதுடன் அவர்களின் அரசியல், கலாசார, பொருளாதார நலன்கள் - சிங்கள இனத்தவர்களின் அத்தகைய நலன்களுடன் மாறுபடும் அல்லது முரண்படும் வேளைகளில் (அவர்கள் ஏற்கனவே மோசமாகப் பாதிக்கப்பட்டாற் போன்று) கட்டாயம் பாதிக்கப்படுவார்கள் ஆதலால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது தேசிய மாநாடு, (இரண்டு தனித்தனி இனங்கள் வசிக்கும்) இலங்கையில் ஓர் ஒற்றையாட்சி முறை அமைப்பினைத் திணிக்கின்றதான சோல்பரி அரசியலமைப்பினை - அறிவுக்கொவ்வாததும், அநீதியானதும் எனக் கண்டிக்கிறது.'

'அத்துடன் இலங்கையில் தமிழ் இனம் அங்ஙனம் தொடர்ந்து சிங்கள இனத்தின் மீது தங்கியிருப்பது - காலப் போக்கில் அவர்களின் அரசியல் அடிமைத்தனத்திலும், இன அழிவிலும் முடியும் என்பதால், இலங்கைச் சமஸ்டிக் கூட்டாட்சி அமைப்பு ஒன்றின் கீழ், ஒரு சுயாதீன மொழிவாரித் தமிழ் அரசை நிறுவுவதன் மூலம் தமது சுதந்திரத்தைக் கோருமாறும், அச் சுதந்திரத்தை ஈட்டுவதற்குத் தளராது உழைக்குமாறும் இம்மாநாடு, இத்தீவகத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை - அவர்களின் இனத்தினுடைய மானத்தின் பெயராலும் அழைக்கிறது.'

**தீர்மானம் - 3**

தற்போதைய அரசமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களுறும் அரசியல் அவமதிப்பையும் குடியுரிமைச் சட்டங்களின் கீழ் அவர்களுறும் அவமானத்தையும் இம்மாநாடு குறிப்பெடுத்துக்கொள்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'இலங்கையிலுள்ள மாட்சிமை தங்கிய மகாராணியாரின் குடிமக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்ட சுதந்திரம் எனக் கூறப்பட்டதான - அன்றைய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, இலங்கைத் தமிழ் மக்கள் அவர்களது அரசியல் அந்தஸ்தைப் பெருக்கிக் கொள்வதற்கு மாறாக, ஒருதலைப்பட்சமான சட்டவாக்கங்களின் பலனாகவும் திட்டமிட்ட நிர்வாக நடவடிக்கைகளினாலும் அரசியல் ரீதியாக இந் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அத்துடன், அவர்களில் - இலங்கைத் தமிழர்களுக்கும் இலங்கை முஸ்லிம்களுமான தமிழ் பேசும் மக்களில் ஒரு பிரிவினர் - தற்போதைய அரசியல் திட்டம் வழங்கப்படுவதற்கு முன்னர், அவர்கள் தமது சகதேசிகளான சிங்கள மக்களுடன் சமமாக அனுபவித்த சந்தேகமற்ற குடி உரிமையும், வாக்குரிமையும் அவர்களுக்கு மறுக்கப்பட்டதன் மூலம் சந்தேகப் பிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜைகளாக ஆக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், மலைநாட்டில் நிரந்தரமாக வாழுகின்றவர்களான - ஏறக்குறைய 800,000 தமிழ்த் தொழிலாளர்களைக் (அவர்களில் பெரும்பான்மையோர் இலங்கையில் பிறந்தவர்களும், ஏறக்குறைய எல்லோரும் இலங்கையைத் தவிர வேறு தாயக மற்றவர்களுமாவர்.) கொண்ட இன்னொரு பிரிவினரிடமிருந்து, அவர்கள் இருபதாண்டுகளாகத் துய்த் திட்ட அடிப்படை உரிமையான வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கிறது என்பதுடன், மேலும் அவர்கள் கொடூரமான முறையில் நாடற்றவர்கள் என்ற நிர்க்கதியான நிலைக்கு நிரந்தரமாக ஒதுக்கப்படடிருக்கிறார்கள். இலங்கையின் சுதந்திரம் கொண்ட இழிவான அர்த்தத்தினால் - இவர்கள் மீது பூட்டப்பட்ட அடிமைத்தளையிலிருந்து, இலங்கையில் பிறந்தவர்களான இவர்களின் சந்ததியினராவது விடுவார்கள் என்ற நம்பிக்கையும் இவர்களுக்கு இல்லை. எனவே, இம் முதலாவது தேசிய மாநாடு, இலங்கை சமஷ்டியமைப்புக்குள் சுயாதீனமாக, மொழிவாரியான ஒரு தமிழ் அரசைக் கால தாமதமின்றி நிறுவுவதற்கு இடையறாது உழைப்பதன் மூலம், இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழ் பேசும் இனத்தின் மீதும் சுமத்தப்பட்டுள்ள இந்த அவமானத்தையும், அவமதிப்பையும் அகற்றுவதற்கு அது எடுத்துள்ள உறுதியான அசைக்கமுடியாத தீர்மானத்தைப் பிரகடனப் படுத்துகிறது.'

**தீர்மானம் - 4**

தற்போதைய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழும் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் எதிர் நோக்கியிருக்கும் பேராபத்தை இம் மாநாடு சுட்டிக் காட்டுகிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இம் முதலாவது மாநாடு, இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் இலங்கையில் தமிழ் மொழியின் அந்தஸ்தினை எதிர் நோக்கியிருக்கும் பேராபத்திற்கு, எல்லாத் தமிழ் பேசும் மக்களினதும் கவனத்தை ஈர்க்கிறது. செல்வாக்குள்ள சிங்கள அரசியல் , கலாச்சார அமைப்புக்கள் - சிங்களம் மட்டுமே இந்நாட்டின் உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமெனப் பிரகடனப்படுத்தியுள்ள அதே வேளையில், இலங்கை அரசாங்கம் வெளித் தோற்றத்தில் பாரபட்சமின்றி நடப்பதாகப் பாசாங்கு செய்தாலும், திட்டமிடப்பட்ட நிர்வாக நடவடிக்கை மூலம், பெரும்பான்மையான அரசாங்க வெளியீடுகளிலும், உத்தியோக பூர்வமான படிவங்களிலும் வேண்டுமென்றே தமிழைப் புறக்கணித்துள்ளது.'

'இன்றைய விரோதமான அரசியலமைப்புப் பின்னணியில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டுமே தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்குவதும், நாட்டின் ஏனைய பாகங்களில் சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவதுமான அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கையானது - இறுதியில் இத்தீவிலுள்ள தமிழ் பேசும் மக்களின் கலாசார அடிமைத்தனத்தில் முடிவடையும் என்பதுடன், காலப்போக்கில் இத்தீவின் தொடர்ந்து சுருங்கி வரும் ஓர் இடப்பரப்பினுள் தமிழ்மொழி ஓர் இரண்டாந்தர மொழியாக ஒதுக்கப்படுவதற்கே வழியமைக்கும் என இம்மாநாடு நம்புகிறது.

எனவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது தேசிய மாநாடு இலங்கை சமஷ்டியமைப்புக்குள் சுயாதீனமான, மொழிவாரியான ஒரு தமிழ் அரசைக் காலதாமதமின்றி நிறுவினாலன்றி, இத் தீவில் தமிழ் பேசும் மக்களுக்கோ, அவர்களது மொழிக்கோ அல்லது கலாசாரத்திற்கோ கௌரவமான எதிர்காலமொன்றை உறுதிசெய்ய முடியாது என்பதை உணரும் படி, தமிழ் பேசும் மக்களை அழைக்கிறது.'

**தீர்மானம் - 5**

அரசாங்கத்தின் காணி அபிவிருத்திக் கொள்கையும், குடியேற்றத்திட்டக் கொள்கையும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நிலைபேறான வாழ்வுக்கோர் அச்சுறுத்தலாகும் என இம் மாநாடு கண்டிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் பிரதேசங்களுக்கு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கமுடியாத உரிமையுடைவர்களாதலால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது மாநாடு கல்லோயா நீர்த்தேக்கத்திற் குட்பட்ட காணியிலும் அத்தகைய வேறு நிலப்பரப்பிலும் தனிச் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்றுவதான அரசாங்கத்தின் வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட கொள்கையையும் நடவடிக்கையையும் - மேற்கூறப்பட்ட இந்தச் செயல் அடிப்படை உரிமையை மீறும் தன்மையது எனவும், இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் நிலைபேறான வாழ்வையே நிர்மூலம் செய்வதான திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் எனவும் கண்டிக்கிறது.

இன்றைய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழும் தவிர்க்க முடியாத அழிவு, இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து இம் முதலாவது தேசிய மாநாடு, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொடியின் கீழ் அணி திரளுமாறும், இலங்கையில் ஒரு சமஷ்டி முறை அரசியல் அமைப்பினை காலதாமதமின்றி நிறுவுவதன் மூலம் இத்தீவில் அவர்களுக்கும் அவர்களின் சந்ததியினருக்குமென - சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் வென்று எடுக்குமாறும் இலங்கையிலுள்ள எல்லாத் தமிழ் பேசும் மக்களையும் அழைக்கிறது.'

**தீர்மானம் - 6**

'இலங்கையின் அதிகார பூர்வமான கொடி - தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அவமானச் சின்னம் என' இம் மாநாடு அக் கொடியை நிராகரிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

'இலங்கையின் அதிகாரபூர்வமான கொடியில், சிங்களச் சிங்கச் சின்னமானது அக் கொடியின் முக்கியமான பாகமாக முழுமையாகப் புனிதமுடன் பேணப்பட்டிருக்க, தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கக் கொடிக்கப் புறத்தே ஒரு புறவெட்டுக்களாக அமைந்துள்ள இரண்டு குறுகிய கோடுகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளமையால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது தேசிய மாநாடு, இலங்கையின் அதிகாரபூர்வமான கொடியை இத்தீவிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட வேண்டாத ஒரு நிபந்தனையெனக் கணித்து நிராகரிக்கிறது. இலங்கையின் இந்த அதிகாரபூர்வமான கொடி, இந்நாட்டின் அரசியல் சமுதாயத்தில் தீண்டாதவர்களாக ஒதுக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் இன்றைய அவமானகரமான அந்தஸ்தினைச் சரியாகப் பிரதிபலிக்கின்றதென இம் மாநாடு சுட்டிக் காட்டுகிறது.'

'இம் மாநாடு சுதந்திரத்தை வென்றெடுக்கவும், தமிழ் பேசும் மக்களின் தன்மானத்தை மீட்கவும் அது கொண்டுள்ள தீர்மானத்தை வலியுறுத்துவதுடன் சமஷ்டி இலங்கையின் தேசியக்கொடி - இனபேதமற்ற கோட்பாடுகளின் மீது உருவாக்கப்படுமெனவும் பிரகடனப் படுத்துகிறது.'

**தீர்மானம் - 7**

மொழிவாரித் தமிழ் அரசினை, அனைவருக்கும் சுதந்திரம் - அனைவருக்கும் சமத்துவம் - அனைவருக்கும் நீதி என்ற உயர்ந்த இலட்சியங்களின் மீது நிறுவுவதற்கு இம் மாநாடு உறுதியளிக்கின்றது எனக் கூறிடும் தீர்மானம்.

'கொடிய அரசியலமைப்புத் திட்டத்தின் தளையினின்றும் விடுதலை பெறப் போராடுகின்ற இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் இத் தேசிய மாநாடு, அவர்கள் தமது விடுதலையைப் பெறும் வேளையில் மக்களில் ஏதேனுமொரு பிரிவிற்கு அல்லது பிரிவுகளுக்கு - மற்றவர்களைக்காட்டிலும் மேலான மாகாண ரீதியான, சமூக ரீதியான அல்லது பொருளாதார ரீதியான அனுகூலம் அல்லது வாய்ப்பு எதுவும் கிடைக்காதவாறு, சுயாதீனமான மொழிவாரித் தமிழ் அரசின் அரசியலமைப்புத் திட்டத்தில் (எப் பிரிவினரினதும்) ஆதிக்கமின்மை என்ற கோட்பாட்டைத் தமிழ் பேசும் மக்கள் போற்றிப் பேணுவர் என்ற உறுதிமொழியை இத்தால் அளிக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம் முதலாவது தேசிய மாநாடு எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்திரத்தை அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்தைப் பெறுவதற்கு இன்றியமையா தனவான இந்த இலட்சியங்களை- முதலாவ தாக எறக்குறைய சுவிற்சர்லாந்து நாட்டின் அரசியல் திட்டத்தின் மாகாண அமைப்பு முறையில், திட்டமிடப்பட்ட பிரதேச ரீதியான 'சுயாட்சி' மாவட்டங்களைக் கொண்ட ஒரு பரந்த அடிப்படையிலான அமைப்பினை நிறுவுவதன் மூலம் இரண்டாவதாக கண்டிப் பாக 'மதச்சார்பற்ற ஓர் அரசு' என்ற அடிப் படையிலும், மூன்றாவதாக மக்களுக்கான ஒரு 'பூரணமான சோசலிசப் பொருளாதாரம்' என்ற கோட்பாட்டின் மீதும் இறுதியாக மொழிவாரியான சுயாதீனத் தமிழ் அரசின் அரசியலமைப்புத் திட்டத்தில் - ஜனநாயக நெறிகளை எழுத்திலும், கருத்திலும் கண் டிப்பாகக் கடைப்பிடிப்பதன் மூலமே எய்த முடியுமெனப் பிரகடனப்படுத்துகிறது.'

ஆதாரம் : இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி
முதலாவது தேசிய மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள்
வெள்ளி விழா மலர் 1974
அநுபந்தம், பக்கங்கள் 3 - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPENDIX 03

# The Official Language Act, No. 33 of 1956.

An Act to prescribe the Sinhala Language as the One Official Language of Ceylon and to en-able certain transitory provinsions to be made.
(Date of Assent: July 7, 1956)

Be it enacted by the Queen's Most Excellent Majestry by and with the advice and con-sent of the Senateand the House of Representatives of Ceylon in this present Parliament assembled, and by the authority of the same, as follows:-

Short Title

1. This Act may be cited as the Official Language Act, No. 33 of 1956.
Sinhala Language to be the one official Language.

2. The Sinhala language shall be the one official language of Ceylon:
Provided that where the Minister considers it impracticable to commence the use of only the Sinhala Language for any official purpose immediately on the coming into force of this Act, the language or language hitherto used for that purpose may be Continued to be so used until the necessary change is effected as early as possible before the expiry of the thir-ty- first of December, 1960, and, if such change cannot be effected by administrative or-der, regulations may be made under this Act to effect such change.

**Regulation**

3.

(1) The Minister may make regulations in respect of all matters for which regu lations are au-thorized by this Act to be made and generally for the purpose of giving effect to the prin-ciples and provisions of this Act.

(2) No regulation made under sub- section (1) shall have effect until it is approved by the sen-ate and the House of Representatives and notification of such ap proval is published in the Gazette.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கை 04

## இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்

# நான்காவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம்:**

இந்நாட்டிலே இணைப்பாட்சி ஒன்றியம் ஒன்றினை உருவாக்க இலங்கை அரசாங்கம் தவறுமாயின் இலங்கை தமிழரசுக்கட்சி நேரடி நடவடிக்கையில் இறங்குமென இம்மாநாடு பிரகடனம் செய்கிறது எனக் கூறிடும் தீர்மானம்

'இருமொழி பேசும் மக்களைக் கொண்ட ஈழ நாட்டில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத முறையில் அநீதியாக இன்றைய ஒற்றையாட்சிமுறை திணிக்கப்பட்டிருப்பதாலும்,

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் தேர்தல் தொகுதி களில் ஒன்றிற் கூட போட்டியிடாமலேயே, தமிழரை அடக்கியாளக்கூடிய பெரும்பான்மையை பெறக்கூடிய பூதாகரமான தேர்தல் தொகுதி அமைப்பு மூலமும், இலங்கை முழுவதும் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவோம் என்ற கூக்குரல் மூலமும் பதவிக்கு வந்துள்ள மக்கள் ஐக்கிய முன்னணி அரசைப் போன்ற சிங்களப் பெரும்பான்மை அரசைத் தேர்ந்தெடுக்கும் 60 இலட்சம் சிங்கள மக்களின் நல்லெண்ணத்திலே தங்கியிருக்க வேண்டிய பரிதாபநிலை காரணமாக, 25 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் சனநாயக உரிமைகளும், சுதந்திரங்களும் மறுக்கப்பட்டு வருவதாலும்,

தமிழ் பேசும் மக்கள் வாழும் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஒருமித்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றியதும், சிங்களத்தைப் பூரணமாக நிராகரிக்கும் தமிழ் மக்கள் மீது அதனைத் திணிக்க முயல்வதும், செம்மை சான்ற பேரிலக்கியச் செல்வத்தையும் நவீன வளர்ச்சியையும் கொண்டதும் - கீழைத்தேசத்து மொழிகளில் முன்னேற்றமடைந்ததும் - முற்போக்குடையதுமான தமிழை அழித்தொழிப்பதும், சிங்கள மக்களின் வரலாற்றையொத்த பழைமையும் பெருமையும் மிக்க வரலாற்றை உடையவர்களான தமிழர்களை - இனக் கொலைக்குட்படுத்துவதே அரசின் நோக்கம் என்பதை ஐயத்துக்கு இடமின்றித் தெளிவுபடுத்துவதாலும்,

பாராளுமன்றத்தின் இனவாரிப் பெரும்பான்மை பெற்றுள்ள சிங்கள இனம், கொடிய சட்டங்களுக்கும் எல்லாம் தனியுதாரணமாக இருக்கும் குடியுரிமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குரிமைச்சட்டங்களை நிறைவேற்றி, இந்த நாட்டையே தமது தாயகமாகக் கொண்ட மலைநாட்டுத் தமிழ் மக்களுள் ஒரு பகுதியினரைத் தமது குடியுரிமையை நிரூபிக்க முடியாத காரணத்தால்- ஐயத்துக்கு இடமான குடிமக்களாக மாற்றி உள்ளதோடு அங்கு நிலையாகக் குடியமைந்துள்ளவர்களும் - இந்நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காளிகளாயுள்ளவர்களுமான 8இலட்சம் தொழில-ாளர்களின் குடியுரிமைகளையும், வாக்குரிமைகளையும் பறித்துள்ளதாலும், 1947 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆட்சிப் பீடமேறிய அரசுகள் தமிழரின் மரபுவழித் தாயகம் பகுதிகளில் திட்டமிட்டு நடாத்தி வரும் சிங்களக் குடியேற்றம் மூலம் - தமிழரை அவர் களது மரபுவழித் தாயகத்திலேயே சிறுபான் மையினராக்கி அழித்தொழிக்க முயன்று வருவதாலும், ஒன்றன் பின் ஒன்றாக ஆட் சிக்கு வந்தவர்கள் நிறைவேற்றிய பாகுபாடு காட்டும் சட்டங்களும், மேற்கொண்ட நிர் வாக ஏற்பாடுகளும் - நாகரிக அரசுகளின் அடிப்படைத் தத்துவங்களுக்கு மாறானவை யாகவும், சுதந்திரத்தின் அடிப்படைக் கருத் துணர்வுகளை மீறுபவையாகவும் உள்ளன. இவை, இன்று நாட்டில் நடைமுறையிலுள்ள இந்த ஒற்றையாட்சி அரசுமுறை - ஜனநாயகத் தின் மூலக் கோட்பாடுகளை உறுதி செய்யத் தவறியதனை நிரூபிப்பதுடன், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைத் திட்டமிட்டு அழிப்பதற்கான சட்டரீதியான அமைப்பாக தொழிற்படுவதாகவும் - தமிழ் பேசும் மக்களின் சார்பில் 1956ஆம் ஆண்டு ஆவணி 19ஆம் நாள் திருமலையிற் கூடியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநில மாநாடு பிரகடனம் செய்கிறது.

எனவே,

